2960

T.N.C.A Debates

Official Report

Vol 33 No 3910

10,11, March 1987

D
1211,31 N87
N87 33-394
136505

வெளியீடு 5-12-1987 Issued 5-12-1987

2960
12 செப் 1988
529/1/88

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை மார்ச் 11, 1987—தொகுதி 33 எண் 4
Wednesday the 11th March 1987—Volume 33 No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

உள்ளடக்கம்

11–3–1987


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள். .. 407—439

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. 439—465

2. ஒழுங்குப் பிரச்சினை—

முந்தைய நாள் நிகழ்ச்சிகள் குறித்து .. 465—466

3. கவன ஈர்ப்பு—

(அ) சென்னையில் அரிசி விலையேற்றம் .. 467—470

(ஆ) சென்னை அரசினர் கலைத்தொழில் கல்லூரி மாணவர்கள் போராட்டம் .. 470—475

4. அறிக்கைகள் அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு .. .. .. 472

5. அறிவிப்புகள்—

(அ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987.. 473

(ஆ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1986 498

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987 473—490

(ஆ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1986.. 498—517

(இ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. .. .. .. 517

பக்கங்கள்

(ஈ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1987 .. .. .. .. .. 513—534

(உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987 .. 535

(ஊ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 .. .. .. .. 535

7. தகவல் கோரல்—

மேற்கு வங்கத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட உபரி நிலங்கள் குறித்து. 490—498

8. அரசினர் தீர்மானம்.—

பேரவை ஒத்திவைக்கப்பெறுதல் .. .. .. 536

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 536—538

2960

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 11, புதன்கிழமை,

மாசி 27, அக்ஷய திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் ".

நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்குத் தலைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான்.

### 1. வினாக்க—ள்விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தீயினால் பாதிக்கப்பட்ட மூர் அங்காடி.

101—(*வினா எண். 5787)—திரு. செ. செம்மலை மற்றும் திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டாவது நிதி கமிஷனின் பரிந்துரைகளின் அடிப் படையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட " மூர் அங்காடி "யின் சேதத்தை ஈடுசெய்ய மத்திய அரசு உதவி அளிக்க முன்வந்துள் ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இயற்கை இடர்களின்போது மத்திய அரசு, நிவாரணங் களுக்காக நிதியுதவி அளித்து வருகிறது. மத்திய அரசின் எட் டாவது நிதி கமிஷனின் பரிந்துரைகளின்படி, தீ விபத்தில் ஏற் படும் இடருக்காக மத்திய அரசு நிதியுதவி அளிக்க முன்வந் துள்ளது. எட்டாவது நிதிக்குழு பரிந்துரைத்தபடி இக்கொள் கையும், ஏற்பாடுகளும் 1—4—1985 முதல் அமலில் வரும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. மூர் மார்க்கெட் தீ விபத்தில்

பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் கடைகள் ஒதுக்கிட சென்னை மாநகராட்சியின் அருகில் உள்ள அல்லிக்குளத்தில் முதல் கட்டமாக இரண்டு அடுக்குக் கட்டடம் கட்டப்பட உள்ளது. இதற்குரிய செலவு 1 கோடியே 62 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் 1 கோடி ரூபாயினை நிதியுதவியாக அளிக்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட இவ்வரசின் கோரிக்கையினை மத்திய அரசு ஏற்று, இம் மாநில அரசு '' 714. சமுதாய வளர்ச்சிக் கடன் '' என்ற தலைப்பின்கீழ் செலவிட்டுக் கொள்ளவும் பின்பு அதை இம்மாநில அரசின் மார்ஜின் தொகை (Margin Money)யில் சரிக்கட்டிக் கொள்ளவும் அனுமதி அளித்துள்ளது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொடுக்கப்படுகின்ற தொகை சமுதாயவளர்ச்சிக் கடன் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட இருப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே இப்பொழுது சொன்னார்கள். அப்படிக் கொடுக்கப்படுகிற அந்த உதவி முழுக்க முழுக்க மத்திய அரசு நம்முடைய மாநில அரசுக்கு வழங்குகிற உதவியாக இருக்குமா ? அல்லது, முதலிலே பணத்தைக் கொடுத்துவிட்டு, நமக்கு ஒதுக்கப்படுகிற நிதியிலிருந்து அட்ஜஸ்ட் செய்கிற வகையில் வருமா ? எந்த அடிப்படையில் அந்த நிதியை ஒதுக்க மத்திய அரசு முன்வந்திருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், முதலிலேயே சமுதாய வளர்ச்சிக் கடன் என்ற தலைப்பின்கீழ் செலவிட்டுக் கொள்ளவும் பிறகு அதை மார்ஜின் மணி என்ற வகையில் சரிக்கட்டிக் கொள்ளவும் மத்திய அரசு அனுமதிக்கிறது. மார்ஜின் மணி என்பது இயற்கை இடர்பாடுகளுக்காக, ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படுகிற நிதி. அந்த நிதி சேர்த்துக்கொள்ளப்பட்டே வரும். பிறகு ஏதேனும் இடர்பாடுகள் வெள்ளச் சேதமோ, வறட்சியோ ஏற்படுகிற நேரத்தில், இந்த மார்ஜின் மணிக்கு, ஒதுக்கப்படுகிற நிதி கழித்துக்கொள்ளப்பட்டு மீதித் தொகைதான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நேற்றே நான் விரிவாக எடுத்துச் சொன்னேன். அந்த வகையில் மார்ஜின் நிதி ஒதுக்கிக் கொள்ளலாம் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மூர் அங்காடி கடைகளின் எண்ணிக்கை எவ்வளவு ? கட்டிக் கொடுக்கிற கடைகளில் **எல்லாக்கடைக்காரர்களுக்கும் இந்தஇட ஒதுக்கீடு செய்யப்படுமா? பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பெற்ற நிவாரணம் எவ்வளவு ?**





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கணக்கிடப்பட்ட வகையில் பாதிக்கப்பட்ட கடைகள் 857—கடை உரிமையாளர்கள். அந்த 857 கடைகளுக்கும் உடனடியாக நிவாரண நிதி அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சென்று பார்த்தவுடனே ஒவ்வொரு கடைக்கும் ரூ. 2,000 வழங்கலாம் என்று குறிப்பிட்டார்கள். இந்த வகையிலே 290 கடைக்காரர்கள் உள்ளபடியே உள்ளே கடை வைத்திருப்பவர்கள். 323 கடைக்காரர்கள் ஆக்கிரமிப்பாளர்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் சேர்த்து ரூ. 17.14 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. பிறகு, மூர் மார்க்கெட்டில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க, பாரதப் பிரதமரால் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த 10 இலட்சம் ரூபாயும் எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஒவ்வொருவருக்கும் 1,631 ரூபாய் 30 காசு வருகிறது. அந்த அளவுக்கு எல்லோருக்கும் பிரித்துத் தரப்பட்டிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடியிலே 800-க்கு மேற்பட்ட கடைக்காரர்களுக்கு ஏற்பட்ட தீ விபத்தினால் அவர்கள் இலட்சக்கணக்கான ரூபாய்க்கான சொத்துக்களை இழந்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சொத்துக்களின் இழப்பை ஈடுசெய்கின்ற வகையில்—மாநில அரசோ அல்லது மத்திய அரசிடம் கோரி பெற்றோ—தகுந்த அளவுக்கு அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஓரளவுக்குத்தான் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க முடியுமே தவிர, சொத்துக்களின் முழு இழப்பையும் ஈடுகட்டித் தர மத்திய அரசோ அல்லது மாநில அரசோ முன்வரும் சாத்தியம் இல்லை. அவர்கள் இன்சூரன்ஸ் செய்துகொண்டிருந்தால் அதன் மூலமாக முழு இழப்பையும் ஈடுசெய்திருக்கலாம். அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையில் இப்போது அல்லிகுளம் பகுதியில் மத்திய அரசின் கடன் உதவியுடன் பத்து அடுக்குக் கட்டடம் கட்டித்தருகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் முதற் கட்டமாக இரண்டு அடுக்குக் கட்டடம் கட்டித் தருகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு நிதி திரட்டுகின்ற முயற்சியில் மாநகராட்சி மன்றமும் மாநில அரசும் முயன்றுகொண்டிருக்கின்றன.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** தலைவரவர்களே, மூர் அங்காடியில் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 857 வியாபாரிகளுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் கடைகள் கட்டிக் கொடுக்க அல்லிகுளம் பகுதியில் ஏற்பாடு செய்வதாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. பல குடும்பங்கள் எந்தவிதமான வசதியும் இல்லாமல், நசித்துப் போயிருக்கிறார்கள். இப்போதுகூட இரண்டு அடுக்கு கட்டடம் முதற் கட்டமாகக் கட்டுவதாகச் சொல்கிறார்கள். 857 பேர்களுக்கும் அது போதுமானதாக இருக்குமா? அடுத்த அடுக்கு கட்டடங்களையும் விரைந்து கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு, அரசு பல அடுக்கு மாடி கட்ட முன்வந்தபோது ஏதோ சட்ட சிக்கல் ஏற்பட்டு, அதனால் இரண்டாண்டுகள் தாமதம் ஏற்பட்டதாகத் தகவல் ஒன்று இருக்கிறது. இப்படிப்பட்ட தடைகள் எதுவும் இல்லாமல் தொடர்ந்து இந்தப் பல மாடிக் கட்டடங்களைக் கட்டி முடிக்க விரைந்து நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசிடம் என்ன திட்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு நிலையான வகையில் மீண்டும் கடைகளை வைத்து நடத்த இந்தத் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அல்லிக்குளத்தில் பத்து அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுவது என்று முயற்சி மேற்கொள்ளப்பட்டு, முதற் கட்டமாக இரண்டு அடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் மாநகராட்சி மன்றம் அவர்களுக்கு தற்காலிகமாக கடை நடத்த முயற்சிகள் மேற் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி சில பல காரணங்களால் கட்டடம் கட்டும் பணி தடைப்பட்டிருக்கிறது. அந்தத் தடையை விரைவில் நீக்கி, கட்டடம் கட்டுவதற்கான முயற்சி ஒரு பக்கம் நடக்கிறது. நாம் அங்கே நிலையான கட்டடம் கட்டும் முயற்சியை மேற்கொண்டிருந்தாலும் தற்காலிகமாக மாநகராட்சி கடைகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்கின்ற முயற்சியில் தற்போது ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் அதுபற்றிய முழு விவரங்களையும் அவர்கள் சொல்வார்கள்.

**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு 300 ரூபாய் உதவித் தொகை தாசில்தார் மூலமாக வழங்குகிறது. அவர்களுக்கு அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி, சேலை கொடுக்க ஆர்.டி.ஓ. பெர்மிஷன் வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஏறத்தாழ ஒரு வாரம் அல்லது பத்து நாள் காலக்கெடு ஏற்படுகிறது. அவற்றை உடனடியாக தாசில்தார் மூலமாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதற்கு நிலை ஆணை இருக்கிறது. 300 ரூபாய் தரலாம். அரிசி தரலாம், மண்ணெண்ணெய் தரலாம் என்று அதில் கூறப் பட்டிருக்கிறது. ஆனால் கணக்கு எடுப்பதிலே சில சிரமங்கள் இருக்கும். அதனால் பத்து நாள் வரையில் சில நேர்வுகளில் தாமதம் ஏற்படலாம். வேறு வகையில் தாமதம் ஏற்படுவதில்லை. வேறு வகையில் ஏதாவது சுணக்கம் இருப்பதாகத் தெரிந்தால் அதைத் தனியாகக் கவனிக்கலாம். கணக்கு எடுக்கிற வகையில் தகராறு இல்லாமல் இருந்தால் 2, 3 நாட்களிலேகூட தரப்படுகிறது. சில இடங்களிலே கணக்கு எடுப்பதிலே சில தகராறுகள் வருவதால்தான் ஒரு வாரம் அல்லது 10 நாள் தாமதம் ஏற்படுகிறது. இந்த உதவிகளை வழங்குவதற்கு ஸ்டான்டிங் ஆர்டர் இருக்கிறது. தனியாக ஆணை எதுவும் தேவையில்லை.

(முற்பகல் 10—10)

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேட்டி, சேலைகள் கொடுப்பதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முன்னவர் அவர்கள் அறிவிக்கவில்லை. அப்படிக் கொடுக்கிற திட்டம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு உடனடியாகத் தர வேண்டியது 300 ரூபாய், மண்ணெண்ணெய், அரிசி போன்றவைதான். முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ. 300ம் பகுதி சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ. 260ம் வழங்கவும் மற்றும் மண்ணெண்ணெய் அரிசி, போன்றவற்றுடன் வேட்டி மற்றும் சேலை ஆகியவற்றையும் உடனடியாக வழங்க அரசு நிலை ஆணையுள்ளது.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூர் அங்காடி தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் சிலருடைய பெயர்கள் விடுபட்டுப் போனதாக அடிக்கடி புகார் வந்து கொண்டிருக்கிறது. கார்ப்பரேஷன் கமிஷனர் அவர்களிடமும், சிறப்பு அதிகாரியிடமும் மனு போட்டும் அவர்களுடைய பெயர் பதிவு செய்யப்படவில்லை என்று புகார் வந்து கொண்டிருக்கிறது. இதனை அரசு கவனிக்குமா, அரசினுடைய கவனத்திற்கு இது வந்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய கேள்வியை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டிருப்பார்களேயானால் அவர்கள் உரிய அதிகாரிகளிடத்திலிருந்து தகவல் கேட்டு அதில் என்ன நிலைமை என்பதைப் பற்றி ஆராய்ந்து சொல்வார்கள்.

## திருப்பெரும்புதூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

102—(*வினா எண் 8189)—திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து பூவிருந்தவல்லி தாலுக்காவை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா**: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பெரிய தாலுகாவாக இருக்கிறது. இதைவிடச் சிறிய தாலுக்காக்கள் எல்லாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அது மட்டுமின்றி பூவிருந்தவல்லியில் இன்றைக்கு ஜனத் தொகை கூடி இருக்கிறது. அங்கே 3, 4 பேரூராட்சிகள் உருவாகி இருக்கின்றன. அதையொட்டி சைதாப்பேட்டை தாலுக்காவில் இருக்கிற இரண்டு, மூன்று பிர்க்காக்களைச் சேர்த்து பிரித்தால் வசதியாக இருக்கும். எனவே பூவிருந்தவல்லி தாலுக்காவை உருவாக்குகின்ற வகையில் யோசனை செய்து உரிய திட்டத்தை அரசு வகுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்தூர் தாலுக்காவை இரண்டு வட்டமாகப் பிரிக்கிற அத்தகைய செயற்குறிப்பு இணை வருவாய் நிர்வாக ஆணையரிடத்தில் இல்லை என்றும், அரசினிடத்தில் நிலுவையாக இல்லை என்றும் இங்கே விடையாக நான் எடுத்துச் சொன்னேன். ஆகவே அதைப்பற்றிய நிலைமைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்வாகத்தினுடைய தன்மையை அறிந்து, சொல்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் ஆய்ந்து, சிறப்பு நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைத்தால் அவர்களும் அரசுக்கு அதை அனுப்பி வைப்பார்கள். பிறகு அரசு அது பற்றி ஆராய்ந்து பார்த்து தக்க முடிவை எடுக்கும். ஆக அதுவரையிலும் அரசாக எந்த முடிவும் எடுக்க இயலாது. அங்கேயிருந்து அந்தக் கோரிக்கைகள் வர வேண்டும்.



**திரு. ஏ. பாலுச்சாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக வசதி கருதி மாவட்டங்களைப் பிரிக்கிற போது அதில் உள்ளடங்கிய பெரிய வட்டங்களையும் பிரிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாவட்டங்களைப் பிரிக்கிறபோது புதிய கோட்டங்கள், புதிய வட்டங்கள் அமைக்கிற கருத்தையும் மனதில் கொண்டுதான் அதைப் பிரிக்கிற பணியில் ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகளும், அலுவலாளர்களும் செயல்படுகிறார்கள்.

**திருமதி டி. யசோதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா எந்தவிதமான வளர்ச்சியும் பெறாமல் அங்கே தாலுக்கா அலுவலகம் மட்டும் இருக்கிறது. இப்படி இரண்டு மூன்று அரசுத் துறையினுடைய நிறுவனங்கள் மட்டும்தான் அங்கே இருக்கின்றனவே தவிர வேறு எந்தவிதமான வசதியும் இல்லை. எனவே அதனை நல்லதொரு சிறப்புக் குரிய தாலுக்காவாக உருவாக்குவதற்கு அரசு முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதனை சிறப்புக்குரியதாக ஆக்குவதற்கு என்னென்ன வேண்டும், என்னென்ன வசதி, வாய்ப்புக்கள் வேண்டும் என்று கேட்பார்களேயானால், என்னென்ன இருக்கிறது, என்னென்ன முடியும், என்னென்ன இயலும் என்று நான் சொல்லலாம். பொதுப்படையாக சிறப்பாக இருக்க வேண்டும் என்றால் சிறப்பாக இருக்க வேண்டுமென்று நானும் வாழ்த்துகிறேன். (சிரிப்பு)

## கன்னியாகுமரி மாவட்டத்தில் அன்னாசி பழம் பதனிடும் தொழிற்சாலை.

103—(*வினா எண் 12343)—திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அன்னாசி பழம் பதனிடும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்குளம், விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனைச்

சங்கம் 1974 ஆம் ஆண்டு முதல் பழம் பதனிடும் அலகு ஒன்றை நிறுவி நடத்தி வருகிறது. இவ்வலகில் அன்னாசி மற்றும் மாம் பழம் ஆகிய பழவகைகள் பதனிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அன்னாசிப் பழம் பதனிட தனியாகத் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் இயங்கி வரும் கல்குளம் தாலுக்காவில் துவங்கப்பட்டிருக்கிற கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிற்சாலையை விரிவுபடுத்தி, உற்பத்தியை அதிகமாக்கி இந்தியாவின் எல்லாப்பகுதிகளுக்கும் பதனிடப்பட்ட பழம் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு 120 மெட்ரிக் டன் திறன் கொண்ட பழம் பதனிடும் ஆலை அங்கே நிறுவப் பட்டது. அதனுடைய உற்பத்தித் திறனை விரிவுபடுத்துவதற்கு ஏதுவாக ரூ. 5.60 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. 1983—84 ஆம் ஆண்டு அதனுடைய உற்பத்தி அளவு 76 டன்னாக இருந்தது. அதனுடைய உற்பத்தி மதிப்பு ரூ. 6.54 இலட்சம். அதனுடைய விற்பனை மதிப்பு ரூ. 3.13 இலட்சமாக இருந்தது. 1984—85-ல் அதனுடைய உற்பத்தி அளவு 39 டன் உற்பத்தி மதிப்பு ரூ. 3.61 இலட்சம். அதனுடைய விற்பனை அளவு ரூ. 6.92 இலட்சம். 1985—86-ல் அதனுடைய உற்பத்தி அளவு 77 டன், அதனுடைய உற்பத்தி மதிப்பு ரூ. 7.39 இலட்சம் விற்பனை அளவு ரூ. 6·20 இலட்சம். அதை மேலும் பெருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதற்கான வாய்ப்பு இருக்குமானால், அதை மேலும் மேலும் வளர்ப்பதற்கு அரசு ஆயத்தம் செய்யும்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்குளம், விளவங்கோடு தாலுகாவிலிருந்து அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அன்னாசிப் பழத்தை வாங்கி பதப்படுத்து கிறார்கள். அது வேறு ஒன்றோடு சேர்ந்திருக்கிறது; தனியாக இல்லை. எனவே, தனியாகவே அன்னாசிப் பழம் பதப்படுத்து கின்ற தொழிற்சாலையை அரசு சார்பில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாமல் தொடங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன். அப்படித் தனியாகத் தொடங்கினால் வேலை வாய்ப்பு கள் கூட அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, அரசே தனியாக, அன்னாசிப் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தனியாக அரசின் சார்பாக பழம் பதனிடும் ஆலை அமைக்கும் உத்தேசம் இல்லை. இப்பொழுது ஓரளவுக்கு இலாபத்திலே பணியாற்றி வருகிறது. அதன்மூலம் உற்பத்தியாகின்ற சாறு தமிழகத்தினுடைய பல்வேறு பண்டக சாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், பக்கத்து மாநிலங்களுக்கும் செல்லுகிற அளவுக்கும் இருந்து வருகிறது. அதை மேலும் வளர்ப்பதற்கும் விரிவாக்கம் செய் வதற்கும் வாய்ப்பு இருக்குமானால் அதற்கு உதவி செய்வதற்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக அரசு ஆய்வு செய்யும்.

### சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு வீடுகள்.

104—(*வினா எண் 5397) – திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி ஊழியர் களுக்குக் குடியிருப்பதற்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குக் கீழ்க்கண்ட மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன :

1. செனாய் நகர்ப் பகுதியில் 75 மனை அளவு கொண்ட பரப்பு.

2. தாம்பரம் அருகில் மாடம்பாக்கம் கிராமத்தில் தொழு நோய் மருத்துவமனை அமைப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 30.25 ஏக்கர் பரப்புடைய இடம்.

3. பல்லாவரம் அருகில் உள்ள பம்மல் கிராமத்தில் தங்கும் விடுதிகள் கட்டப்படுவதற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 6.44 ஏக்கர் பரப்புடைய இடம்.

செனாய் நகர்ப்பகுதியில் உள்ள மனையில், அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதர இரண்டு இடங்களும் அன்பளிப்பாகப் பெற்றவையாகையால் அவற்றில் மாநகராட்சி அலுவலர்களுக்கு என வீடுகள் கட்டுவதில் சட்டப் பிரச்னைகள் உள்ளன. எனவே

தக்க சட்ட ஆலோசனைகள் பெறுதல், கட்டடம் கட்ட செயல் வடிவங்கள் தீட்டுவது, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திடம் அனுமதி பெறுவது, அரசின் ஒப்புதல் பெறுவது மற்றும் தேவையான நிதி உதவி பெறுவது முதலிய நடவடிக்கைகளும் தற்போது சென்னை மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகின்றன

(முற்பகல் 10-20)

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சி கட்டுகின்ற குடியிருப்புகளில் எந்தெந்தப் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது? அந்தத் திட்டப் **பணி** நடப்பு நிதியாண்டில் துவங்கப் படுமா என்பதையும், அதற்கென திட்டமிடப்பட்டுள்ள தொகை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை ரீதியில் அவர்களுக்கு வீடு கட்ட அரசு முடிவு எடுத்து அந்தத் காரியங்களைச் செய்கிறது. மற்றவை எல்லாம் தொடர்ந்து செய்யப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்ச்சிக்கு சொந்தமான இடங்களில் குடிசைப்பகுதி மாற்று வாரியம் வீடுகளைக் கட்டும்போது அதிலே ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாநகராட்சியால் குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு முறையீடு செய்யப்பட்டுள்ளதா? அப்படி முறையீடு உள்ளது என்று சொன்னால் சைதாப்பேட்டையில் உள்ள டோபிக்கானா பகுதியை குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களா? அப்படிக் கேட்டிருந்தால் அந்த இடத்திலும் மாநகராட்சித் தொழிலாளர்களுக்கு வீடுகள் ஒதுக்டு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி என்னிடத்திலே இப்போது தகவல் இல்லை.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசுக்கு என்று கட்டப்பட்ட குடியிருப்புகளில், மாநகராட்சி, நகராட்சிக்குச் சொந்தமான குடியிருப்புகளில், தனியார்களைக் குடியமர்த்தி அவை வாடகைக்கு விடப்பட்டு பல ஆண்டுகளாகவே அவர்கள் வசம் அந்த குடியிருப்புகள் உள்ளன. அப்படிப்பட்டவர்களை அகற்றி அந்த வீடுகளை, அந்தந்த மாநகராட்சி, நகராட்சி அல்லது அரசுப் பணியாளர்களுக்கு ஒதுக்கிடுவதற்கு அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் விவரம் இல்லை. தக்க அதிகாரிகளிடத்திலே விவரம் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினரிடத்திலே ஏதாவது தகவல் இருக்குமானால் அரசிடம் கொடுத்தால்நலமாக இருக்கும்.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி ஊழியர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு ஏதேனும் வரம்பு அடிப்படை வைத்திருக்கிறார்களா? காலப்போக்கில் இந்தத் திட்ட்த்தை மற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவு படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே இதற்கு நான் ஒரு கருத்தைச் சொன்னேன். கொள்கை அளவில்தான் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவை எல்லாம் ஆராயப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னால் அவையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள தொழில் தகராறுகள் நீதிமன்றம்.

**105—(*வினா எண். 6202)— திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ)) சென்னையிலுள்ள இன்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல் கோர்ட்டில் நீதிபதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) எவ்வளவ் காலமாக நீதிபதி நியமிக்கப்படவில்லை?

(இ) அந்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நீதிபதி ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஆ) 1–4–1985 முதல் 30–6–1985 வரை மற்றும் 22–8–1985 முதல் 27–1–1986 வரை இப்பதவி பூர்த்தி செய்யப் படாமல் இருந்தது.

(இ) 30–6–1986 வரையிலும் நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் வருமாறு :

| | |
|---|---|
| 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 10-ன் கீழ் நிலுவையிலுள்ள வழக்குகள் .. .. .. .. .. | 204 |
| 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 33 (2)-ன் கீழ் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் .. .. .. | 149 |
| 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 33-'ஏ'ன் கீழ் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் .. .. .. | 229 |

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆயிரம் பனியன் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு. வேலை அளவை நிர்ணயிப்பது, பஞ்சப்படி, சம்பள உயர்வு போன்ற பல பிரச்சினைகளைத் தீர்க்கும் வழக்கு இந்த டிரிப்யூனலிடம் ரெஃபர் செய்யப்பட்டு முடிவுபெறாமல் இருக்கிறது. 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அரசால் உத்திரவிடப்பட்ட வழக்கு 2 வருடம் 7 மாதம் ஆகியும்கூட முடிவு பெறாமல் இருக்கிறது. எனவே திருப்பூர் பனியன் தொழிலாளர்களுடைய பிரச்னை எந்த மட்டத்தில் இருக்கிறது? ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள் முடிக்க வேண்டும் என்று அரசு அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதத்திற்கு என்ன காரணம் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. சில நேரங்களில் இரண்டு தரப்பினர்களும் நீதிமன்றத்திற்குச் செல்லாத நிலையில் சில வழக்குகளில் காலதாமதம் ஆவது என்னுடைய அனுபவமாக இருக்கிறது. இந்த வழக்கில் ஏன் காலதாமதம் ஆகிறது என்பதைக் கண்டறிந்து சொல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கிறேன்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் கோர்ட்டுகளில் நீதிபதிகள் நியமிக்கப்படுவலேயே தாமதம் ஆகிறது. தொழிற் கோர்ட்டுக்கு ஒரு டிஸ்பியூட்டை விட்ட 6 மாத காலத்திற்குள்ளாக முடிவு தெரிவிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. ஆனால் 2, 3 வருடம் ஆகின்றது. எனவே அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதை முடிக்க



வேண்டுமென்று நீதிபதிகளுக்கு எழுதிகாலதாமதத்தைத்தவிர்க்கக் கூடிய முறையில் ஆணையிடுமா? பஞ்சாலைகள் சம்பந்தமாக விசேஷத்தொழிற் கோர்ட்டுக்கு 6 மாதம் டைம் கொடுத்தார்கள், ஆனால் 2 வருடம் ஆகிவிட்டது. இன்னும் தீர்ப்பு வரவில்லை. எப்போது அந்தத் தீர்ப்பு வரும் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கியதைப்போன்று நீதிமன்றத்தில் ஏற்படுகிற தாமதத்திற்குக் காரணம் நீதிபதி மட்டுமல்ல. இரண்டு, காரணங்கள் ஒன்று நிர்வாகம் இன்னொன்று தொழிற்சங்கம். இரண்டு தரப்பினரும் ஒத்துழைக்காத காரணத்தினால், அதிலே பங்கு கொள்ளாத காரணத்தினால் தாமதம் ஏற்படுகிறது. இப்படி ஒவ்வொன்றிற்கும் தனித்தனிக் காரணங்கள் இருக்கின்றன. 6 மாத காலத்திற்குள் முடிக்கவேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை. அரசிற்கு அக்கறை இருக்கிறது. ஆனால் நடைமுறைச் சிக்கலினால் தாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பழம்பெரும் தொழிற் சங்கத் தலைவர். அவர்களுக்கு நிரம்ப அனுபவம் உண்டு. பஞ்சாலைத் தொழில்பிரசனை என்பது ஒரு இன்டிவிஜுவல் டிஸ்பியூட் அல்ல, ஏறத்தாழ ஒரு லட்சம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டது. அதிலும் வேஜஸ் டிஸ்பியூட்டிற்குகாக போடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதுபற்றி விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாட்களில் எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் நல்ல முடிவுகள் வெளியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பனியன் தொழிலாளர்களுடைய விஷயமாக ஒரு பெரிய போராட்டம் நடந்ததற்குப் பிறகு முதலாளிகள் பிடிவாதம் தாங்காமல் அரசாங்கம், அவர்களுக்கு டி. ஏ. கொடுக்கவேண்டும் என்பதற்கு அன்றைக்கு இருந்த மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சொல்லியும் கேட்காமல் மீறிப்போனபோது 10 பி சட்டத்தைப் பிரயோகித்து ஸ்ட்ரைக்கை முடித்துவிட்டு கோர்ட்டிற்குப் போனது. அந்தக் கோர்டிலே தொழிலாளர்கள் பக்கத்திலேயிருந்து ஏன் சீக்கிரம் விசாரணையை முடிக்கவில்லை என்று கேட்கிறார்கள். ஆகவே தொழிலாளர்கள் ஒத்துழைக்கவில்லை என்ற பிரச்சினைக்கு இடம் கிடையாது. முதலாளிமார்கள் ஒத்துழைக்கிறார்களா இல்லையா என்பது சொல்லித் தெரிவதில்லை. 10 பி சட்டத்தினால், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை முதலாளிகள் உருவாக்கினால் அதற்குக்கூட சக்தியற்றுப்போகக்கூடிய நிலைமை இருந்தால் அமைச்சர் அவர்கள் அதற்கு இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை வரும். இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையில் சம்பள உயர்வு தள்ளிப்போய்விட்டது, 3 வருஷத்திற்கு மேலே ஆகிவிட்டது. ஒன்று கோர்ட் நடத்தவேண்டும், இல்லையென்றால் அமைச்சராவது கூப்பிட்டு வைத்துப் பேசி புதிய சம்பளத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்வார்களா ?

[1987 மார்ச் 11

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பின்னி சம்பந்தமாகவும் இந்தியா போர்ஜஸ் சம்பந்தமாகவும் கொடுத்த போது அவற்றை அனுமதிக்க முடியாது என்றும் கேள்வி எழுதி கேட்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது சம்பந்தமாக அதில் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லவேண்டும். அண்மையில் சுப்ரீம் கோர்ட் தமிழக அரசிற்கு தொழிற் கோர்ட்டுகளுக்கு வழக்குகள் அனுப்பிவைப்பதிலே ஏற்படக்கூடிய காமதத்தைக் கண்டித்து அது முறையல்ல, எல்லா வழக்குகளையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்று தீர்ப்புக் கூறியதற்குப் பிறகும், 300 வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி, தமிழக அரசு எடுத்த முடிவு சரியல்ல, அந்த வழக்குகள் எல்லாம் நீதி மன்றத்திற்கு வரவேண்டும் என்று தெரிவித்த முடிவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு எல்லா வழக்குகளையும் ரெபர் பண்ணக்கூடிய கொள்கை முடிவைக் கடைப்பிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான தகவலை இதிலே அளிக்கவில்லை. நீதி மன்றம் தமிழக அரசைக் கண்டித்ததாகவோ அல்லது அதுபற்றி ஏதாவது ஆப்சர்வேஷன், ஸ்ட்ரிக்ச்சர்ஸ் பாஸ் செய்ததாகவே எனக்குத் தெரிந்தவரையில் தகவல் இல்லை. ஆனால் சில வழக்குகளில் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று பிரத்தியேகமாக சொன்ன நேரத்தில் நீதிமன்றத்தின் கட்டளைக் கிணங்க இந்த அரசு அந்த வழக்குகளையெல்லாம் பரிசீலனை செய்து நீதிமன்றம் சொன்ன அந்தக் கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**தெரு விளக்குகள் பராமரிப்பை ஊராட்சி ஒன்றியத்திடம் வழங்கல்.**

**106—(*வினா எண். 7929)—திரு. பரப்பே சுப்பிரமணியன்** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சார வாரியம் ஒப்பந்தப்புள்ளி மூலம் பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை, மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடமே வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1987 மார்ச் 11]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடம் தெருவிளக்குகளைப் பராமரிக்கும் பணி மீண்டும் ஒப்படைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் பல்புகளைப் பொருத்துவதை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்தாலும் கூட அந்த பல்புகளைப் பொருத்துவதற்கு மின் வாரியத்தைச் சார்ந்த ஊழியர்களைத் தான் நாடவேண்டியிருக்கிறது. எனவே இதிலே கோவார்டினேஷன் இல்லாத நிலை இருக்கிறது. இதைப் போன்ற நிலை குடிநீர் வடிகால் வாரியத்தில் முதலில் இருந்தது. அரசு எடுத்த நடவடிக்கையினால் அந்த நிலை மாறி நல்ல பலன் கிடைத்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், அதைப்போல கோட்ட வளர்ச்சி அலுவலர் அலுவலகமும் வாட்டர் போர்ட்டிலிருந்து ஊழியர்களை டெபுடேஷனில் பெற்று அவர்களே வேலை வாங்கிக் கொள்கிறார்கள். அதைப்போல மின் வாரியத்திடமிருந்து ஊழியர்களை ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒருவர் என்றும், மாவட்ட அளவிலே ஏ.டி., கேடரில் ஒருவரையும் டெபுடேஷனில் அனுப்பினால் இன்னும் நல்ல பலனுள்ளதாக இருக்கும். மின்வாரியத்திடம் தொடர்பு கொண்டு இப்படி மின் ஊழியர்களை உள்ளாட்சித் துறைக்கு டெபுடேஷனில் பெறுவதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, புதிய ஏற்பாட்டின்படி மின் விளக்குகள் சரியாக எரிவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

**திரு. வெ. சோ. பஞ்சவர்ணம்:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் மின் விளக்குகளை ஒப்படைத்து இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் தெரு விளக்குகள் மாதக்கணக்கில் எரியாமல் இருக்கின்றன. மின் ஊழியர்களைக் கேட்கிறபோது அவர்கள் தங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கொடுக்க வேண்டிய கட்டணத்தையும், பல்புகளையும் கொடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் அளிக்கிறார்கள். தெளிவாக தனித்தன்மையோடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆவன செய்யப்படும்.

[1987 மார்ச் 11

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சி போன்றவைகளில் தெரு விளக்குகளைப் பராமரிப்ப பதற்காக தனியாக ஹெல்பர்களை வைத்துக் கொண்டிருக்கிறார் கள். அதே போல ஊராட்சி ஒன்றியங்களில் தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு தனியாக ஹெல்பர்களை வைத்துக்கொள்வ தற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர் களே, மின்சார வாரியத்திலிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அந்தப் பொறுப்பை மாற்றிய காரணத்தினால் ஆரம்பத்தில் இருக்கிற சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கடங்களை எல்லாம் போக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

திரு. எம். அண்ணாதாசன்: தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் மின்விளக்குகளைப் பராமரிப்பது ஊராட்சி ஒன்றியங் களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட் பட்ட பேரூராட்சிகள் வளர்ந்து வருகிற பகுதிகளில் புதியதாக தெரு விளக்குகளை அதாவது 'ட்யூப் பிட்டிங்ஸ் அமைப்பதற்கு அனுமதி எலக்ட்ரிசிட்டி போர்டிலிருந்து கிடைத்தும்கூட அவற்றை வாங்குவதற்கு அரசு ஒரு குழு அமைத்திருக்கிறது என்றும், அந்தக் குழு எந்த கம்பெனியில் நல்ல தரமான 'ட்யூப் பிட்டிங்க்ஸ்' கிடைக்கிறது என்ற பரிந்துரையை அரசுக்குத் தருகிறதோ, அதைப் பெற்ற பிறகு மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து அதன்பிறகுதான் அவற்றை வாங்க வேண்டுமென்றும் உத்தரவு வந்திருப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். அது உண்மையா? அப்படியென்றால் அந்தக் குழுவை உடனடியாக அமைத்து தக்க நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல்லிக்குப்பம் தொகுதி பேரறிஞர் அண்ணா திருமண மண்டபத்தைப் புதுப்பித்தல்.

107. (*வினா எண். 8796)—திரு.துரை அன்பரசன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதி—அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருமண மண்ட பம் திருமணங்கள் நடைபெறும் அளவிற்கு புதுப்பித்துத் தரப்படுமா?



1987 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண மண்டபத்தைத் திருமணங்கள் நடைபெறும் வகையில் பழுதுபார்க்கவும், சமையல் பாத்திரங்கள் போன்றவைகளை வாங்கவும் சுமார் ரூ. 2 இலட்சம் தேவைப் படும். தேவையான தொகையினை ஒன்றியப் பொது நிதியி லிருந்து செலவிட அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி தற்போது இல்லை.

ஊத்துக்குளி ஒன்றிய மருந்தகம்.

108—(*வினா எண். 1796)—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்துக்குளியிலுள்ள ஒன்றிய மருந்தகத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றியமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்வி எழாது.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமைபெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, இந்த ஊத்துக்குளி ஏரியாவில் 20 ஆயிரத் திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். 5 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டும் என்று அரசு விரும்பு கிற நேரத்தில், ஊத்துக்குளியிலும் இதுபோன்ற ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தைப் பற்றியது. ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

புளியங்குடி அரசு மருத்துவமனை.

109—(*வினா எண். 3512)—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புளியங்குடி அரசு மருத்துவமனை எப்பொழுது கட் டப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : புளியங்குடி அரசு மருந்தகத்திற்கு ரூபாய் மூன்று இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்ட 1985–86 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணியாக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டிடப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இந்தப் புளியங்குடி சுமார் 50 ஆயிரம் மக்கள், அதாவது ஜனத்தொகை கொண்ட இடம். எனவே, அங்கே 50 படுக்கைகள், ரத்தப் பரிசோதனை நிலையம், எக்ஸ்ரே பிரிவு, பிரசவ வசதிக்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தும்போது, இதுவும் கவனிக்கப்படும்.

### இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை ஆரம்பித்தல்.

**110—(*வினா எண். 4305)—திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் அரசு மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

### குளத்தூர் தொகுதி, பேராம்பூரில் புதிய சித்த மருத்துவமனை.

**111—(*வினா எண். 10654)—திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி பேராம்பூர் கிராமத்தில் ஒரு சித்த மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.





**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கொளத்தூர் தொகுதியில் உள்ள பேராம்பூர் கிராமம் பகுதியிலே. பஸ் வசதியோ அல்லது மருத்துவ வசதியோ கிடையாது. அந்தப் பேராம்பூர் கிராமத்திலிருந்து வைத்திய வசதிக்கு செல்லவேண்டும் என்றால், அதிக தூரம் செல்ல வேண்டும். ஏறக்குறைய 20 மைல் சுற்றளவிலே எந்த வைத்திய வசதியும் செய்யக்கூடிய அளவிற்கு அரசு மருத்துவமனை இல்லை. எனவே, அந்தப் பேராம்பூர் கிராமத்தில் ஒரு சித்த மருத்துவ மனையையாவது அமைக்க அரசு முன்வருமா? அப்படி இல்லை என்றால், விராலிமலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்திவிட்டு, பேராம்பூரிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார கிளை நிலையங்களைப் பற்றித் தனியாகக் கேள்வி பேட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். சித்த மருத்துவ மனையைப்பற்றி தற்போது இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதித் தந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் இருக்கிற அரசு பொது மருத்துவ மனையிலிருந்து பேராம்பூர் கிராமத்திலே ஒரு சித்த மருத்துவ மனை அமைக்க வழிமுறைகள் இருப்பதாகவும் அரசுக்கு எழுதியிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக் கொண்டு மேலும் பேராம்பூர் எனது சொந்த ஊர் என்பதால்—அருள்கூர்ந்து இந்த சித்த மருத்துவமனையை விரைவிலே ஆரம்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய சொந்த ஊர் என்ற காரணத்திற்காக அல்ல. பொதுமக்கள் நன்மைக்காக தேவைப் படுமானால் அதைப் பற்றி எழுதிக் கொடுப்பார்களானால், அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

### போக்குவரத்துக்கழக பேருந்துகளில் டைசிகான் கருவி.

**112—(*வினா எண். 5688)—திரு. ஓ. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின்போக்குவரத்துக் கார்ப்பரேஷன் பேருந்துகளில் எத்தனைப் பேருந்துகளில் டைசிகான் (Dysicon) கருவிகள் பொருத்தப்பட்டன ?

(ஆ) அதற்கு ஆன செலவு என்ன ?

[1987 மார்ச் 11

(இ) தற்போது எத்தனை பேருந்துகளில் இவை செயல் படுகின்றன ?

(ஈ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(அ) 7,037 பேருந்துகளில்.

(ஆ) ரூ. 332 லட்சம்.

(இ) 2,761 பேருந்துகளில்.

(ஈ) மின்னணுவினால் இயங்கக்கூடியவை இந்த டைகொன் வேகத்தடை கருவிகள். அவற்றின் முழு உழைப்பினையும் கொடுத்துள்ளதால், அரசுக்கு நட்டம் ஏதுமில்லை.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது போக்குவரத்துக் கழகங்களிலே நிறைய விபத்துக்கள் நடப்பது அரசுக்குத் தெரியும். குறிப்பாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பற்றி பத்திரிகையிலே செய்தி வராத நாளே கிடையாது, அந்த அளவிற்கு விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும், அந்தக் கருவிகள் நமது அரசு போக்குவரத்துக் கழகங்களிலே உற்பத்தி செய்யப்படுகிறதா? அல்லது வெளியிலிருந்து வாங்கப்படுகிறதா? அல்லது அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலிருந்தும், வெளியிலிருந்தும்-பெறப்படுகிறதா? என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், தனியாரிடமிருந்து வாங்குவதற்கும் அரசு உற்பத்தி செய்வதற்கும் உள்ள விலை வித்தியாசத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தனியார்களிடமிருந்து முதலில் வாங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே அந்தக் கருவியை நாம் வைத்துக் கொண்டு, புதிதாக சேரன் போக்குவரத்துக் கழகத்திலே இதுபோன்ற ஒரு கருவியை தயாரிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. இதிலே விலை வித்தியாசத்தை இப்போது நாம் தெரிந்துகொள்ள, முடியாது. காரணம் இப்போது தான் நாம் ஆரம்பித்து இருக்கிற காரணத்தாலும், நிறைய செய்கிறபோதும்தான் அதனுடைய முழுமையான விலையைத் தெரிந்து கொள்ள முடியும். இப்போது அந்த ஆய்வுகளைச் செய்து ஓரளவிற்கு அதிலே நாம் வெற்றி பெற்று, அவர்கள் இப்போது செய்திருக்கிறார்கள். தனியார் பஸ்கள் மற்றும் உள்ள எல்லா அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே உள்ள பேருந்துகளிலே எல்லாம் இதைப் பொருத்த வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கமாக இருந்தாலும், நீதிமன்றத்திற்குச் சென்று, சில பேர்கள் தடை வாங்கிவிட்ட



1987 மார்ச் 11]

காரணத்தால்,போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கிற பேருந்துகளில் மட்டும் இதைப் பொருத்துவதன்மூலமாக சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதால், இப்போது நாம் தற்காலிகமாக இதை நிறுத்தி வைத்திருக்கிறோம். எனவே, அதில் முடிவு ஏற்பட்ட உடன் இதில் முழு நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10–40)

**திரு. சு. சிவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் மூலம் எக்ஸ்பிரஸ் பஸ்கள் என்றும், எல்.எஸ்.எஸ். பஸ்கள் என்றும் இன்றைக்கு ஓட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் குறைந்த நேரத்திலே நீண்ட தூரம் செல்ல வேண்டி இருப்பதால் அதை கருத்தில் கொண்டு அந்த எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கும், எல் எஸ்.எஸ். பஸ்களுக்கும் இந்த டைகொன் மீட்டர் வைப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா ? இல்லை அடியோடு அந்தத் தடையை எடுத்து விடுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட கொஞ்சம் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவர்கள் வேறு விதமாகச் சொன்னார்கள். விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன எனவே, நீங்கள் இதை பொருத்துவீர்களா என்று கேட்டார்கள். வெகு தூரம் வேகமாகச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்த்து எட்டிப் பிடிக்க முடியாத தூரத்திற்குப்போய் விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த வேகக் கட்டுப்பாடு கொண்டு வரவேண்டும் என்று இந்த அரசு மனதில் வைத்து அதை செய்து இருக்கிறது. அதை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

**திரு. ந. புஷ்பராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டைகொன் மீட்டர் பொருத்துவதால் இயந்திரக் கோளாறு ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்களே அது உண்மையா? அது மட்டும் அல்லாமல் இப்போது அரசு போக்குவரத்துக் கழகங்களான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மற்றும் வேறு போக்குவரத்துக் கழகங்களில் இந்த டைகொன் மீட்டர் இருப்பதாக நான் பார்க்கவில்லை. நானும் பல பஸ்களில் பிரயாணம் செய்து இருக்கிறேன். எந்த பஸ்களிலும் அது இயங்குவதாகத் தெரியவில்லை. இது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பேருந்துகளில் முதலில் பொருத்தப்பட்டது. நான் ஏற்கனவே சொன்னது போல் நீதி மன்றத்தில்

ஒரு பிரச்சினை வந்த காரணத்தால் அதைத் தொடர்ந்து செய்யாமல் அமல் ஆக்காமல் விட்டு விட்டோம். அந்தப் பிரச்சினை முடிந்த பின்பு இதன் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கலாம் என்ற முறையில் இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டைசிகான் மீட்டர் பொருத்துவதால் இயந்திரக் கோளாறு வருகிறது என்று சொல்லுகிறார்கள். அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் இயந்திரக் கோளாறு வருவதற்கு வாய்ப்பு இல்லை. இன்னும் சொல்லப் போனால் அது குறைந்த வேகத்தில் போகின்ற காரணத்தால் இயந்திரம் அதிக நாள் வ வதற்கான வாய்ப்புதான் ஏற்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டைசிகான் மீட்டர் தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்களில் மட்டும் தான் பொருத்தப்படுகிறது. ஆனால் தற்போது மக்கள் வேகமாகச் செல்லும் பேருந்துகளில் தான் செல்லுவதற்கு விரும்புகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட டைசிகான் மீட்டர் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பொருத்துகின்ற காரணத்தால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வருமானம் குறைகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இது போன்ற மீட்டர்களை தனியார் போக்குவரத்துகளில் பொருத்துவதற்கு அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன். அல்லது இப்படிப்பட்ட மீட்டர்களை பொருத்துவதில் இருந்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் இருப்பவர்களும் அதை பொருத்த வேண்டும் என்று சொன்ன காரணத்தால் தான் இதில் நீதி மன்றம் சென்று பிரச்சினை ஏற்பட்டது. இப்போது நாம் தற்காலிகமாக நிறுத்தி வைத்து இருக்கிறோம். அரசின் நோக்கமே ஒரு குறிப்பிட்ட வேகத்தில் தான் செல்ல வேண்டும், அதற்கு வேகக் கட்டுப்பாடு வேண்டும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வேகம் செல்லக் கூடாது என்பது. பொது மக்களின் நன்மையைக் கருதி பயணிகளின் பாதுகாப்பைக் கருதி அதை அமல் ஆக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு எடுத்து இருக்கிறோம்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த டைசிகான் மீட்டர்கள் முதலில் தனியார் கம்பெனியிடமிருந்து வாங்கி பிறகு அதை வைத்துக் கொண்டு அதேபோல் சேரன் போக்குவரத்துக் கழகம் செய்வதாகச் சொன்னார்கள்.



அந்த டைசிகான் கருவிகளை தனியார் கம்பெனியிடமிருந்து காப்பி அடிப்பதற்கு போக்குவரத்துக் கழகம் அவர்களிடமிருந்து அனுமதியைப் பெற்று இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காப்பி இல்லை. அதேபோல ஒரு பொருளைத் தயாரிக்கின்றபோது அதையே வைத்துக் கொண்டு நாம் அதில் ஆல்டர் செய்வது என்பது வேறு. அவர்கள் பேட்டர்ன் ஒன்றையும் ரிஜிஸ்டர் செய்து வைக்கவில்லை. எனவே அதைப்போல் தயாரிப்பது என்பதை ஒரு தவறாகச் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சட்டை தைத்துப் போட்டு இருந்தால் அதைப்போல ஒரு சட்டையை இன்னொருவர் தைத்துப் போட்டால் அதை வைத்துக் கொண்டு நீதி மன்றத்திற்குச் செல்ல முடியாது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி :: மாண்புமிகு தலை நாயகர் அவர்களே, இந்த டைசிகான் மீட்டர்களை பொருத்துவதில் நீதி மன்றம் பேருந்துகளுக்கு தடை விதித்து இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் லாரிகளில் அதை வைத்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம் அல்லவா? ஆகவே கண்டிப்பாக வைக்க வேண்டும் என்ற ஒரு உத்திரவை மீண்டும் அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாரார் நீதிமன்றத்துக்குச் செல்லுகிறபோது அதில் தடை வருகிறபோது எங்கேயும் அதை அமல் ஆக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆனால் அரசின் நோக்கம் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்போது தான் விபத்துக்களை குறைக்க முடியும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கையை அரசு வைத்து இருக்கிறது. எனவே வேகத்தை கட்டுப்படுத்துவதற்கான அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

### அரசு போக்குவரத்துக்கழக ஊழியர்களின் பஞ்சப்படி.

**113—(*வினா எண். 8102)—திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு அரசாங்கம் அறிவித்தபடி ரூ. 1—30 லிருந்து பஞ்சப்படி உயர்வு காரணமாக கொடுக்கப்பட வேண்டிய மொத்த தொகை எவ்வளவு?

(ஆ) அந்த பாக்கியை பட்டுவாடா செய்யாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

டி 2 எ 6—4

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ரூ. 3,75,64,981.98. இவ்வளவு தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் பஞ்சப்படி உயர்வு காரணமான பாக்கித் தொகை முழுவதையும் பட்டுவாடா செய்து விட்டன. அண்ணா போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் அரசு அறிவித்திருந்த ஓய்வூதியத் திட்டத்தில் மேற்படி நிலுவைத் தொகையை சேர்த்துக் கொள்ள விரும்பிய சில ஊழியர்கள் மட்டும் தங்களுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகையை கழகத்திடமே விட்டு வைத்துள்ளனர்.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவர் அவர்களே, இந்த பாக்கித் தொகையைக் கட்டாயமாக அரசிடம் கொடுக்க வேண்டுமென்ற நிர்பந்தம் நிர்வாகத் தரப்பினரிடமிருந்து, இருந்ததாக குறை கூறப்படுகிறது. அப்படி ஏதாவது நிர்பந்தம் இருந்ததா? பெரும்பான்மையான ஊழியர்களுக்கு அந்தப் பஞ்சப்படி பாக்கியைக் கொடுத்தபோது இவர்களுக்கு மட்டும் கொடுக்காமல் இருந்தது சரிதானா என்பது பற்றி அமைச்சரவர்களிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** ஒரு அரசு என்பது நல்ல காரியங்களைச் செய்து கொடுப்பதற்காக பொது மக்களிடத்திலே அல்லது ஊழியர்களிடத்திலே வேண்டுகோள் வைப்பதும், அல்லது அவர்களிடத்திலே கட்டாயப்படுத்துவது, இது உங்களுக்கு நல்லது என்று சொல்வதும், தவறு என்று யாரும் சொல்வார்கள் என்று கருதவில்லை. ஆனால் அதற்கு மீறியும், தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள், தொழிலாளிகள் அந்தப் பணம் தேவை என்று கேட்ட காரணத்தினாலே, யார் யார் கேட்டார்களோ, அவர்கள் அத்தனை பேருக்கும் தடை இல்லாமல் கொடுத்தாகிவிட்டது. சில பேர் ஓய்வூதியத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று எழுதிக் கொடுத்தார்கள். அவர்களும் அந்தப் பணத்தை வேண்டுமென்று கேட்டால் நாங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அன்றைக்கே இந்த அரசு சொன்ன அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் இது ஒரு மிகப் பெரிய திட்டமாக அமலாகியிருக்கும். ஏறத்தாழ ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 500 நிலுவையில் அதிகமாக இருந்தது. அரசாங்கம் அதற்கு ஈடாக ரூ. 500 போடுவதற்குத் தயாராக இருந்தது. வேண்டாம் என்று சொல்லி அவர்கள் தட்டிக் கழித்து விட்டார்கள். இருந்தாலும் இதிலே யாரையும் நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை.





## இரவு நேர லாரி போக்குவரத்து.

**114—(*வினா எண். 9676) திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அதிக விபத்துக்கள் நடைபெறுவதையொட்டி இரவு 1 மணியிலிருந்து 3 மணிவரை சுமைகளை அதிகமாக ஏற்றிக் கொண்டு செல்கின்ற லாரி போக்குவரத்தை நிறுத்தி வைக்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விலைமதிப்பற்ற மனித உயிர்களை சாலை விபத்துகளில் சமீபகாலமாக தொடர்ந்து இழந்து வருகின்ற நிலைமை நீடித்து வருகிறது. எனவே அவற்றைத் தடுப்பதற்காக, இந்த விபத்துக்கள் நடைபெறுகின்ற காரணங்களை பரிசீலித்து நடைபெறாமல் தடுப்பதற்குரிய ஆலோசனைகளைச் சொல்வதற்கு ஒரு கமிஷனை வைத்து, குறுகிய காலத்தில் அதனுடைய அறிக்கையை பெறுவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அவசியமான அதிகாரிகள் பலர் இதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கேள்வி 1 மணியிலிருந்து 3 மணி வரை இந்த லாரிகள் ஓடுவது தடுக்கப்படுமா என்பதாகும். இது தடுக்கப்படும்போது சென்னையிலே அதிகாலையிலே பிரச்சினைகள் எழ வாய்ப்பிருக்கிறது. காலை நேரத்தில் எல்லா வண்டிகளும் வந்துவிடும் எனவே இப்போது இருக்கிற சூழ்நிலை மாறிவிடும் என்ற காரணத்தால் இதுபற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. மற்றபடி இது ஒரு நல்ல திட்டமாக செயல்படும். இப்போது இந்த விபத்துக்களைத் தடுப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 1,500 புதிய காவலர்களை இந்தப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டிற்கு மட்டும் எடுக்க வேண்டுமென்ற திட்டத்தை செயல்படுத்தவிருக்கிறார்கள். 22 ஜீப்கள், அதற்காக வாங்கப்பட இருக்கின்றன. 60 மோட்டார் சைக்கிள்கள்—சரியான எண்ணிக்கை என்னிடத்தில் இல்லை — வாங்கி செயல்படுத்த வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்,

அதேபோன்று எவ்வளவு வேகத்தில் வண்டி செல்கிறது என்பதை வண்டியைப் பார்த்து அல்லது அந்த மீட்டரைப் பார்த்துச் சொல்வதற்குப் பதிலாக டார்ச் லைட் போன்ற ஒரு கருவி இருக்கிறது. அந்த வண்டியை நோக்கி அடித்தோமானால் அந்த வண்டி எவ்வளவு வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள முடியும். இப்படி ஒரு கருவியை வாங்குகின்ற முயற்சியை அன்றைக்கே காவல்துறையிலே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று குடித்துவிட்டு வண்டியை ஓட்டக்கூடாது என்று சொன்னாலும் சிலர் அதைச் செய்கிறார்கள். அதைக் கண்டு பிடிப்பதற்கு மருத்துவமனைக்குப் போகாமல், புதியதாக ஒரு கருவி இருக்கிறது — அந்தக் கருவியை ஊதினால், ஆல்கஹால் அருந்தியிருக்கிறார்களா என்பது தெரியும். இப்படிப்பட்ட முறையில் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது இந்த லாரிப்போக்குவரத்தைத் தடைசெய்வோமானால், சென்னை நகரத்தில் காலை வேளையில் இட நெருக்கடி ஏற்படும் என்று சொன்னார்கள். அது உண்மை. இன்றைக்கு சென்னையிலிருந்து மதுரை வரும் சாலைகளின் இரு பக்கமும் சாரி சாரியாக பம்பர்-டு-பம்பர்—என்று சொல்வார்களே, அந்த அளவிற்கு வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே, சென்னைக்கு வருகின்றவற்றைத் தடுக்காவிட்டாலும், சென்னையிலிருந்து வெளியே செல்கின்ற லாரிகளை ரெகுலேட் செய்வதற்கு அதாவது அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இரவு நேரத்திலே ஒருசாரியான பயணத்தை, சென்னையிலிருந்து வெளியே செல்வதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) மேலும் அதேபோன்று இன்றைக்கு 'ஆட்டோ பான்' என்று சொல்கின்றவை இந்தியாவிலேயே வந்து, அஹமதாபாத்திற்கு அருகில் வந்துவிட்டது. அந்த ஆட்டோ பானை அதாவது திருச்சி-டு-சென்னை சாலையில் அமைக்க முன்வருமா, அது பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) இன்றைக்கு ஜெர்மனியில் இருக்கின்ற எக்ஸ்பிரஸ் வேயை ஆட்டோ பான் என்று சொல்லுகிறார்கள். தங்கு தடையில்லாமல் குறுக்கே வேறு சாலைகள் வராமல் அமைக்கப்படுகின்ற சாலைக்கு பெயர் தான் ஆட்டோ பான்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, குறிப்பாக இங்கிருந்து போகின்ற வண்டிகளை மட்டும் தடுக்கின்றபோது மீண்டும் அந்த வண்டிகள் திரும்ப சென்னைக்கு





வரவேண்டியிருக்கிறது. இதிலே மாறுபட்ட சூழ்நிலைகள் ஏற்படும். அதோடு வண்டிகளை நிறுத்திவிட்டு காலையிலே அனுப்புகின்றபோது — இப்போது இரவிலே லாரிகள் போகிறது என்பதற்காக இதை விட்டுவிட்டு காலையிலே பஸ்களையும், கார்களையும் அனுப்புகிறோம். இரவிலே எந்த வண்டிகளும் போக வேண்டாம் என்று தடுத்துவிட்டால் நாளை காலையில்தான் அத்தனை வண்டிகளும் போகவேண்டிய நிலை ஏற்படும் — அதிலே விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கும். எனவே அது வேண்டாம் என்று இப்போது கைவிட்டு இருக்கிறோம். ஆனால் வேறு எந்த சாலைகளுமே இதிலே வந்து சேராமல் — ஹைவே என்ற தனிச்சாலை என்று சொன்னார்கள். அது நம்முடைய நடைமுறைக்கு ஒத்துவராத பிரச்சினை என்று கருதுகிறேன். இருந்தாலும் ஆய்வு செய்யலாம்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** தலைவர் அவர்களே, இந்த வேகக் கட்டுப்பாட்டு பிரச்சினைகளையெல்லாம் தீர்ப்பதற்காக, வேகு வேகமாக வண்டிகள் செல்லுவதற்காக தனிச் சாலை அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இதைச் செய்ய வேண்டும் என்ற ஆசை நமக்கு இருந்தாலும், நிதிப் பிரச்சினைதான் இதற்கெல்லாம் காரணமாக, தடையாக நிற்கிறது. அதற்கென்று தனியாக அமைப்பது என்றால் எவ்வளவோ கோடி ரூபாய் அவசியமாக இருப்பதால், உடனடியாக அதைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்காது. இப்போது இருக்கின்ற அந்தச் சாலையினுடைய தரத்தை உயர்த்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கம் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** தலைவர் அவர்களே, இந்த அக்ஸிடெண்ட் என்பது ஒரு வகையில் பழைய வண்டிகள் ஓடுவதால் ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியும். சப்-ஆக்ஸில் கட்டாவதால் ஆக்ஸிடெண்ட் அடிக்கடி ஏற்படுகிறது. எனவே ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு முன் பதிவு செய்யப்பட்ட லாரிகள் மட்டும்தான் ஓட வேண்டும். எனவே, வயதான, பழைய லாரிகள் எல்லாம் கண்டெம் செய்யப்படும் என்று இந்த அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, வயதான லாரிகளாலும் வருகிறது. வயதான டிரைவர்களாலும் வருகிறது. இதிலே குறிப்பாக புதிய வண்டிகள் அதிவேகமாக போவதால் ஏற்படுகிறது. பழைய வண்டிகள் சரியான கண்டிஷனில் இல்லாத காரணத்தினால் ஏற்படுகிறது. எனவே, விபத்தைத் தடுப்பதற்கு சட்டதிட்டங்களை அவர்கள் கடைபிடிப்பார்களானால் நிச்சயமாக இந்தப் பிரச்சினை ஏற்படாது. ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட வண்டிகளை கண்டெம்

செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்தாலும் நம்முடைய நாட்டினுடைய பொருளாதாரத்தை பார்க்கின்ற போது, அது மிகப் பெரிய பாதிப்பை சாதாரண மக்களுக்கு ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அதன் காரணத்தினால்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும் அந்த வண்டிகளை நல்லபடியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதிலே தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, இந்த போக்குவரத்து விதிகளை வாகனங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால், விபத்துக்கள் அதிகம் நடைபெறுகின்றன. அதிலும் குறிப்பாக விளக்கு பகுதியில் பாதி கருப்பு பெயிண்ட் அடிக்க வேண்டும் என்ற விதியை முறையாகக் கட்டுப்பாட்டுடன் வாகனங்கள் நடைமுறைப்படுத்துவதில்லை. அதனால்தான் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த சாலை விதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலே சொன்னேன். அதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கின்ற அந்த கமிட்டியிலே முடிவு எடுக்கப்பட்டு நடவடிக்கைக எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தை பயன்படுத்திகூட வாகனம் ஓட்டக்கூடியவர்கள் அல்லது வாகன சொந்தக்காரர்களுக்கு நான் ஒரு எச்சரிக்கையாக சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கையை அதுவும் அவர்களுடைய பாதுகாப்பைக் கருதி எடுக்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பணியை நாங்கள் துவங்க இருக்கிறோம். அந்த நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் முழுமையான ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல நேரங்களிலே இந்த சட்டதிட்டங்களை அமுலாக்க வேண்டும் என்று சொல்லி மேலும் நடமாடும் நீதிமன்றங்கள் போன்றவையெல்லாம் வைத்து சென்னை மாநகரத்திலே நடவடிக்கை எடுக்கின்றபோது, அந்தந்த இடத்தில் இப்படி பிரச்சினைகளை உருவாக்குகின்றீர்களே என்று சட்டமன்றத்திலேயே திருப்பி கேட்கின்ற நிலைமை வருகிறது. எனவே, சாலை விதிகளை சென்னையாக இருந்தாலும் சரி, வேறு இடமாக இருந்தாலும் சரி, தமிழகம் முழுவதும் மிகக் கடுமையாக அமுலாக்குவதற்கு, மிக வேகமான நடவடிக்கைகளை, 20, 30 நாட்களுக்குள்ளேயே எடுக்க இருக்கிறோம். எனவே அதை தாங்கிக்கொள்வதே கூட இந்த தவறு செய்யக்கூடியவர்களுக்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும்கூட, அவர்களுடைய நன்மையைக் கருதி நாங்கள் செய்ய இருக்கிறோம் என்பதை இந்த சட்டமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கேற்றபடி அவர்கள் தங்களை மாற்றிக்கொள்வது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



### திருச்சி—ஆவூர் நகரப் பேருந்து.

**115**—(*வினா எண். 10384) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-விராலிமலை, ஒன்றியம், திருச்சியிலிருந்து ஆவூர் வரை நகரப்பேருந்து விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆவூருக்கு நகரப் பேருந்து ஒன்றை 8 நடைகள் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் 28—2—1986 முதல் இயக்கி வருகிறது.

**திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரப் பேருந்து விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த திருச்சி புதுக்கோட்டை சாலையிலே, மாத்தூர் முதல் ஆவூர் செல்கின்ற சாலையைச் சுற்றி பல புதிய தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே தார்ச் சாலையாக மாற்றித் தர முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலைகள் வருகின்றன என்று சொன்னார்கள். இன்னும் வரவில்லை. அவை வருகிறபோது இதுவும் வரும்.

### கால்நடை விரிவாக்க அலுவலர்கள்.

**116**—(*வினா எண். 5000) **திரு. ச. வெ. வீரானம்பலம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (I.R.D.P.) வழங்கப்படும் கால்நடைகளுக்கு சிகிச்சைகள் செய்யவும் பின்தொடர் பணிகளுக்காகவும் (Follow up) கால்நடை விரிவாக்க அலுவலர்களுக்கு மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கால்நடை விரிவாக்க பணியாளர்களுக்கு வேண்டிய மருந்துகளுக்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. எனினும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கால்நடைகள் நோய்வாய்படும்போது அவைகளுக்கு தகுந்த சிகிச்சை செய்யவும், வேண்டிய மருந்துகளை அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் கால்நடை விரிவாக்கப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருச்சியிலிருந்து ஆவூர் வரை நகரப் பேருந்து விடப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆவூரிலிருந்து ..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்விக்கு வந்தாகிவிட்டது.

### திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கையை செப்பனிடல்.

*117—(*வினா எண் 9562)* **திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கையை செப்பனிட்டு கரையோரங்களிலுள்ள நீராழி மண்டபங்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலைகள் எப்போது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கையை செப்பனிட்டு கரையோரங்களிலுள்ள நீராழி மண்டபங்களை புதுப்பிக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.



**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புராண இதிகாசங்களில் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இந்த சரவணப் பொய்கையைச் சுற்றியுள்ள நீராழி மண்டபங்களும், நீராடுகின்ற துறைகளும், சுற்றுச் சுவர்களும் இடிந்து காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்தத் திருக்குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு வழியும் இல்லை. அதைப்போல் தண்ணீர் வெளியே செல்வதற்கு வழியும் இல்லை. அங்கு தண்ணீர் நிரப்புவதற்கு ஒரு ஆழ்குழாய் துளைக் கிணறு போட்டுக் கொடுத்தால் நன்றாக இருக்கும். மேலும், ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் நீராடுகின்ற அந்தத் திருக்குளத்தில் நீண்டகாலமாக சேறும், சகதியும் அதிகமாகிவிட்ட காரணத்தால் அதைத் தூர் வாருகின்ற பணியை அரசு மேற்கொள்ளுமா அல்லது அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலினுடைய நிர்வாகத்தை அதற்காக அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கையின் நடுவில் உள்ள நீராழி மண்டபம் மட்டும்தான் அத்திருக்கோயிலுக்குச் சொந்தமானது. அது நல்ல நிலையில் உள்ளது. சரவணப் பொய்கையின் கரையிலுள்ள நீராழி மண்டபங்கள் அத்திருக்கோயிலுக்குச் சொந்தமானவை அல்ல. அந்த மூன்று நீராழி மண்டபங்களும், முறையே தருமபுரம் ஆதினம், ரெட்டியார் மண்டபம், சுத்த சன்மார்க்க தர்ம மடம் ஆகியோர்களுக்குச் சொந்தமானதாகும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல், அந்தத் திருக்குளத்தைப் பழுது பார்க்கவேண்டும் என்று சொன்னால், அதற்காக அந்த நிர்வாக அதிகாரியை, அதற்கு தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சொல்லலாம்.

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்ற, கூடுகின்ற இடம். அந்த இடத்தில், அது சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமா அல்லது பேரூராட்சிக்குச் சொந்தமா என்ற பிரச்சினையை ஓரளவு தள்ளி வைத்துவிட்டு, அதை நேரடியாக பக்கதர்களுக்குச் செய்கின்ற வசதி என்ற அளவில் அந்தக் குளத்தை சீர்படுத்துவதற்கும், அந்தக் குளத்திற்கு தண்ணீர் நிரப்புவதற்கு ஆழ்குழாய்க் கிணறு போடுவதற்கும், சுற்றியுள்ள பகுதிகளிலே பூங்காக்களை அமைப்பதற்கும், மின்சார விளக்குகளை ஏற்படுத்தித் தருவதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள திருக்குளத்திற்குக் கூட தண்ணீர்

இல்லை. அதைச் சுற்றியுள்ள ஓட்டல் உரிமையாளர்கள் ஆழ்குழாய்க் கிணறு போட்டு தண்ணீரை எடுத்து விடுவதால், குளத்தில் தண்ணீர் வற்றிப் போய்விட்டது. ஆகவே, அந்தக் குளத்திற்கும், ஆழ்குழாய்க் கிணறு போட்டு தண்ணீர் நிரப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைப்போல, இந்தத் திருக்குளத்திலும் தண்ணீர் நிறைய இருக்கும்படி ஆழ்குழாய்க்கிணறு போட அரசு ஆணையிடும்.

**சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.**

*118—(*வினா எண் 9992)* **திரு. கே. அன்பழகன் :** *மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம் ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் 1986–87 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?*

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். இந்த இரு ஒன்றியங்களிலும் 7 புதிய சங்கங்கள் ஆரம்பிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இந்த நிதியாண்டு முடிவுக்குள் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*[முற்பகல் 11–00]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 118 முடியும் வரை அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். காடையாம்பட்டி, ஓமலூர் ஒன்றியங்களிலுள்ள கிராமங்களில் பெரும்பாலானவை மலைப் பாங்கான பகுதிகளாகும். அந்தப் பகுதி மக்கள் பெரும்பாலும் கால்நடை வளர்ப்பதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேலும் பல கிராமங்களுக்கு இந்தச் சங்கங்களை அமைத்துத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியில் ஓமலூர் ஒன்றியத்திலும் காடையாம்பட்டி ஒன்றியத்திலும் சங்கங்கள் உண்டா என்று கேட்டார். ஓமலூர் ஒன்றியத்தில் தேக்கம்பட்டி, தட்டாஞ்சாவடி, வெல்லக்கீழ்பட்டி, வெள்ளாளபட்டி, வட்டக்காடு ஆகிய ஊர்களிலும், காடையம்பட்டி ஒன்றியத்தில் கருவள்ளி மற்றும் பண்ணப்பட்டு கிராமங்களிலும் மொத்தம் 7 இடங்களில் சங்கங்களை துவக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பல கிராமங்களில் சங்கங்கள் வேண்டும் என்றால் மாண்புமிகு உறுப்பினர் அதற்குத் தகுந்தபடி அங்கு உள்ளவர்களுக்கு எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து திட்டத்தை அனுப்ப வேண்டுமென்று சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்களை அதிகரிக்கும் வகையில் சேலம், பால் பண்ணையினுடைய பால் கொள்ளளவுத் திறனை விரிவாக்கக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அது பால் பெருக்குத் திட்டம்தான். அதனுடைய பக்குவப்படுத்துகிற சக்தியை அதிகப்படுத்துவதற்கு திட்டம் இடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 119 மற்றும் 120 மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

*1—*

**மாலைப்பட்டி—அச்சராசக்காபட்டி சாலையை சீர்செய்தல்.**

வினா எண். 2249—**திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, திண்டுக்கல்-நத்தம் சாலையில் குடகனாறு இல்லத்திலிருந்து பிரிந்து மாலைப்பட்டி வழியாக அச்சராசக்காபட்டிக்கு சாலையை சீர் செய்ய அரசு முன்வருமா ?

விடை—

நத்தம் தொகுதி, திண்டுக்கல்-நத்தம் சாலையில் குடகனாறு இல்லத்திலிருந்து பிரிந்து மாலைப்பட்டி வழியாக அச்சராசக்காபட்டி சாலை ஐம்புளியம்பட்டிவரை சாலை சீரமைப்பு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலை துறை மூலம் எடுத்து செய்ய திட்டமிடப்பட்டு, மேற்படி பணியின் பூர்வாங்க வேலை நடைபெற்று வருகிறது.

2—

**மஞ்சநாயக்கன்பட்டி குடிநீர் கிணறு தூர் எடுத்தல்.**

வினா எண். 2269—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சிறுகுடி பஞ்சாயத்து, மஞ்சநாயக்கன்பட்டியில் உள்ள குடிநீர் கிணறு தூர் எடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்த குடிநீர் கிணறு கடும்பாறையாக (Hard rock) உள்ளதால் நிலத்தடி நீர் ஊற்று வல்லுநர்களின் ஆய்வில் இக்கிணற்றை ஆழப்படுத்தினால் மேற்கொண்டு நீர்ஊற்று வராது என்று தெரிவிக்கப்பட்டது. இக்கிணற்றில் தூர் எடுப்பதற்கான சேறோ, சகதியோ இல்லை. இதனை ஈடுசெய்ய குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 1986–87 ஆம் ஆண்டில் ஒரு புதிய ஆழ்குழாய் போடப்பட்டு நல்ல முறையில் தற்போது இயங்கி வருகிறது. தற்சமயம் இக்கிராமத்தில் குடிநீர் பிரச்சினை எதுவுமில்லை.

3—

**திருவில்லிப்புத்தூர் அருள்மிகு நாச்சியார் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள்.**

வினா எண். 2536—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலுக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர் ?



(ஆ) குத்தகைப் பாக்கியை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ?

(இ) குத்தகை பாக்கிதாரர்களின் விவரம் என்ன ?

விடை—

(அ) நஞ்சை நிலங்கள்—ஏக்கர் 291.26 சென்ட்.
புஞ்சை நிலங்கள்—ஏக்கர் 791.02 சென்ட்.

(ஆ) குத்தகைப் பாக்கியை வசூல் செய்ய பல நீதிமன்றங்களிலும் வருவாய்க்கோட்ட அலுவலகத்திலும் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இது தவிர, ஏற்கனவே நிலுவை உள்ளவர்களின் மீது கோர்ட்டில் டிகிரி வாங்கப்பட்டு அதன் மீது நிறைவேற்றுதல் மனு (Execution Petition) தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) மொத்த குத்தகைப் பாக்கிதாரர்கள் 114 நபர்கள். இதில் நிலக் குத்தகை பாக்கிதாரர்கள் 81 நபர்கள். நெல் குத்தகை பாக்கிதாரர்கள் 33 நபர்கள்.

4—

**விராலிமலை ஒன்றியம் கிராம ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.**

வினா எண். 3410—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி விராலிமலை ஒன்றியம் நம்பம்பட்டி, மதயானைப்பட்டி, சோனியக்குடி, வடக்கு புதூர் சோனியக்குடி ஆகிய கிராம ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

[1987 மார்ச் 11

5—

**1980–1984 வரை வாழ்க்கையில் வெறுப்படைந்து இறந்தவர்களின் எண்ணிக்கை.**

வினா எண். 3730—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980–1984 வரை வாழ்க்கையில் வெறுப்படைந்து இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன ?

விடை—

1980–1984 வரை வாழ்க்கையில் வெறுப்படைந்து தற்கொலை புரிந்துகொண்டோர் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வருடம். | | | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1980 | .. | .. | 4,809 |
| 1981 | .. | .. | 4,836 |
| 1982 | .. | .. | 5,490 |
| 1983 | .. | .. | 5,362 |
| 1984 | .. | .. | 7,893 |

6—

**சென்னை மாநகராட்சி வரைபட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள வீடுகளின் மீது நடவடிக்கை.**

வினா எண் 3746—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 முதல் 1985 மே முடிய சென்னை மாநகர் அனைத்து வட்டங்களிலும், மாநகராட்சி வரைபடம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள வீடுகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீதிமன்றங்களில் அபராதம் செலுத்தியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஒருமுறை அபராதம் செலுத்தியவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) தொடர்ந்து ஆறு மாதங்களுக்கொருமுறை அபராதம் செலுத்தியவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 28,627.
(ஆ) 26,569.
(இ) 20,931.



1987 மார்ச் 11]

7—

**ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள டிராக்டர்களின் எண்ணிக்கை.**

வினா எண் 4048—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை டிராக்டர்கள் உள்ளன?

(ஆ) இவைகளில் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளவை எத்தனை?

விடை—

(அ) 187.

(ஆ) 53.

8—

**பாபநாசம் பிள்ளையன் கட்டளை தெப்பக் குளத்தைப் பராமரித்தல்.**

வினா எண் 4085—திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசத்தில், பிள்ளையன் கட்டளை சார்பில் பராமரிக்கப்படும் தெப்பக்குளம் நீண்டகாலமாக பராமரிப்பு இல்லாமல் உள்ளதால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

விடை—

அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசத்தில் உள்ள பிள்ளையன் அர்த்தஜாம கட்டளை சார்பில் பராமரிக்கப்படும் தெப்பக்குளத்தை பழுது பார்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

9—

**பெரியகுளம் பழ ஆராய்ச்சிப் பண்ணையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம்.**

வினா எண் 4132—டாக்டர் ந. முகம்மது சலீம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் பழ ஆராய்ச்சிப் பண்ணையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக் கேள்விகளுக்கு இடமில்லை.

10—

**முதுகுளத்தூர்—கடலாடிப் பகுதிக்கு நகரப் பேருந்து விடல்.**

வினா எண் 4304—திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரிலிருந்து கடலாடிப் பகுதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 1981-ல் துவக்கப்பட்ட நகரப் பேருந்து ஒரு மாதத்திற்குள் நிறுத்தப்பட்டு நான்கு ஆண்டுகளாக போக்குவரத்தே இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): மாண்புமிகு முதல்வர் அவர்களால் 18–10–1979-ல்தான் முதுகுளத்தூர் கடலாடிப் பகுதிக்கு அதாவது கீழ செல்வனூர் (வழி) புனவாசல், மாரந்தை, ஓரிவயல், ஏலாதி என்ற வழித்தடம் துவக்கப்பட்டது. அத்துடன் பல முனைத் திட்டத்தில் வேறு மூன்று வழித் தடங்களும் துவக்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டு கடலாடிப் பகுதிக்கு நகரப் பேருந்து ஏதும் துவக்கப்படவில்லை. 1983 வரை பேருந்து ஓடியது. 1983-ல் சாலை பழுது பட்டிருந்ததால், முதுகுளத்தூர்—கீழச் செல்வனூர் வழித் தடத்தில் மட்டும் சாலை சீராக்கப்படும் வரை பேருந்து செல்வது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் சாலை செப்பனிடப்பட்டு 5–5–1986 முதல் மறுபடியும் அந்தத் தடத்தில் பேருந்து செல்கின்றது.





11—

**பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.**

வினா எண் 4769—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டை, மறவக்காடு, மேலக்காடு, வடகாடு, பத்தங்காடு, சேரிகாலனி, பர்மா காலனி முதலிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): தம்பிக்கோட்டை—மறவக்காடு குடியிருப்புக்கு ரூ. 2.35 இலட்சத்தில் ஒரு குடிநீர்த் திட்டம் கட்டி முடிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

மேலக்காடு குடியிருப்புக்கு குடிநீர் வழங்க ரூ. 3.22 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு வேலைகள் விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளன.

வடகாடு, சேரி காலனி ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 1986–87 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு திட்டம் நிறைவேற்றப்படும்.

பத்தங்காடு குடியிருப்புக்கு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 125 மி. மீட்டர் விட்டமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு கையிறைப்பான் மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வாரிய விதிகள் மற்றும் மக்கள்தொகை கணக்கின்படி இக்குடியிருப்புக்கு ஒரு கையிறைப்பான் போதுமானதாகும்.

பர்மா காலனி குடியிருப்பிலுள்ள குடிநீர் உப்புநீராக மாறி விட்டபடியால் இக் குடியிருப்பை வகை 1-லிருந்து 3-க்கு மாற்றம் செய்து குடிநீர் வழங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[1987 மார்ச் 11

12—

வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டுவரும் பதிவுத் துறை அலுவலகங்கள்.

வினா எண் 5401—திருமதி. பா. வளர்மதி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பத்திரங்கள் பதிவு செய்யும் சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ், ரிஜிஸ்திரார் ஆபீஸ் எவ்வளவு வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன ?

(ஆ) அதற்காக அரசு கொடுக்கும் வாடகை எவ்வளவு?

(இ) அவைகளுக்காக சொந்தக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் பதிவுத் துறை அலுவலகங்களின் விவரம் பின்வருமாறு.—

| | |
|---|---|
| துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகங்கள். | 3 |
| மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் .. | 31 |
| சார்பதிவாளர் அலுவலகங்கள் .. .. | 239 |
| | 273 |

(ஆ) இந்த அலுவலகங்களுக்கு கொடுக்கப்படும் வாடகை (ஆண்டுக்கு) ரூ. 12,60,852 மட்டுமே.

(இ) அரசின் நிதி நிலைமை காரணமாக பதிவு அலுவலகங்களுக்குக் கட்டிடம் கட்டும் கருத்துரு தற்போது பரிசீலிக்கப்படவில்லை.

13—

வேலம்பாளையம் ஊராட்சி பெரியார் காலனி வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம்.

வினா எண் 5604—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 15, வேலம்பாளையம் ஊராட்சியைச் சார்ந்த பெரியார் காலனி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1987 மார்ச் 11]

விடை—

இவ் ஊராட்சியைச் சார்ந்த பெரியார் காலனி மற்றும் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்கு மண்டல முதன்மைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டம் நிறைவேறிய பின்னர் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு கொடுப்பது பற்றி ஆராயப்படும்.

14—

திருப்பூர் மாவட்ட மருத்துவமனை.

வினா எண் 5860—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்ட மருத்துவமனையில் நோயாளிகள் படுக்கை வசதிகளின்றி தரையில் படுத்திருப்பது குறித்து அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா?

விடை—

இல்லை. இந்த மருத்துவமனையில் தற்சமயம் 104 படுக்கை வசதிகள் உள்ளன. இதனை 300 ஆக அதிகரிக்கும் நோக்கத்தில் 23.70 இலட்சம் செலவில் கூடுதலாக 196 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டப்பட்டது. இதற்கேற்ப பணியாளர் தொகுதியும் செலவினங்களும் வழங்கப்பட்டுள்ளன.

15—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்தும் திட்டம்.

வினா எண் 5998—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் படுக்கை வசதி எத்தனை உள்ளது?

(ஆ) அதனை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) 951.

(ஆ) இல்லை.

16—

### ரெட்டிபாளையத்திற்கு குடிநீர் வசதி.

வினா எண் 6290—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியத்துக்குட்பட்ட ரெட்டிபாளையத்தில் இரண்டு கிணறுகளிலும் தண்ணீர் வற்றி குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம் ரெட்டிபாளையத்தில் மக்கட் தொகை 710 ஆகும். இங்கு உள்ள இரண்டு கிணறுகளில் தரை மட்டத் தொட்டிக் கிணற்றினை மட்டும் ஆழப்படுத்த நிலத்தடி நீரூற்று நிபுணர் பரிந்துரை செய்துள்ளார். எனவே, இக்கிணற்றினை தற்போதைய பாதகமான பருவநிலையினை மனதில் கொண்டு ரூபாய் 6,700 மதிப்பீட்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு நிதியைக் கொண்டு ஆழப்படுத்த ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அனுமதியளிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையர் வேலையினை ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஒப்படைத்து, 12–8–1986-ல் வேலையினை முடித்துள்ளார். இவ்வேலைக்கு ரூபாய் 6,000 செலவிடப்பட்டு, கிணறு 0.6 மீட்டர் ஆழப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கிணற்றில் 2 மீட்டர் தண்ணீர் உள்ளது. இதனை இவ்வூர் பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

17—

### நிலக்கோட்டை வத்தலகுண்டு ஒன்றியங்களிலுள்ள கைப்பம்புகள்.

வினா எண் 6494—திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை, வத்தலகுண்டு ஒன்றியங்களில் எத்தனை ''கைப்பம்புகள்'' இயங்குகின்றன ?

(ஆ) எத்தனை ''கைப்பம்புகள்'' பழுதடைந்துள்ளன ?

(இ) பழுதடைந்துள்ளதை இயங்கவைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?





விடை—

(அ) நிலக்கோட்டை, வத்தலகுண்டு ஒன்றியங்களில் 278 கையிறைப்பான்கள் இயங்குகின்றன.

(ஆ) மற்றும் (இ) நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 7 கையிறைப்பான்களும், வத்தலகுண்டு ஒன்றியத்தில் 5 கையிறைப்பான்களும், 31–8–1986 அன்றைய நிலவரப்படி பழுதடைந்த நிலையில் இருந்தன. அவற்றை சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

18—

### குமரி மாவட்டத்தில் புதிதாக ரப்பர் மற்றும் முந்திரித் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்.

வினா எண். 6532— டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக ரப்பர் தொழிற்சாலை மற்றும் முந்திரித் தொழிற்சாலை அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக முந்திரித் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. அம்மாவட்டத்தில், அரசு ரப்பர் கழகத்தின் கீழ் உள்ள மைலார் கோட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலை, ஒரு நாளைக்கு இரண்டு டன்கள் ரப்பர் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். கட்டடம் கட்டவும் சாலை போடவும் ரூபாய் 10 இலட்சமும், சுவீடன் நாட்டிலிருந்து இயந்திரங்கள் வாங்க ரூபாய் 23 இலட்சமும் செலவிடப்படும்.

19—

### பெரியார் மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள்.

வினா எண். 6620—டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. வி. பாலகிருஷ்ணன், திரு. அ. பெரியசாமி, திரு. யு. பி. மாதையன், திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டுக்கு செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன?

விடை—

(அ) பெரியார் மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தின் (RLEGP) கீழ் 1985-86 ஆம் ஆண்டுக்கு செலவிடப்பட்ட தொகை ரூபாய் 152.43 இலட்சமாகும்.

(ஆ) 1985-86 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட பணிகள் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன:

| | | |
|---|---|---|
| 1 | சாலைப்பணிகள் .. .. .. .. | 17 |
| 2 | கசிவு நீர்க்குட்டைகள் .. .. .. | 26 |
| 3 | ஆதி திராவிடர்/மலைவாழ் மக்களுக்கான தொகுப்பு வீடுகள் முதற் கட்டம் | 645 |
| | இரண்டாம் கட்டம் .. .. .. | 591 |
| 4 | பலநோக்கு சமுதாயக் கூடங்கள் .. .. | 4 |
| 5 | கிராம சுகாதாரக் கழிப்பிடங்கள் .. .. | 215 |
| 6 | சமூகக் காடுகள் .. .. .. .. | 65 இலட்சம் கன்றுகள் |

20—

சென்னை அடையாறு பாலம்.

வினா எண். 7746—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அடையாறு பாலத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

(ஆ) அதைச் சீர் செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ள மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற புயல் மற்றும் வெள்ளத்தால் அடையாறு திரு. வி. க. பாலத்திற்குக் கீழ்க்கண்டவாறு சேதம் ஏற்பட்டுள்ளது :

(1) இராமகிருஷ்ண மடம் சாலை பக்கமும் மற்றும் அடையாறு பக்கமும் பாலத்தின் இணைப்புப் பகுதிகளுக்குச் சேதம் ஏற்பட்டது.



(2) பாலத்தின் தடுப்புச் சுவர் மற்றும் சுவர் அருகே இரு பக்கமும் அரிப்பு ஏற்பட்டது.

(3) பால தளத்தின் மேல் கான்கிரீட் பகுதி மற்றும் கைப்பிடிகளுக்கு சேதம் ஏற்பட்டது.

(4) பாலத்தின் கான்கிரீட் மேல் தளம், உத்திரம் முதலியன சேதமடைந்து உதிர்ந்த நிலையில் அதிலுள்ள கம்பிகள் காணப்பட்டன.

(ஆ) மேற்கண்ட சேதங்களை செப்பனிட உடனடியாக நடவடிக்கை எடுத்து ரூபாய் 41.17 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியுதவியிலிருந்து வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

21—

திங்களூரில் கட்டப்பட்டுள்ள அரசு மருந்தகம்.

வினா எண். 7997—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பெருந்துறை தொகுதியிலுள்ள திங்களூரில் கட்டப்பட்டுள்ள அரசு மருந்தகத்தினுடைய மதிப்பு எவ்வளவு ?

(ஆ) அதில் எத்தனை படுக்கை வசதிகள் உள்ளன ?

(இ) எத்தனை மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள் ?

விடை—

(அ) எட்டு இலட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) எட்டு படுக்கைகளுக்கான வசதிகள் உள்ளன.

(இ) இரண்டு மருத்துவர்கள்.

22—

வடகாட்டில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண். 8149—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வடகாட்டில் மேல்நிலைக் குடிநீர் தொட்டி கட்டி குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பு எவ்வளவு ?

(இ) திட்டம் எப்போது துவங்கும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) வடகாடு மற்றும் 5 குடியிருப்புகளுக்கு ரூபாய் 22 இலட்சம் செலவில் ஆயுள் காப்பீட்டுக் கழக உதவியுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. திட்ட வேலைகள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப் பட உள்ளன.

23—

**செங்காடை ஓடை குட்டை கட்டும் பணி.**

வினா எண். 8267—**திரு. ச. கோவிந்தசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி தொகுதி, செங்காடை ஓடை குட்டைக் கட்டுவதற்காக ரூபாய் 2,00,000 ஒதுக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், வேலை பூர்த்தியாகிவிட்டதா ?

விடை—

(அ) இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

24—

**1980 முதல் 1985 வரை ஆத்தூர் வட்டத்தில் குடி மனைப்பட்டா கோரி வரப்பெற்ற மனுக்கள்.**

வினா எண். 8528—**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 முதல் 1985 முடிய சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் குடி மனைப்பட்டா கோரி வந்திருக்கும் மனுக்கள் எத்தனை ?

(ஆ) அரசு அதன் மீது எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 1980 முதல் 1985 முடிய சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் குடி மனைப்பட்டா கோரி வந்திருக்கும் மனுக்கள் 9,898.

(ஆ) எல்லா மனுக்களுக்கும் குடி மனைப்பட்டா வழங்கப்பட்டு விட்டது.



25—

**ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள பொன்னாறு வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் நிலங்கள்.**

வினா எண் 8811—**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள பொன்னாறு வாய்க்காலின் மூலம் பாசனம் பெறும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ?

விடை—

பொன்னாறு மற்றும் அதன் கிளை வாய்க்கால்களின் மூலம் 4,694 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

26—

**நெல்லிக்குப்பம் இ. எஸ். ஐ. மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டும் பணி.**

வினா எண் 9085—**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் இ. எஸ். ஐ. மருத்துவ மனைக்கு சொந்தக் கட்டிடம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

27—

**பவானிசாகர் பகுதிக் காடுகளிலுள்ள மான்கள்.**

வினா எண் 9107—**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் பகுதியில் உள்ள காடுகளில் தெங்குமராடா வரையில் எத்தனை வகையான மான்கள் வாழ்ந்து வருகின்றன ?

(ஆ) அவைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவற்றின் பாதுகாப்புக்கு என சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) இப்பகுதியில் புள்ளிமான், மிளா, வெளிமான், கேளை ஆடு, சருகுமான், நாற்கொம்பு மான் போன்ற மான் வகைகள் உள்ளன.

(ஆ) அவற்றின் எண்ணிக்கை என்னவென்று முறையான கணக்கெடுப்பு இன்னும் எடுக்கப்படவில்லை.

(இ) இப்பகுதியைச் சரணாலயமாக ஆக்கும் கருத்துரு ஒன்று தலைமை வனவிலங்குக் காப்பாளரின் பரிசீலனையில் உள்ளது.

28—

**மேலப்புளியங்குடி பகுதியில் கசிவு நீர்க் குட்டை அமைத்தல்.**

வினா என் 9175—**திரு. தெ. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், மேலப்புளியங்குடி பகுதியில் '' கசிவு நீர்க் குட்டை '' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணிகள் எப்போது துவங்கும் ?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலப்புளியங்குடி கிராமத்தில் இரண்டு கசிவு நீர்க் குட்டைகள் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

(ஆ) ஒரு கசிவு நீர்க் குட்டைக்கு சுமார் ரூபாய் 50,000 வீதம் இரண்டு கசிவு நீர்க் குட்டைகள் கட்ட ரூபாய் 1,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) இந்த ஆண்டில் பணி தொடங்கவிருக்கின்றது.





29—

**குரும்பூர் இரயில்வே நிலையம் அருகில் சாலை அமைத்தல்.**

வினா எண். 9209—**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆள்வார்திருநகரி யூனியன் பகுதியில் குரும்பூர் ரயில்வே ஸ்டேசன் சமீபம் ரோடே இல்லாமல் உள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆமெனில் ரோடு போடுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இவ்வினாவில் குறிப்பிடப்பெறும் சாலையானது நாசரேத்–ஏரல் சாலை கி.மீ. 10/0 முதல் 10/2 வரையிலான பகுதியாகும். இது குரும்பூர் ரயில்வே நிலையப் பகுதியில் அமைந்துள்ளது. இச்சாலையை மேம்பாடு செய்ய தென்னக இரயில்வே துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

30—

**தாம்பரம் தொகுதியில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.**

வினா எண் 9235—**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் தீவிர கால்நடை அபிவிருததித் திட்டம் செயற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) தாம்பரம் தொகுதியில் தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஏற்கெனவே, தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) எழவில்லை.

31—

திருவாடானை ஒன்றியத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவு படுத்தும் திட்டம்.

வினா எண். 9282—திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஒன்றியத்தில் உள்ள பாண்டுகுடி, தொண்டி ஆகிய ஊர்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

32—

கோவில்பட்டி புறவழிச்சாலைப் பணி.

வினா எண் 9300—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி பைபாஸ் ரோடு பணி எப்போது முடிக்கப்படும்?

விடை—

கோவில்பட்டி புறவழிச்சாலை பணி (சந்திப்பு மேம்பாட்டு வேலை நீங்கலாக) முடிவடைந்து விட்டது. 20–5–1986 முதல் போக்குவரத்திற்கு சாலை திறந்து விடப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

33—

தும்மலைப்பட்டி பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கட்டிடம்.

வினா எண். 9385—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்? மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தாலுகா, தும்மலைப்பட்டி பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கட்டிடம் பழுது பார்க்கப்பட உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கப்பட உள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தும்மலைப்பட்டி ஊராட்சியிலுள்ள பள்ளிக் கட்டிடம் பழுது பார்க்க இயலாத காரணத்தால் ரூபாய் 85,000 செலவில் புதிதாக பள்ளிக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

34—

பென்னாகரத்தில் பட்டுத் தொழில் மையம் கட்டும் பணி.

வினா எண் 9645—திரு. எச்.ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரத்தில் பட்டுத் தொழில் மையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரத்தில் வறட்சி மீட்புத் திட்டத்தின் கீழ் பட்டுத் தொழில் மையம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. அதற்கான கட்டிடங்கள் கட்டி முடியும் தருவாயில் உள்ளன.

35—

ராமநதி ஆற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் 9672—திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் ஆழ்வார் குறிச்சிக்கும் பாப்பான்குளம் கிராமத்திற்கும் இடையில் உள்ள ராமநதி ஆற்றில் ஒரு பாலம் கட்ட அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) பாலம் கட்ட சுமார் ரூ. 7.50 இலட்சம் ஆகும். அரசின் குறுகிய நிதி ஒதுக்கீடு காரணத்தாலும், வேலையின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டும் இப்பணியினை உடன் எடுத்துச் செய்ய இயலாது.

36—

முண்டந்துறை புலி சரணாலயத்திலுள்ள புலிகள்.

வினா எண் 9675—திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முண்டந்துறை புலி சரணாலயத்தில் எத்தனை புலிகள் உள்ளன ?

(ஆ) பாபநாசம் காடுகளில் எத்தனை யானைகள் உள்ளன?

விடை—

(அ) மற்றும் (ஆ) முண்டந்துறை சரணாலயம், அம்பாசமுத்திரம் சரகத்தில் 2 புலிகளும், 12 சிறுத்தைகளும், பாபநாசம் சரகத்தில் 3 புலிகளும், 21 சிறுத்தைகளும் உள்ளன. பாபநாசம் சரகக் காடுகளில் 21 யானைகளும், அம்பாசமுத்திரம் சரகத்தில் 23 யானைகளும் உள்ளன.

37—

தமிழகத்தில் மேலும் தானியங்கி பால் இயந்திரம் அமைத்தல்.

வினா எண் 9759—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மேலும் 100 தானியங்கி பால் இயந்திரம் அமைக்க அகில இந்திய பால்வள நிறுவனம் அனுமதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை எங்கெங்கு அமைக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் அமைக்கப்படும்.



38—

மயிலாடுதுறை—சென்னைக்கு விடப்பட்ட இரவு நேர திருவள்ளுவர் சொகுசுப் பேருந்து.

வினா எண் 9781—திரு. மு. தங்கமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு இரவு நேரத்தில் விடப்பட்ட திருவள்ளுவர் சொகுசுப் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அப்பேருந்தை விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை—மயிலாடுதுறை வழித் தடத்தில் இயக்கப்பட்டு வந்த இரு சொகுசுப் பேருந்துகள், பகலில், சென்னையிலிருந்தோ, மயிலாடுதுறையிலிருந்தோ புறப்பட்டு, இரவு அதே மார்க்கத்தில் திரும்ப வந்தடைந்தன. பகல் நேர ஓட்டங்களில் சொகுசுப் பேருந்தின் கூடுதல் கட்டணம் காரணமாகவும், இதே வழித் தடத்தில் கட்டணம் குறைவான சாதாரணப் பேருந்துகள் இயக்கப் பெற்று வருவதாலும் ; பகல் நேரத்தில் சொகுசுப் பேருந்தில் பயணிகளின் விகிதம் போதுமானதாக இல்லை. எனவேதான் சென்னை - மயிலாடுதுறை வழித் தடத்தில் இயக்கப்பட்டு வந்த சொகுசுப் பேருந்துகள் மாற்றப்பட்டு 5—3—1984 முதல் புதிய சாதாரண பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

39—

வைத்தீஸ்வரன் கோயில் மூலிகைத் தோட்டத்திலுள்ள மூலிகைகள்.

வினா எண் 9782—திரு. மு. தங்கமணி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை அருகில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலில் அமைந்துள்ள மூலிகைத் தோட்டத்தில் எந்தெந்த மூலிகைகள் கிடைக்கின்றன ?

(ஆ) அதன் பராமரிப்புச் செலவு ஆண்டுதோறும் எவ்வளவு?

விடை—

(அ) வைத்தீஸ்வரன் கோயில் மூலிகைத் தோட்டத்தில் கத்தாழை, கள்ளி வகைகள், கீழாநெல்லி, கருநொச்சி, வேம்பு, புங்கன், ஆடாதொடை, துளசி, எருக்கு, ஊமத்தை, வல்லாரை போன்ற மூலிகைகள் உள்ளன. இதைத் தவிர விசேஷ மூலிகைகள் ஏதும் பயிரிடப்படவில்லை.

(ஆ) பராமரிப்புச் செலவு ஏதுமில்லை.

40—

புதுக்கோட்டை நகரத்தில் புதிதாக காவல் துறை அலுவலகம் கட்டுதல்.

வினா எண் 9796—திரு. ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரத்தில், புதுக்கோட்டை மாவட்ட காவல் துறை அலுவலகம் புதிதாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டக் காவல் அலுவலகம் கட்டுவதற்கான மொத்தத் தொகை ரூ. 46.58 லட்சத்திற்கு அனுமதியும் 1986-87 ஆம் ஆண்டில் செலவு செய்ய ரூ. 30.68 லட்சமும் அரசாணை (நிலை) எண். 1586, உள்துறை, நாள்: 23-6-1986 இல் வழங்கப்பட்டுள்ளது.

41—

குருந்தன் கோடு நுள்ளிவிளை இணைப்புச் சாலைத் திட்டம்.

வினா எண் 9834—திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் குருந்தன்கோடு, நுள்ளிவிளை இணைப்புச் சாலைத் திட்டம் என்ன நிலையில் உள்ளது?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குருந்தன்கோடு நுள்ளிவிளை சாலை முழுவதும் பொதுப்பணித் துறையில் இரட்டைக்கரை வாய்க்காலின் வலது பக்க கரைமேல் உள்ளது. இச்சாலையின் இடது பக்கம் வாய்க்காலும், வலது பக்கம் வயல்களும் குடியிருப்புப் பகுதியுமாக உள்ளது. தற்போது இச்சாலை



சராசரி 4.0 மீட்டர் அகலம் கொண்ட சல்லி பரத்தப்பட்ட சாலையாகும். இச்சாலை தற்போது சில வாகனங்கள் மட்டும் செல்லக் கூடிய நிலையிலும் பெரு வாகனங்கள் செல்ல முடியாத நிலையிலும் உள்ளது. இச்சாலையை 7.50 மீட்டர் அகலப்படுத்தி தார்ச் சாலையாக மேம்பாடு செய்யவும், தேவையான நிலம் கையகப்படுத்தவும் சுமார் ரூ. 30.00 இலட்சம் தேவைப்படும். எனவே, அரசின் நிதிவளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எடுத்துச் செய்வது குறித்து பின்னர் பரிசீலனை செய்யப்படும்.

42—

உத்திரமேரூர் தாலுக்காவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 9836—திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுக்காவில் அனுமந்தண்டலம் இரவாதநல்லூர், கண்டிகை போன்ற கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம் (தன்னிறைவுத் திட்ட வேலை) நிறைவேறாமல் இருக்கக் காரணம் என்ன?

(ஆ) எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) அனுமந்தண்டலம் மற்றும் மேல்புதூர் கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பழுதடைந்துள்ள மின் நீரேற்றி பழுது பார்க்கப்பட வேண்டியுள்ளது. மேலும், ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத்தால் பதிக்கப்பட்ட பகிர்மானக் குழாய்கள் சரிவர இயங்காததால் அவை மீண்டும் பதிக்கப்பட வேண்டும். இரவாதநல்லூர் மற்றும் இரவாதநல்லூர் கண்டிகை ஆகிய கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பிரதான குழாய் பதிப்பதில் சிற்சில கட்டுமான (gap works) வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது. பகிர்மானக் குழாய் பதிக்கும் வேலைகளும் சில இடங்களில் நடைபெற்று வருகின்றன. இந்த வேலைகள் அனைத்தும், இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு திட்டம் பயனுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

43—

**நாச்சியார்பேட்டை கிராமத்திலுள்ள ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.**

வினா எண். 9941—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி நாச்சியார்பேட்டை கிராமத்திலுள்ள ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை

இல்லை.

44—

**சேலம் மாவட்டத்தில் குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள்.**

வினா எண். 9993—திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் இருக்கும் எத்தனை கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டது ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 24 கிராமங்களில் 467 குடிசைகளுக்கும், காடையாம்பட்டி ஒன்றியத்தின் 7 கிராமங்களில் 171 குடிசைகளுக்கும் மின்வசதி செய்யப்பட்டுள்ளது.

45—

**மதுரை ஜெய்ஹிந்துபுரம், ஜீவாநகர் பகுதிகளில் சாலை போடும் பணி.**

வினா எண். 10042—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஜெய்ஹிந்துபுரம், ஜீவாநகர் ஆகிய பகுதிகளில் தார்ச் சாலைகள் போடுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு என்ன ?

(இ) வேலைகள் எப்போது முடிவுறும் ?

விடை—

(அ) (ஆ) மற்றும் (இ) மதுரை ஜெய்ஹிந்துபுரம் பகுதியில், தார்ச் சாலை அமைப்பதற்கு, மதிப்பீடுகள் ரூ. 5,53,000-க்கு தயாரிக்கப்பட்டு இதுவரையில் ரூ. 2,02,000-க்கு பகுதி தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மற்ற சாலைகளில் மெட்டல் பரப்பும் வேலைகள் முடிவு பெற்றுள்ளன. தார்ச் சாலை அமைக்கும் வேலை நான்கு மாதங்களில் முடிந்து விடும். இதுபோலவே மதுரை ஜீவா நகர் பகுதியில் தார்ச்சாலை அமைப்பதற்கு மொத்த மதிப்பீடு ரூ. 2,51,000-க்கு தயாரிக்கப்பட்டு, சரளைப் பரப்பும் வேலை மட்டும் முடிக்கப்பட்டு உள்ளது. தார்ச் சாலை வேலை விரைவில் ஆரம்பிக்கப்பட்டு, நான்கு மாதங்களில் முடிவுபெறும்.

46—

**காடையாம்பட்டியில் கைத்தறி விற்பனை நிலையம் அமைத்தல்.**

வினா எண். 10076—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டியில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

47—

**புதுக்கோட்டையில் சமூக நலத் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.**

வினா எண். 10368—திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் சமூக நலத்துறை அலுவலகத்திற்கு புதிதாகக் கட்டிடம் கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

48—

1984–85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வாணிபக் கழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி.

வினா எண். 11084—திரு. கே. உசி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984-85 ஆம் ஆண்டில், தமிழ்நாடு வாணிபக் கழகத்திலிருந்து எத்தனை டன் அரிசி என்ன விலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

விடை—

1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்படவில்லை.

49—

தமிழகத்தில் நடந்த அரசு கண்காட்சிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த லாபம்.

வினா எண். 11176—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984, 1985 மற்றும் 1986 ஆண்டுகளில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடந்த அரசு கண்காட்சிகளின் மூலம் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு ?

விடை—

1984, 1985 மற்றும் 1986 ஆண்டுகளில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடந்த அரசு கண்காட்சிகளின் மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 79,80,000 (ரூபாய் எழுபத்தொன்பது லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)*



50—

கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு வாகனம் வழங்கல்.

வினா எண். 11651—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு வாகனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

விடை—

கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு ஊர்திகள் வழங்க அரசால் ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக ஊர்திகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை

முந்தைய நாள் நிகழ்ச்சிகள் குறித்து.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்தான் நேற்றே சொல்லி விட்டேனே, அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது, உட்காருங்கள் (குறுக்கீடு) ** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு—(குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நேற்றுதான் எல்லாம் எக்ஸ்பஞ்ச் பண்ணியாகி விட்டது. எல்லாவற்றையுமே எக்ஸ்பஞ்ச் பண்ணியிருக்கிறோம். (கூச்சல், குழப்பம்)** நேற்று ஏன் நீங்கள் கேட்கவில்லை ? (குறுக்கீடு) எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டுமென்று சொன்னீர்கள், எக்ஸ்பஞ்ச் பண்ணினேன். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) என்னுடைய அறைக்கு வாருங்கள் (குறுக்கீடு) எல்லாவற்றையுமே எக்ஸ்பஞ்ச் பண்ணியிருக்கிறோம் (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நீங்கள்தான் அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது என்று சொன்னீர்கள் ; எல்லோரும் சொன்னீர்கள் (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நேற்றே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு ரூலிங் கொடுத்து விட்டார்கள் ; அவைகளெல்லாம் எக்ஸ்பஞ்ச் ஆகிவிட்டன. ஆகவே உங்களுடைய ரூலிங்கை இன்றைக்கு கொஸ்டின் பண்ணுவது நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றையதினம் எல்லாம் முடிந்து விட்டது. இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. இவைகளையெல்லாம் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பேசிய பேச்சுகள் அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டு விட்டன என்ற உடனே எல்லாம் போய் விட்டது. அதற்குப் பிறகு எடுக்கப்பட்டவைகளைப் பற்றி கேள்வி கேட்பதோ, அதுபற்றி பிரச்சினைகளை எழுப்புவதோ சரியானதல்ல, முறையல்ல. ஆகவே, அவைக் குறிப்பில் இருக்கின்ற ஒன்றைப் பற்றி கேட்பீர்களேயானால் நல்லது. அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவைகளைப் பற்றி மறுபடியும் கிளப்புவது என்பது சரியான முறையல்ல. அவை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.... (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றையதினம் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை—உங்கள் அனைவருடைய வேண்டுகோளுக்கிணங்க (குறுக்கீடு)——பத்திரிகையில் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆணையை மீறி பத்திரிகையில் வந்தால் அந்தப் பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நேற்றேகூட இதுபற்றிக் கேட்டிருக்கலாம், (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. யாரும் என்னுடைய அனுமதியைப் பெற்று பேசவில்லை. ஆகவே அவைக்குறிப்பில் ஏற்ற வேண்டாம் (குறுக்கீடு) நேற்றே நீங்கள் சொல்லிவிட்டீர்களே (குறுக்கீடு) ——**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதற்குப் பிறகு அந்தக் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை. பேப்பரில் வந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் கூறுவது உண்மையாக இருக்குமானால் அந்தப் பத்திரிகைகள் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்கலாம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எழுதிக் கொடுங்கள். எந்தெந்தப் பத்திரிகை என்று எழுதிக் கொடுங்கள். நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடு) அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு. எல்லோரும் உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 3. கவன ஈர்ப்பு.

### (அ) சென்னையில் அரிசி விலை ஏற்றம்.

**திரு. வைகை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரில் வெளிச் சந்தையில் அரிசி விலை ஏற்றத்தினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிறைய பெருந்தன்மையோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—மிகுந்த பெருந்தன்மையோடு—சொன்னதால் நேற்று எல்லாவற்றையும் நீக்கிவிட்டேன். அவருடைய பெருந்தன்மைக்காகத்தான் நீக்கினேன். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எவ்வளவோ விமர்சனம் செய்த பிறகும் அவர் பெருந்தன்மையோடு அதையெல்லாம் நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதனால்தான் நீக்கினேன். அந்தப் பெருந்தன்மையைப் பாராட்டக் கூடாதா ? (குறுக்கீடு) நேற்றே எல்லாம் போய்விட்டது. நாடு தெரிந்து கொண்டது. (குறுக்கீடு) அதுவும் போய்விட்டது. வேண்டுமானால் மீண்டும் ஒரு நாள் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம். முடிவு எடுங்கள். (குறுக்கீடு).

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

சென்னை நகரில் வெளி அங்காடியில் புழுங்கலரிசி சாதாரண ரகம் ( Common ) சில்லறையில் கிலோ 3.70 லிருந்து ரூ. 3.80 வரையிலும், சன்ன ரகம் ரூ. 4.20 லிருந்து ரூ. 4.30 வரையிலும் விற்கப்படுகிறது. சென்ற ஆண்டு இதே காலத்தில் இவைகளின் விலை முறையே ரூ. 3.50 லிருந்து ரூ. 3.55 வரையிலும் ரூ. 3.80 லிருந்து ரூ. 3.85 வரையிலும் விற்கப்பட்டு வந்தது. தமிழகத்தில் தற்போதைய சராசரி சாதாரண ரக புழுங்கலரிசியின் சில்லறை விலை ரூ. 3.68 ஆகவும், சன்னரக புழுங்கலரிசியின் சில்லறை விலை ரூ. 4.06 ஆகவும் நிலவி வருகிறது. இவற்றின் விலை சென்ற ஆண்டு இதே காலத்தில் முறையே ரூ. 3.47

ஆகவும், ரூ. 3.87 ஆகவும் இருந்தது. இந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் சராசரி விலை உயர்வு புழுங்கலரிசி சன்ன ரகத்திற்கு 4.9 விழுக்காடும், புழுங்கலரிசி சாதாரண ரகத்திற்கு 6.1 விழுக்காடும், அதிகரித்துள்ளது. சென்னையில் இந்த ஓராண்டுக் காலத்தில் புழுங்கலரிசி சாதாரண ரகத்திற்கு 7.0 விழுக்காடும், புழுங்கலரிசி சன்ன ரகத்திற்கு 9.1 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி திங்கள் இரண்டாவது வாரத்தில் இருந்து ஆந்திரபிரதேச அரசு வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்து செல்வதற்கான அனுமதி வழங்கவில்லை. இதன் காரணமாக ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு அரிசி வருவது மிகவும் குறைந்துவிட்டது. மேலும் பணவீக்கத்தின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு விலைவாசி உயர்வது இயல்பான நிகழ்ச்சியாகும். 1986 சனவரியில் மொத்த விலைக்குறியீட்டு எண் (அனைத்துப் பொருட்கள்—All commodities) இந்திய அளவில் 358 லிருந்து 1986 அக்டோபரில் 385 ஆக, 7.5 விழுக்காடு உயர்ந்துள்ளது. இந்நிலையில் மற்றப் பொருட்களின் விலை உயர்வுடன், ஒப்பிடும் போது, சாதாரண ரக அரிசியின் விலை உயர்வு அதிகமில்லை.

* * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தேவையில்லாத பிரச்சினை. (குறுக்கீடு):

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மக்களைப் பாதுகாப்பதற்காக, நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தி—பாதி விலைக்கு—பல கோடி மக்களுக்கும் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் வெளிச் சந்தையில் உள்ள வியாபாரிகள் இந்த அரசுக்குக் களங்கம் ஏற்படுத்துகிற வகையில் அதிகமான கொள்ளை லாபம் சம்பாதிக்கும் வகையில் அதிக விலைக்கு அரிசியை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என் அனுமதியில்லாமல் எழுந்து நிற்பது முறையல்ல. ** அது நேற்றே முடிந்துவிட்டது. நேற்று பேசியது முழுவதும் நேற்றே முடிந்துவிட்டது, நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட ஒரு பொருளைக் குறித்து விவாதம் எழுப்புவது என்பது முறையல்ல. அவைக் குறிப்பில் இருக்கிற ஒன்றை எடுத்து அதைக் குறித்து விளக்க வேண்டுமென்றால் அது நியாயம். அவைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





குறிப்பிலேயே இல்லாத, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட விஷயங்களைக் குறித்து மறுபடியும் கிளப்புவது நியாயமாகாது. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.** (குறுக்கீடு).

**திரு. சைதை சா.துரைசாமி :** தலைவர் அவர்களே, எனவே வெளிச் சந்தையில் விலையை அதிகமாக ஏற்றி, கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) **.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது நாட்டுப் பிரச்சினை, உங்கள் பிரச்சினை அல்ல. மீண்டும் என்னைப் பேச வைத்துவிடாதீர்கள். மீண்டும் சர்வ கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எது நியாயம் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில். ......(குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றயதினமே ** பற்றி சொன்னக் கருத்துக்களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. அதைப்பற்றி இங்கே மீண்டும் கிளப்புவதற்கு உரிமையில்லை. (குறுக்கீடு) அவைக் குறிப்பில் இல்லாத ஒன்றை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்ட ஒன்றைப்பற்றி இங்கே விளக்கம் கேட்க முடியாது. அவரைப்பற்றி குறிப்பிட்ட பகுதியும் நீக்கப்பட்டுவிட்டது. மறுபடியும் கிளப்பக் கூடாது. அது நீக்கப்பட்டு விட்டது. அதுதான் மரபு. (குறுக்கீடு) **.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் மீண்டும் வேண்டுமானால்—சர்வ கட்சித் தலைவர்களைக் கேட்கிறேன். வேண்டுமானால் பார்க்கலாம். இதையெல்லாம் பற்றி என்னுடைய அறைக்கு வந்து பாருங்கள். இது தேவையில்லை. இதையெல்லாம் நீக்கிவிடுகிறேன். அவைக் குறிப்பில் இது தேவையில்லை.

(முற்பகல் 11–10.)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில் கடந்த பல ஆண்டுகளாக கிலோ அரிசி ரூ. 1.75 என்கின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு. . (குறுக்கீடு) வெளிச்சந்தையைப் பொறுத்தவரையில் வியாபாரிகளின் விலையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தலையிடுவது என்பது இயலாத காரியம். ஆனால் பொது விநியோக முறையின் மூலமாக எந்த அளவிற்கு மக்களுக்குத் தேவையோ அந்த அளவிற்கு அரிசி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**திரு. கைகை சா. துரைசாமி** : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி கொண்டு வருவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே ஆந்திர மாநில அரசோடு பேசி இங்கே அரிசி கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான அளவிற்கு அரிசி நம்மிடத்திலே இருக்கிறது. தேவைப்படுமானால் ஆந்திர அரசோடு பேசி ஆவன செய்வதற்கு நமது அரசு தயாராக இருக்கிறது.

## (ஆ) சென்னை அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

**திரு. மா. மணிமாறன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சென்னையில் உள்ள அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள், 'டிப்ளமாவிற்கு' பதிலாக 'பட்டமாக்கக்' கோரி உள்ளிருப்புப்போராட்டம் நடத்துவது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

சென்னையிலுள்ள அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் கடந்த 19—1—1987 லிருந்து ஏறத்தாழ 6 வாரகாலம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினார்கள் :

(i) தற்போதுள்ள டிப்ளமா பாடத்தை, பட்டப் படிப்பு நிலைக்கு மாற்றுதல்.

(ii) தற்போதுள்ள விஷுவல் கம்யூனிகேஷன் டிசைன் மற்றும் இண்டஸ்டிரியல் டிசைன் பட்டப் படிப்புகளுக்கு சென்னை பல்கலைக் கழகத்தின் நிரந்தர இணைப்பு கோரல்.

(iii) மாணவர் சங்கத்தினை சட்ட பூர்வமாக அங்கீகரித்து அனுமதி அளித்தல்.



2. இது தொடர்பாக மாணவர்களிடம் பேசி சுமுகமான முடிவு காண நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

(i) மாணவர்கள் தற்போதுள்ள டிப்ளமா பாடத்திற்கும் பட்டப் படிப்பிறகும் பெரிய வேறுபாடு ஏதுமில்லை என்று கூறி டிப்ளமா மாணவர்களுக்கு பட்டம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். ஏனெனில், டிப்ளமா பாடங்கள் மாநில தொழில் நுட்பக் கல்விக் குழுவுடன் இணைந்தவை. பட்டப் படிப்புகள் பல்கலைக் கழகப்பாடத்திட்டப்படி நடத்தப்பட்டு பட்டப் படிப்புகளுக்கான தேர்வுகள் பல்கலைக் கழகங்களால் நடத்தப்படுகின்றன. டிப்ளமா பாடத்திற்கும், பட்டப் படிப்பிற்கும் வகுக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தை ஒப்பு நோக்கினால், வகுப்பறைப் பாடங்களும் செய்முறைப் பாடங்களும் இரண்டிற்கும் முற்றிலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். இம் முரண்பாடான விஷயத்தில் பல்கலைக் கழக ஆணைகளை ஒரே நாளில் பெற்றுத் தர வலியுறுத்தி மாணவர்கள் பிடிவாதமாகக் கிளர்ச்சி செய்தனர். அவர்களது கிளர்ச்சி முற்றிலும் நியாயமற்றதாகும். இது சம்பந்தமாகப் பல்கலைக் கழக ஆணைகளை ஒரே நாளில் பெறுவது இயலாத காரியம் என்பதை மாணவர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மாணவர்கள் கிளர்ச்சியை அப்போது கைவிடவில்லை. இருந்தபோதிலும், டிப்ளமா மாணவர்கள், பட்டப்படிப்புத் தகுதி பெற, வரும் கல்வியாண்டில் இருந்து அவர்களுக்கு என ஒரு ஓராண்டுகால பகுதி நேர பட்டப்படிப்புத் திட்டம் வகுப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, பல்கலைக் கழகத்துடன் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் தொடர்பு கொண்டதில், இப்பட்டப் படிப்பிற்கு விரிவான பாடத்திட்டம் தயாரிக்க ஒரு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வல்லுநர் குழு, ஓவியக்கலை மற்றும் சிற்பக்கலைப் பாடங்களில் முழுநேர நுண்கலைப் பட்டப் படிப்புக்கான விரிவான பாடத் திட்டம் தயாரிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. 1987-88—ம் கல்வியாண்டு முதல் இப்பட்டப் படிப்பு நடத்த அனுமதி கோரி விரைவான நடவடிக்கை மேற்கொள்ள பல்கலைக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை விளக்க வேண்டி பெற்றோர்களை அழைத்து தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் பேசியதில் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

(ii) சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்பு, நிரந்தரமாக, விஷுவல் கம்யூனிகேஷன் டிஸைன் மற்றும் இண்டஸ்டிரியல் டிஸைன் ஆகிய பட்டப்படிப்பு பாடங்களுக்குப்பெறுவது, மாணவர்களுக்குத் தொடர்புடைய ஒரு பிரச்சினை அல்ல. ஏனெனில், பல்கலைக் கழக இணைப்பு தற்காலிமாக இருந்தாலும், அப்பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு எவ்வித பாகுபாடும் இன்றி பட்டம் அளிக்கப்படுகிறது. மேலும் பட்டப் படிப்புப் பாடங்களை 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு தற்காலிக இணைப்பு

அளித்து அப்பட்டப் படிப்பு முழு வசதிகளையும் பெற்று நன்கு வளர்ச்சிஅடைந்தபிறகு நிரந்தர இணைப்பு வழங்குவது பல்கலைக் கழகத்தின் நடைமுறையாகும். எனவே மேற்குறிப்பிட்ட பட்டப் படிப்புப் பாடங்களுக்கும் காலப் போக்கில் சென்னைப் பல்கலைக் கழக நிரந்தர இணைப்பு கிடைக்கும்.

(iii) கல்லூரி முதல்வர், மாணவர்கள் சங்கம் அமைப்பது தொடர்பாக முன்னரே முடிவு எடுத்து ஒரு தற்காலிக மாணவர் பிரதிநிதிக்குழு அமைக்க ஒப்புதல் அளித்துள்ளார். இந்த தற்காலிகக் குழு, மாணவர் சங்கத்தேர்தலுக்கு முன்பாக அமைக்கப் பட்ட ஒரு இடைக்கால ஏற்பாடாகும்.

3. அனைத்து பெற்றோர்கள் கூட்டம் ஒன்று நடத்தினால் நலம் என்று கருதி அக்கூட்டம் 24—2—1987 அன்று தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்டு, விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. அதன் விளைவாக மறுநாளே மாணவர்கள் போராட்டத்தினைக் கைவிட்டார்கள். வகுப்புகள் மீண்டும் சுமுகமான முறையில் துவங்கப்பட்டு விட்டன. இப்போது கல்லூரி நன்றாக நடந்துகொண்டு வருகிறது.

4. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDY: On behalf of the Chairman of the Public Accounts Committee, I present the following Reports :—

1. *Forty-Second Report* on the further action taken by the Government on the recommendations contained in the Eighth Report (Seventh Assembly), and its earlier reports on the Accounts of the Government of Tamil Nadu for the years 1963-64 to 1965-66 and 1969-70 to 1971-72 relating to Public Works Department and Transport Department.

2. *Forty-third Report* on the Excesses Over Voted Grants and Charged Appropriations for the year 1982-83.

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக் குறிப்பில் ஒன்றும் ஏற்ற வேண்டாம். பத்திரிகைகளும் வெளியே பிரசுரிக்க வேண்டாம். வேண்டுமானால் இன்னும் ஒரு நாள் விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.



5. அறிவிப்புகள்.

**(அ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்). சட்ட முன் வடிவு, 1987.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. மலர்மன்னன், வேண்டாம். நீங்கள் வேறு, மற்ற உறுப்பினர்கள் வேறு. You are an accused in murder case. I remand you.

1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1987) ஆய்விற்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தர்மபுரி மாவட்டம், ஒசூர் பகுதியில் இருக்கின்ற கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வணக்கத்திற்குரிய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு ஆணையைப் பிறப்பித்து அதன் மூலமாக வேகமாக நடவடிக்கையை எடுப்பதற்குரிய ஒரு சட்டமுன்வடிவை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் இருக்கின்ற ஒசூர் என்பது தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கக்கூடிய அளவுக்கு பல்வேறு ஜாதி, இனம், மதம் எல்லாம் ஒன்றுபட்டு வாழக்கூடிய இடமாகவும், தொழில்வளம் பெருகக்கூடிய இடமாகவும் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானோர் வந்துபோகும் அந்த ஊரில் கேளவரப்பள்ளி டேம் கட்டாததால்குடிநீருக்கு அவதிப்படவேண்டிய நிலை உருவானதை எண்ணி அவசரமாக தனித் தன்மையோடு, தனிக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பார்வைக்கு வந்து, இதற்காகத் தனியாக சட்டமுன்வடிவு கொண்டு வந்து

* 1987ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நிறைவேற்ற வேண்டிய அவசியம் சுதந்திர நாட்டில் ஏற்பட்டுள்ளது. அந்த டேமுக்கான நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, கையகப்படுத்தி விடலாமென்று எண்ணி, மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு வகைகளிலே முதலீடு செய்து, வேலை முடிந்து வருகிறபோது, கடைசிக்கட்டத்தில் அங்கேயுள்ளசிலர் அரசாங்கத்திற்கு விரோதமாக பொது மக்களுக்கு விரோதமாக, தொழிற்சாலைகளுக்கு விரோதமாக, ஜனநாயகத்திற்கே விரோதமாக நீதி மன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்று, அதை நிறுத்தி வைத்திருக்கிற காரணத்தால், மக்களுக்கும், விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும், ஏன் அரசுக்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை எண்ணிப் பார்த்து, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தச் சட்டமுன்வடிவு தர்மபுரி மாவட்டத்திற்குப் பொதுவாகவும், ஓசூர் பகுதிக்குக் குறிப்பாகவும் ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, அங்கேயுள்ள நிலத்தைக் கையகப்படுத்தி மேலும் அந்த வேலைகளைத் தொடர்ந்து செய்தால், அங்கே தொழிற்சாலைகள் மேலும் பெருகும், இருக்கின்ற தொழிற்சாலைகள் நசிந்து போகாமல் இருக்கும், அங்கே குடியேறியவர்கள் குடிநீருக்கு அவதிப்படாமல் இருப்பார்கள், அந்தப் பகுதியில் உள்ள பாசனப் பகுதிகள் பயன் பெறும் என்று சொல்லி, இது மிக மிகத் தேவையான சட்டமுன்வடிவு என்பதால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பாக இதை முழுமையாக வரவேற்கிறேன்.

சாதாரணமாக ஒரு நிலத்தை நாம் கையகப்படுத்துகிறோம் என்றால் அந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்பது ஒரு பிரச்சினை. அங்கே, 200 ஏக்கர் என் கையிலே இருக்கிறது, நான் பட்டா செய்து கொண்டிருக்கிறேன். நான் பட்டா செய்து கொண்டுள்ள நிலத்தை விட மாட்டேன். அந்த நிலத்தைக் கொடுத்தாலும் நிலத்திற்கு ஒரு மதிப்பு, நிலத்திலிருந்து எடுக்கும் மண்ணுக்கு ஒரு மதிப்பு. நிலத்திலிருந்து எடுக்கும் கல்லுக்கு ஒரு மதிப்பு. மண்ணையும் கல்லையும் எவ்வளவு ஆழம் தோண்டி எடுக்கிறார்களோ அதற்கும் இவ்வளவு என்று கணக்குப் போட்டு, ஒரு கோடி ரூபாய்க்கு மேலே கொடுக்க வேண்டுமென்று முறையிடுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நீதிமன்றமும் தடை ஆணை கொடுத்து, அதை நிறுத்தி வைத்திருக்கிறது. இதுதான் ஜனநாயகத்தில் ஒரு துரதிருஷ்டம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்களைப் பாதுகாக்க, பாசனத்தைப் பெருக்க குடிநீர் கிடைக்க, தொழில் வளம் நசிந்து போகாமல் காக்க, இருக்கின்ற தொழில் வளத்தோடு மேலும் பல சிறு தொழில்கள் உருவாக இந்தத் திட்டம் மிக மிக அவசியமான திட்டம் என்பதால் இதனை நான் வரவேற்கிறேன்



இங்கே சொல்லக்கூடிய அந்த நிலம் நீண்டகாலமாக ஒருவர் கையிலே இருக்கிறது. அங்கே பலர் இருக்கிறார்கள். ஆனால் ஒருவருக்கு, ஏதோ ஒரு நேரத்தில் மானியமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அப்படி மானியமாகக் கிடைத்த நிலத்தை, சொந்தமாக்கி, அதற்கு துட்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்தப் பணத்தையும், ஒரு நகரத்தில் மாநகரத்தில் வீடு கட்ட நிலம் வாங்கினால் ஒரு அங்குலத்திற்கு ஒரு அடிக்கு இவ்வளவு என்று எப்படி நிர்ணயிக்கிறார்களோ அப்படி நிர்ணயித்து, அங்கே எடுக்கும் மண்ணுக்கும் கல்லுக்கும்கூட விலை நிர்ணயித்துக் கேட்பதுதான் இதில் விநோதமான செயலாக இருக்கிறது. இந்த நிலையைப் போக்கி, பொதுமக்களைக் காக்கும் நிலையில் தேவையான ஒரு திட்டத்தை அவசியமான நேரத்தில் கொண்டு வந்துள்ளதால் இந்தச் சட்டமுன்வடிவை ஒரு வரப்பிரசாதம் என்று சொல்ல விரும்புகிறேன். இன்னும் இது பற்றிப் பேசலாம் என்றாலும், மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்கும் வகையில் இதோடு நிறுத்தி இது அவசியமான தேவை என்பதோடு, இது அந்தப் பகுதிக்கு ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லி, அமைகிறேன்.

(முற்பகல் 11–20)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை முதலிலே நான் வரவேற்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் எடுத்துச் சொன்னது போல் தேவையான நேரத்தில் ஒரு அவசியமான சட்டத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு காரண கர்த்தாவாக உள்ள நம்முடைய தமிழ் நாட்டினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மட்டுமல்ல. ஒட்டு மொத்தாக தர்மபுரி மக்கள் அத்தனை பேர்களும் அந்தத் தங்கத் தலைவர் அவர்களுக்கு இன்றைய தினம் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். காரணம் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே தீட்டப்பட்டத் திட்டம் இவ்வளவு நாள் கிடப்பிலே போடப்பட்டு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற மாதம் தர்மபுரியில் சுற்றுப் பயணம் சென்ற நேரத்தில் அந்தப் பிரச்சினையை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்தில் உடனடியாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களை அழைத்து உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக இந்த சட்ட முன் வடிவை இங்கே கொண்டு வருவதற்கு காரணமாக அவர்கள் இருந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலிருந்து நம்முடைய அரசு திட்டப் பணிகளை எவ்வளவு விரைவாக முடிக்க வேண்டும் என்று அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்தத் திட்டப் பணிகள் கால தாமதம் ஆவதினால் எவ்வளவு பணச் செலவு அதிகமாகிறது என்று தெரிகிறது. பணச் செலவு மட்டுமல்ல, அந்தத்திட்டப் பணிகளால் கிடைக்கும் பலன்கள் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேருவதிலே காலதாமதம் ஆகிறது என்பதை நாம் உணர்வோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் சுமார் ரூபாய் 6½ கோடி அளவிற்கு மதிப்பிடப்பட்டு, திட்டம் இன்றைக்கு 10 கோடி ரூபாய் அளவைத் தாண்டி விட்டது. ரூபாய் 10 கோடி என்றாலும் பரவாயில்லை. 10 ஆண்டுக்காலம் அந்த மாவட்ட மக்களுக்கு பலன் கிடைக்கவில்லை. அங்கு புன்செய் நிலங்கள் இன்றைக்குப் பாசன வசதி கிடைக்காது பாழ்பட்டு கிடக்கிறதே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். இன்றைய தினம் நமக்கும் ஏற்படுகிறது. எனவே இன்று இந்த திட்டப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்று இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

இதில் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மத்திய அரசிடம் கூட பல திட்டப் பணிகள் இருக்கின்றன. நான் அந்தப் புள்ளி விவரங்களைச் சொல்லிக் கொள்கிறேன். கிட்டத்தட்ட 108 திட்டங்கள் காலதாமதம் ஆவதன் காரணமாக 75 சதவிகிதம் செலவுகள் அதிகமாகி முதலிலே 24,803 கோடி ரூபாய் என்று போடப்பட்டு இருந்த திட்டம் இன்றைய தினம் இந்த விலைவாசி காரணமாக 43,184 கோடி ரூபாய் என்று ஆகியிருக்கின்றது. இந்தக் காலதாமதம் காரணமாக இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே திட்டங்களைத் தீட்டினால் மட்டும் போதாது. தீட்டப்படுகின்ற திட்டங்கள் விரைவாக முடிக்கப் பட வேண்டுமென்ற அடிப்படையில் நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் 3 ஆண்டு காலமாக நிறைவேற்றப்படாமல், ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பணிகள் முடிக்கப்படாமல் இருக்கின்றன, அந்தப் பணிகள் முடிக்கப் படாமல் இருந்தால் அவைகளை விரைவாக முடிக்க வேண்டுமென்ற அளவில் ஒரு உயர் அதிகாரியை, ஐ. ஏ. எஸ். அதிகாரி அவர்களை நியமித்திருக்கின்றார்கள். அந்தத் திட்டப் பணிகளை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாம் எல்லாம் வழக்கறிஞராக இருக்கிறோம். இன்றைக்கு அரசியல் சட்டத்திலே 'Directive Principles of State என்று ஒரு அத்தியாயமே இருக்கின்றது. சில மாநில அரசுகள் சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக, சில கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக, அரசியல்



சட்டத்தை உருவாக்கிய மேதைகள் சில கட்டளைகளை, 'டிரக்ட்டிவ் பிரின்சிபில்ஸ் ஆஃப் ஸ்டேட் என்ற அந்த அத்தியாயத்தில் கொடுத்திருக்கின்றார்கள். அதே சமயத்தில் தனி மனிதனின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று 'பண்டமெண்டல் ரைட்ஸ் , அடிப்படை உரிமைகள் என்ற அந்த உரிமைகளைக் கொடுத்து, அதற்கும் தனி அத்தியாயத்தை உருவாக்கி, அந்த அடிப்படை உரிமைகளை நீதிமன்றம் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிகப் பெரிய கேள்வி. நம் முன்னாலே இருக்கின்ற ஒரு வினாவாக இருப்பது. இன்றைக்கு ஒரு தனி மனிதன் முக்கியமா அல்லது தனி மனிதனுடைய நலன்கள் முக்கியமா அல்லது ஒரு சமுதாய நலன் முக்கியமா என்று கேட்கின்றபோது, அரசியல் சட்டத்தை உருவாக்கிய வல்லுநர்களின் கருத்து, என்னைப் பொறுத்தவரையில், சமுதாய நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்குப் பின்னாலே தான் தனி மனிதனுடைய நலன் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற அந்த அடிப் படையிலேதான் உருவாக்கியிருக்கின்றார்கள்.

நம் மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1960 லே பாராளுமன்றத்திலே பேசுகிறபோது கூட 'பண்டமெண்டல் ரைட்ஸ் என்ற அந்த ஒரு தத்துவத்திற்கும் d!r ctive prlnciples of the state அந்த அத்தியாயத்திற்கும் நேரடியாக மோதல் வருகிறபோது, அந்த நேரத்திலே 'டிரக்ட்டிவ் பிரின்சிபல்ஸ் ஆஃப் தி ஸ்டேட் தான் முதன்மையாகக் கருதப்பட வேண்டும், அதற்குப் பிறகு தான் தனி மனிதன் உரிமைகள் இருக்க வேண்டும் என்று அன்றைக்கே விளக்கம் சொன்னார்கள். நான் இதைச் சொல்வதற்கு காரணம். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவர் நம்முடைய மறைந்த பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள். அரசியல் சட்டத்தின் இன்டென்சன் என்னவென்றால், அதன் நோக்கம் என்னவென்றால் தனி மனிதனா அல்லது சமுதாயமா என்று வருகின்றபோது சமுதாய நன்மைக்கு தான் முக்கியத்துவம் தர வேண்டுமென்ற அடிப்படையில் தான் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு எதற்கும் நீதிமன்றத்திற்கு செல்கின்ற நிலைமையும், தடையாணை வாங்குகின்ற நிலைமையும் இருப்பதால் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு நன்மை செய்ய முன் வந்தால் கூட செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஆனால் மிகவும் தேவையான நேரத்தில் இந்த அரசு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்தை கொண்டு வருவதன் மூலம் அரசின் ஆசையும் நிறைவேற்றியிருக்கிறது, இத்திட்டத்தின் பலன் மக்களுக்குப் போய் சேருகிற வகையில் திட்டமும் அமைந்திருக்கிறது. இத்திட்டம் விரைவில் முடிக்கப்பட்டு அதன் பலன் தர்மபுரி மாவட்டத்திலுள்ள மக்களுக்குப்போய்ச் சேருகிற வகையில் இச்சட்ட முன்வடிவை முன்மொழிந்திருக்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும். இதற்குக் காரண கர்த்தாவாக்

இருக்கிற எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சி தலைவர் அவர்களையும் பாராட்டி நன்றி சொல்லி இதனை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்., நன்றி, வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளவரப்பள்ளி நீர்த் தேக்கத் திட்ட மசோதாவை நான் ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இதன் மூலம் தமிழகத்தில், குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் 8 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களை புஞ்சை நிலங்களாக மாற்றி விவசாயம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய திட்டமாக இருப்பதாலும், தர்மபுரி மாவட்ட மக்களுக்காக, மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய மக்களுக்காக, விவசாயத் துறை முன்னேற்றத்திற்காக, இத்திட்டம் உதவுவதாக இருப்பதாலும் நான் இதனை வரவேற்கிறேன். அதே நேரத்தில் 1977 ஆம் ஆண்டில் இத்திட்டம் துவங்கப்பட்டு, 10 ஆண்டுகள் முடிவடையும் நிலையில் நிறைவேற்றப்பட உள்ளதால், அதிகமாக 10 கோடி ரூபாய் அளவுக்கு செலவுகள் தாண்டிப் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இனிமேலாவது இப்படிப்பட்ட திட்டங்களை அரசு உருவாக்கும் போது முதலிலேயே அந்த இடங்களை எல்லாம் சர்வே செய்ய வேண்டும். தனியாரிடத்தில் நிலம் எடுக்க வேண்டி இருந்தால் அந்த இடங்களை உடனடியாக பெற்று திட்டத்தை காலதாமதமில்லாமல், உருவாக்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குகிறபோது, 3 ஆண்டு காலத்திற்குள் முடிந்தால் இப்படி 10 கோடி ரூபாய், 15 கோடி ரூபாய் என்று அதிகமாகத் செலவு செய்ய வேண்டிய நிலையைத் தவிர்க்கலாம். வேலைகளும் பின் தங்கியிருக்கக் கூடிய நிலை வராது.

அது போல் சேலத்தில் ஒரு கல்லூரியை உருவாக்க, அதற்கான இடங்கள் தனியாரிடத்தில் இருப்பதால் அவற்றை எடுக்க அரசு முயன்றும் இன்றைக்கு கூட அரசால் இந்த இடங்களை எடுக்க முடியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் கோர்ட்டுக்கு சென்றார்கள். ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குகிறபோது, தனி நபர்களுடைய இடங்கள் அதிலே சம்பந்தப்பட்டிருந்தால், அரசு காலத்தோடு அவற்றைப் பற்றி கணக்கெடுத்து தனி நபர் பிரச்சினையை காலத்தோடு தீர்த்து திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அதற்கு இத்திட்டத்தை படிப்பினையாக எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும். இத்திட்டத்தைக் காலம் கடத்தாமல் விரைவில் நிறைவேற்ற வேண்டும். இதிலும் சம்பந்தப்பட்டிருக்கிற நீதிமன்றப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து, கீழே இருக்கிற மனைகளையும் முழுமையாகப் பெற்று தர்மபுரி மாவட்ட மக்களுக்கு இத்திட்டத்தின் பலன் விரைவில் கிடைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.





THIRU T. VENKATA REDDY : Hon. Mr. Deputy Speaker, Sir' As a representative of the Hosur Taluk in Dharmapuri District I wholeheartedly welcome this Bill. I am also thankful to the Chief Minister and also the concerned Minister for having introduced this Bill, though late. About the Kelavarapalli Dam I want to sumbit the history behind it. That Dam was started in 1977 and after the Government has spent Rs. 3.11 crores, an individual has filed a case in the High Court. Unfortunately the High Court has granted an Ex-Parte stay without giving notice to the Government, and unfortunately after the Ex-parte stay the Law Officers of the Government have slept over the matter and they have not opposed the granting of the Ex-Parte stay, with the result that the stay has been made absolute by the High Court. This is a sorry state of affairs. When the Government has taken a good project, it is the duty of the Law Officers to see that the benefits of the project reach the people at large.

(முற்பகல் 11-30)

Without looking into the larger interest of the nation, the larger interest of the people, the Law Officers have slept over the matter for the last 12 years. I know that no where the Court has granted exparte stay in Government cases. In this case, unfortunately, the Court has granted an ex-parte stay.

There may be many reasons behind it. I only request the Hon. Minister concerned and the Hon. Law Minister to see that the Law Officers do their work propelly in the High Court and in the Subordinate Courts also.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞர். அவருக்கு சட்டம் நன்றாகப் புரியும் என்று கருதுகிறேன்.

The grant of injunction or stay is purely left to the discretion of the Judicial Officers. The Government, the executive can never object to it. This is the problem we are facing to-day.

THIRU T. VENKATA REDDY : I do agree that it is the prerogative of the deciding Judge to grant stay or to reject it. But it is the duty of the Officers to see that the grant of the stay is vacated soon in the interest of the people and the Nation.

THE HON. THIRU C. PONNAIYAN : Even in the instant case, expeditious action has been resorted to by the Government through the Law Officers. But it is for the Judge to fix a date for hearing. That is a problem again in this matter too.

Thiru T. VENKATA REDDY : Therefore I only say that the lack of action on the part of the Law Officers has obstructed the benefit to the people. In this case the Dam is intended to benefit the poor agriculturists in that area and also to augment water supply to the Industrial Town. For the last 10 years, there has been delay by the Court's order. Now I am glad that the Government and our Hon'ble Chief Minister have thought it fit, considering the courts ' indifferent attitude, to bring this Bill. I am thankful to them. I only suggest that hereafter whenever an Ordinance is promulgated or a Bill is introduced by the Government for the benefit of the poor section, the enforcing authority like the Law Department and other Departments should not come in the way of the execution of these works. I know many of the projects have been stayed by the Courts. They do not look into the problems of the people at large.

I wish to point out about another matter . That is about the Inam lands. The key-village schemes, which have been stayed by the Court, are all situated in the Inam Estate. With regard to the Inam Estate an individual has filed an appeal in the Supreme Court. The appeal is pending in the Supreme Court with regard to the nature of compensation to be paid. I feel that the compensation shoulld not be given to the individuals.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட வழக்கைப் பொறுத்த வரைக்கும் பொது மக்களின் நலன் கருதி இந்த அணையைக் கட்டுவது ஒரு இன்றியமையாத தேவை என்பதை உணர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அதற்காகத் தக்க ஆணையைப் பிறப்பித்தது. ஆனால், சரியோ தவறோ, நீதித் துறை என்பதால் நான் அதுபற்றி ஒன்றும் கூற விரும்பவில்லை. நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம், எக்சிகியூட்டிவினுடைய அதிகாரத்திற்குத் தொடர்புடைய ஒன்று அல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். தடை ஆணை வழங்கினார்கள். வழக்கு நடந்தது. இந்த Acquisitioning and requisitioning அரசியல் சட்டம் 31-ஏ பிரிவின்படி தற்போது அரசு எடுக்கிறோம். யார் அதற்குச் சொந்தக்காரர்கள் என்பது இன்னும் தெரியாதஒன்றாக இருக்கின்ற காரணத்தால், நீதிமன்றத்திற்கே அந்தக் குறிப்பு இன்னும் வழங்காத நிலையிலிருக்கின்ற காரணத் தால் The proceeds will be deposlted in the Court. என்று ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டு விட்டது.

**திரு. வி. பி. சித்தன் :** ஒரேயொரு கேள்வி. இந்த ஸ்டேயை வெக்கேட் செய்வதற்கு அரசு.......



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் முதலிலேயே சொல்லிவிட்டார்கள். முயற்சியெடுத்தாலும் அந்தப் பெட்டிஷனை கோர்ட் விசாரிக்க மாட்டேன் என்கிறது என்று. அரசாங்கத்தையே சொல்கிறீர்களே தவிர, கோர்ட்டைச் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சித்தன் அவர்கள் கவனிக்காமல் இருந்துவிட்டார்கள் என்றுதான் கருதுகிறேன். நான் ஏற்கனவே சொன்னேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய பொழுது, இந்த அரசாங்கமே இந்த அணையைக் கட்ட வேண்டும் என்று இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான ரூபாய் செலவில் திட்டத்தைத் தீட்டினோம். நான் அதற்காகத்தான் சொல்ல வருகிறேன். தடை ஆணை வாங்கியபோது, தடை ஆணை கொடுத்தது, எக்ஸ் பார்ட்டியாக, அரசுக்குத் தெரியாமல் கொடுக்கக் கூடாது, காரணம் இது ஒரு பொதுப்பிரச்சினை, பொது மக்களின்பிரச்சினை, உழவர்களின் பிரச்சினை என்ற காரணத்திற்காக நீதிமன்றத்திலே சொன்ன பொழுதுகூட சொல்லப்பட்டது. The judiciary has got omnipotent powers to grant stay even without giving notice to the Government. This is the power the Courts are having under the Constitution. This is the unfortunate thing. அதைத்தான் நான் விளக்கிச் சொன்னேன். இப்படி எல்லாம் சட்டத்திலே இருக்கிற நிலைமைகள் காரணமாக நீதிமன்றம் குறுக்கே நிற்பதால் acquisitioning and requisitioning என்றமுறையில் அரசியல் சட்டம் 31-ஏ—யின்படி எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்து, விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரசாங்கம் இறுதி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

THIRU T. VENKATA REDDY: Hon. Deputy Speaker, I am thankful to the Government for having given an assurance that the compensation will be deposited in Court. The particular land owner has also filed an appeal in the Supreme Court stating that the river-bed also belongs to the land-owner. This is unheard of in the annals of history. River-bed will not belong to any individual but would belong only to the Government. I therefore request that the compensation may be deposited in Court and may be kept there till the Court decides who the real owner is.

The other aspect which I want to submit is that the person who has gone to Court is a very scheming person and he is also an engineer. His brother is well-versed in land acquisition proceedings. Therefore the Government should be very careful. Even if the present Bill is being passed, he may go to Court and present a petititon. If he files a petition in the Supreme Court, or High Court or in the lower courts, he may obtain an ex-parte order of injunction. The Government should

guard against such things. Otherwise, if an ex-parte stay is granted by the Supreme Court or the High Court, the very purpose for which the Hon. the Chief Minister and the Government have brought the Bill to help the people in the backward area will be lost again. Therefore I request the Law Department to be very careful in this regard.

Another aspect I want to submit is that only one-fourth of the work has to be completed, since three-fourths of the work has already been completed. On the 12th of the last month, the Hon. Minister had visited the place dam site and he was there for nearly five hours, seeing the canals and dam site. He knows well what the remaining work is. I therefore request that necessary funds may be allocated and necessary personnel may be posted expeditiously, so that within about six months the remaining work can be finished. Even if he goes to Court, it will not matter much. I request the Government to see that the work is started soon and also finished with speed.

One other aspect I want to mention is that the canals which have been completed have been damaged to a large extent. Those canals also should be repaired. The compensation payable to the people who have lost their lands on account of the putting up of canals will also come under this Act. Normally the compensation is a meagre amount. They have been awarded compensation by Courts at Rs. 500, Rs. 800 or Rs.1,000 per acre. This is a very negligible compensation for the farmers who have lost their land. They have not gone to Court even questioning the quantum of compensation. They want the dam to be completed. Such people have to be protected by giving more compensation, because they have lost their lands in view of the canals.

(முற்பகல் 1.-40)

I request the Hon. Minister to expedite the matter. The Hon. the Minister for Industries also knows that the industries at Hosur are suffering for want of water. The bore wells they have dug up are also yielding less and less water, since the water table is going down. The industrialists are fearing that in due course or within a year, a situation would arise when they may not get water at all for their industries. Therefore, in order to augment the water supply to industries, we must take prompt steps. Industries should be considered the goose that lays the golden egg. We are getting a lot of revenue from the industries. The Government is getting about Rs. 30 crores by way of tax from Hosur industries alone. Such industries should not be allowed to suffer for want of water. I, therefore request once again the Hon the Chief Minister and the Hon. Ministers concerned, to see that the dam is completed in record time, so that the good name established by the Government by promulgation of this ordinance will last for ever. The policy of the Government in this regard and also the Government's help to our area should not get erased from the minds of our people.



I once again thank the Hon. the Chief Minister and the other Hon Ministers concerned who have been responsible for expediting and bringing it before the Assembly so soon. Thank you.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிய நேரத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகவும், பாழடிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட திட்டம், அதாவது 6 கோடியே 59 இலட்சம் ரூபாய்க்கு நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம், ஒரு தனி மனிதரால் வழக்கு மன்றத்திற்குக் கொண்டு போகப்பட்ட காரணத்தால் இன்றைக்கு அதற்கு 12 கோடி ரூபாய்க்கு மேலே செலவழிக்கக்கூடிய நிலைமை உருவாகி விடுவதாலும், இனியும் அந்தத் திட்டம் முடியும் என்ற நிலைமை இல்லாமல் இருப்பதாலும், அதற்கு சட்டப்படியான பாதுகாப்பைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவும், நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக அரசுக்குத் தகுந்த அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும்தான் இந்த மன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, இது மிகப்பெரிய அளவில் வரவேற்கப்பட வேண்டிய சட்ட முன்வடிவு ஆகும்.

மக்களுக்காகத்தான் சட்டம் இருக்கவேண்டுமே தவிர, சட்டத்திற்காக மக்கள் இல்லை என்ற நிலையை இந்த நாட்டுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்பதற்காக தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு விரிவான நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத்தம் செய்து இருக்கிறார்கள். அதைப் போலவே தான் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. எப்படி இந்தத் திட்டம் நிறைவேறும் என்ற நிலைமை நமக்கு இருக்கிறதோ அது போல் இன்னும் பல திட்டங்கள் எல்லாம் போடப்பட்டதற்குப் பிறகு அவை வழக்கு மன்றங்களுக்குச் சாதாரணமாகச் சென்று விடுகிற காரணத்தால், வழக்கு மன்றம் அவற்றிற்கு தடை விதிக்கிற காரணத்தால் அரசு அதிகாரிகள் அதிலே வேகமாக ஈடுபட்டு வேலை செய்ய முடியாமல் போகிற நிலைமை ஏற்பட்டு, ஆண்டுக்கணக்கில் அந்தத் திட்டங்கள் முடிக்கப்பட முடியாமல் போகிற நிலைமை ஏற்பட்டு, அதன் காரணத்தால் அதிகமான நிர்வாகச் செலவும் ஏற்படுகிறது. பல அணைகள் சம்பந்தப்பட்ட வகையில், இன்னும் சொல்லப்போனால் பல ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக அரசாங்கம் இடத்தைத் தேர்வு செய்தால் கூட, அது புறம்போக்கு நிலமாக இருந்தாலும் கூட, அந்த இடத்தைக் கூட கேட்டு வழக்கு மன்றத்திற்குப் போய் தனியார்கள் தடை வாங்குகிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நோட்டீசோ அல்லது தகவலோ தருவதில்லை. அரசு அதிகாரிகளுக்குத்

தெரியாமலே கூட அரசின் திட்டத்திற்குத் தடை விதிக்கின்ற நிலைமை நீதிமன்றத்தில் இன்றைக்கு இருக்கிறது. எனவே இதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்து அதன்படி ஒரு சட்டப் பாதுகாப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவை நாடாளுமன்றத்தின் மூலமாக' அரசாங்கம் செய்கிற வேலைகளுக்கு சமுதாய நலப்பணிகளுக்கு, நாட்டுமக்கள் நலன் கருதி செய்யப்படுகின்ற சமுதாய நலப்பணிகளுக்கு, ஒரு சட்டப்படியான பாதுகாப்பைக் கொண்டு வருவதற்கான உத்தரவாதத்தைப் பெற்று நீதிமன்றத்திற்குத் தாக்கீதாக அனுப்ப வேண்டும். நாட்டுமக்களுக்காகப் போடப்படுகிற திட்டங்களுக்கெல்லாம் நீதிமன்றத்தில் தடை விதித்து, விதித்து அதன் காரணத்தால் நிர்வாகச் செலவும் கூட, நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களை 10 ஆண்டுகள் கழித்து நிறைவேற்ற வேண்டிய காரணத்தால் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று அதிகரித்து விடுகிறது என்பதற்கு இந்தத் திட்டமே ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. 6 கோடியே 59 இலட்ச ரூபாயில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டத்திற்கு இன்றைக்கு 12 கோடி ரூபாய் ஆகிறது இதைப்போல்தான் ஒவ்வொன்றும்.

ஒரு கிராமத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்து அந்த ஊரில் இருக்கிற வீடுகளுக்கெல்லாம் 'டேப்கள்' போடப்பட்டதற்குப் பிறகு தடை வாங்கப்படுகிறது. அதாவது ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும்போது தடை வாங்காதவர்கள், மோட்டார் வைக்கும் போது வந்து தடை வாங்குகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவின் மீது மட்டும் பேசவேண்டும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி பல்வேறு திட்டங்களில் அரசுக்கு எதிராகப் போய் நீதிமன்றத்திலே தடை வாங்குகிறார்கள் என்பது தான் நான் சொல்வது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சொல்வதுபோல் கோடிக்கணக்கான ரூபாய் முதலீட்டில் பொது மக்களின் நலன்கருதி அரசு தீட்டி நடைமுறைக்குக் கொண்டுவருகின்ற திட்டங்கள் தொடர்பாக தனியார்கள் நீதிமன்றத்தை அணுகுகிறபோது அதற்குத் தடை ஆணை கொடுத்துவிடுகிறார்கள். சில நேரங்களில் அந்தத் தடையை எடுப்பதற்காக நாம் நடவடிக்கை எடுக்கிறபோது The stay is even made ab.olute என்ற நிலைமை ஏற்பட்டு ஆண்டுகள் பலவாக அந்தத் தீர்ப்புகள் வழங்கப்படாத நிலைமை இருப்பதால் 6 கோடி ரூபாய்க்குப் போடப்படுகிற திட்டங்களுக்கு 10 கோடி, 12 கோடி, 18 கோடி என்று ஆகிவிடக்கூடிய ஒரு துரதிர்ஷ்டமான நிலைமை ஏற்படுகிறது. எனவே உயர்நீதிமன்றத்தினுடைய





தலைமை நீதிபதியிடம் இதுபோன்று பொதுமக்களின் நலன் கருதி, அதாவது இலட்சக்கணக்கான ஏழை மக்களின் நலன் கருதிக் கொண்டுவரப்படுகிற திட்டங்களுக்குத் தடை ஆணை விதிக்கிறபோது அரசுக்கு நோட்டீஸ் கொடுத்த பின்பு அதனை மேற்கொள்ளவேண்டும் என்று அரசின் சார்பில் நாங்கள் சொல்லி இருக்கிறோம். All India Conference of Chief Justices and Law Ministers-ஐ மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டிய போது பாரதப் பிரதமர் அவர்கள் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். நீதிபதிகள் எல்லாம் அதிக ஊதியம் வேண்டுமென்று கேட்டபோது பாரதப் பிரதமர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அரசினுடைய பொதுப் பணித் திட்டங்கள், நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் பெறுமானம் உள்ள திட்டங்கள் எல்லாம் தடை ஆணைக்கு உட்படுத்தப்படுகின்ற காரணத்தால், அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அதிலே நீதிமன்றங்கள் பொது மக்களின் மனம் அறிந்து செயல்பட வேண்டும் என்று பாரதப் பிரதமர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மைய அரசும் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தற்போது ஆய்ந்து வருகிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய கொள்கையை—சட்டபூர்வமாக இதற்கான அதிகாரத்தைப் பெற வேண்டும் என்ற கொள்கையை—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. இது போன்ற சமுதாயப் பணிகளுக்கு இது போன்ற தடை வருகிறபோது குறைந்த பட்சம் தனியாக ஒரு வழக்கு மன்றம் அல்லது டிரிப்யூனலை உருவாக்கி, அந்த வழக்கு மன்றத்திலேதான் தனியாக அரசுக்கு எதிராக போடவேண்டும் என்ற நிலையை உருவாக்குவதற்கு மையஅரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சாதாரணமாக ஒரு மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே கூட ஒருவர் போய் மிகப் பெரிய திட்டத்திற்கான தடையை வாங்கி விடுகிறார். அது இந்த அரசின் வளர்ச்சிப் பணிகளில் பாதிப்பை உருவாக்குகிறது என்பதை இந்த மன்றத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே ஒரு கோடி ரூபாய்க்கு மேலே செய்யப்படுகின்ற திட்டங்களிலே எல்லாம் அவை நிறைவேறுவதற்கு தடையாக எதுவும் இருந்து விடக் கூடாது என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இரண்டு சீரிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமித்து, இதுபோன்ற திட்டங்கள் எல்லாம் வேகமாகநடப்பதற்கு அந்தத்திட்டங்களிலே என்னென்ன தடைகள் இருக்கின்றன, அந்தத் திட்டங்கள் எவ்வளவு காலம் நிலுவையில் உள்ளன என்பதையெல்லாம் ஆராய்ந்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக இந்திய துணைக் கண்டத்திலே நம்முடைய தமிழ் நாட்டில்தான் இது போன்ற ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள், அப்படி முன்உதாரணமாகத் திகழ்கிற

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசாங்கத்திற்கே எதிராகப் போடப்படுகிற வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு தனி நீதிமன்றம் அல்லது தனி டிரிப்யூனலை போட வேண்டும் என்று மைய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டம் ஒசூர் பகுதியில் இருக்கிற கேளவரப்பள்ளி நீர்த் தேக்கம் 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு முடியும் தருவாயில் அங்கே தடை ஆணை வாங்கப்பட்டது. அங்கே தடை ஆணை கேட்டவர்கள் எந்தெந்த அடிப்படையிலே கேட்டார்கள் என்பதை எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் இங்கே சொன்னார்கள். அவர்களுக்கு அந்த நிலம் இனாம் நிலமாக வந்திருக்கிறது. அந்தக் காலத்தில்—அந்த நிலம் தென்பெண்ணை ஆற்றுப் பகுதி—அந்த ஆற்றுப் பகுதியையே கூட அவர்களுக்கு பட்டா போட்டு கொடுத்திருக்கிறார்கள். இப்போதெல்லாம் ஆறு, ஓடைப் பகுதிகளை புறம்போக்கு நிலமாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அன்று அவர்களுக்கு தென்பெண்ணை ஆற்றுப்பகுதியினை பட்டா போட்டு கொடுத்திருக்கிறார்கள். அதில் பல்வேறு அம்சங்கள், 6 அம்சங்களைக் கொண்டு நஷ்ட ஈடு கேட்கிறார்கள். அந்த வகையில் 99 லட்சம் ரூபாய் கேட்டு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

அவர்கள் அந்தப் பகுதியில் பஞ்சாயத்துத் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆரம்பத்திலே பஞ்சாயத்திலேயே தீர்மானம் போட்டு அந்த நீர்த்தேக்கத்திற்கு சப்ளம்மா நீர்த்தேக்கம் என்று பெயரிடப்பட வேண்டும் என்று பஞ்சாயத்திலேயே தீர்மானம் போட்டு கொடுத்துவிட்டு, கடைசி நேரத்திலே நஷ்ட ஈடு அதிகம் பெறவேண்டும் என்பதற்காக 99 லட்சம் ரூபாய் நஷ்டஈடு வேண்டுமென்று தடை ஆணை வாங்கி விட்டார்கள். அப்படி வாங்கிய பிறகு, முன்னாலே நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு ராஜா முகமது அவர்கள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவரோடு கலந்து பேசி, கேட்டு, அவர்களிடத்திலே நேரிடையாகப் பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் அவர்கள் சிறிது கூட ஒத்துவராத காரணத்தால், கடைசியில் சென்றவாரம் தர்மபுரிக்கு புரட்சித் தலைவர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அதனுடைய நிலைமையையும், அதனுடைய சிறப்பையும் எடுத்துச் சொல்லி, எந்த அளவிற்கு ஒரு திட்டத்தைத் தனியார்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள், அரசாங்கத்திற்கே சவாலாக அது இருந்து கொண்டிருக்கிறது என்று எடுத்துச்



சொன்ன பிறகு, முதல்வர் அவர்கள் உடனடியாக சென்னை வந்தவுடன், அன்றைக்கே வேலை ஆரம்பிக்க வேண்டும் என்று உத்தரவு வழங்கியதை தர்மபுரி மாவட்டம் ஒசூர் பகுதியில் இருக்கிற அனைத்துக் கட்சிகளும் மிகவும் மனமார பாராட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே அந்தச் சிறப்பான திட்டத்திற்கு எல்லா பணிகளும் முடிந்து விட்டன. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் இனிமேல் அந்த நீர்த்தேக்கம் வருவதற்கில்லை, நாம் அதுபற்றி நினைக்க வேண்டாமென்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்திலேதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சட்டத்தை கொண்டுவந்து அந்தப் பணியைத் துவக்கி வைத்திருக்கிறார்கள் என்றால் அதற்காக அவர்களை உண்மையில் பாராட்ட வேண்டும். அதைப் போல தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றுறபோது தடையாணை வழங்குகிற நீதிமன்றம், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல இந்த அரசிடம் விவரம் கேட்டு, அரசும் நீதிமன்றமும் கலந்து ஒரு நல்ல முடிவை எடுக்குமானால் உண்மையில் இதுபோன்ற நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்கு தருவதற்கு அரசிற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பிப் பார்வையிடச் செய்து, அப்படி பார்வையிட்டு வந்த இரண்டு, மூன்று தினங்களில் அந்தப் பணிகளைத் துவங்கி வைத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எங்கள் மாவட்டத்தின் சார்பாக எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக மனமார்ந்த பாராட்டையும், நன்றியையும் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–50)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்துணைபேரும் அரசியல் மாச்சரியம் இல்லாமல் இந்த அரசாங்கம் கொண்டு வந்துள்ள இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்துப் பேசியதற்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் எடுக்கிற நல்ல முடிவுகளுக்கு எல்லாம் நாங்கள் பின்னாலே துணையாக இருப்போம் என்றும் மாச்சரியங்கள் காட்ட மாட்டோம் என்றும் இங்கே காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், அதைப்போல கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டிப் பேசியதற்கு மீண்டும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மரியாதைக்குரிய சமரசம் அவர்கள், செம்மலை அவர்கள், உத்திராபதி அவர்கள், வெங்கடரெட்டி அவர்கள், கே. பி. இராமலிங்கம் அவர்கள், சின்னராசு அவர்கள் எல்லாம் இந்த அரசாங்கம் இன்றைக்கு எடுத்திருக்கிற நடவடிக்கைகளைப் பாராட்டிப் பேசினார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். ஒரு சில நண்பர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்வதைப் பற்றி தவறாகச் சொல்கிறார்கள். மூன்று நான்கு தினங்களுக்கு அங்கே போய் சுற்றி வருகிறார்கள், நிரம்பப்பணம் செலவழிக்கிறார்கள் என்றெல்லாம் அந்த நண்பர்கள் சொல்கிறார்கள். நான் அந்த நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்குப் போனதன் விளைவாகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு இன்றைக்கு உடனடியாக இங்கே வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தர்மபுரி மாவட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுற்றுப்பயணம் சென்றார்கள். அங்கே பல அமைச்சர்கள் செல்கிறோம். அமைச்சர்களோடு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் வருகிறார்கள். அந்த மாவட்டத்திலே என்னென்ன பிரச்னைகள் இன்னும் முடிவிற்கு வராமல் இருக்கின்றன என்பதையெல்லாம் எங்களையும், அதிகாரிகளையும் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். அப்படிக் கேட்கிறபோது சொல்லப்பட்ட திட்டம்தான் இந்தத் திட்டம் என்பதை இங்கேயிருக்கிற உறுப்பினர்களுக்குப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள், தான், சென்னை வருவதற்கு முன்னதாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று எனக்கும், என் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் சொன்னார்கள். இன்றைக்கு வேகமாகத் திட்டம் வந்திருக்கிறது. இது போன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டும். அப்படிச் செல்கிற நேரத்திலே துறையில் பெண்டிங்கில் இருக்கிற திட்டங்களையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும். அப்படி ஆய்வு செய்து நல்ல முடிவுகளையெடுப்பதற்கு வழிகாட்டியாக இந்தச் சட்டம் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு சேலத்திற்கு முதலமைச்சர் அவர்கள் செல்கிறார்கள். அந்த மாவட்டத்தில் இருக்கிற திட்டங்களில் எது எது நடைமுறைக்கு வராமல் இருக்கின்றன என்று உடனடியாக அதிகாரிகளை அழைத்துப் பேசுகிறார்கள். எங்களைப் போன்ற அமைச்சர்களை அழைத்து வைத்து பேசி, ஏன் இன்னும் முடிவிற்குக் கொண்டு வராமல் இருக்கிறீர்கள் ? உடனடியாக இவற்றைச் செய்யுங்கள் என்று





சொல்லக் கூடிய உணர்வை இன்றைக்குத் தமிழக முதல்வர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கேளவரப்பள்ளித் திட்டம் 1977-ம் ஆண்டிலே அரசாங்கத்தினால் ஒப்புதல் செய்யப்பட்டு உடனடியாக அந்த ஆண்டிலேயே வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுக் காலம் அங்கே வேலை நடந்திருக்கிறது. அப்படி வேலை நடக்கிற காலத்திலே இன்றைக்கு நீதிமன்றத்தில் தடை வாங்கியிருப்பவர்கள் உடனிருந்து இருக்கிறார்கள். வேலை பாதிக்கு மேல் சென்ற பிறகு இன்றைக்கு கோர்ட்டிலே அவர்கள் தடை வாங்கியிருக்கிறார்கள். தடையுத்தரவை அப்படி வாங்கியவர்கள் நிறைய நஷ்டயீட்டை பெற வேண்டுமென்று அரசாங்கத்தை ஏமாற்றுகிற முயற்சியில் கடந்த ஏழெட்டு ஆண்டுக்காலமாக இந்த நிகழ்வைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். 1979-லே அந்த மனுதாரர்கள் ரிட் மனுவைப் போட்டு, அதற்கு தடை உத்தரவை வாங்கியிருக்கிறார்கள். 16-11-1979-லே ரிட் மனு அங்கீகாரம் ஆகியிருக்கிறது. அரசாங்கத்திலேயிருந்து உடனடியாக 9-12-1979-லே எதிர் உறுதிப் பத்திரம் தாக்கலாகியிருக்கிறது. கடந்த 7, 8 ஆண்டுக்காலமாக அந்த முயற்சிகள் எடுக்கப்பட்டும், எந்தப் பயனையும் அளிக்காத காரணத்தால், இந்த சட்ட முன்வடிவை இன்றைக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக வேலைகள் உடனடியாகத் தொடங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே நிச்சயமாக இந்த அணைக்கட்டைக் கட்டி முடிப்போம் என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் இனிமேல் திட்டங்களை இப்படிப் போடுகிற நேரத்தில் கொஞ்சம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த உணர்வை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. இதுபோன்ற தவறுகள் இனிமேல் வராமல் எச்சரிக்கையாக இருப்போம். நாங்கள் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு முன்பாக அவர்களோடு பேசி, வேலைகளை ஆரம்பித்துக் கொண்டுதான் இருக்கிறோம். காரணம் சட்டப்படி நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், ஓர் ஆண்டுக்காலம் ஆகிவிடும். அதற்குள்ளாக வேலைகள் அவசரமாக நடக்க வேண்டும் என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் அதிகாரிகள் இந்தத் திட்டங்களை அப்படிச் செய்திருக்கிறார்கள். இனிமேல் அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என்பதையும் சொல்லி, இது நல்ல திட்டம், இந்த நல்ல திட்டத்தை, ஆதரித்துப் பேசிய அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை சொல்லி, 1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1987)-ஐ நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1987 மார்ச் 11

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987-ம் ஆண்டு கேளவரப் பள்ளி நீர்த் தேக்கத் திட்டக் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 28 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த் தேக்கத் திட்டக் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1987) நிறைவேற்றப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 7. தகவல் கோரல்.

### மேற்கு வங்கத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட உபரி நிலங்கள் குறித்து.

**திரு. கு. ரமணி** : துணைத் தலைவர் அவர்களே, போன 4 ஆம் தேதி நான் இந்த அவையிலே ஆளுநர் உரையின்மீது பல விவரங்களை வைத்து நான் பேசியபோது, நிலச்சீர்திருத்தத்தைப் பற்றி கொஞ்சம் விளக்கமாகப் பேசினேன். அந்தச் சந்தர்ப்பத்தில் மேற்கு வங்காளத்தில் இருக்கும்படியான எங்களுடைய அரசாங்கம் எப்படி நிலச்சீர்திருத்தத்தைச் செய்தது என்பதைப் பற்றிச் சொன்னபோது, கொடுத்த அந்த விவரங்கள் எல்லாம் சரியான விவரங்கள், அந்த அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கும்படியான அதனுடைய உத்தியோக



1987 மார்ச் 11] [திரு. கு. ரமணி]

தோரணையில் உள்ள தஸ்தாவேஜுகளில் கொடுக்கப்பட்ட விவரங்கள். அப்போதே, மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் அது எங்கேயிருந்து வந்திருக்கிறது என்று கேட்டபோது, அரசாங்கம் வெளியிட்டது. உங்களுக்கும் கிடைக்கும் என்று சொன்னேன்.

மறுபடியும் 10 ஆம் தேதி, அன்றைக்கும், அதாவது நேற்றைய தினம் இந்த அவையிலே திரு. சித்தன் அவர்கள் பேசும்போது, இந்த அவைக்கு நான் கொடுத்த விவரங்கள் தவறானவை என்றும், அவைக்குத் தவறான விவரங்கள் வந்துவிடக்கூடாது என்றும், அந்தக் கவலையில் அவர் சரியான விவரங்கள் தருவதாகக் கூறி அவர் இந்த அவையிலே சில விவரங்களைப் பேசியிருக்கிறார்கள். அவர் சில விவரங்களைக் கூறியது என்ன? 1984-ல் ராஜ்ய சபையில் பேசியபோது, கொடுத்திருக்கும்படியான விவரங்கள் என்று அவர் சொன்னார். அதனுடைய ஆத்தண்டிகேட்டியை அவர்கள்தான் தீர்மானம் செய்யவேண்டும். அல்லது அது நமக்கு நிரூபிக்கப்பட வேண்டுமானால், அதை நிரூபிக்கும்படி கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறது.

இப்போது நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், " லெப்ட் பிரண்ட் கவர்ன்மெண்ட் ஆப் வெஸ்ட் பெங்கால் ஆன் லேண்ட் ரிபார்ம்ஸ் " என்ற இந்த புத்தகத்தை நான் நமது சபாநாயகரிடம் கொடுத்திருக்கிறேன். இது அந்த அரசாங்கத்தினுடைய முத்திரையோடு வெளியிடப்பட்டு இருக்கும் புத்தகம். அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கும்படியான விவரங்கள் உண்மையான விவரங்கள். ஏன் என்றால், அந்த மாநில அரசாங்கம் நிறைவேற்றி இருக்கிற திட்டம் அது.

(நண் பகல் 12—00)

அதன் பிரகாரம் டோட்டல் பெனிபிசியரிஸ் 15 லட்சத்து 21 ஆயிரத்து 578 பேர்கள். அந்த நிலத்தை பங்கிட்டு கொடுத்ததால் லாபம் அடைந்தவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் திட்டத்திலே 12 லட்சத்து 67 ஆயிரத்து 819 ஏக்கர் நிலங்களை அரசு கையகப்படுத்தியிருக்கிறது. அதில் அவர்கள் வினியோகித்த நிலம் 7 லட்சத்து 90 ஆயிரத்து 754 ஏக்கர்கள். இந்த கணக்குகள் முழுவதும் 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரையில் இருக்கும்படியான கணக்குகள். அதன் பிறகு இன்றைய வரைக்கும் கணக்கு எடுத்ததில் அவர்கள் வினியோகித்து இருக்கும்படியான நிலம் 8 லட்சத்து 13 ஆயிரம் ஏக்கர்கள். இது 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி முடிய வினியோகம் ஆகியிருக்கிறது. இது தான் உண்மையான விவரங்கள். இந்த விவரங்கள் அவைக்கு உண்மையான தகவல் அல்ல என்று திரு. சித்தன் அவர்கள் சொல்லியிருப்பது உண்மையிலேயே ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கூட கிளப்ப வேண்டிய விஷயம். நான் அதைக் கூட கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. விஷயம் சரியாக இருக்க வேண்டும்

என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். அந்த நாட்டை ஆளுகின்ற ஒரு மாநில அரசு செய்து இருக்கிற இந்த நடவடிக்கையை மத்திய அரசு உள்பட, பிளானிங் கமிஷன் உட்பட, அதன் எவாலுவேஷன் செல் உட்பட அனைவரும் பாராட்டி இருக்கக்கூடிய ஒரு நல்ல நடவடிக்கையை அதனுடைய விவரங்களைப்பற்றி எடுத்துச் சொன்னதை 'மிஸ்லீடிங் தி அவுஸ்' என்று சொல்லியிருப்பது சரி அல்ல. ஆகவே திரு. சித்தன் அவர்கள்தான் தன்னை சரி செய்து கொள்ளவேண்டும். அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய ஃபிகர்ஸ்தான் உண்மையானது அல்ல, தவறானது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த மாமன்றத்திலே நான் பேசுகின்றபோது பொது உடைமை கட்சியினுடைய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் தோழர் ரமணி அவர்களுடைய பழைய பிரச்சினைப் பற்றி பேசினேன். அன்றைய தினம் அவர்கள் பேசுகின்றபோதே ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்தார்கள். அதிலே அன்றைக்கே எனக்கு ஐயப்பாடு இருந்த காரணத்தால்தான் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் நீங்கள் இதைப் பேசுகிறீர்கள் என்று அவர் பேசி முடிக்கின்ற வரை பொறுமையாக காத்து இருந்து நான் கேட்டேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் அரசின் சார்பில் வெளியிட்டு இருக்கும் அறிக்கையை வைத்துத்தான் சொல்லுகிறேன், உங்களுக்கும் அது கிடைக்கும் என்று சொன்னார்கள். பின்னர் என்னிடம் இருந்த விவரங்களை நேற்றைய தினம் இந்த மாமன்றத்தில் பேசுகின்றபோது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் இங்கே சில விவரங்களை எடுத்துச் சொன்னேன். அதிலே அவர்கள் மேற்கு வங்க மாநிலத்திலிருந்து வெளியிட்டு இருக்கும் புத்தகத்தை வைத்து அதை ஆதாரமாகக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக நம்முடைய மாநிலத்திலே ** ஆனால் அது எந்த அளவுக்கு............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப் பற்றி மேலும் சொல்லாமல் உங்களிடம் உள்ள எவிடென்ஸை மட்டும் சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் இரண்டு பேர் சொன்னதும் ரெக்கார்டில் இருக்கும். அடுத்த பில்லுக்குப் போகலாம்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விஷயம் ரொம்பவும் சீரியஸானது. ** என்றும் சொல்லுவதற்கான முயற்சியை எடுக்கிறார்......

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படி வேண்டாம் என்று தான் நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசும்போது** அப்படி சொல்லுவது முறை அல்ல. அதை அவைக் குறிப்பில் ஏறக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சித்தன் உங்களிடம் என்ன ஆதாரம் வைத்து இருக்கிறீர்கள் ; என்ன புள்ளி விவரத்தை வைத்து இருக்கிறீர்கள், அதை மட்டும் சொல்லுங்கள். ** பற்றி சொன்ன பகுதிகள் வேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் அந்த ஸ்டேட் பப்ளிகேஷனில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நீங்கள் உங்களிடம் என்ன ஆதாரம், என்ன புள்ளி விவரம் இருக்கிறது என்று டிஸ்பியூட் செய்து சொல்லுங்கள். அது இரண்டும் ரெக்கார்டில் இருக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை ** என்று நான் சொல்லவில்லை. நாமும் சில சாதனைகளைச் சொல்லுகிறோம். அவை முழுமையும் ஏற்பு உடையதாக இருக்கிறதா என்று தான் நான் சொல்ல வந்தேனே தவிர, வேறு அல்ல.

அடுத்து, விஷயத்திற்கு வருகிறேன், நான் நேற்றையதினம் பேசிய பேச்சில் தவறான தகவல் இருப்பதாகவும், உண்மைக்குப் புறம்பான விவரங்கள் இருப்பதாகவும், சபையை மிஸ்லீடு செய்யும் முறையில் நான் பேசியிருப்பதாகவும் தோழர் ரமணி சொன்னார்கள். நான் ஆதாரத்தோடு தான் பேசியிருக்கிறேன். 5—3—1984 அன்று ராஜ்ய சபையில் வெளியிட்ட அதிகாரப்பூர்வமான விவரங்களை வைத்துக் கொண்டு நான் நான் பேசினேன். இப்போதும் அதை நான் வைத்து இருக்கிறேன். பேசி முடித்த உடனே உங்களுக்குக் கொடுக்கிறேன். 1984-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் தேதி மாநிலங்கள் அவையில் எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்ட பதிலில், இன்னும் தெளிவாகச் சொல்லுகிறேன், தமிழகத்திலே உபரியாக இருந்த நிலங்கள் 89,083 ஏக்கர்கள். அதிலே பகிர்ந்து அளிக்கப்பட்ட நிலங்கள் 71,414 என்றும், அதனால் பயன் பெற்றோர் எண்ணிக்கை 49,789 என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அதைப்போலவே மேற்கு வங்கத்திலே உபரியாக இருந்த நிலங்கள் 1,71,447 ஏக்கர்கள். அதிலே பகிர்ந்து அளிக்கப் பட்டவை 71,084 ஏக்கர்கள். அதனால் பயன்பெற்றோர் எண்ணிக்கை 2,10,585 என்ற அந்த விரவரத்தின் அடிப் படையில் சொல்கிறேன். ஒருவேளை மாண்புமிகு ரமணி அவர்கள் இது மாநிலங்கள் அவையிலே வெளியிடப்பட்ட விவரங்கள் என்று சொல்லி அவர் மாறுபடுவார் என்பதற் காக இன்னொரு கருத்தையும் நான் உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். அவர் கட்சி ஆட்சி செய்கின்ற மேற்கு வங்கத்தில் இருக்கின்ற போர்டு ஆஃப் ரெவின்யூ வில் இருக்கின்ற ஸ்பெஷல் ஆபிசர் அண்டு செக்ரட்டரி, போர்டு ஆஃப் ரெவின்யூ ஆஃப் வெஸ்ட் பெங்கால் எழுதியுள்ள கடி தத்தை அருள்கூர்ந்து படிக்க அனுமதி கொடுக்க வேண்டு கிறேன். The Government cf West Bengal, Office of the Board of Revenue of Wes Bengal என்று போடப் பட்டு, அந்த நம்பரைச் சொல்கிறேன். 1764/GE 29? 1984 என்று போட்டு, 27 பிப்ரவரி 1984 என்று போடப்பட்டு அந்த விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். "Year-wise particulars of Agricultu al land declared ceiling surplus and distributed upto 1978''.

**திரு. கு. ரமணி :** இந்தக் கணக்குகளைச் சொல்லக் கூடிய முறை இல்லையா? நான் சொன்னதை எப்படி 'மிஸ் லீடிங்' ஏற்படும்என்று விவரம் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே ஃபர்தர் டிபேட் கூடாது. அதிலே நீங்கள் போய் டிஸ்பியூட் பண்ணுகிறீர்கள். நீங்கள் ஒரு ஆதாரத்தைச் சொல்லுகிறீர்கள். ஸ்டேட் கவர்ன்மெண்ட் பப்ளிகேஷன். அவர் ராஜ்யசபா புரொசீடிங்சையும், ஒரு அரசாங்கக் கடிதத்தையும் ஆதார மாக வைத்துப் பேசுகிறார். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கு. ரமணி :** நான் சொன்னது ஜுன் மாதம் 30 ஆம் தேதி 1984-ல். அவர் பிப்ரவரியில் உள்ளதை எடுக்கிறார். மார்ச்சில் எடுக்கிறார். அந்த சமயத்தில் ஒரு பிரச்சினையும் அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்களே ஒத்துக் கொள்கிறீர்கள். 1984 வரையில் அவர் சொல்கின்ற ஃபிகர் கரெக்ட் என்று நீங்கள் ஒத்துக்கொள்கிற மாதிரி இருக்கிறது. தப்பாக நினைக்க வேண்டாம், இங்கிருந்து பேசுவதால். நீங்கள் ஸ்டேட் கவர்ன்மென்ட் பப்ளிகேஷன் ஒன்றைக் கொடுத்தீர்கள். அவர் சொல்கின்ற டேட்படி ராஜ்யசபாவில் ஒரு வினாவிற்கு எழுத்து மூலமாக அளிக்கப்பட்ட பதில், மேற்கு வங்காள அரசின் போர்டு ஆப் ரெவின்யூவிலிருந்து வந்திருக்கின்ற கடிதம் ஆகியவற்றின் அடிப்படையிலான விவ ரங்கள். ஆக இரண்டு விவரங்களும் ரெக்கார்டில் இருக்கட்டும். நீங்கள் சொல்லுங்கள். நாங்கள் வேண்டுமென்றால் எழுதிக் கேட்கிறோம்.





**திரு. கு. ரமணி :** இப்படிப்பட்ட விவாத நேரத்திலே என்ன உண்மை இருக்கிறதோ, அது புரிய முடியாமல் வேறு விதத்தில் பின் தள்ளப்பட்டு ........(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் மிஸ்-லீடிங் என்று நிலையில் சொல்லவில்லை. அவர் கொடுக்கிற அந்த எண்ணிக்கையை அந்த தேதியில் ஒத்துக்கொள் கிறீர்களா மறைமுகமாக.

**திரு. கு. ரமணி :** நீங்கள் திரு. சித்தனுக்காகப் பேசுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் உண்மைக் காக, நியாயத்திற்காகப் பேசுகிறேன். நீங்கள் சொன்ன வார்த்தையை வைத்துத் தான் பதில் சொன்னேன். தயவு செய்து தவறாக நினைக்க வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள், ஆதாரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது போலவே மாண்பு மிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் ஆதாரத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த ஆதாரங்களில் எந்த ஆதாரம் சரி என்று இந்த அவையிலுள்ள தாங்களோ அல்லது உறுப்பினர் களோ முடிவு கட்டமுடியாது. ஒரு குறிப்பிட்ட நாளில் நிகழ்ந்து விட்ட தன்மையை அவர் சொல்லியிருக்கிறார். குறிப்பிட்ட தன்மையிலே இவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டை யும் தாங்கள் வாங்கி வைத்து, அதை ஒப்பிட்டுப் பார்க்க முடிந்து, சொல்ல முடியுமானால் சொல்லுங்கள். அல்லது விளக்கங்கள் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் விளக் கங்கள் கேட்போம். இரண்டு ஆதாரங்களையும் வாங்கிக் கொள்ளுங்கள். அதற்கு மேல் இரண்டு பேரும் போகாமல் இருப் பது நல்லது. இந்த ஆதாரத்தோடு இரண்டு பேரும் நின்றால் நல்லது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தோழர் ரமணி அவர்கள் கொஞ்சம் உணர்ச்சிவசப்படக் கூடாது என்று கேட்டுக் கொள் கிறேன்.

நான் என்னிடம் இருக்கின்ற விவரங்களைத்தான் சொல் கிறேன். நான் அதிகமாக நேரத்தை எடுத்துக்கொள்ள மாட் டேன். என்னைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) அவருடைய கட்சி ஆட்சிக்கு வந்த காலத்தில் 1977 ஆம் ஆண்டு 12¼ இலட்சம் ஏக்கர்கள் மேற்கு வங்கத்தில் உபரியாக இருந்த தாகவும், அதனை கையகப்படுத்திக் கொண்டு, 7 இலட்சம் பேர் பயன்பெற்றதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

அதைத்தான் நான் இங்கே மறுக்கிறேன். Year-wise particulars of agricultural land declared as ceiling surplus and distributed upto 1978.

| | | |
|---|---|---|
| Area declared as surplus | .. | 1,17,428 Acres |
| Area distributed | ... | 36.095 Acres |
| Upto 1983 area declared as surplus | .. | 1,74,902 Acres |
| Area distributed | .. | 73,499 Acres. |

1978ஆம் ஆண்டு வரையிலே உபரி நிலம் என்று வரையறுக்கப் பட்டு அறிவிக்கப்பட்டது 1,17,428 ஏக்கராக்கள். அதிலே நிலம் அற்றவர்களுக்கு அந்த ஆண்டு வரை பகிர்ந்தளிக்கப்பட்ட ஏக்கராக்கள் 36,095. அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். அதற்குப் பிறகு 1979 ஆம் ஆண்டிலே 3,814 ஏக்கராக்கள்; 1980 ஆம் ஆண்டிலே 14,362 ஏக்கராக்கள்; 1981 ஆம் ஆண்டிலே 4,361 ஏக்கராக்கள்; 1982 ஆம் ஆண்டிலே 7,478 ஏக்கராக்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு பேர்களும் சொல்லிவிட்டீர்கள். சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டிலே 7,369 ஏக்கராக்கள். ஆக 1983 ஆம் ஆண்டு வரை உபரியாக இருந்த நிலங்கள் 1,74,902 ஏக்கராக்கள். 1983 ஆம் ஆண்டு வரை பகிர்ந்தளிக்கப்பட்ட நிலத்தினுடைய பரப்பளவு 73,499 ஏக்கராக்கள். இந்த விவரங்களை நான் மேற்கு வங்க அரசாங்கத்திலே இருக்கின்ற போர்டு ஆப் ரெவின்யூவிலே இருக்கின்ற செக்ரட்டரியிடமிருந்து வந்த கடிதத்தை வைத்துச் சொல்கிறேன். இதை உங்களிடம் கொடுக்கிறேன். நீங்கள் முடிவு சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் மீண்டும் சொல்கிறேன். சபைக்கு தவறான கருத்து வரக்கூடாது என்ற காரணத்தினாலே தான் நான் பேசினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஃபர்தர் டிஸ்கஷன் வேண்டாம். இன்றைக்கு கடைசி நாள். பில் பாஸ் பண்ண வேண்டும்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் வருடம் ஜூன் மாதம் 30-ந் தேதியன்று வெளியிட்டிருக்கும்படியான இந்த பிரசுரத்தில் இருக்கும்படியான விஷயம். இது உண்மை அல்ல என்று அவர் சொல்லுகிறார்.



மிஸ்லீடிங்கான விஷயத்தை இந்த அவைக்கு கொடுத்தேன் என்று சொல்வதை அவர் வாபஸ் வாங்க வேண்டும். இல்லாவிட்டால்.......... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு பேருமே மிஸ்லீடிங் என்று சொல்கிறீர்கள். நீங்கள் ஸ்டேட் கவர்ன்மென்ட் பப்ளிகேஷன் 1986-ஐ வைத்து சொல்கிறீர்கள். அவர் ராஜ்ய சபாவில் சொன்ன விவரம், அவருக்கு வந்திருக்கின்ற லெட்டரை வைத்து சொல்கிறார். இரண்டும் ரெக்கார்டு ஆகியிருக்கிறது. இதோடு விவகாரத்தை முடியுங்கள்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவல் தந்தேன் என்று அவர் எப்படி சொல்வார்? (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசியபோது சில குறிப்புகள் தந்திருக்கிறார்கள். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கிறது. அவர் இப்போது கொடுத்த ஆதாரமும் இருக்கிறது; இவர்கள் கொடுத்த ஆதாரமும் இருக்கிறது. அவர்கள் சொன்னது தவறு என்று இவர்கள் சொன்னதும் அவைக்குறிப்பில் இருக்கிறது. இவர்கள் சொன்னது தவறு என்று அவர்கள் சொன்னதும் அவைக்குறிப்பில் இருக்கிறது. ஆக இரண்டு பேரும் கொடுத்த ஆதாரத்தை வைத்து என்ன செய்ய இயலும் என்று ஒப்பிட்டு பார்த்து கொடுக்கின்றோம். (குறுக்கீடு) இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் சொன்னதுதான். நீங்கள் சொன்னது தவறு என்றும் பதிவாகியிருக்கிறது. இவர் சொன்னதை நீங்கள் தவறு என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் சொன்னதை இவர் தவறு என்று சொல்லியிருக்கிறார். அத்தோடு நிற்கட்டும். நாம் இந்த அவையில் ஒன்றும் தீர்ப்பு அளிக்கவில்லை. யார் தவறு என்று இன்னும் தீர்ப்பு அளிக்கவில்லை. ஆக இரண்டு பேரும் கொடுத்த ஆதாரத்தை இந்த அவை ஏற்றுக்கொண்டு, அது பரிசீலனைக்கு மாண்புமிகு அவைத் தலைவருக்கு அது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்து (குறுக்கீடு) திரு. பாண்டியன் தீர்ப்பு அளிக்க முடியுமா என்று பார்த்தால் (குறுக்கீடு) இரண்டும் டிஃபரன்ட் டேட்ஸ். அவர் ஜூன் என்று சொல்கிறார். (குறுக்கீடு) அதை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நிலை வரட்டும். அப்படி ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது உண்மை தெரியுமானால், அதற்கான வாய்ப்பு கிடைக்கின்றபோது அந்த உண்மை நிலையை மாண்புமிகு அவைத்

தலைவர் அவர்கள் தெரிவிக்கட்டும். அதுவரையில் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடத்திலே இரண்டு ஆதாரமும் இருக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய சட்டமுன்வடிவு அவையின் முன் அனுமதியுடன் முதலில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 82/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 82/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள்களை வாங்குதல் மற்றும் விற்றலை முறைப்படுத்துதலுக்கும், அத்தகைய நோக்கங்களுக்காக மாநிலத்தில் அங்காடிகளை நிறுவுதலுக்கும், முறையாக நிருவகித்தலுக்கும் வகை செய்யும் வகையில் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டம் விரிவாக திருத்தப்பட்டுள்ளது. இந்தச்

**1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பெற்ற அனுபவத்தினால் சந்தைகள் குழுக்களை கூட்டமைப்பது மற்றும் அமைப்பது உள்ளடங்கலாக சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பல குறைபாடுகள் காணப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்டுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து சந்தைக் குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கமைப்பதற்காகவும், மாநில அளவிலான சந்தை வளர்ச்சித் திட்டங்களைச் செய்வதற்குமான நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டு உள்ள தமிழ்நாடு மாநில வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியத்திற்கு சட்ட பாதுகாப்பு கொடுக்கவும், மற்றும் சந்தைக் குழுக்கள் மற்றும் வாரியத்தின் பணியாளர்களை அரசுப் பணியாளர்களாகச் செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கால் நடை பராமரிப்பு மற்றும் அதன் பொருள்கள், தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் வனப் பொருட்களுக்கும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களை விரிவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் பிற மாநிலங்களிலுள்ள நியாய விலை அங்காடிகளின் சிறப்பியல்புகளையும் மற்றும் இந்திய அரசால் அனுப்பப்பட்ட மாதிரி முன்வடிவினையும் கருத்திற்கொண்டு தக்க மாற்றங்களுடன் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைச் சட்டத்தினை நீத்தறவு செய்து மீண்டும் சட்டமாக இயற்றுவதற்கு விரிவான சட்டத்தினைக் கொண்டுவர கருதப்பட்டுள்ளது. ஆகவேதான், இந்தச் சட்ட முன்வடிவு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிலே, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் சில கருத்துக்களைச் சொல்கின்ற போது, நான் சொல்ல இருக்கின்ற கருத்துக்களின் காரணமாக, ஒருக்கால் இந்தச் சட்டத்தினை எதிர்க்கிறேனோ என்ற ஒரு தவறான கருத்து தோன்றி விடக் கூடாது என்பதற்காக, முதலிலேயே, அப்போதைக்கப்போதே சொல்லிவிட்டேன் என்ற பாணியிலே இந்தச் சட்டத்தை முழுமையாக நான் வரவேற்கிறேன் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏனென்று சொன்னால், இந்தச் சட்டத்திலே உள்ள சில குறைபாடுகளை—ஏற்கனவே இந்தச் சட்டத்திலே இருந்த குறைபாடுகளை—களைந்து மீண்டும் மிக நல்ல முறையில் "மார்க்கட்டிங் கமிட்டிகள்" நடக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக சொல்லப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை வரவேற்க வேண்டியது ஒவ்வொரு விவசாயத் தொழிலிலே நேரடியாக ஈடுபட்டுள்ளவர்களுடைய கடமையாகும் என்பதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

[திரு. டி. ஆர் வேங்கடரமணன்] [1987 மார்ச் 11

ஆனாலும் கூட, ஏற்கனவே இருந்த சட்டத்திலே சில குறைபாடுகள் இருந்ததாகவும், அந்தக் குறைபாடுகள் எல்லாம் இந்தச் சட்டத்திலே அகற்றப்பட்டு இருப்பதாகவும் இந்த ''ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்''-இலே சொல்லப்பட்டிருந் தாலும், அவைகள் என்ன குறைகள், எவ்வாறு அவை நீக்கப் பட்டன என்பன போன்ற விவரங்கள் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கும், அவர்களின் மூலமாக இந்த நாட்டுக்கும் தரப்படவில்லை என்பதை முதலிலே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தினுடைய விவாதத்திலே என்னுடைய கருத்துக்களை இரண்டு பகுதிகளாக நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒன்று, இந்தச் சட்டத்தை உட்படுத்தி அதிலே இருக்கக் கூடிய சில குறைகளையும், கோட்பாடுகளையும் அல்லது அதிலே சொல்லக் கூடிய மாற்றங்களையும், நான் குறிப் பிட விரும்புவனவற்றை சொல்லிவிட்டு, அடுத்தபடியாக இந்தச் சட்டத்தினை இன்னமும் தீவிரமாக அமல்படுத்துவதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படக் கூடிய நன்மைகளை யொட்டி சில கருத்துக்களையும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-20)

முதலிலே இந்தச் சட்டத்தைக் கொடுத்துவிட்டு, பின்னாலே இந்தச் சட்டத்திலே ஒரு திருத்தம் செய்வதாக அமைச்சர் அவர் களின் சார்பாக ஒரு அமென்ட்மென்ட் இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே கிளாஸ் 10-இலே ஒரு அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறீர்கள். அதிலே கொடுக்கப்பட்ட அமென்ட் மென்ட் என்ன வென்று சொன்னால், ஏற்கனவே இருக்கின்ற சட்டத்திற்கும், இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற அமென்ட் மென்டிற்கும் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. ஆனால், சப் கிளாஸ் 3 என்பதை எடுத்துவிட்டு, அதை ''எக்ஸ்பிளனேஷ னுக்கு'' கீழாக அதை ஒரு கூடுதல் எக்ஸ்பிளனேஷனாகச் சேர்த்து இருக்கிறார்கள். என்னுடைய கருத்து, நேற்றைக்குக் கூட இந்த அவையிலே நாம் பல முறை இலவச சட்ட உதவி என்று எல்லாம் பேசி இருக்கிறோம். இந்த அரசிற்கு என்னுடைய சட்ட ஆலோ சனையாக சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே கொண்டு வந்த சட்டம் தான் சரியான முறை. இப்போது மாற்றி இருக்கிற முறை சரியில்லை. ஏனென்றால், இந்த சப்-கிளாசிலே, "(3) The Government may, at any time, withdraw any member or members nominated by them under sub-section (2) and fill up the vacancy or vacancies by fresh nomination". என்று சொல்லி Power to emove and nominate என்று சொல்வது ஒரு பவர். அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு Vested Power. அரசாங்கத்துக்கு உள்ள உரிமை, அந்த உரிமை சப்-கிளாஸ்-2 ஆகத்தான் வர முடியுமே தவிர ஒரு எக்ஸ் பிளனேஷனிலே மூன்றாவது சப்-கிளாஸாக வர முடியாது.



1987 மார்ச் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கக்கூடியது சிறப்பாகவும், சரியாகவும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது எந்த அடிப் படையிலே தவறு என்பதை அமைச்சரவை தீர்மானித்து அதை மாற்றி இருக்கிறது என்பதை பல முறை படித்தும் என் னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—ஏனென்றால் இது வெஸ்டட் ரைட்—இது உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற உரிமை. "Power to hire and the Power to fire" என்று சொல்வார்களே ஆங்கிலத்திலே, உங்களுக்கு ஒருவனை வேலைக்கு நியமிக்கும் உரிமை இருக்கிறது என்றால், அவனை வேலை நீக்கம் செய்வதற்கும் உரிமை இருக் கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அது ஒரு தனி கிளாஸாகத்தான் இருக்கவேண்டும். ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள சட்ட முன் வடிவிலே இருப்பது போல்தான் இருக்க வேண்டும். மாற்றுவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. அதை மாற்றுவதால் சரியாகவும் கூட இருக்காது. பிற்காலத்திலே அவ்வாறு நீக்கப்பட்ட ஒருவர் கோர்ட்டுக்கு செல்வாரேயானால் அது சரி தானா? எக்ஸ்பிளனேஷனில் எப்படி வரும் என்கின்ற பிரச்சினைகள் எல்லாம் எழாமல் சட்ட முன் வடிவிலே கொண்டு வந்த முறையிலேதான் இருக்க வேண்டுமே தவிர அதை மாற்ற வேண்டாம் என்று நான் முதலிலே அன் போடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இந்தச் சட்டத்தைப் பொறுத்து சில திருத்தங் களைச் சொல்லியிருக்கிறேன். அந்தத் திருத்தங்களை முதலிலே இந்த மன்றத்தினுடைய பார்வைக்கு நான் கொண்டு வர ஆசைப் படுகிறேன். முதலிலே நாம் சப்-கிளாஸ் 10-ஐ எடுத்து பார்க்கிற போது 10. Constitution of market committee—(1) Every market committee shall consist of sixteen members and shall be constituted in the manner hereinafter specified." என்று இருக்கிறது. மார்க்கெட்டிங் கமிட்டியிலே 16 உறுப்பினர்கள் இருக்க வேண்டும், அவர்கள் கீழ்க்கண்ட முறையிலே நியமிக்கப்பட வேண்டுமென்று சட்டத்தினுடைய முதல் பிரிவு சொல்கிறது. ஆனால் பின்னால் உள்ள பிரிவுகளில் சொல்லப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பார்ப்போமேயானால் சப்-கிளாஸ் 2(ஏ)-வில் 8 உறுப்பினர்கள் என்று சொல்லியும், சப்-கிளாஸ் 2(பி)யில் 3 உறுப்பினர்கள் என்று சொல்லியும், சப்-கிளாஸ் 2(சி)யில் ஒரு உறுப்பினர் என்றும், சப்-கிளாஸ் 2(டி)யிலே 3 உறுப்பினர்கள் என்று சொல்லி, ஆக மொத்தம் 15 உறுப்பினர்களை நியமிப்பதாகத்தான் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால் முதல் சப்-கிளாஸிலே 16 உறுப்பினர்களை நியமனம் செய்வதற் காக புதிய வழி முறைகள் என்று சொல்லிவிட்டு உற்பத்தியாளர் களுக்காக 8 பேர்களும், அடுத்தப்படியாக வியாபாரிகளுக்காக

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மார்ச் 11

3 பேர்களும், மீண்டும் ஒரு தனிப்பட்ட முறையிலே ஒரு உற்பத்தியாளரும், அதிகாரிகள் 3 பேரும் என்று சொல்லி 8 பிளஸ் 3 பிளஸ் 1 பிளஸ் 3 என்று சொல்லி 15 உறுப்பினர்களுக்குத்தான் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு இது விளங்கவில்லை 16 உறுப்பினர்கள்தான் இந்த கமிட்டியிலே இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு அந்த 16 உறுப்பினர்கள் எப்படி நியமிக்கப்பட வேண்டும்?, அவர்கள் யாராக இருக்க வேண்டும்? அவர்களுடைய தகுதி என்ன? அவர்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்? அவர்கள் எங்கே வேலை பார்க்க வேண்டும்? அவர்கள் அதிகாரிகளாக இருந்தால் அரசாங்கத்தில் எந்த உத்தியோகத்திலே, எந்த அரசுத் துறையைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிவிட்டு, அந்த 16-வது நபராக யாரை நியமிக்கப் போகிறீர்கள். அந்த 16-வது நபர் வானத்திலிருந்து குதிக்கப் போகிறாரா? அல்லது நமக்கெல்லாம் தெரியாமல் ஒரு நபர், திடீரென்று 16-வது நபர் எங்கிருந்து வருகிறார்? "Who is that 16th man"? என்று நான் அவர்களை கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவேதான் நீங்கள் அந்த 16-வது நபர்-ஏழாவது மனிதன் என்று திரைப்படம் வந்திருக்கிறது-இங்கே யார்? அந்த 16-வது நபர் என்று பார்க்கிறபோது. நீங்கள் சொல்லாத காரணத்தினாலே உங்களுக்காக நான் அந்த 16-வது நபர் யார் என்று அடையாளம் காட்டலாம் என்பதற்காக இங்கே சட்டத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

என்னுடைய; சட்டத் திருத்தத்தினுடைய இரண்டாவது திருத்தம் "In clause 10, in sub-clause (2), after item (d), *add* the following as item (*e*):—

(*e*) The Member of the Tamil Nadu Legislative Assembly having jurisdiction over the Market Committee.". என்று சொல்லி எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் அந்த மார்க்கெட்டிங் கமிட்டியினுடைய ஆளுகையிலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறாரோ அவரையும் அந்த மார்க்கெட்டிங் கமிட்டியிலே நீங்கள் உறுப்பினராகச் சேர்ப்பதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். ஆகவே அந்த 16-வது உறுப்பினரை இந்த மன்றத்தின் மூலமாக, மன்றத்தின் உறுப்பினர்களையும் அந்த கமிட்டியிலே நீங்கள் சேர்க்க வேண்டும். நீங்கள் யாரை சேர்ப்பதற்காக வைத்திருக்கிறீர்கள் என்று இந்த அவைக்கு சொல்லிவிட்டு. அவ்வாறு சேர்க்கக்கூடியவரை ஏன் இந்த சட்டத்திலே சொல்லப்படவில்லை என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துவிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

அடுத்தபடியாக, முதல் திருத்தமாக "In clause 10, in sub-clause (2), in item (a) *for* the word 'three', occurring in two places, *substitute* the word 'two'. என்று ஒரு திருத்தத்தை நான் கொடுத்து இருக்கிறேன். அதாவது உற்பத்தியாளர் என்று 8 பேரை நீங்கள் சேர்த்து இருக்கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் உற்பத்தியாளர்கள் என்று சொல்லுகின்றபோது மார்ஜினல் பார்மர்ஸ் மற்றும் ஸ்மால் பார்மர்ஸ் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

இது ஒரு வியாபாரச் சந்தை. இப்படிப்பட்ட வியாபாரச் சந்தையில் விவசாயிகளாக இருப்பவர்கள்தான் அதிகப்படியான எண்ணிக்கையில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற உங்களின் எண்ணத்தை—அந்த நல்ல எண்ணத்தை—என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. அதை நான் பாராட்டக் கூட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஸ்மால் பார்மர்ஸ் மற்றும் மார்ஜினல் பார்மர்ஸ் என்பவர்களுக்கு 6 உறுப்பினர் இடத்தைக் கொடுத்துவிட்டால் அதனால் நல்ல பயன் விளையுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நம் நாட்டில் உள்ள விவசாயிகள்—அதிலும் சிறு விவசாயிகள் என்பவர்கள் தற்குறிகளாக இருக்கிறார்கள். அவர்கள் யாரையும் எதிர்த்துப் பேச முடியாத நிலையில் இருப்பவர்கள். மற்றவர்களிடம் அவர்கள் ஏற்கெனவே அடிமைப்பட்டவர்களைப் போல் இருக்கிறார்கள். இந்த நிலையில் மார்ஜினல் பார்மர்களையும், ஸ்மால் பார்மர்களையும் 6 உறுப்பினர்களாக அந்தக் கமிட்டியில் போட்டால் அவர்களாலே அங்குள்ள அதிகாரிகளை எதிர்த்துப் பேச முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். பின்னாலே 3 லைசென்ஸ்தாரர்களையும் போட இருக்கிறீர்கள். அப்படிப் போடப்படுபவர்களையெல்லாம் இவர்களாலே எதிர்த்துப் பேசக் கூட முடியாத சூழ்நிலைதான் ஏற்படும். எனவேதான் கொஞ்சம் விவரம் தெரிந்த விவசாயிகளை—பெரிய விவசாயிகளைப் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக நான் நிலச்சுவான்தார்களுக்காக வக்காலத்து வாங்குவதாகக் கருதக் கூடாது. அப்படி நான் வாங்கவில்லை.

ஒரு 5 ஏக்கர் 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள்தான் அதிகாரிகளைத் தட்டிக் கேட்டு பேச முடியும். $\frac{1}{2}$ ஏக்கர் $\frac{1}{4}$ ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களைப் போய் பிரதிநிதிகளாக ஆக்காதீர்கள் என்றுதான் கேட்கிறேன். அப்படிப்பட்டவர்கள் அந்தச் சபையில் எவ்வாறு ஆணித்தரமாகப் பேச முடியும், வாதாட முடியும் என்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே நம்முடைய சிறு விவசாயிகளில் பலர் தற்குறிகளாக இருக்கிறார்கள். அன்றாடங் காய்ச்சிகளாக இருக்கிறார்கள். அவர்கள் போய் அங்கே என்ன பேச முடியும்? எனவே

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மார்ச் 11

அரசாங்கத்தின் நல்ல நோக்கத்தை நான் பாராட்டுகிறேன் என்றாலும் அந்த நல்ல எண்ணம் இதன் காரணமாகக் கெட்டு விடக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன். அரசாங்கத்தின் நல்ல சிந்தனைக்கு குந்தகம் ஏற்பட்டு விடுமே என்ற காரணத்தால் தான் மார்ஜினல் பார்மர்ஸ் அல்லது ஸ்மால் பார்மர்ஸ் ஆகிய வர்களுக்கு தற்போது 6 பிரதிநிதித்துவம் என்று குறைத்து இரண்டு பிளஸ் இரண்டு அதாவது 4 உறுப்பினர்களை மட்டுமே அவர்களிலிருந்து போட்டால் நன்றாக இருக்கும். பெரிய விவ சாயிகளிலிருந்து 4 உறுப்பினர்களைப் போட்டு மொத்தம் 8 உறுப்பினர்கள் விவசாயப் பிரதிநிதிகள் என்று வைத்தால் நடை முறையில் சிறப்பாக இருக்கும். இதைப்பற்றி நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை விவாதித் திருக்கிறேன். இதைப் பரிசீலிப்பதாக அவரும் ஒப்புக் கொண் டார். ஏற்கெனவே விவசாயி பொருள்களை விவசாயம் செய்வதே பெரிய கஷ்டமாக இருக்கிறது. அப்படி விவசாயம் செய்து உற்பத்தி செய்த பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வது அதைவிடக் கஷ்டமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் கொஞ்சம் விவரம் தெரிந்த விவசாயிகள் இருந்தால்தான் விவசாயிகளுக்குப் போராட முடியும். எனவே கொஞ்சம் அதிக மான நிலம் வைத்திருப்பவர்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தின் நல்ல நோக்கம் நிறைவேறும். அந்த நோக்கம் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியதுதான். எனவே அந்த அடிப்படை யில் தற்போது ஸ்மால் பார்மர்ஸ் மற்றும் மார்ஜினல் பார்மர்ஸ் ஆகியோருக்குக் கொடுக்க இருக்கிற பிரதிநிதித்துவத்தைக் குறைக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிளாஸ் 15-ல் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஓர் உறுப்பினர் 3 ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கலாம் என்றும் அவ்வாறு இரண்டு முறைதான் பதவி வகிக்கலாம் என்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்த உறுப்பினர் ஒரு ஆண்டுக்கு மேல் ஒரு முறை பதவி வகித்தால் அவர் மீண்டும் புதிதாகப் பதவிக்கு வரும்போது, ஏற்கெனவே 3 ஆண்டுக் காலத் திற்கு பதவியிலிருந்ததாக கருதப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதைக் குறித்தும் நான் ஏற்கெனவே மாண்பு மிகு அமைச்சர் அவர்களிடத்தில் பேசி இருக்கிறேன். தனிப் பட்ட முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். 3 ஆண்டுதான் பதவியில் இருக்க முடியும். அதுவும் 2 முறைதான் இருக்க முடியும் அதற்கு மேல் இருக்க முடியாது என்று இருக்கும்போது ஒருவர் 3 ஆண்டுக் காலத்தில் குறைந்த பட்சம் 1 ஆண்டு 1 மாதம் பதவியில் இருந்தால்கூட அடுத்த முறை 3 ஆண்டுகளுக்கு மேல் பதவியில் இருக்க முடியாது. அதாவது 4 ஆண்டுகளுக்கு மேல் பதவி பெற முடியாது என்ற சூழ்நிலை இருக்கிறது. ஏற் கெனவே 3 ஆண்டுகள் என்பது குறைவாக இருக்கிறது 5 ஆண்டுகள் என்று கூட வைக்காமல் 3 ஆண்டுகள்தான் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏற்கெனவே ஒரு முறை



1987 மார்ச் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

ஓராண்டுக்கும் மேலாகப் பதவி வகித்தால் அதை முழுப் பதவிக் காலமாக கருத வேண்டும் என்று போடப்பட்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் 36 மாதத்தில் 50 சதவீதம் அளவுக்கும் மேலாகப் பதவி வகித்தால் தான் அதை முழுப் பதவியாக ஏற்றுக் கொள்ள முடியும். இதைக் குறித்தும் அமைச்சர் அவர்களிடத்தில் தனிப்பட்ட முறையில் சொன்னபோது அதை ஏற்றுக்கொள்வார் என்று நினைத்தேன். காரணம் அதில் உள்ள நியாயத்தை அவர் புரிந்து கொண்டார். எனவே 1 ஆண்டுக்கு மேல் என்றிருப்பதை மாற்றி இரண்டாண் டுகளுக்கு மேல் என்று உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிளாஸ் 24-ஐ உற்று நோக்குவீர்களானால் 'levy of fee by Marketing Committee" என்று போடப் பட்டிருக்கிறது. மார்க்கெட்டிங் கமிட்டி என்பது விவசாயிகள் தங்களுடைய பொருள்களை விற்பதற்காக என்று வியாபாரத் திற்காக ஒன்றுகூடி அந்தப் பொருள்களுக்கான விலையை நிர் ணயம் செய்கிற இடம். எனவே அங்கே வாங்கப்படுகிற அல்லது விற்கப்படுகிற பொருள்களுக்கு விதிக்கப்பட வேண்டிய கட்டணம் குறித்து கிளாஸ் 24-ல் சொல்லப்பட்டிருக்கிறது. கட்டணம் விதிக்க வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள் கிறேன். பணம் வசூலித்தால்தான் மார்க்கெட்டிங் கமிட்டிக்கு ஆள் அம்பு தேவை, கட்டம் கட்ட வேண்டும், இடம் வாங்க வேண்டும் என்று பல வேலைகள் இருக்கின்றன. ஆக கட்டணம் வசூலிப்பது என்பது ஒரு கட்டாயமாகும். ஆக நோட்டிபை செய்த ஏரியாவில் இருக்கிற அத்தனைப் பொருள் களுமே அந்த மார்க்கெட்டிங் கமிட்டியில்தான் விற்க வேண்டும். வெளியே விற்றால் செல்லாது என்று சட்டம் போட்டு, அப்படி விற்பது தண்டனைக்குரியது என்று சொல்லி கட்டாயமாக கட்டணத்தை வசூலிக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது "There is always a distinction between Fees and Tax" என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. நீங்கள் அதை நன்கு புரிந்து கொண்டிருப்பவர்கள். கட்டணம் என்பது சேவைக்காகத் தரப் படுவது. வரி என்பது கட்டாயமாக வசூலிப்பதாகும். ஆகவே மார்க்கெட்டிங் கமிட்டிக்கு போனாலும் இல்லாவிட்டாலும் அங்கே வாங்கி விற்கிற பொருள்களுக்கு கட்டணம் வசூலிப்பதை Fees என்று குறிப்பிடுவது பிற்காலத்தில் சட்டப் பிரச் சினையை தோற்றுவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12—30)

பிற்காலத்திலே நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குகளைச் சந்திக்கவேண்டியிருக்கும். கடந்த பில்லில் பேசும்போது மாண்பு மிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மற்ற உறுப்பினர் களும், நீதிமன்றத் தடையின் காரணமாக பல நல்ல காரியங்கள் வீணாக கெட்டுப்போய்விட்டன என்று தெரிவித்திருந்தார்கள்.

அதற்காக அன்போடு ஆலோசனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிளாஸ் 24-ல் 'ஃபீஸ்' என்று இருப்பதை 'டாக்ஸ்' என்று மாற்ற வேண்டும். அவ்வாறு 'டாக்ஸ்' என்று மாற்றாவிட்டால் ...... (மணி அடிக்கப்பெற்றது) எனக்கு சற்று அதிக நேரம் கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எவ்வளவு நேரம் ?

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்** : சட்டத்தைப் பற்றி கிளாஸ்ஸை கிளாஸ் பேசிக் கொண்டிருக்கிறேன். இதில் 64 கிளாசஸ் இருக்கின்றன. நான் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. உடனே பெல் அடித்தால் பேசுவது எப்படி? நான் அரசியல் பேசவில்லை. இந்த நாட்டு மக்களுக்காக பேச வேண்டுமென்று தாங்கள்தான் சொன்னீர்கள். நான் நாட்டு மக்களுக்காக பேசுகிறேன். தேவையில்லாமல் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தேவையோடு நாட்டு மக்களுக்காக சீக்கிரமாக பேசி முடியுங்கள்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்** : 'ஃபீஸ்' என்பதை 'டாக்ஸ்' என்று மாற்றித்தர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். மார்க்கெட்டிங் கமிட்டியைப் போல மார்க்கெட்டிங் போர்ட் என்று போட்டிருக்கிறார்கள். மாநில அளவிலே உள்ள போர்ட் அந்த மார்க்கெட்டிங் போர்ட். அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேரை, விவசாயத்தில் ஈடுபாடு உள்ள, உரிமையுள்ள, கட்டுப்பாடு உள்ள உறுப்பினர்களாக மாண்புமிகு அவைத் தலைவரின் சிபாரிசின் பேரில் சேர்க்க வேண்டுமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறேன். அதை நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நான் கூறியுள்ள கருத்துக்கள் சட்டக் கருத்துக்கள், அரசியல் கலப்பு இல்லாத நல்லபடியாக, நடக்கவேண்டும் என்ற தூய்மையான நோக்கத்தோடு சொல்லப்பட்ட கருத்துக்கள். இவற்றை மாண்புமிகு அமைச்சர் பரிசீலித்து உடனடியாக இந்த மன்றத்திலேயே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சியினரிடமிருந்து வருகிற திருத்தம், அவற்றை ஏற்றுக்கொள்வதா, எங்களுடைய உரிமைக்கு பிரஸ்டீஜுக்கு பங்கம் வந்துவிடும் என்று கருதாமல் இதிலுள்ள நியாயத்தை எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைபட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சில ஆலோசனைகளைச் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். மார்க்கெட்டிங் கமிட்டியில் விவசாயிகள் தங்களுடைய பொருள்களை விற்க ஒரு வார காலத்திற்கு இனாமாக வைக்கிறார்கள். நெல் அறுவடை முடிந்து





பிறகு நெல்லின் விலை குறைகிறது. இதனால் ஒரு வார காலம் வைத்திருந்தால் மட்டும் விலை ஏறப்போவதில்லை. குறைந்தபட்சம் விவசாயிகளுக்கு நாம் நன்மை செய்ய வேண்டும் என்று கருதினால், குறைந்தபட்சம் ஒரு மாத காலம் இனாமாக வைத்துக்கொள்ள அனுமதித்தால் மார்க்கெட்டில் Fluctuation தணிந்து விலை Stabilise ஆகும்போது அவர்கள் விற்றால் நல்லதொரு விலை அவர்களுக்குக் கிடைக்கும். இப்போதுள்ள விதிமுறைகளின்படி ஒரு வார காலம் இனாமாக வைத்துக்கொள்ளலாம் என்பதை மாற்றி குறைந்தபட்சம் இரண்டு மாத காலம் வைத்துக்கொள்ள அனுமதி அளித்தால்தான், இந்தச் சட்டத்தின் உண்மையான பலன், நாம் விரும்புகிற பயன் விவசாயிகளைச் சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் இதை எச்சரிக்கையாகச் செய்ய வேண்டும். இப்போதுள்ள மார்க்கெட்டிங் கமிட்டி கோடவுன்களில் விவசாயிகள் என்ற போர்வையில் மறைந்து கொண்டு வியாபாரிகள் சரக்குகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த தவறுகள் இனியும் தொடர்ந்து நடைபெறாமல் நல்லதொரு வாய்ப்பை அரசு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 'notified area' என்றும் 'notified crop' என்றும் சொல்லியிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் 'notified crop' என்றால் பருத்தி, மிளகாய், கடலை, மல்லி, உளுந்து போன்ற பொருள்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலேயுள்ள கன்னியாகுமரியில் நெல் மட்டும் 'notified crop' என்று இருக்கிறது. இதனால் பார்டர் ஏரியாவில் இருக்கிறவர்கள் திருநெல்வேலியில் வாங்கினால்கூட கன்னியாகுமரியில் வாங்கியதாகச் சொல்லி இந்த பலன்கள் விவசாயிகளுக்கும் செல்ல முடியாமல், அரசுக்கும் நியாயமாக வர வேண்டிய கட்டணம் வர முடியாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கட்டணத்தை 'notify' செய்கின்றபோது cluster of districts என்ற வகையில் இரண்டு மூன்று மாவட்டங்களுக்குச் சேர்ந்து அல்லது, இரண்டு மூன்று தாலுக்காக்கள் சேர்ந்து மொத்தமாக 'notify' செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு 'Marketing Board Fund' பல இலட்சக்கணக்கான ரூபாய், அதாவது கிட்டத்தட்ட 60 இலட்சம் ரூபாய் இருக்கிறது என்ற செய்தி எனக்கு தரப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் அரசுக்கும் செலவழிக்க முடியாமல், ''பூதம் காத்த புதையல் போல'' இருக்கிறது. இதற்காக அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய ஆலோசனை அது. விவசாயிகள் மார்க்கெட்டிங் கமிட்டியில் தங்கள் பொருள்களை பாதுகாத்து வைக்கிறார்கள். அவர்கள் இரண்டு மாதங்கள் கழித்து

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மார்ச் 11

விற்பதற்கு முன் அவர்கள் வைத்த பொருள்களின் மதிப்பீட்டில் 50 சதவீதம் கடனாக தந்தால் நல்லது. ஏனென்றால் பொருள்கள் உங்களிடத்திலே இருக்கின்றன. "k‹y loan" என்பதைப் போல அவர்கள் வைத்துள்ள பொருள்களின் விலை மதிப்பை வைத்துக்கொண்டு அதில் பாதி பணத்தை விவசாயிகளுக்கு உடனடியாக கடனாக கொடுத்தால், தங்களுடைய பயிர் விளைந்தவுடனே விற்க வேண்டுமென்ற துர்ப்பாக்கியமான நிலையில் உள்ள விவசாயிகளுக்கு கொடுக்கிற பணம் ஆறுதலாக இருக்கும். அதை வைத்து, தங்களுடைய அன்றாடச் செலவுகளைச் செய்வதோடு, தங்களுடைய அடுத்த பண்டத்திற்கான விவசாயச் செலவுகளில் முதலீடு செய்ய அந்த 50 சத விகிதம் பணம் உதவியாக இருக்கும். மேலும், அவர்களுடைய விளை பொருள்கள் உங்களுடைய பாதுகாப்பில் இருக்கின்றன. (மணி அடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசலாம் (குறுக்கீடு) இன்னும் 4 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** பேரவைத் தலைவரவர்களே, அவற்றிலே டிஸ்கஷன் இல்லை. இதுதான் முக்கியமான பில். நான் கருத்துக்கள்தான் சொல்கிறேன். நான் சொல்கிற கருத்துக்களில் தவறு என்றோ, ஏற்றுக்கொள்ள முடியாது என்றோ சொன்னால், நான் உட்கார்ந்துகொள்கிறேன். அடுத்தபடியாக, இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம். தனியாகப் பேசுவதை, உள்ளே பேசக்கூடாது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** இன்றைக்கு விலை ஏற்றத்தால் விவசாயிகள் அல்லல்படுவதைக் காண்கிறோம். அறுவடைக் காலங்களில் விளைபொருள்களின் விலை வீழ்ச்சி அடைந்து, பின்னால் விலை ஏறுகிறது. இதனால் பலன்கள் எல்லாம் அந்த விவசாயிகளுக்குக் கிடைக்காமல், இடைத் தரகர்களுக்குச் சென்றடைகிறது. இன்றைக்கு காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா மூலமாக, அதாவது பருத்தி நிறுவனத்தின் மூலமாக மினிமம் சப்போர்டிங் பிரைஸ் வழங்குவதுபோல மார்க்கெட்டிங் கமிட்டிகள் மூலம் நெல்லுக்கும், ஏனைய பொருள்களுக்கும் ஆதார விலை கிடைக்க, அடிப்படை விலை கிடைக்க ஆவன செய்வதற்கான

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 மார்ச் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தீர்களானால், காலங்காலமாக இந்த நாட்டில் அவதிப்பட்டு வந்த விவசாயிகள் எல்லாம் நன்றியோடு நினைத்துக்கூற கடமைப்பட்டிருப்பார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். அடுத்தப்படியாக (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். வேங்டரமணன் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவில் உள்ள பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்கும், இந்தச் சட்டமுன்வடிவை ஆழ்ந்து ஆராய்ந்ததற்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 16 பேர்கள் உறுப்பினர்கள் என்று சொல்லியிருந்தாலும், 15 பேர்களுக்குத்தானே மார்க்கட்டிங் கமிட்டியில் இடமளித்து இருக்கிறார்கள் என்றும், 16-வது ஆள் எங்கே இருக்கிறார் என்றும் கேட்டார்கள். அதில், சட்டமன்ற உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளலாமா என்றும் கேட்டார்கள். இதில் 14-வது பிரிவின்கீழ், Ex-Officio என்ற முறையில் உதவி வேளாண்மை இயக்குநரை உறுப்பினராகச் சேர்த்துப் பார்த்தால் 16 என்ற எண் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்ப்பது பற்றி கருத்து சொல்லியிருக்கிறார்கள். அது கொள்கை அடிப்படையிலே முடிவெடுக்கப்பட வேண்டிய ஒன்று. அது குறித்து ஒரு கொள்கையை வகுத்த பிறகு, அது இந்த மாமன்றத்தின்மூலம் தெரிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே அளிக்கப்பட்டிருக்கிற அமென்ட்மென்டில் '(3)' என்பது இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அச்சுப்பிழை எனவே '(3)' என்று போட்டுக்கொண்டால், எல்லா விளக்கமும் கிடைத்துவிடுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அவர்கள் சொல்கிறபோது, மார்க்கெட்டிங் சொசைட்டியிலே வைக்கப்படுகிற சரக்குகளுக்கு முதலிலேயே பாதித் தொகை தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நல்ல யோசனை. அதைப் பற்றி ஏற்கனவே எண்ணி, வங்கிகள் மூலமாக, அங்கே கொண்டு வந்து வைக்கப்படுகிற சரக்குகளுக்கு பணம் வாங்கிக் கொடுப்பது பற்றியும், சரக்குகளை கொஞ்ச நாள் அங்கே வைக்க வேண்டிய சூழ்நிலை இருந்தால் மருந்து முதலியவற்றை அடித்து, அவற்றைப் பாதுகாக்கும் எண்ணத்திலும் அந்த மார்க்கெட்டிங் சொசைட்டிகள் இயங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளோம். இதைப் பற்றி ஒவ்வொரு தலைவரிடமும் கலந்து பேசி, நல்லபடி அந்த சொசைட்டிகள் நடைபெறும் தன்மைகளை நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1987 மார்ச் 11

அடுத்து பணிக்காலம் பற்றிக் குறிப்பிட்டார்கள். 3 ஆண்டுகளுக்குள் ஒருவர் இறந்து, மீண்டும் ஒருவர் அந்த இடத்தில் நியமிக்கப்பட்டால், அவருடைய பணிக்காலம் 15 மாதங்கள், 16 மாதங்கள்தானே இருக்கும் என்றும், அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமல் இருக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். யார் எந்த நேரத்திலே நியமிக்கப்பட்டாலும், தற்காலிக இடத்திலே நியமிக்கப்பட்டாலும், ஓராண்டு பணியாற்றினார்கள் என்றால் 3 ஆண்டுகள் பணி புரிந்தார் என்று எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–40)

அத்தோடு மார்க்கெட்டிங் போர்ட்-ஐ நிர்வகிப்பதிலே எப்படிப்பட்ட முறைகள் இருக்கவேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் எல்லாம் நல்ல ஆலோசனைகள் என்பதை மட்டும் ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு நடைபெறுகின்ற மார்க்கெட்டிங் சொசைட்டிகள் மூலமாக நல்ல பல காரியங்கள் நடைபெற்று வருவதை இந்த மன்றம் அறியும். அங்கே ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் வளர்ச்சி நல்ல அளவில் இருக்கின்றது. ஏறத்தாழ 586 லட்சம் ரூபாய் அளவுக்கு இந்த விற்பனைக் கூடங்கள் வியாபார வகையில் பயன் பட்டுக்கொண்டிருக்கின்றன. இடைத்தரகர் இல்லாமல் விவசாயிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

அதிகமாக சிறு விவசாயிகள் சேர்க்கப்படுகின்றார்கள் என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் அவர்கள்தான் தமிழகத்திலே அதிகமாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல நல்ல காரியங்களை விவசாயிகளுக்கு செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு அவைகளைச் செய்து தரவேண்டும், அவர்கள் ஏமாற்றப்படக்கூடாது என்ற ஆழ்ந்த கருத்துள்ள அரசாக இந்த அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் அவர்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே விற்பனைக்கூடங்கள் 272 இடங்களில் இருக்கின்றன. வியாபாரிகள் பல விளைபொருள்களை கொள்முதல் செய்ய வருகிறார்கள். நல்ல போட்டி ஏற்படுத்தி நல்ல உயர்ந்தபட்ச விலையையும் விவசாயிகள் பெறுவதற்கு இந்த விற்பனைக்கூடங்கள் நல்லபடியாக பயன்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 மார்ச் 11] [திரு. க. இராசாராம்]

இப்போது சில பயிர்கள் சில விற்பனை கூடங்களில் சேர்க்கப்படவில்லை என்கிற குறைபாடுகளை திரு. வேங்கடரமணன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன். அப்படிப்பட்ட குறைபாடுகள், ஏதாவது பொருள்களை வாங்கமுடியாத நிலைமைகள் இருக்குமானால், அவற்றை வாங்குவதற்கான வழிவகைகளை நாங்கள் சேர்த்துக்கொள்ள எண்ணியிருக்கிறோம்.

குறிப்பாக ஈரோடு மார்க்கெட்டிங் சொசைட்டியில், வாங்குவதற்கு வழியில்லை என்ற குறைபாட்டை நேற்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த மார்க்கெட்டிங் சொசைட்டி கமிட்டி உடனடியாக எள் வாங்குவதற்கு ஏற்பாட்டையும் செய்யலாம் என்று நாங்கள் ஆணை பிறப்பித்திருக்கிறோம். அந்த வகையில் எந்தெந்த பொருள்கள் எங்கெங்கே விளைகிறதோ, அவைகளை விவசாயிகள் பாதிக்கப்படாத தன்மையில் வாங்குவதற்கு விற்பதற்கான காரியங்கள் நாங்கள் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே நல்லமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டமுன் வடிவை இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 82/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 10.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 10 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"In clause 10, *for* sub-clause (3) and the Explanation thereunder, *substitute* the following:

"*Explanation*.—For the purposes of clause (a),—

(i) "small farmer" means a person whose principal means of livelihood is income derived from agricultural land and who holds, whether as owner, tenant or mortgagee with possession, or partly in one capacity and partly in another, more than half a hectare of irrigated land or one hectare of unirrigated land but not more than one hectare of irrigated land or two hectares of unirrigated land;

(ii) "marginal farmer" means a person whose principal means of livelihood is income derived from the agricultural land and who holds whether as owner, tenant or mortgagee with possession, or partly in one capacity and partly in another, not more than half a hectare of irrigated land or one hectare of unirrigated land, and where any person holds both irrigated and unirrigated land, one hectare of irrigated land shall be deemed to be equal to two hectares of unirrigated land.

(iii) The Government may, at any time, withdraw any member or members nominated by them under sub-section (2) and fill up the vacancy or vacancies by fresh nomination.";

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** Mr. Speaker Sir, I move the following amendment:

"1. In clause 10, in sub-clause (2), in item (a) *for* the word 'three', occurring in two places, *substitute* the word 'two'.

2. In clause 10, in sub-clause (2), after item (d), add the following as item *(e)*,—

"*(e)* The Member of the Tamil Nadu Legislative Assembly having jurisdiction over the Market Committee."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 10, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.





பிரிவுகள் 11 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**பிரிவு 15.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 15 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்"

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 15, in sub-clause (1), in the first proviso for the words 'one year', *substitute* the words 'two years'."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 15 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 16 முதல் 21 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**பிரிவு 22**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 22 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 22, after sub-clause (4), *add* the following sub-clause:—

'(5) Any rule under sub-section (4) may be made so as to have retrospective effect on and from a date not earlier than the 17th November 1981'".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 22, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 23, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 24.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 24, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ''.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

" In clause 24, for the word 'fee', *substitute* the word 'tax', wherever it occurs".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வி யுற்றது.

பிரிவு 24, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவுகள் 25 முதல் 35 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 36.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 36 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

" In clause 36, in sub-clause (1), after item (vii) *add* the following :—

(viii) Five Members of the Tamil Nadu Legislative Assembly nominated by the Speaker.".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து கொள்கை முடிவு எடுக்கப்பட வேண்டியிருக்கிறது. கொள்கை முடிவு எடுக்கப்பட்ட பிறகு இது குறித்து ஆராயலாம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திருத் தத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்கு பிறகு என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 36, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 37

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 37 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும் ''.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

" In clause 37, after sub-clause *(7)*, *add* the following sub-clause :—

(8) Any rule under sub-section (7) may be made so as to have retrospective effect on and from a date not earlier that the 17th November 1981.".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 37, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 38 முதல் 67 வரை மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

"In clause 1, in sub-clause (1), *for* '1986', *substitute* '1987'".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன் :

"In the enacting formula, *for* 'Thirty-seventh Year', *substitute* 'Thirty-eighth Year'."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

*(பிற்பகல் 12-50)*

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 82/1986) திருத்தப்பெற்ற படி நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி. நிறைவேற்றப்பெற்றது.

(இ). எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 1/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

** 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 2 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**(ஈ). பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, தொண்டைநாடு சான்றோருடைத்து என்ற வரலாற்றுச் சிறப்புடைய காஞ்சி மாநகரிலே பிறந்த பச்சையப்பர் நாற்பதாண்டுகளிலே வழங்கிய கொடைகள் ஏராளம். அப்படிப்பட்ட கொடைகள் நிறைந்த காஞ்சியிலேயிருந்து அளித்த, அந்தக் காஞ்சியிலே பிறந்தவன் என்ற காரணத்தினாலேயும், நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாகவும் பச்சையப்பன் அறக் கட்டளையினுடைய சட்ட முன்வடிவின் மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்ததற்காக நான் உள்ளபடியே மகிழ்வு எய்துகிறேன்.

இந்த அறக்கட்டளையைப் பொறுப்பேற்றுக் கொண்ட நிர்வாகக் குழு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பிறகு உண்மையிலேயே அந்தக் கல்லூரியினுடைய தரமும், மாணவர்களுடைய ஒழுக்கமும், நிதிநிலை அறிக்கையும், ஆசிரியர்களினுடைய கட்டுப்பாடுகளும் செம்மையாக்கப்பட்டிருக்கின்றது என்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வியினிடத்து உள்ள அன்பால், கல்வியைச் செம்மையாகப் பெற வேண்டுமென்ற உணர்வால் நான் இந்த மகிழ்ச்சியை அடைகிறேன். ஆக இப்படி இந்தப் பொறுப்புக் கழகம் சிறப்பான பணியினைச் சிறப்பாகச் செய்து கொண்டு வந்திருக்கின்றது. மேலும், இந்தப் பொறுப்புக் கழகமானது முன்பிருந்த பல்வேறு அறங்காவலர்கள் வைத்திருந்த கடன் சுமைகளையெல்லாம் செம்மையாக நீக்கியிருக்கின்றது. அந்தச் சுமைகளையெல்லாம் நீக்கியிருக்கின்ற ஒரு சிறப்பான ஆற்றலை உள்ளபடியே நான் பாராட்டுகிறேன்.

---

** 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





மேலும், 1967 ஆம் ஆண்டிலேயிருந்து 1975 ஆம் ஆண்டு வரையிலேயும் அறங்காவலர்களாக இருந்தவர்கள் நம்முடைய பச்சையப்பன் அறக் கட்டளையில் என்னென்ன தீங்குகள் செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் தயவு செய்து ஒரு குழுவின் மூலமாக அதைச் செம்மையாக அலசிப் பார்க்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், பச்சையப்பருடைய அறக் கட்டளையைப் பற்றிய அந்த உயிலை நான் படித்திருக்கிறேன். படித்ததின் நோக்கம் என்னவென்று சொன்னால், அந்த உயிலிலே அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அதை ஒரு படிவமாக, வருகின்ற அறங்காவலர்களுக்கெல்லாம் தருவீர்களேயானால் எந்தத் தவறையும் அவர்கள் செய்ய மாட்டார்கள்.

பச்சையப்பனுடைய அறக் கட்டளையினுடைய உயிலினுடைய சாரம் என்னவென்று இரண்டு வரிகளிலே சொல்லி விடுகிறேன். "சூரியன் இருக்கின்ற வரையில், சந்திரன் இருக்கின்ற வரையில் இந்தப் பச்சையப்பனுடைய அறக்கட்டளையானது செம்மையாக வளர்ந்து, ஏழை எளிய மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அறக்கட்டளையை நான் நிறுவுகிறேன். இந்த அறக்கட்டளையிலிருந்து ஒரு சல்லிக்காசு யாராகிலும் தவறாகப் பயன்படுத்தினால் அவர்களுக்குத் தொழுநோய் வரக் கடவது" என்று எழுதி வைத்திருக்கிறார் பல பேர்கள் 1967 லிருந்து 1975 வரையில் அறக் கட்டளையிலே பல்வேறு சாதனைகளைப் புரிவதாகச் சொல்லி வேதனைகளைச் செய்திருக்கிறார்கள்.

அந்த நிலையைப் பார்க்கிறபோது எவ்வளவோ சல்லிக் காசுகளைத் திருடியவர்கள் என்று சொல்ல மாட்டேன்; எடுத்துக் கொண்டவர்கள் நிலை என்ன? தொழுநோய் பற்றி, கிட்டே வராதே என்று எல்லோரும் தொழுகின்ற தொழு நோய் பற்றிக் கொண்டு பலர் இருப்பதாகச் சொல்கிறார்கள். பலருக்கு இந்த நோய் வருமோ என்று ஐயப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. ஆக, இந்தப் பச்சையப்பன் அறக் கட்டளையானது செம்மையாக நடைபெற, அறம் செம்மையாக வளர தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது நிறைவேறியிருக்குமானால் பலருக்கு இந்த நோய் வந்திருக்க வேண்டும்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** நன்றி. தலைவரவர்களே, அறக் கட்டளையினுடைய உயிலின் சாராம்சங்களைச் சொல்கிறேன். அவர்கள் சாரமாக நின்று, பலபேர் அதை மின்சாரமாக எண்ணாமல் இருப்பதற்குச் சொல்கிறேன். இந்தப் பச்சையப்ப

னுடைய அறமானது செம்மையாக வளர்க்கப்பட்டு வருகிறது என்று சொல்லி, தவறுகள் பல இருக்கின்றன என்பதற்குச் சில சான்றுகளை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா சாலையில் அழகான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டிடங்களுக்கு வாடகை எப்படி விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஒரு சதுர அடிக்கு இரண்டு ரூபாய் ஐம்பது காசு. அங்கே தனியார் கட்டிடங்களுக்கு 12 ரூபாய், 13 ரூபாய், 14 ரூபாய் என்று வாடகை வாங்குகிறார்கள். ஏலத்தின் மூலமாக வாடகைக்கு விட்டிருந்தால் அறக்கட்டளைக்கு வருமானம் அதிகமாகக் கிடைக்கும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன்.

மேலும் இந்த அறக் கட்டளையினுடைய சொத்துக்களை எல்லாம் பல்வேறு இடங்களில் இருப்பவர்கள் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை எல்லாம் வெளியே கொண்டு வர வேண்டும். நம்முடைய இராயப்பேட்டையிலே கொலைகாரன் பேட்டை என்று சொல்வார்கள்—இல்லை, இல்லை. அது கலைகாரன்பேட்டையாக இருக்க வேண்டும். அந்தக் கலைகாரன் பேட்டையிலே செல்லம்மாள் அறக்கட்டளையைச் சேர்ந்த ஐந்து வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகள் பூட்டப்பட்டிருக்கின்றன. ஏன் இப்படி பூட்டி வைக்கப்பட வேண்டும்? அவற்றை வாடகைக்கு விட்டால் அறக்கட்டளைக்கு வருமானம் வரும். அதை கல்விக்குப் பயன்படுத்தலாமே. ஆகவே, அந்த ஐந்து வீடுகளையும் வாடகைக்கு விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இராயப்பேட்டையிலே ஒரு ஓட்டல், அதனை ஒரு நல்ல சைவ ஓட்டலாக நடத்தி வந்தார்கள். கடந்த பத்து ஆண்டுகளாக அது மூடிக் கிடக்கிறது. அதனை தனியார் யாராவது கையகப்படுத்தியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. அதை எடுத்து, அண்ணா சாலையில் உருவாக்கப் பட்டிருப்பதைப்போன்று ஒரு அழகான கட்டிடமாக உருவாக்கினால் அதிகமான வாடகை பெறலாம். அது கல்வி வளர்ச்சிக்குப் பயன்படும். ஆகவே, அதை கையகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தாராளமான ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறார்கள். அதாவது 99 ஆண்டுகளுக்கு குறைந்த வாடகைக்கு அறக் கட்டளைக்குச் சொந்தமான இடத்தை விட்டிருக்கிறார்கள். இப்படி விடலாமா? அதனால் என்ன இலாபம் என்று கேட்கிறேன். இந்த உயிலைப் படித்தவர்கள், அறக்கட்டளையின் சொத்தை ஆளுகின்றவர்கள், குறைந்த வாடகைக்குப் பெற்றிருந்தாலும், செம்மையான வாடகை கட்ட அவர்களாக முன்வந்தால் இந்த அரசும், சட்டமன்ற உறுப்பினர்களும்





பாராட்டுவார்கள். இந்த ஒப்பந்தத்தின் மூலம் 15 ஆண்டு, 20 ஆண்டு, 25 ஆண்டு, 30 ஆண்டு காலம் உரிமை தந்திருக்கிற நிலங்களை எல்லாம் கையகப்படுத்த வேண்டும். இந்த அறக் கட்டளையினுடைய பொறுப்புக் கழகம் தனியாக ஒரு சட்டத்தை இதற்காக உருவாக்கினால் கூட சிறப்பாக இருக்கும்.

மேலும், இந்த அறக்கட்டளையினுடைய சொத்துக்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அந்த இடங்களிலே எல்லாம் செம்மையாகக் கட்டிடங்கள் கட்டி, சிறப்பான கட்டிடங்களை உருவாக்கி, அதிகமான வாடகை பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக, சென்னையின் மையமாக இருக்கிற—ஹார்ட் ஆப் தி சிட்டி—இடங்களை எல்லாம் குறைந்த வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 1967 லேயிருந்து 1975 வரையில் இருந்த வாடகை மீண்டும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இருந்தாலும் வாடகை உயர்வு அதிகம் ஒன்றும் இல்லை. இடையிலே தவறு நடந்திருக்கிறது என்ற உணர்வு இருக்கிறது. இந்தப் பொறுப்புக் கழகம் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட பிறகு 'நாங்கள் அதிகமாக வாடகையை உயர்த்தியிருக்கிறோம்' என்று சொல்கிறார்கள். இதுவும் குறைந்த வாடகைதான் என்று நான் கருதுகிறேன். ஏலத்தின் மூலமாக விடுவதாக இருந்தால் அல்லது வேறு வழிகளிலே அதிக வாடகைக்கு விடுவதாக இருந்தால் வாடகை அதிகமாகப் பெற வாய்ப்பு ஏற்படும்.

மேலும், இந்த பச்சையப்பன் அறக் கட்டளையினுடைய பொறுப்புக் கழகத்தில் அதிகாரிகளாக இருக்கிறவர்கள் கூடுதல் பொறுப்பாகத்தான் இதிலே இருக்கிறார்கள். கூடுதல் பொறுப்பு வகிக்கின்ற அதிகாரிகளாக இருந்தால் அவர்களால் நிர்வாகத்தைச் சரியாக கவனிக்க முடியாது. இந்த அறக்தட்டளையின் சொத்துக்கள், பொறுப்புகள் காஞ்சி முதல் காசி வரையில் பரந்து கிடக்கின்றன. திருக்கோயில்கள், கல்விக்கூடங்கள், தொழில் கூடங்கள் என்ற முறையிலே பொறுப்புகள் பரந்து இருக்கின்றன. கடைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, தனியாக, 24 மணி நேரமும் அதனுடைய ஒழுக்கத் தன்மையை நேர்மைத் தன்மையை உருவாக்குகின்ற அதிகாரிகளைப் போட வேண்டும்.

பச்சையப்பன் அறக் கட்டளையை தேர்தல் மூலம் வருகின்றவர்கள் நிர்வகிக்க வேண்டுமென்று தமிழகத்தின் தலைமை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

அந்த உணர்வின் மூலமாக ஒரு நல்ல தேர்தலைச் சந்தித்து, அதன்படி அறக்கட்டளை நிர்வாகத்தில் தேர்தல் மூலமாக வரும் உறுப்பினர்களை நியமிக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மேனேஜ்மென்ட் கோட்டா என்று, அதாவது பச்சையப்பன்

அறக்கட்டளைக்குச் சொந்தமான கல்லூரிகளில் மாணவர்களை சேர்க்கின்றபோதும், தொழில் கூடங்களில் சேர்க்கின்றபோதும் அதிலே மேனேஜ்மென்ட் கோட்டா என்று வழங்கி இருக்கிறார்கள். அதைக்கூட அந்த பொறுப்புக் கழகம் தனக்கு வேண்டாம் என்று சொல்லி அங்கே பணியாற்றி ஓய்வுபெற்றவர்களைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்காகக் கொடுத்திருப்பதாகச் செய்திகள் தருகிறார்கள். அதிலே கூட சில தவறுகள் நிகழ்கின்றன என்று, நான் சட்ட மன்ற காங்கிரஸ் கட்சியின் செயலாளர் என்ற முறையில் எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தவறுகள் நிகழாவண்ணம் தகுதியின் அடிப்படையில் அட்மிஷன் செய்ய வேண்டுமென்று நான் நினைவுபடுத்துகிறேன்.

அடுத்து பொறுப்புக் கழகத்தை நாம் ஏற்றுக்கொண்ட பிறகு, நம்முடைய நிதியுதவியைப் பெற முடியாமல் இருக்கின்ற செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சி, கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை போன்றவற்றைப் பார்க்கின்றபோது மிக வருத்தமாக இருக்கிறது. இப்படி பெண்கள் கல்லூரிகள் நிதியுதவி பெற முடியாத நிலைமையில் இருக்கின்றன. இது முறையா ? இதனை மாற்றியமைக்க வேண்டும். பெண் என்றால் பேயும் இரங்கும் என்று சொல்வார்கள். மகளிருக்காக நீங்கள் கருணை காட்டுங்கள்.

நம்முடைய பல்கலைக் கழகங்களில் முன்பிருந்த அறங்காவலர்கள் மானியங்களைச் சூறையாடியதற்குப் பிறகு நம்முடைய அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு குறிப்பாக தமிழகத்தின் தலைமை அமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு செம்மையாகச் செயல்படுகிற இந்தச் சூழ்நிலையில் இந்தத் தேர்தலை உடனடியாக சந்திக்க வேண்டும். மேலும் பொறுப்புக் கழகம் வாடகையை நிர்ணயிக்கிற போது ஒருசிலருக்கு 106 விழுக்காடு என்றும், ஒரு சிலருக்கு 49 விழுக்காடு என்றும், ஒரு சிலருக்கு 200 விழுக்காடு என்றும் மாறுபாடாக வைத்திருக்கிறீர்கள். ஏற்றினால் ஒரேமாதியாக ஏற்றுங்கள். இந்த விழுக்காட்டில் மாறுபாடு இருக்கக்கூடாது. இடம் காரணமாக இந்த மாறுபாடு என்று நீங்கள் எண்ணுவீர்கள். இல்லை, இல்லை. ஒரே இடத்தில் இந்த மாறுபாடுகள் இருக்கின்றன. எனவே இந்த விழுக்காட்டைத் தயவுசெய்து குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய வணக்கத்திற்குரிய பச்சையப்பன் அவர்களின் பெயரால் உள்ள பச்சையப்பன் அறக்கட்டளையாளர்கள் ஒரு நல்ல பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை என்ன காரணங்களுக்காக இந்த நீட்டிப்பு பொறுப்புக்





கழகத்திற்குத் தரவேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் காரண விளக்கத்தில் தெளிவாக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பொறுப்புக் கழகம் இந்தப் பொறுப்பை எடுப்பதற்கு முன்னால் எத்தகைய குறைபாடுகள் அறக்கட்டளைக்கு உட்பட்டிருந்த நிறுவனங்களில் இருந்தன என்பதும், ஏன் பொறுப்புக் கழகத்தின் கட்டுப்பாடுகளில் இது வரவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதும் இந்த அவைக்குப் பல கட்டங்களில் எடுத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. பொறுப்புக் கழகம் தன்னுடைய பொறுப்பை எடுத்துக்கொண்ட பிறகு தற்போது பல்வேறு திட்டங்களுக்காக ஒவ்வொரு கல்வி நிறுவனத்திற்கும் நீட்டிக்கப்பட்டு இருப்பதைப்பற்றி இதில் விளக்கித் தரப்பட்டு இருக்கிறது.

குறிப்பாக மாணவர்களிடையே பணியாற்றுகிற ஆசிரியப் பெருந்தகைகளின் பலன் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அவர்களுக்குப் பல வசதிகளைச் செய்து தந்திருக்கின்றன. ரென்டல் இன்கம் என்பதைப் பொறுத்தவரையில் அதாவது வாடகை வருமானத்தைப் பொறுத்தவரையில் 20 இலட்சமாக இருந்தது தற்போது 32 இலட்சமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தற்போது வசூலிக்கப்படுகிற வாடகை கூட போதாது என்று சொல்லியிருக்கிறார்கள். பன்னெடுங்காலமாக தனியாருக்கு வாடகைக்கு விடப்பட்டு அவர்கள் பொறுப்பிலே அது இருக்கிற காரணத்தால் பல இடங்களில் நிலம் மட்டுமே அறக்கட்டளைக்குச் சொந்தமாக இருக்கிறது. சூப்பர்ஸ்ட்ரக்சர் அதனை வாடகைக்கு எடுத்திருக்கின்ற தனியாருக்குச் சொந்தம் என்ற நிலைமை இருக்கிறது. எனவே அவர்கள் நீதிமன்றங்களுக்கு சென்று நிலத்திற்கான வாடகையை அதிகம் உயர்த்த முடியாத நிலையை உருவாக்குவதைப்பற்றி இந்த அவைக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். வெறுமனே இருக்கின்ற நிலத்திற்கு வாடகையை ஓரளவுக்குத்தான் உயர்த்த முடியும். கட்டிடத்திற்கு வேண்டுமென்றால் கணிசமாக உயர்த்தலாம். பல இடங்களில் கட்டிடங்கள் தனியார்களால் கட்டப்பட்ட சூப்பர்ஸ்ட்ரக்சராக இருக்கிறது. ஆனால் அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான கட்டிடங்களில் கூட எடுத்த எடுப்பிலேயே வாடகையை உயர்த்துவதற்கு நீதிமன்றம் இசைவு தெரிவிக்காத நிலையில் ஓரளவுக்குத்தான், நீதிமன்றத்தின் ஆணைக்கேற்ப உயர்த்த வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படி இருந்த போதிலும் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்ற காரணத்தால் அந்த வருமானம் 32 இலட்சமாக பெருகி இருக்கிறது.

அதுமட்டும் அல்லாமல், விளக்கி இருப்பதைப் போல, அறக்கட்டளைக்கு வெளியே கடனாக இருந்த, அவுட் ஸ்டாண்டிங்காக இருந்த, 80 இலட்சம் ரூபாய் கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்து திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும்

[திரு. சி. பொன்னையன்] [1987 மார்ச் 11

அடிப்படை வசதிகளைப் பெருக்க 60 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே உயர் படிப்பிலே தரத்தை உயர்த்த வேண்டும் என்று புதிய புதிய பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும் என்று என்டோமெண்ட் மூலமாக 17 லட்சம் ரூபாயை இதுகாறும் செலவிட்டு வந்திருக்கிறது.

கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு 7 லட்சம் ரூபாயும் கந்தசாமி நாயுடு பெண்கள் கல்லூரிக்கு 6 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்து அதனுடைய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அண்ணா சாலையில் ஒரு பல மாடிக் கட்டிடத்தை 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி அதன் மூலம் வருகிற வாடகையைக் கொண்டு கல்விப் பணியில் இன்னும் சிறப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இதுபோன்று ஆக்கப் பணிகள் பலவற்றை பொறுப்புக் கழகம் மேற்கொண்டிருக்கிறது. இன்னும் செம்மையாக இந்தப் பணிகளை மேற்கொள்ள இந்த நீட்டிப்பு அவசியம் என்ற காரணத்தால் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவை இதனை ஏற்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 2/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1987 மார்ச் 11]

**(உ) கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1987.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 3/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த மசோதாவையும் சேர்த்து மூவ் பண்ணி விடுங்கள். இரண்டையும் சேர்த்து உறுப்பினர்கள் விவாதிக்கலாம்.

**(ஊ) வேளாண்மை பணி கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு*** (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 4/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

**திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு பற்றி இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தடவையும் முறையாகத் தேர்தல் நடத்தப்படாமல் தனி அதிகாரிகளை நியமிப்பதை ஜனநாயகத்திற்கே மாற்றமான ஒரு செயலாக நான் கருதுகிறேன்.

---

**1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

** 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. வி.எஸ்.டி. சம்சுல் ஆலம்] [1987 மார்ச் 11

கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது பல்வேறு துறைகளிலும் பரவி கிடக்கின்றன. அது வளர்ந்து கொண்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகள், நூற்பு ஆலைகள், கைத்தறிச் சங்கங்கள் இப்படி பல வகைகளிலேயும் வளர்ந்து வரும் ஒரு துறை அது. மேலப்பாளையம் கைத்தறி நெசவாளர் சங்கத்தில் தலைவர் இறந்து விட்டார். பல டைரக்டர்கள் இறந்துவிட்டார்கள். துணைத் தலைவர் பொறுப்பில் சங்கம் நடந்து வருகிறது என்றாலும் குறைந்த டைரக்டர்களோடு இயங்கி வரும் அச்சங்கம் முறையாக செயல்படவில்லையோ என்ற ஐயம் பொதுக் குழு உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இப்படிச் சில சங்கங்கள் போதுமான பொறுப்பாளர்கள் இல்லாமல் மாநிலத்திலே நடந்து வருவதாக ஐயப்படுகிறேன். அதேபோல்தான் தனி அதிகாரிகள் கீழ் செயல்படும் சங்கங்களும் நல்ல முறையில் செயல்படவில்லை என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது.

(பிற்பகல் 1-10)

மேலும் ஒவ்வொரு தடவையும் இப்படி சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து இதை நீடித்துக் கொண்டே போகாமல் அரசு இந்த ஆண்டே தேர்தலுக்கான தேதியைக் குறிப்பிட்டு, முறையாக தேர்தலை நடத்தி ஜனநாயக முறையைச் செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவி காலத்தை மேலும் ஓர் ஆண்டுக்காலத்திற்கு நீட்டிப்பதற்கு அனுமதி கோருகிற இந்தச் சட்டமுன்வடிவை ஜனநாயக மரபுகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அவசியத்தின் பொருட்டும், தொடர்ச்சியாக ஜனநாயக மரபுகள் சித்திரவதை செய்யப்படுவதைத் தடுப்பதற்கு குறைந்தபட்ச முயற்சியாவது எடுக்க வேண்டுமென்ற முறையிலும்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

இங்கே அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய நாவலர் அவர்கள் இத்தகைய ஒரு சட்டமுன்வடிவை முன்வைத்திருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பது தவறு என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் நீட்டிப்பதற்கான காரணங்களில் நியாயம் இருந்தால் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் இங்கே சொல்லப்பட்டிருக்கிற காரணம் நியாயமான காரணம்தானா என்பதற்கு மனச்சாட்சியை இழக்காத நிலையில் நாம் பதில் அளிக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1987 மார்ச் 11] [திரு. கே. சுப்பராயன்]

கூட்டுறவுகளுக்கான சட்டம் 1983 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு தொடர்ந்து 3½ ஆண்டுக்காலம் ஆனதற்குப் பின்னரும் என்ன சொல்லப்படுகிறது? விதிகள் இன்னமும் இயற்றப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நாவலர் அவர்கள் பதில் சொல்கிறபோது பதில் அளிக்கவேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன். அதிகாரிகளைப் பொறுத்தவரையிலும் விதிகளை வகுத்து அமைச்சரின் அனுமதிக்காக அனுப்பி, அமைச்சர் அவர்களுடைய மேசையில் அது காத்திருப்பதாகச் சொல்கிறார்கள். விதிகள் வகுத்ததற்குப் பின்னரும் கூட இன்னும் விதிகள் வகுக்கப்பட வேண்டியிருக்கிறது என்று சொல்லி, கால நீட்டிப்புக் கோருவது ஜனநாயக மரபு நமக்கு ஒரு சில வாய்ப்பைத் தந்திருக்கிறது என்ற வாய்ப்பைப் பயன்படுத்தியே மக்களுக்கு தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிற உரிமைகளைப் பறிக்க முற்படுவது தமிழ் நாட்டின் எதிர்காலத்தில் தவறான அரசியல் முன்னுதாரணமாக போய்விடும் என்பதைத்தான் கடுமையாக அழுத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே சொல்லப்படுகிற காரணம் விதிகள் வகுக்கப்படவில்லையென்றுதான். ஆனால் விதிகள் வகுக்கப்பட்டு அமைச்சரிடத்தில்தான் இருக்கின்றது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அமைச்சரிடம் இருக்கிற நேரத்தில் கையெழுத்திட்டு தேர்தலை நடத்த உத்தரவிட வேண்டிய நீங்கள் தேர்தலை நடத்துவதற்கு அச்சப்படுவது ஏன்? அதற்கு என்ன காரணமென்றுதான் தெரிவிக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒருவேளை தேர்தல் நடந்தால் பல்வேறு காரணங்கள்—என்னுடைய அரசியல் அறிவுக்கு எட்டியபடி வியாக்கியானிக்கிற வாய்ப்பு ஏற்படுகிறது. தேர்தல் நடத்துவதன் மூலம் நிர்வாகத்தில் ஆளுகிற கட்சி ஊடுருவுகிற வாய்ப்பு குறைந்துவிடுகிறது என்பதால், தனி அலுவலர்கள் இருக்கிறபோது ஆளுகிற கட்சி என்கிற தோரணையில் தங்கள் செல்வாக்கைச் செலுத்துவதற்குரிய வாய்ப்பும் வழியும் பிறக்கும் என்பதால், தனி அதிகாரிகளின் பணிக்காலத்தை தொடர்ந்து நீட்டிக்கவும், பாதுகாக்கவும் ஆளுகிற கட்சிக்கு அவசியம் ஏற்பட்டுத்தான் இதைச் செய்கிறார்கள் என்று கருதுகிறேன். அதனுடைய விளைவு என்னவாகிறது? தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் கூட்டுறவு இயக்கம் எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்டதோ, கூட்டுறவு இயக்கத்தின் மெய்யான உள்நோக்கம் எதுவோ அவற்றையே உங்கள் நடைமுறை பாழ்படுத்தி இருக்கிறது. கூட்டுறவு இயக்கம் எதற்காக தோற்றுவிக்கப்பட்டதோ அந்தத் தேவையை நிறைவு செய்துகொள்வதற்கும், கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு அது பயன்படுவதற்கும் உரிய வாய்ப்பைத் தொடர்ந்து தடுக்கிறீர்கள். இது முறையல்ல. இது சரியான முன்னுதாரணம் அல்ல. ஆகவேதான் இந்த நடைமுறையை கட்டாயம் வாபஸ் பெறவேண்டும். வாபஸ்

பெறப்பட்டு தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து கூட்டுறவு இயக்கங்களும் தேர்தலின் மூலம் தங்களுடைய பிரதிநிதிகளே நிர்வகிக்கிற, இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கிற வாய்ப்பைத் தருகிறபோதுதான் தமிழ் நாட்டின் பெரும்பகுதிகளில் பரவலாக இருந்து வருகிற ஊழலும், முறைகேடும் நிலவுவதாகச் சொல்லப்படுகிற கூட்டுறவுத் துறையில் அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையற்ற நிலையை உருவாக்குகிற வாய்ப்பு உங்களுக்கு இருக்கும். அப்படிப்பட்ட நிலை இப்போது உங்களுக்கு இருந்தும் அதனை நீங்கள் தள்ளிப்போட்டு விடவேண்டாம் என்று தான் குறிப்பாக அழுத்தி வலியுறுத்த விரும்புகிறேன். இத்தகைய நிலையைத் தொடர்ந்து நீட்டிப்பது நல்லதல்ல. பொதுவாக இன்றைக்கு நீங்கள் ஒன்றைத் தொடர்ந்து சொல்லி வருகிறீர்கள். ஒரு விருப்பு வெறுப்பற்ற அரசியல் பார்வையைக் கொண்டதாக இருப்பவர்கள் நாங்கள் என்று உங்களை நீங்களே சொல்லிக்கொள்கிறீர்கள். விருப்பு வெறுப்பற்ற அரசியல் பார்வையையும், நிர்வாக நடைமுறையையும் கொண்டதாகச் சொல்கிற இந்த ஆட்சி, விருப்பு வெறுப்பற்ற நடைமுறையை உருவாக்குவதற்கு, இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் தேர்தல்களை நடத்துவதுதான் சரியாக இருக்கும். அப்படித் தேர்தலை நடத்துவதற்கு நிச்சயமாக உங்களுடைய நடைமுறை தவறாக இருக்குமானால் தமிழ்நாட்டின் நிலை எதிர்காலத்தில் மிக மோசமாக தோற்றுவிக்கப்படக்கூடாது. அழிக்கப்பட முடியாத முன்னுதாரணமாக அது விளங்கும். அவற்றில் இருந்து உங்களை தற்காத்துக் கொள்ள, உங்களுக்கு ஏற்படுகிற களங்கத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவாவது, உங்களின் நலன் பொருட்டாவது இந்தத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன் விதிகள் வகுக்கப்பட்டும் நீங்கள் தேர்தல் நடத்தத் தயாராக இல்லை என்பது மட்டுமல்ல, இப்பொழுதாவது இந்த அண்ணா தி.மு.க. ஆட்சி தைரியத்தை இழந்துவிடவில்லை என்பது உண்மையானால், தேர்ந்தெடுக்கிற வாய்ப்பைச் சந்திக்கிற தைரியத்தை இன்னமும் இழக்கவில்லை என்பது உண்மையானால் ஒரு வருடம் கழித்து, அந்த வருடத்தில் அந்த மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று சொல்கிற அரசியல் தைரியம் இந்த ஆட்சிக்கு உண்டா என்பதை மட்டும் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, இங்கே வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கவேண்டும் என்ற சட்ட திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக பல்வேறு நேரங்களில் எதிர்த்து இருக்கின்றோம். அது தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்த தங்கபாலு இருக்கின்றபோதும் சரி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கிற பழனியாண்டி அவர்களும் சரி, மாவட்டங்கள்





தோறும் இந்தக் கூட்டுறவு சங்கங்களினுடைய தேர்தல்களை நடத்தவேண்டும் என்று போராட்டங்களையும் அறைகூவல்களையும் விடுத்தார்கள். அப்படி விடுத்ததற்குக் காரணம், நம்முடைய தோழமைக் கட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கிறது என்ற உணர்வோடு இந்த ஆட்சிக்கு ஒரு வேண்டுகோளாக அவர்கள் விடுக்கின்றபோதுகூட தேர்தலை நாங்கள் சந்திப்போம் என்று அமைச்சர் பெருமக்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் நடத்தாமல் இருக்கிறார்கள். இந்தத் தனி அலுவலர்கள் மூலமாக இந்தச் சங்கங்களை நடத்துவதால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதற்கு ஒருஉதாரணத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நெற்குன்றம் பகுதியிலே ஆண்டாள் குப்பம் என்ற ஒரு இடத்திலே உள்ள சைதை கூட்டுறவுச் சங்கத்திலே ஒரு விவசாயி 6 ஆயிரம் ரூபாய் கடன் வாங்குகிறார். 10 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு வட்டியெல்லாம் சேர்த்து, மொத்தம் 12,500 ரூபாய் கட்டவேண்டும் என்று போட்டுவிடுகிறார்கள். அவர் 10 ஆயிரம் ரூபாயை கட்டிவிடுகிறார். மீதி 2,500 ரூபாயைக் கட்டவேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள். இதன் பிறகு, மொத்தமாக பணமே கட்டாமல் இருப்பவர்கள் 6,500 ரூபாயை மட்டும், 15 பேர்கள் கட்டிவிடுகிறார்கள் ஒழுங்காக கட்டியவர் 10,000 ரூபாயை கட்டியிருக்கிறார் மீதி 2,500 ரூபாயைக் கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் ஒன்றுமே கட்டாதவர்கள், வெறும் 6,500 ரூபாயை கட்டிவிட்டு வந்துவிடுகிறார்கள் இதைப்பற்றி அந்த தனி அலுவலரைச் சந்தித்து கேட்கிற போது, அரசு இப்படித்தான் ஆணை பிறப்பித்திருக்கிறது என்று குழப்புகிறார்கள். அந்தச் சங்கங்களுக்கு நிர்வாகிகள் தேர்தல்கள் மூலமாக வந்திருந்தால், அந்தப் பகுதியினுடைய பிரதிநிதி நேராகச் சென்று, இப்படி என்ன தவறாக நடத்துகிறார்களே, அதற்கு என்ன வழி என்று சொல்வதற்கு ஒரு சுமுகமான நிலை ஏற்படும். அதற்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக தேர்தலைச் சந்திக்கின்ற துணிவைப் பெற்றாகவேண்டும். நம்முடைய அரசு துணிவாகத்தான் இருக்கிறது. அதிலே ஒன்றும் வேறுபாடு இல்லை. ஆனால் தேர்தலைச் சந்திப்பதற்கு இடையிலே, காலநீட்டிப்பு தேவை என்று சொல்வது இதுவே கடைசி என்ற உணர்வோடு அந்தத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலம் மேலும் தொடராமல், விரைவாக தேர்தலை சந்திப்பதற்கு அரசு தயாராகவேண்டும் அதற்கான தேதியை நீங்கள் அறிவிக்கவேண்டும் என்று சொல்லி, இந்த சட்டமுன்வடிவின் மீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பை உண்டாக்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

(பிற்பகல் 1–20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை இன்னும் ஓர் ஆண்டுக் காலத்திற்கு நீட்டிக்கின்ற வகையில், அதற்கு வகை செய்கின்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 11

முறையில் இங்கே சட்டத் திருத்த முன்வடிவு இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. ஆக, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்களை நடத்தியே தீரவேண்டியதினுடைய இன்றியமையாத் தன்மையை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவு இயக்கம் பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்போடும், ஆதரவோடும், பொது மக்களால் நடத்தப்பட்டு, பொதுமக்களுடைய நலன் கருதி இயங்கவேண்டும் என்ற தன்மையினுடைய அடிப்படையிலே தான் அந்த எண்ணத்தினுடைய அடிப்படையிலே தான் அரசும் தன்னுடைய பணியை ஏற்றுக்கொண்டு வருகிறது. அந்தத்தன்மையினுடைய அடிப்படையிலேதான், 1983 ஆம் ஆண்டிலே, இந்தக் கூட்டுறவு இயக்கம் செம்மையாக நடைபெறவேண்டும், சிறப்பாக நடைபெறவேண்டும், பல்வேறு மாநிலங்களில் இருக்கிற கூட்டுறவு இயக்கங்களினுடைய சட்ட திட்டங்களை எல்லாம் நன்கு உணர்ந்து, ஆராய்ந்து, அறிந்து, புரிந்து, அவற்றிற்கு ஏற்ப திருத்தப்பட்டு கொண்டு வர வேண்டும் என்று கூட்டுக்குழு அமைக்கப்பட்டு அதன் அமைப்பிலே திருத்தப்பட்ட சட்டமும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு விதிமுறைகள் வகுக்கப்படுவதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டு விதிமுறைகள் அமைக்கப்பட்டன. அந்த விதிமுறைகள் அமைக்கப்பட்டதற்குப் பிறகு சட்டத் துறையும் பார்த்து, அமைச்சரிடம் வந்து அமைச்சரிடமும் கையெழுத்து ஆகி பிறகு முதலமைச்சரிடமும் கையெழுத்து ஆனதற்குப் பிறகு அரசிதழில் அது வெளியிடப்பட வேண்டும். அதற்குப் பிறகு இந்தச் சட்டம் என்றுமுதல் அமுலுக்கு வரும் என்று நாம் அறிவிக்க வேண்டும். அதற்குப் பிறகு தேர்தலுக்கு உண்டான காலவரையறையை எல்லாம் நாம் நிர்ணயிக்க வேண்டும். அது என்னுடைய மேசையில் காத்துக் கொண்டிருக்கிறது, காத்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய மேசைக்கு எது வந்தாலும் அது காத்து இருக்காது என்பது எல்லோரும் நன்கு அறிந்த ஒன்றாகும். என்னுடைய கையெழுத்து ஆகிவிட்டது என்பதும் மாண்புமிகு முதலமைச்சருடைய கையெழுத்து ஆனதற்குப் பிறகு அது அரசிதழில் கெஜட்டில் பதிவாக வேண்டும். அது வந்ததற்குப் பிறகு அது நடைமுறைக்கு வருகிறது. சட்ட திட்டத்தின் படி அதில் உறுப்பினர்களை சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏற்கனவே இருக்கிற உறுப்பினர்களையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த சட்ட திட்டத்தின் படி பல்வேறு புது முறைகள், வகைகள் எல்லாம் வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் அவகாசம் தந்து புதிதாக உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டும். சிலபல இடங்களில் பலர் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்ற குறைபாடுகள் இருக்கின்றன. தாங்கள் உறுப்பினர்களாக சேர்வதற்கு வாய்ப்பு அளிக்காமல் பல பேர் தடுத்து வந்து இருக்கிறார்கள் என்ற குறைபாடுகளும் இருக்கின்றன. அது எல்லாம் இல்லாமல் இருக்க



1987 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேண்டும் என்றால், அதற்கு ஒரு 2 திங்கள், 3 திங்கள் அந்த அந்த சங்கங்களுக்கு ஏற்ப நாம் தர வேண்டிய அவசியம் உடையவர்களாக இருக்கிறோம். அதை எல்லாம் கணக்கிட்டுப்பார்த்து நாம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். அவற்றை எல்லாம் நாம் கணக்கிட வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 27 ஆயிரத்து சில்லரை கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு வகைகளில் அமைந்து இருக்கின்றன. அதிலே தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரையில் 7 தலைமை செயலகத் துறைகள் இந்த 27 ஆயிரத்து சில்லரை கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிட்டு வருகின்றன. அது மட்டும் அல்லாமல் 9 துறை தலைமையின் கீழ் நடைபெறுகின்றன. தலைமை செயலகத்தில் 7 துறைகள், பிறகு எட் ஆப் தி டிபார்ட்மெண்டு என்று சொல்லப்படுகிற அளவுக்கு 9 துறைகளின் கீழே 49 வகையான கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்த 49 வகையான கூட்டுறவு சங்கங்களின் கீழே 27 ஆயிரத்து சில்லரை சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவை அத்தனைக்கும் நாம் தேர்தல் நடத்த வேண்டிய தன்மைகளில் சில பல தன்மைகளை நாம் உணர வேண்டும் என்ற நிலைமைகள் வருகின்றபோது கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களுடைய கண்காணிப்பில் மட்டும் 11,675 சங்கங்கள் செயல்படுகின்றன. 1976 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமன சட்டத்தின் கீழ் 380 சங்கங்களில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பதவிக் காலம் 9–4–1987 அன்று முடிகிறது. இந்த 380 சங்கங்களுக்கு இந்த ஒரு ஆண்டு காலத்திற்கு இந்த தனி அலுவலர்கள் பதவி காலம் நீட்டிக்கப்படுகிறது. இந்த 11 ஆயிரத்து 675 சங்கங்களில், 1986 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனச் சட்டத்தின் கீழ் 4,655 கிராம விவசாய சேவை கூட்டுறவு சங்கங்களில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பதவிக் காலம் 27–3–1987 இல் இந்த திங்கள் 27 ஆம் தேதி முடிகிறது. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1961 இன் பிரிவு 72 இன் கீழ்—61 பிரிவு 72 இன் கீழ்—பல்வேறு குறைகள் காரணமாக கலைக்கப்பட்ட சங்கங்கள் மட்டும் 126 ஆகும். இந்த சங்கங்களில் தனி அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர். ஆக 11,675 சங்கங்களில் 5,161 சங்கங்களில் தனி அலுவலர்கள் பணி புரிந்து வருகிறார்கள். மீதம் உள்ள 6,514 சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களும் அல்லது நியமிக்கப்பட்ட குழுக்களும் பணியாற்றி வருகிறார்கள்.

ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள்கூட 10 ஆண்டு காலத்திற்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மாற்றப்படாமல் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறார்கள். அங்கே எல்லாம் தனி அலுவலர்கள் இருந்து வருகிறார்கள் என்பது அல்ல. ஆகவே

தொடர்ந்து 10 ஆண்டு காலமாக முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலே இருக்கிறார்கள். எதற்கு சொல்லுகிறேன் என்றால் எல்லா இடங்களிலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பது அல்ல. 10 ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதில் பெரும்பாலானவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதிலே எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையிலே 6,514 சங்கங்களில் கிட்டத்தட்ட 550 சங்கங்களில்தான் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மற்றவைகளில் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆக 10 ஆண்டுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒன்றாக 10 ஆண்டுகளுக்கு வரலாமா என்றால் அதுவும் ஜனநாயகத்திலே 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவதற்கு ஒருவருக்கு ஆக்கமும் தந்து விடுவதன் மூலம் அவர்களுக்கு பிடிப்பு ஏற்பட்டு விடுமேயானால் மற்றவர்கள் நுழைய இடம் தர மாட்டார்கள் என்பதும், ஆகவே கூட்டுறவில் எவ்வளவு கேடுபாடுகள் ஏற்படும் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். மறுக்கவில்லை. ஆக இப்படிப்பட்ட சூழ்நிலையில் கல்லூரிகள், பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், ஆகியவற்றில் கிட்டத்தட்ட 3,000, 4,000 கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ளபடியே அங்கேயிருக்கின்ற தலைமையாசிரியரோ, பிரின்சிபாலோ, மற்றவர்களோ தேர்ந்தெடுத்து வைக்கிறார்கள். அதிலே ஒன்றும் இடர்ப்பாடுகள் இல்லை. தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்களை வைத்திருக்கிறார்கள். அதிலேயும் இடர்ப்பாடுகள் இல்லை. அவர்கள் தேர்வு நடத்தி ஆங்காங்கே நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதிலே தனி அலுவலர்கள் நியமிக்கின்ற தன்மையும், மற்றவைகளும் ஏற்படவில்லை. அவர்களைப் பொறுத்து, சீராகவும், சிறப்பாகவும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன,

வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையிலும்கூட, சிலபல இடங்களில்தான் நியமனம் இருக்கிறதே தவிர, பல இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவ்ர்கள் நடத்திக் கொண்டு வருகிறார்கள். செம்மையாகவே பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. சில பல குறைபாடுகள் சில இடங்களில் இருக்கின்ற காரணத்தால், சிலபல இடங்களில் கலைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அத்தனையும் கட்டாயம் நடத்தப்பட வேண்டுமென்பதுதான் சட்டமும், என்னைப் பொறுத்த வரையிலும். ஆக சட்டமும் நிறைவேற்றப்பட்டு விட்டது, விதிமுறைகளும் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. ஆக வேறு பல மாநிலங்களிலே, 4 ஆண்டுக்காலம், 5 ஆண்டுக் காலம் தேர்தல் நடத்தாமல் இருந்து, நடத்துகின்ற முயற்சியில் மத்திய அரசும் சரி, நபார்டும் சரி, மற்றவர்களும் வற்புறுத்தி, வற்புறுத்தி அவற்றை தொடங்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த வகையிலே வேறு



பல மாநிலங்கள், மகாராஷ்டிரா, குஜராத், கேரளா போன்ற இடங்களில் எல்லாம் கூட, நிறுத்தி வைத்திருந்தாலும் கூட, நடத்த ஆரம்பித்து, ஓரளவிற்கு, கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள். ஆந்திராவிலே கூட 1972 லிருந்து கிட்டத்தட்ட 1981 ஆம் ஆண்டு வரை நடத்தாமல் இருந்து, அதற்குப் பிறகு நடத்தி மறுபடியும் 1984லே கலைத்து விட்டார்கள். எல்லாவற்றுக்கும் மறுபடி தனி அலுவலர்களைப் போட்டு விட்டார்கள். 1972 லிருந்து 1982 ஆம் ஆண்டு வரையிலும் மத்திய கூட்டுறவு வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் எல்லாம் தனி அலுவலர்கள் கீழேயிருந்து 1982 லிருந்து 1985 வரையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் வந்து, மறுபடியும் கலைத்து விட்டார்கள். ஆந்திராவிலே, மறுபடியும் அங்கே தனி அலுவலர்கள் கீழ் இருக்கின்றன. இருந்தாலும் மத்திய அரசு கூட்டுறவுத் துறையிலே அங்கே தேர்தல் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்ற நிலையில் எல்லா இடங்களிலும் கூட்டுறவு முறையில் தேர்தல் நடத்த வேண்டுமென்பதுதான்நோக்கம் கூட்டுறவுஎன்று வருகின்ற போது பொதுமக்களிடையே நல்ல உறுப்பினர்களாக அவர்களைப் பங்குதாரர்களாக சேர்த்து அரசு மானியமாகவும், கடனாகவும் உதவி செய்து, அவர்களுடைய முழு ஒத்துழைப்பின் அடிப்படையில் இப்போது பணிகள் எல்லாம் ஏற்க வேண்டுமென்ற கொள்கை வருகின்றபோது பொது மக்களுடைய ஒத்துழைப்புடனும், அவர்களுடைய பிரதிநிதித்துவத்துடனும் இந்த கூட்டுறவு இயங்க வேண்டுமென்ற கொள்கை நிறைவேறவேண்டுமென்பது தான். ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே இப்படி ஒப்படைக்கப்பட்டாலும், அவர்களைக் கண்காணிக்க, மேற் பார்வையிட, தக்க அதிகாரிகளும், மற்றவர்களும் சட்டத்திலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். தவறுகள் செய்தாலும் கூட, அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கான முறைகள் எல்லாம் இருக்கின்றன. அதையெல்லாம் நினைவிலே வைத்துக் கொண்டுதான், எவ்வளவு தூரம் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமோ, அவ்வாறு நடத்த வேண்டுமென்ற முறையில் அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு கொஞ்ச காலம் தர வேண்டும்.

அதுமட்டுமல்ல, 27,000 சங்கங்களுக்கும் ஒரே தடவையில் தேர்தலை நாம் நடத்த முடியாது. பிரிவு பிரிவாக கால வரையறை வைத்து, செக்டார் செக்டாராக நாம் நடத்த வேண்டும். அப்படி ஓராண்டு காலம் என்று நாம் கேட்டிருக்கிறோமே தவிர, தனி அலுவலர்கள் 5,000 சில்லறை போட்டிருக்கிறோமே என்றாலும் கூட, அவர்களுக்கு ஆணையிடுகின்ற போது கூட, ஒவ்வொரு ஆணையிலும், நாம் ஆணையிலே என்ன குறிப்பிடுகிறோம் என்றால், தேர்தல் ஒருகால் நடந்து முடிந்தால், அது முடிகின்ற வரையில் தான், அல்லது ஓராண்டுக் காலம், அல்லது தேர்தல் அதற்குள் நடந்து முடிந்தால் அல்லது தேர்தல் நடந்து முடிந்து, புது குழு வந்து தலைமைப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிற வரையிலும் தான்

இந்தத் தனி அலுவலர்கள் பதவி நிற்கும் என்று போட்டிருக்கிறோம். அதற்கிடையிலே நாம் தேர்தல் நடத்துகின்ற நிலைமை சிலபல சங்கங்களுக்கு ஏற்பட்டுவிடுமேயானால் அதற்கென்று நியமிக்கப்படுகின்ற அலுவலர்கள் ஓராண்டு காலம் வரையில் இருப்பார்கள் என்பது அல்ல. அதற்கு முன்னாலும் கூட எடுத்து விடக் கூடும். இது ஒன்றைத்தான் டிபார்ட்மெண்ட் என்று சொல்லாமல், துறை என்று சொல்லாமல், :மூவ்மெண்ட்' என்று சொல்கிறோம். கோ-ஆப்பரேடிவ் மூவ்மெண்ட் என்று சொல்வதற்குக் காரணம், பொது மக்களுடைய ஒத்துழைப்பு, ஆதரவு வேண்டுமென்பது தான், அதன் நோக்கம். இந்த நோக்கம் பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்புடனும், ஆதரவுடனும், நடைபெற வேண்டுமென்பது தான். அந்த நோக்கத்தினுடைய அடிப்படையிலே சட்டத்தையும், எல்லா கட்சி உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுக் குழுவினுடைய ஆலோசனையின் பேரில் தான் உருவாக்கியிருக்கிறோம். அதனுடைய அடிப்படையிலே விதிமுறைகளும் வகுக்கபட்டிருக்கின்றன.

(பிற்பகல் 1-30)

அந்த அடிப்படையிலே நாம் அறிவித்துவிட்டு எல்லோருடைய ஒத்துழைப்போடும் இந்தத் தேர்தல்கள் சுமுகமாக நல்ல முறையில் நடைபெற வேண்டும். அதற்கான காலவரையறையும் ஓரளவிற்குத் தரவேண்டும். அதற்கெல்லாம் நாம் அந்தந்தத் துறைகள், அந்தந்த இலாக்காக்கள்—நான் முதலிலேயே சொன்னபடி தலைமைச் செயலகத்தை பொறுத்தவரை 9 துறைகள் இருக்கின்றன—49 வகையான கூட்டுறவு வகைகள் அல்லது 27,000 சங்கங்கள் எல்லாவற்றையும் ஒன்றுபடுத்திக்கொண்டு வருகின்றபோது முறைப்படுத்துவதற்கு காலண்டர் டேட் போடுவதில் கொஞ்சம் கால அவகாசம் வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை வந்து வந்து இந்த அவையிலே நான் கேட்பதைவிட ஓராண்டு காலமாக கேட்டுவிடுவது நல்லது என்று சொல்லி—அடிக்கடி உங்களுக்கும் தொல்லை கொடுக்க வேண்டாம், நானும் தொல்லைப்பட வேண்டாம்—ஓராண்டு கேட்டிருக்கிறோமே தவிர் ஓராண்டு காலம் நீடிக்கும் என்று அல்ல. அதற்கிடையிலே தேர்தல் நடத்தி முடிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால் கூட்டுறவுத்துறைக்கும் நல்லது. மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய உணர்வுகளுக்கும் நாங்கள் மதிப்பு அளிக்கிறோம் என்கின்ற வகையில் இந்தச்சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அத்தனை பேர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1987) நிறைவேற்றப் பெறவேண்டும் ."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன..

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1987 மார்ச் 11

8. அரசினர் தீர்மானம்

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவை விதி 25 (1)-ன் கீழ், பேரவை இன்று ஒத்தி வைக்கப்பெற்று மீண்டும் 20—3—1987 ஆம் தேதியன்று காலை 10-00 மணிக்குக் கூடும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20—3—1987-ம் தேதி காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

31. கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு விதிக்கக்கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 10—12—1986 ஆம் நாளிட்ட 1259 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959] 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

32. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

33. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 1982—83-ம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).



1987 மார்ச் 11]

34. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

35. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1985—86 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

36. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் 1985—86 ஆம் ஆண்டிற்கான இருபத்தொன்றாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

37. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1985—86 ஆம் ஆண்டிற்கான முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. (1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

15. பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் குறித்த தமிழ்நாடு அரசின் 1963—64 முதல் 1965—66 வரை மற்றும் 1969—70 முதல் 1971—72 வரையிலான ஆண்டு கணக்குகள் மீதான குழுவின் எட்டாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் அதற்கு முந்தைய அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்திரெண்டாவது அறிக்கை. (தமிழ்).

16. 1981—82 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும், சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (தமிழ்).

17. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1987) இணைப்புடன்.

18. 1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1987) இணைப்புடன்.

19. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

ஆவணக்காப்பக ... சென்னை-600 008
136505

V211,31 N87
N87.38-3

ரு

Y211.31 N87

N87.33-3 f-4

136505
சென்னை-600 008.


உள்ளடக்கம்.

10-3-1987


பக்கங்கள்.

1. அறிவிப்பு—

'தினகரன்' மற்றும் 'மாலை முரசு' நாளிதழ்கள் பேரவைக் கூட்டம் குறித்துத் தவறான செய்திகள் வெளியிட்டதற்குக் கண்டனம். 313—314

2. கவன ஈர்ப்பு—

(அ) திருமங்கலம் தொகுதியிலுள்ள ''அக்கார் கெமிக்கல்ஸ்'' தொழிற்சாலைக் கழிவு நீரால் பாதிப்பு. 314—317

(ஆ) சேலம் மாவட்ட பனை வெல்ல சம்மேளனம் கருப்புக்கட்டி கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து. 317—320

3. அறிக்கைகள் அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு .. .. 320—321

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987. 321—324

(ஆ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987. 324—325

(இ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன் வடிவு, 1987. 325—326

5. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. கி. மனோகரன் .. .. .. 326—337

திரு. என். எஸ். வி. சித்தன் .. .. 337—368

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 368—405

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 405—406


டி2 எ 5—1

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மார்ச் 10, செவ்வாய்க்கிழமை.

மாசி 26, அட்சய— திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.''

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்.

## 1. அறிவிப்பு.

'தினகரன்' மற்றும் 'மாலை முரசு' நாளிதழ்கள் பேரவைக் கூட்டம் குறித்துத் தவறான செய்திகள் வெளியிட்டதற்குக் கண்டனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மற்றும் சேலம் 7–3–1987 தேதியிட்ட 'தினகரன்' நாளிதழில் ''முதல்வர் நான்கு நாள் சுற்றுப்பயணம்; 12 மந்திரிகள் கூண்டோடு சேலம் படை எடுப்பு'', ''எம்.ஜி.ஆருக்கு ஆள் திரட்ட சட்டசபை திடீர் ஒத்திவைப்பு'' என்று தலைப்புகள் கொடுத்து செய்திகள் நாளிதழ்களின் முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இதே பொருள் பற்றிய செய்தி சேலம் 7–3–1987 தேதியிட்ட 'மாலை முரசு' நாளிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டப் பேரவைக் கூட்டம் 7, 8 மற்றும் 9–3–1987 ஆகிய நாட்களில் இல்லை என்று அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களால் முடிவு செய்யப்பட்டு, அவைக்கு அறிவிக்கப்பட்டதாகும். அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லா சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, அந்த அறிவிப்புக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலும், உள்நோக்கத்துடனும் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத் தான் பேரவைக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று

அனுமானித்து செய்தி வெளியிடுவது முறையல்ல. இவ்விதமாக அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு உள்நோக்கம் காட்டி, களங்கம் கற்பித்துச் செய்தி வெளியிடுவது, பேரவையின் நடவடிக்கைகளுக்குக் களங்கம் கற்பிப்பதாகவும், அவை நடவடிக்கையைத் திரித்து வெளியிடுவதாகவும் அமைவது மட்டுமின்றி, பேரவையின் உரிமை மீறிய செயலுமாகும்.

எனவே, பேரவை நடவடிக்கைகளுக்கு உள்நோக்கம் கற்பித்து செய்திகள் வெளியிடுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

எனது இந்த அறிவிப்பையும், 'தினகரன்' மற்றும் 'மாலை முரசு' பத்திரிகைகள் அவற்றின் முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்து, ஒருவார காலத்திற்குள் ஏற்கனவே செய்தி வெளியிட்ட அந்த அளவில் பிரசுரிக்க வேண்டுமென்று ஆணையிடுயிடுகிறேன்.

## 2. கவன ஈர்ப்பு.

### (அ) திருமங்கலம் தொகுதியிலுள்ள ''அக்கார் கெமிக்கல்ஸ்'' தொழிற்சாலைக் கழிவு நீரால் பாதிப்பு.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, ''திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கூத்தியார்குண்டு அருகில் உள்ள 'அக்கார் கெமிக்கல்ஸ்' தொழிற்சாலையிலிருந்து பெருமளவு வெளிவரும் கழிவு நீர், கழிவுக் காற்றால் சுகாதாரமும், விளை நிலங்கள் பாதிப்பினால் அந்தப் பகுதியில் வாழும் மக்களின் பாதிப்பும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்கா, தோப்பூர் கிராமத்தில் திருவாளர்கள் அக்கார் கெமிக்கல்ஸ் நிறுவனம் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 35 மெட்ரிக் டன் எடையுள்ள சுத்தம் செய்யப்பட்ட தார் மற்றும் திடதார், 200 மெட்ரிக் டன் எடையுள்ள சைனா களிமண், சோப்பு, கல் தூள், சிலிகா தூள், சுண்ணாம்புத் தூள், மஞ்சள் காவி முதலியவற்றையும் மற்றும் 150 மெட்ரிக் டன் எடையுள்ள ஜிப்சம் பவுடரையும் தயாரித்து வருகிறது.





தொழிற்சாலைத் தொழிலாளர் உபயோகம் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு நாளொன்றுக்கு முறையே, 2,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் நீரைப் பயன்படுத்துகிறது. தொழிற்சாலை நாளொன்றுக்கு 2,000 லிட்டர் வடிகால் கழிவு நீரையும் 8,000 லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீரையும் வெளிவிடுகிறது. தொழிற்சாலையில் ஜிப்சத்திலிருந்து மூல உப்பு மற்றும் களிமண் பொருட்களை நீக்குவதற்காக கழுவுவதால் தொழிற்சாலைக் கழிவுநீர் உண்டாகிறது. தொழிற்சாலை 1985 மார்ச் திங்கள் வரை மூல ஜிப்சத்தை பயன்படுத்தி பின்பு கழுவப்பட்ட ஜிப்சத்தை நேரிடையாக வாங்கி தொழிற்சாலைக் கழிவுநிர் வெளியேற்றத்தைத் தவிர்க்க ஆரம்பித்தது. நச்சுத்தடை தொட்டி மூலம் வடிகால் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. தொழிற்சாலை தனது சொந்த நிலத்தில் திட தாரைத் தேக்கிவைத்து படிப்படியாக செயல்முறையில் பயன்படுத்தி விடுகிறது.

மூலத் தாரானது எரி பாத்திரத்துக்கு எடுத்துச் செல்லப்படுமுன்பு எரியூட்டி ஆவி திரவமாக்கப்படுகிறது. வடிகட்டப்பட்ட தாரானது நனைந்த தூளால் மேலும் சுத்திகரிப்பு செய்யப்பட்டு அதன் ஒட்டும் தன்மை மேம்படுத்தப்படுகிறது. இறுதியில் பெறப்பட்ட தாரானது வடிகட்டப்பட்டு கொள்கலத்தில் அடைக்கப்படுகிறது.

கழுவப்பட்ட ஜிப்சம் சூரிய வெப்பத்தில் உலர வைக்கப்பட்டு சலிக்கப்பட்டு தேவையற்ற பகுதிகள் நீக்கப்படுகின்றன. பின்னர் ஜிப்சம் 200 வலைகள் அளவிலான மாவினை பெறுவதற்குத் தூளாக்கப்படுகின்றது. தூளாக்கும் பகுதியில் ஏற்படும் காற்று மாசினைக் கட்டுப்படுத்த காற்றோட்டமியக்கும் பொறிசுழல் தடுப்பான் மற்றும் பை வடிப்பான் ஆகியவை உள்ளன. தாரை உருக்கும்போதும், சுண்ணாம்பு கால்வாயிலிருந்து வாயுக் கழிவுகள் வெளி வருகின்றன. தாரை உருக்குவதற்கு உலைக் கலத்தினால் மூடப்பட்ட தனித்தனியான 3 அடுப்புகள் உள்ளன. உலைக் கலத்தின் புகை போக்கிகள் 162 மில்லி மீட்டர் விட்டமும் தரையிலிருந்து 15 மீட்டர் உயரமும் உள்ளன.

இத்தொழிற்சாலையினை 3-3—1987 அன்று ஆய்வு செய்த போது தொழிற்சாலை கழிவு நீரினை வெளியேற்றவில்லை என்பது கண்டறியப்பட்டது.

இத்தொழிற்சாலை 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்கீழ் வடிகால்/தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியிடவும் மற்றும் 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 21-வது பிரிவின்படி காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் தொழிற்சாலை இயக்குவதற்கும் வாரியத்தின் ஒப்புதல் கேட்டு விண்ணப்பித்துள்ளது. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும்

கட்டுப்பாடு) சட்டத்தின்படி 5–3–1984-ல் ஒப்புதல் வழங்கி 4–3–1987 வரையில் ஒப்புதல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி 25–8–1985-ல் ஒப்புதல் வழங்கி 25–8–1987 வரையில் ஒப்புதல் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

சுண்ணாம்பு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இத்தொழிற்சாலை 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் சராக் தொழிற்சாலை என்ற பெயரில் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் தொழிற்சாலையினை இயக்க வாரியத்திற்கு விண்ணப்பித்துள்ளது. வாரியம் தொழிற்சாலைக்கு ஒப்புதலை வழங்கவில்லை. ஒப்புதலை வழங்கும் போது, தொழிற்சாலையினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வரைமுறைகளையும் நிர்ணயித்து தொழிற்சாலை முழுமையாக அவற்றைச் செயற்படுத்தும் முன்னேற்றத்தையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இந்த அக்கார் கெமிக்கல்ஸ் நிறுவனம் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்து உள்ளது. காலிக்கல், பீங்கான், பேக்லைட், பிளாஸ்டர் ஆப் பாரீஸ் முதலியவற்றிலிருந்து கடல் சிப்பிகளை வேகவைத்து சுண்ணாம்பு தயார் செய்கிறார்கள். தார் பிளாண்டுகளில் தாரைக் காய வைத்து அதன் கழிவையும் காற்றில் திறந்து விடுகிறார்கள். கடல் உப்பைக் காய்ச்சி அதன் கழிவையும் வெளி நிலங்களில் திறந்து விடுகிறார்கள். இந்தக் காற்றை சுவாசிப்பதாலே ஊரிலே உள்ள மக்களின் சுகாதாரம் கெட்டு அவர்களுக்கு டி.பி., காலரா போன்ற நோய்கள் வந்திருக்கின்றன. இந்த அறிக்கையில் நம்முடைய அரசுத் துறை அதிகாரிகள் கொடுத்த விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்குக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, கழிவுநீர் வெளியிடப்படவில்லையென்று சொல்கிறார்கள். அது உண்மையல்ல. பலஆண்டுகளாகக் கழிவுநீர் வெளியிடப்பட்டு வருகின்றது. நான் இன்னமும் சொல்வேன், அந்தக் கழிவுநீர் நேராக கண்மாய்க்குப் போவதால், அதிலிருக்கும் மீன்கள் எல்லாம் இறந்து போகிற நிலைமையிருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் வாழ்கின்ற மூன்று, நான்கு ஊர்களைச் சார்ந்த மக்களுடைய சுகாதாரமும், விளை நிலங்களின் விளைச்சலும் பாழாகின்ற காரணத்தால் இதற்கு அவசர நடவடிக்கையெடுக்க அரசு முன் வருமா என்று நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே இப்படிச் சுகாதாரக் கேடு ஏற்படுகிறதோ அங்கேயெல்லாம் அரசு கடுமையான நடவடிக்கையெடுக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



அந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டபோதே, கழிவு நீர் எதையும் வெளியிடக் கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், நிபந்தனை மீறப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதை உடனடியாக ஆராய்ந்து அப்படி நிபந்தனை மீறப்பட்டிருந்தால், சட்டப்படி அவர்கள் மீது வழக்கு தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பற்றி, இந்தத் தொழிற்சாலையிலிருந்து வருகிற கழிவு நீர், நச்சுக் காற்று பற்றி, அந்த ஊரிலே இருக்கிற எல்லாக் கட்சி நண்பர்களும், ஊரிலுள்ள முக்கியஸ்தர்களும் எல்லோருக்கும் கடிதம் எழுதி இன்றைக்கு மனமுடைந்த நிலையில் இருக்கிறார்கள். இந்தக் குறிப்பிலேகூட ஒரு இடத்திலே, ''சுண்ணாம்பு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இத்தொழிற்சாலை 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் சராக் தொழிற்சாலை என்ற பெயரில் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் தொழிற்சாலையினை இயக்க வாரியத்திற்கு விண்ணப்பித்துள்ளது; வாரியம் தொழிற்சாலைக்கு ஒப்புதலை வழங்கவில்லை'' என்று சொல்லியிருக்கிறார்கள், ஆகையினாலே, இந்தத் துறையிலே கடுமையான நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களைக் காப்பாற்றுவார்களா என நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையில் பலவிதமான பொருள்கள் உற்பத்தியாகின்றன. சுண்ணாம்பு உற்பத்தியைப் பொறுத்தவரையில், அரசு அனுமதி அளிக்கவில்லை என்றுதான் அதிலே கூறப்பட்டு இருக்கிறது. தங்கள் மூலமாக இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புவது, அப்படி ஏதேனும் சுகாதாரக் கேடுகள் ஏற்படக் கூடிய வாய்ப்பிருந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ) சேலம் மாவட்ட பனை வெல்ல சம்மேளனம் கருப்புக்கட்டி கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து.**

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்ட பனை வெல்ல சம்மேளனம் (Federation) பனை வெல்ல வியாபாரத்தை நிறுத்தி விட்டதால் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்தும், அதன் காரணமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான பனைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்

குறித்தும் '' உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு சமூக நலத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

சேலம் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் கீழ் 189 ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இவற்றில் 50,125 உறுப்பினர்கள் உள்ளனர். ஆரம்பச் சங்கங்களிடம் பனை வெல்லத்தை நேரடியாக வாங்கி, உறுப்பினர்களுக்கு அதற்குரிய நியாயமான விலை அளிப்பது மாவட்ட சம்மேளனத்தின் முக்கிய பணியாகும். சென்ற ஆண்டு இச்சம்மேளனம் உறுப்பினர்களிடமிருந்து சுமார் 200 டன் கருப்புக் கட்டி கொள்முதல் செய்து, அவை அனைத்தையும் விற்பனை செய்துள்ளது. சென்ற ஆண்டு கருப்புக் கட்டியின் விலை கிலோ ரூ. 3.80 முதல் ரூ 4.50 வரை இருந்தது. இந்த விற்பனையில் சேலம் மாவட்ட சம்மேளனத்திற்கு சுமார் 50,000 ரூபாய் வரை இலாபம் கிடைத்துளளது. சேலம் மாவட்டத்தில் கருப்புக் கட்டி தயாரிக்கும் பருவகாலம் பிப்ரவரி மாதத்தில்தான் ஆரம்பமாகி உள்ளது. அதற்கிணங்க மாவட்ட சம்மேளனமும் கருப்புக் கட்டி கொள்முதல் செய்யத் துவங்கி உள்ளது. நடப்பு பருவ காலத்தில் 12,000 கிலோ கருப்புக்கட்டி வாங்கி முடிக்கப்பட்டது. இந்தக் கொள்முதல் தொடர்ந்து ஜூன் மாதம் வரை நடைபெறும். 1—1—1987 முதல் மதுவிலக்கு அமுல் செய்ததால் வேலை இழந்த கள் இறக்கும் தொழிலாளர்களும், கருப்புக்கட்டி உற்பத்தியில் ஈடுபட முற்படுவர். இதனைக் கருத்தில் கொண்டு, அரசு, இவர்களுக்கு ரூ 2,000-ஐ நிவாரணமாக அளித்துள்ளது. ஆகையால் இந்தப் பருவ காலத்தில் கருப்புக் கட்டி உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு 500 டன் வரை கொள்முதல் செய்ய சேலம் மாவட்ட பனை வெல்ல சம்மேளனம் குறியீடு நிர்ணயித்துள்ளது. அனைத்தினையும் கொள்முதல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. எனவே, சேலம் மாவட்டப் பனை வெல்ல சம்மேளனம் பனை வெல்ல வியாபாரத்தை நிறுத்தவில்லை. தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளது.

***திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே கண்டுள்ள விவரப்படி சம்மேளனம் பனை வெல்ல வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தாலும், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வரவேண்டிய கடன் மாவட்ட சம்மேளனத்திற்கு முறையாகப் போய்ச் சேராததால், அவர்கள் மாநில சம்மேளனத்திடமிருந்து அதிகமான உதவியைப் பெற முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அப்படி விதிமுறைகளின்படி அந்தப் பணத்தைப் பெறமுடியாத நிலையில், மீண்டும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட சம்மேளனம் பண உதவி செய்தும், பனை வெல்லம் கொள்முதல் செய்வதில் சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. இதை நான் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம், சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்த வியாபாரம் நிறுத்தப்படவில்லை என்று சொன்னாலும், பண வசதி இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே, அந்த விதிமுறைகளைத் தளர்த்தியாவது மாநில சம்மேளனம், அப்படிக் கடன் பாக்கியிருந்தாலும் மாவட்ட சம்மேளனத்திற்குப் பண உதவி செய்கிற ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு பனை வெல்லக் கருப்பட்டி, 200 டன் நம்முடைய மாவட்ட சம்மேளனத்தினால் வாங்கப்பட்டு, அதை விற்பனை செய்ததில், 50 ஆயிரம் ரூபாய் மாவட்ட சம்மேளனத்திற்குக் கிடைத்து இருக்கிறது. நீங்கள் சொல்வதைப் போல் எந்தவிதமான பணத் தட்டுப்பாடும் தற்போது மாவட்ட சம்மேளனத்தில் இல்லை. நான் கடந்த வாரம் சேலம் சென்றபோதுகூட, அந்த 189 ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசியுள்ளேன். மாவட்ட சம்மேளனத்தோடும் கலந்து பேசியிருக்கிறேன். மாவட்ட சம்மேளனம் தேவைப்படுகிறபோது, மாநில சம்மேளனத்திடமிருந்து பொருள் உதவியைப் பெறுவதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன, ஆகவே, தற்போது அத்தகைய நிலைமை மாவட்ட சம்மேளனத்திற்கு ஏற்படவில்லை.

***திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-1-1987 முதல் கள்ளுக் கடைகள் மூடப்பட்டிருப்பதால், கள் இறக்கும் தொழிலாளர்கள் அந்தத் தொழிலிலே இனிமேல் ஈடுபட முடியாத நிலைமையில், அவர்கள் பதநீர் இறக்குகின்ற தொழிலில்தான் இனிமேல் ஈடுபட வேண்டியதாக இருக்கும். இப்போது இருக்கிற நிலைமையிலே உற்பத்தி அதிகமாக இருக்கும். எனவே, கொடுக்கப்பட்டு வந்த இந்தத் தொகை போதாது என்று நான் கருதுகிறேன். காரணம் கள் இறக்குவதிலே ஈடுபட்டு இருந்த தொழிலாளர்கள் இந்த ஆண்டிலேயிருந்து பதநீர், பனை வெல்ல உற்பத்தித் தொழிலில் ஈடுபட விருப்பதால், உற்பத்தி அதிகமாக இருக்கும். எனவே, இதைக் கொள்முதல் செய்வதற்கும், பனை வெல்லத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கும், எந்தெந்த வகையிலே அரசாங்கம் நேரடியாக முயற்சிகளை எடுத்திருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கை அமுல்படுத்தியதால், தொழில் வாய்ப்பு இழந்த பனைமரத் தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்காக தமிழக முதல்வர் தாராள உள்ளத்தோடு 2 ஆயிரம் ரூபாய் வழங்கி இருக்கிறார்கள். அதில் ஆயிரம் ரூபாய் இனாமாகவும், ஆயிரம் ரூபாய் கடனாகவும் வழங்கப் பட்டு இருக்கிறது. அது மட்டும் அல்லாமல், அவர்களுக்கு எந்த, எந்த விதத்தில் அரசு உதவ முடியும், எவ்வளவு தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் அந்தந்த மாவட் டத்திலுள்ள நம்முடைய பனைவெல்ல நிர்வாகத்தின் மூலமாகவும், அதைப் போலவே நம்முடைய ஆயத்தீர்வைத் துறையைச் சார்ந்த அலுவலர்களைக் கொண்டும் ஓர் ஆய்வு நடத்தப்பட்டு அந்த ஆய்வின் மூலமாக எவ்வளவு பேர் அந்தத் தொழிலை நம்பியிருக் கிறார்கள், எவ்வளவு தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற கணக்கு சென்ற வாரம் எடுத்து முடிக்கப் பட்டு இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் உதவுவதற்கு வாய்ப்புக் கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அது மட்டும் அல்லாமல் வருகின்ற நிதி ஆண்டில்—சாதாரணமாக பிப்ரவரி மாதத்தில் தான் இந்தப் பனை வெல்ல உற்பத்தி செய்கிற பணிகள் துவங்கும், ஆகவே அந்தப் பணி இப்போது துவங்கி இருக்கிறகாரணத்தால்— இந்த நிதி ஆண்டில் சுமார் 500 டன் பனை வெல்லம், கருப் பட்டியை வாங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மட்டு மின்றி, தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலேயும் இப்படிப் பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

(முற்பகல் 10-10)

3. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்:

1. தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 1977-78, 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை.

2. 1976-77 முதல் 1979-80 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை.



3. தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1969-70 முதல் 1975-76 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை.

4. 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங் கள் குழு (1977-79) அளித்த ஆறாவது அறிக்கையில் கண் டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987ஆம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் நாங்கள் எதிர்க்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I oppose the Bill at the Introduction stage itself. கூட்டுறவுச் சங்கங்களுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே போகிற சட்டம் ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக வருகிறது. Comprehensive Legislation— பொதுவான ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி 10 வருடம் ஆகிவிட்டது. இப்போது ரூல்ஸ் கொண்டுவர வேண்டும் என்றால் அதற்கு எவ்வளவு காலம், 20 வருடம் ஆகுமோ என்னவோ தெரியவில்லை. அந்தக் காரணத்தைச் சொல்லி தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்படுகிறது.

இன்னும் சொல்லப்போனால் 1976 ஆம் ஆண்டு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்த ஜனநாயக அமைப்புகள் எல்லாம் கலைக்கப்பட்டு தனி அதிகாரிகள் போடப்பட்டு இருக்கிறார்கள். சட்டத்தைக் கொண்டு வருவதற்கு 10 வருடம், ரூல்ஸ் கொண்டு

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மார்ச் 10

வருவதற்கு இன்னும் 10, 20 வருடங்கள் என்று சொன்னால் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல் தனி அதிகாரிகளுடைய தர்பார் நடக்கிறது, தவறுகளுக்கு வழி வகுக்கிறது. ஆகவே நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதைக் கடுமையாக எதிர்க்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிப்பது என்பது கூட்டுறவுத் துறைக்கே நல்லதல்ல. ஆகவே, அமைச்சர் அவர்கள் மாறி மாறி வாக்குறுதி கொடுத்தாலும் அந்தத் தேர்தலைக் காலம் கடத்திப் போவது என்பது கூட்டுறவுத் துறையையே இன்றைக்குச் சீர்குலைக்கிற நிலைக்கு உள்ளாக்கு கிறது. எனவே, 1987ஆம் ஆண்டு ஏப்ரல் 9-ஆம் தேதிக்கு மேலே, மேலும் ஓராண்டு நீட்டிப்பது என்பதை மேலும் கடுமை யாக ஆட்சேபிக்கிறோம். ஆகவே, இந்தத் தேர்தலை இந்த ஆண்டே நடத்துவோம் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்பத்திலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்களுடைய தனி அலுவலர்கள் நியமனத்தை மேலும் ஓராண்டு நீட்டிப்பதற்குக் கொண்டு வந் திருக்கின்ற சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க் கின்றேன். சென்ற ஆண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது இந்த ஆண்டுக்குள்ளாகக் கண்டிப்பாக நடத்து வோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை அரசு நிலை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அலுவலர்கள் நியமனம் சம்பந்தப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே கடுமையாக எதிர்க்கிறேன். இதை சபை நிராகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், தனி அலுவலர் களுடைய பதவிக்காலம் 11 ஆண்டுகள் 10 மாதங்கள் வரை நீடிக்கப்படும் என்று சட்ட முன்வடிவிலே சொல்லப்படுகிறது. முன்னாலே 10 ஆண்டுகள் 10 மாதம் என்று சொல்லப்பட்டது. இப்படி ஒவ்வொரு ஆண்டாகச் சொல்லிச் சொல்லி, இப்பொழுது 11 ஆண்டுகள் 10 மாதங்கள் வரை நீடிப்பு என்று சொல் கிறார்கள். இந்துக்கள் சொல்வார்கள், மனிதனை 7 ஆண்டுகள் தான் சனியன் பிடிக்கும் என்று. ஆனால் கூட்டுறவுத் துறையில் சனியன் பிடித்து 11 ஆண்டுகள் 10 மாதங்கள் ஆகிறது. எப் பொழுது அதற்கு விமோசனம் கிடைக்கும்? அமைச்சர்கள் மாறிக் கொண்டே இருக்கிறார்கள்; ஆனால், தனி அதிகாரிகள் மட்டும் மாறாமல் நீடித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் பல்வேறு சங்கடங்கள் ஏற்



1987 மார்ச் 10] [திரு. கோ. வீரய்யன்]

பட்டுள்ளன. திருச்செங்கோடு மார்க்கெட்டிங் சொசைட்டியிலே ஒரு கிளையிருக்கிறது. ஸ்பின்னிங் பாக்டரி உள்பட இருக்கிறது. அங்கேயிருக்கிற பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 5 தான் கொடுக் கப்படுகிறது. குறைந்தபட்ச விவசாயக் கூலிகளுக்குக் கூட ரூ. 8 கொடுக்கப்படுகிறது. ஆனால், திருச்செங்கோடு மார்க் கெட்டிங் சொசைட்டியின் ஸ்பின்னிங் பாக்டரியிலே வேலை செய்யக்கூடிய பெண் தொழிலாளர்களுக்கு, ஒரு நாளைக்கு 8 மணி நேரம், 10 மணி நேரம் வேலை செய்த பிற்பாடும் ரூ. 5 தான் கூலி கொடுக்கப்படுகிறது என்றால், போர்டுகள் இல்லாத தால்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கன்சிடரேஷனுக்கு வரும் போது அதைப் பேசலாம், விவாதத்திற்கு வரும்போது நிறைய பேசலாம்.

**திரு. கோ. வீரய்யன் :** விவசாயிகளுக்கு ஏராளமான பாதிப்பு கள் ஏற்படுகின்றன. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மூலமாக, அந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு இந்த 11 ஆண்டுகள் 10 மாதங்களோடு முடியுமா என்பதற்கு அமைச்சர் வாக்குறுதி கொடுப்பாரா என்பதை அறிய விரும்புவதோடு, இதை ஆரம்பத் திலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எதிர்க் கிறேன்.

**திரு. த. பழனி :** 'சனியன்' என்ற வார்த்தையைச் சொன்னார். அது அவைக்குறிப்பில் இருக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது நாம் எல்லாம் உபயோகப்படுத்துகிற வார்த்தைதான். அதில் ஒன்றும் தவறு இல்லை.

**திரு. வி. பி. சிந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக கட்டத்திலேயே இதை நான் கடுமையாக எதிர்க் கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் உண்மையிலேயே ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கும்படியான ஒரு உரிமையைப் பறிக்கும் திருத்தமாக இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே ஏற்படும் சீர்கேடுகளைத் தடுப்பதற்கு இது எந்த வகையிலும் உபயோகப்படாது. ஆகவே, தேர்தலை நடத்த வேண்டு மென்பதை வலியுறுத்தும் முறையில் நான் இதை அறிமுகக் கட்டத்திலேயே ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(ஆ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் எதிர்க்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஜனநாயகத்திற்கு விரோதமாக, தேர்தல் நடத்தப்படாமல், மீண்டும் மீண்டும் தனி அதிகாரிகள் பதவியை நீட்டிக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10--20)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கம் என்பது விவசாயிகளுடைய சகலவிதமான உற்பத்திப் பொருட்களை வாங்குவதும் விநியோகம் பண்ணக்கூடியதுமான கூட்டுறவு அமைப்பாகும். இப்படிப்பட்ட வேளாண்மைக் கூட்டுறவுத் துறை அமைப்பில் மற்ற கூட்டுறவுத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளை அணுகுவது போல், பிரச்சினைகளை அணுகுதல் கூடாது. இப்படித் தனி அதிகாரிகளின் பதவிகளை நீட்டித்து வருவதால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே மக்கள் மேல் நம்பிக்கை வைத்துள்ள அரசு இப்படித் தனி அதிகாரிகளுடைய அதிகாரத்தை நீட்டித்துக் கொண்டே வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் செய்வதோடு, இந்த மசோதாவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே ஜனதா கட்சி எதிர்க்கிறது.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். அதை அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் வேளாண்மைப் பணிகள் பல இடங்களில், விவசாயக் கருவிகள் பழுதுபட்டு சரி செய்யப்படாமல் உள்ளதால், பாதிப்புக்குள்ளான நிலையில் இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்துவதாக அறிவித்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமே தவிர, இந்தச் சட்ட முன்வடிவை தமிழ்நாடு அரசு நிறைவேற்றக்கூடாது என்று அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(இ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1987.**

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

Thiru T. VENKATA REDDY : Mr. Speaker Sir, I am grateful to the Tamil Nadu Government and also to the Minister for having introduced the Bill on Kelavarapalli Reservoir Scheme (Acquisition of Land), though it is late. It is a "Varaprasadam" for our area. I request the Government to finish it within six months

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்-விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கி. மனோகரன் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது கடந்த 5 அல்லது 6 நாட்களாக இந்த அவையின் சார்பாக மொத்தம் 67 பேர் பங்கு பெற்று, தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு முன்பு ஒன்றைத் தெரிவிக்க எனக்கு நீங்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** **இதுசம்பந்தமான பேச்சுக்கள் அவைக்குறிப்பில் இருக்கக் கூடாது.

**திரு. கி. மனோகரன் :** எனது பேச்சின் ஆரம்பத்தில் நான் மிக்க வேதனையோடும், வருத்தத்தோடும் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கிற கடுமையான வறட்சி பற்றியதாகும்,

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியங்கள் என்று அழைக்கப்படுகிற தஞ்சை மாவட்டமும், கன்னியாகுமரி மாவட்டமும் பாலைவனங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன என்ற செய்திகளைத் தாங்கி தினந்தினம் பத்திரிகைகள் வந்துகொண்டிருக்கின்றன. வறட்சி இந்த அளவுக்குக் கடுமையாக இருக்கிறபோது—இந்த முறைகள் எல்லாம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால் தெரிவிக்கிறேன்—கலெக்டர்கள் மாநாடுகளை அடிக்கடி கூட்டி, அமைச்சரவையை அடிக்கடி கூட்டி, அதோடு நிற்காமல் பாரதத்தின் இளைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வந்து வறட்சிப் பகுதிகளைப் பார்க்க வைக்க வேண்டுமென்ற கடமை இந்த அரசுக்கு உண்டு என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** **

**திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதத்தின் பிரதமர் அவர்களை எப்படி கர்நாடக முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்கள் அழைத்தார்களோ, அழைத்து பெற வேண்டிய வாய்ப்பைப் பெற்றார்களோ அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வாய்ப்பைப் பெற வேண்டிய முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும். நிபுணர்கள் குழுவை அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசை உடனடியாகக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று, இவ்வளவு நிலைமைகள் வளர்ந்ததற்குப் பிறகு, நான் அவை முன்னவர் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் கேட்டுக் கொள்கிறேன். நமக்குள் கருத்துப் பரிமாற்றம் தவிர, யார் யார் அதிகமாகப் பேசுகிறார்கள், யார் யார் வேகமாகப் பேசுகிறார்கள், ஸ்கோர் அடிக்க முயற்சிக்கிறார்கள் என்பதல்ல. இந்த நேரத்திலே விவசாயிகளிடம் இருந்து வரி வசூலிக்கிற முறையைத் தயவு செய்து இந்த வறட்சிக் காலத்திலே இந்த அரசு தள்ளிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1969 ஆம் ஆண்டு என்று எனக்கு நினைவு. முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் டெல்லிக்கு வந்த நேரத்திலே அனைத்து அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியதற்குப் பிறகு கடைசியாக அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களைச் சந்தித்துப் பேசி—அப்போது தமிழகத்திலே வறட்சி நிலவிக் கொண்டிருந்த நேரம்—நீங்கள் தமிழகத்திற்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்ட நேரத்திலே எந்தவித மறுப்பும் சொல்லாமல் அந்த நேரத்திலே பக்கத்திலே இருந்த நிதித் துறைச் செயலாளர் திரு. ஜி. இராமச்சந்திரனை அழைத்து அவர்கள் டைரியைத் திருப்பிப் பார்த்து எது சரியாக இருக்கும் என்று பார்த்து கலைஞரையும் கேட்டுக் கொண்டு அவர்களும் ஒப்புக் கொண்டு இங்கே வந்தது எல்லோருடைய நினைவிலேயும் பசுமையாக இருக்கும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். ஆகையினாலே, இந்தச் சர்க்கார் இதில் தவறிவிட்டதாக நான் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10–30)

அடுத்து, வறட்சி இந்த அளவிற்குத் தலை விரித்தாடுகின்ற நேரத்தில் வறட்சியின் கடுமையான கரங்கள் மக்களின் கழுத்துகளை நெரித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நான் பணிவன்போடு முதல் அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்கிறேன், சேலத்திற்குச் சென்றீர்கள், செல்லக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் ** (குறுக்கீடுகள்)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் உரை மீது விவாதத்தை நடத்த வேண்டும். இதைப் பற்றி ஏன் இங்கே பேசுகிறீர்கள்? இது முறை அல்ல. இது மக்கள் செய்வது. இது அவைக்குச் சம்பந்தம் இல்லாதது. இது தேவையில்லை. ** ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. கி. மனோகரன் :** நான் அதனாலேதான் சொல்கிறேன். **இந்த அளவிற்கு..........

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது நீக்கப்பட்டிருக்கிறது. பொதுக் கூட்டம் பற்றி பேசக் கூடாது. திரு. மனோகரன், ஆளுநர் உரை மீது பேச வேண்டும்.

**திரு. கி. மனோகரன் :** நான் இன்னும் கேட்டுக் கொள்கிறேன், கருத்துக்களை எடுத்து வைக்கின்ற நேரத்தில் மேஜைகளைத் தட்டி விடுவதன் மூலம் உண்மை செத்துப் போகாது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கேயிருக்கிற அனைத்து நண்பர்களுக்கும் எல்லோருக்கும் தெரியும், எந்த அளவுக்கு நாம் விளம்பரத்திலே இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தயவு செய்து மறந்து விடக் கூடாது.

அடுத்ததாக, நான் இந்த மன்றத்திற்கு வைக்க விரும்புவது, மின்சாரப் பற்றாக்குறை பெரும் அளவுக்கு இந்த மாநிலத்தைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. இந்த மின்சாரப் பற்றாக்குறை எந்த அளவிற்கு மின்சார வாரியத்திற்கு நஷ்டத்தை உருவாக்கியிருக்கிறது என்றால், ரூ. 227 கோடி நஷ்டத்தை உண்டாக்கி இருக்கிறது. எனக்கு அமைச்சர் பதில் சொல்ல முற்படுவார் என்று கருதுகிறேன். இன்னின்ன காரியத்திற்காக செலவழிக்கப்பட்ட காரணத்தாலே, மின்சாரம் பற்றாக்குறை ஆகிவிட்டது என்று அமைச்சர் ஒருவேளை, அதற்கு வாதம் வழங்கக் கூடும் அல்லது கருத்து வழங்கக் கூடும். நான் திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், நமக்கு மிகத் தேவை, இந்த நாட்டு மக்களின் Growth Rate, Productivity இவை அதிகம் ஆவதற்கு heavy industries என்று கருதப்படுகிற கனரகத் தொழிற்சாலைகள் போன்றவை இயங்க வேண்டும் என்றால் மின்சாரம் நமக்கு அதிகப்படியாகத் தேவை. மின் வாரியத்திற்கு ரூ. 227 கோடி நஷ்டம் என்றால், இந்த நஷ்டத்தை

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இந்த அரசு எப்படிச் சமாளிக்கப் போகிறது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக இந்தக் கேள்வியை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில்—1987 ஆம் ஆண்டு—பாரா 8-ல் தொழில் வளர்ச்சி, அயல் நாட்டுத் தமிழர்கள் தொழில் முதலீடு என்ற கருத்தை அவர் தெரிவித்து இருக்கிறார். உங்களுக்கெல்லாம் தெரியும். நமது மாநிலத்தின் முதல் அமைச்சர் அமெரிக்காவுக்குச் சென்றார். சென்ற இடத்திலே அங்கே இருக்கிற மூலதனம் படைத்த தமிழ் மக்களைக் கண்டார். நீங்கள் தமிழகத்திற்கு வாருங்கள், மூலதனத்தை முடக்குங்கள் என்று குறிப்பிட்டார். நான் இந்த அவையிலே உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புவது, எத்தனை பேர்கள் அமெரிக்காவிலிருந்தோ அல்லது லண்டன் மாநகரத்திலிருந்தோ அல்லது பாரிஸ் மாநகரத்திலிருந்தோ முதலை முடக்குவதற்கு இங்கே வந்தார்கள், அந்த அடிப்படையில் எத்தனை தொழிற்சாலைகள் இங்கே உருவாகியிருக்கின்றன என்பதை அருள்கூர்ந்து எனக்குச் சுட்டிக் காட்ட வேண்டுமென்று, பதில் சொல்லுகின்ற பொழுது, நான் மதிக்கின்ற, நாவலர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தில் தொழிற்சாலைகள் பெரும் அளவிற்கு வளர்ந்திருக்கின்றன என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு எதிலே இருக்கிறது என்றால், அந்த மாநிலத்தில் எந்த அளவுக்குத் தனி நபர் வருமானம் வளர்ந்திருக்கிறது என்பதை ஒரு அடிப்படையாகக்கொள்வது வாடிக்கை. நீங்கள் எல்லாம் படித்துப் பார்த்திருப்பீர்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. படிக்காதவர்கள் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'ஏஷியன் ரிக்கார்டு' என்ற பத்திரிகையில் வந்திருக்கின்ற செய்தி. தமிழகத்தைப் பொறுத்தவரை தனி நபர் வருமானம் மிக மிக பின்தங்கிய நிலையில்—பிலோ நேஷனல் ஆவரேஜ்—இருக்கிறது என்ற கருத்தை அது தெரிவித்திருக்கிறது. இந்த நிலையில் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை, உருவான தொழிற்சாலைகள் எத்தனை, உற்பத்திப் பெருக்கம் எவ்வளவு, அதன் காரணமாக தனி நபர் வருமானம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது, வாங்குகின்ற சக்தி எந்த அளவிற்கு உயர்ந்து வருகின்றது என்பதை விளக்குவதற்கு அவை முன்னவர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவதாக நமது ஆளுநர் உரையில் 170 கோடி ரூபாய்க்கு படச்சுருள் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசு நமக்கு ஒப்புதல் தெரிவித்திருக்கிறது என்ற கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறீர்கள். நான் அதை படித்துப் பார்த்தேன். இங்கே இருக்கின்ற எனது அருமை மாண்புமிகு

[திரு. கி. மனோகரன்] [1987 மார்ச் 10

உறுப்பினர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் அதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 170 கோடி ரூபாய்க்கு மத்திய சர்க்கார் அனுமதி தந்திருக்கிறது. இன்னொரு திட்டத்தையும் அவர்கள் தீட்டியிருக்கிறார்கள். அது 200 கோடி ரூபாயாகும். அது வண்ணச்சுருள் படத் தொழிற்சாலை. அது என்னவாயிற்று ? இந்த மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கின்ற நான் உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டு தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவதாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் மத்திய சர்க்காரையும், மாநில சர்க்காரையும் இணைத்து பேசுகின்ற நேரத்தில், கணவன் மனைவி உறவு என்று குறிப்பிட்டார். நல்ல உறவு. ஆனால் அந்த உறவு எப்படி இருக்கும் என்று என்னைப் போன்றவர்கள் கருதுகிறார்கள் என்றால், பருவத்திற்கு ஏற்ற முறையில் அந்த உறவு அமையும். வயது அதிகமாக இருந்தால் அதற்குக் கணவன் என்றும், வயது குறைவாக இருந்தால் அதற்கு மனைவி என்றும் பெயர் இருக்கும். ஆனால் இருக்கின்ற நிலைமை, அங்கே ஆட்டிப் படைக்கின்ற மனைவியையும், இங்கே அடங்கிக் கிடக்கின்ற கணவனையும் நான் பார்க்கின்றேன் என்பதை மெத்த வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு பிறகு ............. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலக்கியத்திலே பேச ஆரம்பித்தீர்களென்றால் அது பட்டி மன்றம் மாதிரி ஆகிவிடும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் பேசிக் கொண்டிருக்கின்றபோது, சமுதாய நலத் திட்டங்களை நாங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் இராசாங்கம் அவர்கள் இதில் மத்திய அரசு பல்வேறு வகையிலே உதவுகிறது, மாநில அரசிலே இருக்கின்ற இவா சொல்லுகிறார் என்று சொன்னார். அப்போது நான் சொன்னேன். மத்திய அரசு, மாநில அரசு என்று இருந்தாலும் எல்லோரும் பொது மக்களுக்காகச் செய்கிறோம், மத்திய அரசுக்கு என்று தனியாக மக்கள் இல்லை........ (குறுக்கீடு) மக்களுக்காக சேவை செய்வதில், மத்திய மாநில அரசு கணவன் - மனைவி என்று உறவிலே இருக்க வேண்டும். யார் சம்பாதிக்கிறார்கள், யார் செலவழிக்கிறார்கள் என்பதல்ல. பராமரிப்பதிலே, சேவை செய்வதிலே ஒரு ஒருமித்த கருத்து தேவை என்று சொன்னேனே தவிர, இதனைக் கொச்சைப்படுத்துவது அவருடைய அரசியலுக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆலோசனையைக் **கேட்டுக் கொள்ளுங்கள்.**



1987 மார்ச் 10]

திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அடுத்தாற்போல் உங்கள் மூலமாக இந்த அவைக்கு நான் வைக்க வேண்டுமென்று விரும்புகின்ற கருத்து, கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் என்னவாயிற்று ? 1983-ம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அப்போது உயிரோடிருந்த அன்னை இந்திரா அம்மையார் அவர்கள் இங்கே வரவழைக்கப்பட்டார். தெலுங்கு தேசத்தின் முதலமைச்சராக இருக்கின்ற தம்பி என். டி. ராமராவ் அவர்களும்—எம். ஜி. ஆருக்குத் தம்பி என். டி. ராமராவ்—அவரே மகிழ்ச்சியோடு அழைப்பது வழக்கம்—இங்கே இருக்கின்ற அண்ணன் எம். ஜி. ஆர். அவர்களும் சேர்ந்து, அம்மையாரைப் பக்கத்திலே வைத்துக் கொண்டு முதல் தடவையாக, முதல் தவணையாக 30 கோடி ரூபாய் தருகிறோம் என்று சொல்லி சுளை சுளையாக அந்த 30 கோடி ரூபாய் எடுத்துக் கொடுக்கப்பட்டது.

(முற்பகல் 10-40)

வாங்கிக் கொண்டு மறுநாள் காலையிலேகூடச் செல்லவில்லை, என். டி. ஆர். அப்போதே புறப்பட்டுப் போனார். புறப்பட்டுப் போனார், அவ்வளவுதான். அதற்குப் பிறகு நான் தெரிவிக்க விரும்புகிறேன். மேற்கொண்டு 17 கோடி ரூபாயை இந்தச் சர்க்கார் அந்தக் கிருஷ்ணா நதித் திட்டத்திற்காக வழங்கிற்று, நாங்கள் எல்லாம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தோம். நீங்களும் ஏங்கித் தவித்துக் கொண்டு இருந்திருப்பீர்கள், எனக்கு நன்றாகத் தெரியும். மூன்றாண்டுக் காலத்திற்குள்ளாக—அவர்கள் வைத்த கோடு, எல்லையைச் சொல்கிறேன்—மிஞ்சினால், நான்கு ஆண்டுக் காலத்திற்குள்ளாக சென்னை நகரத்தில் வாழ்கின்ற மக்கள் தாகவிடாயைத் தீர்த்துக் கொள்வதற்காக கிருஷ்ணா நதி நீரைப் பருக இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

நான் இந்த அவையின் மூலமாக, உங்கள் மூலமாக இந்த அரசைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் எந்த நிலையிலே இருக்கிறது, என்பதை இந்த நாடு தெரிந்துகொள்ள விரும்புகிறது. என்னைப் பொறுத்த வரை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நான் தவறிழைத்தவனாக இருந்தால், அல்லது தவறான தகவல்களை இந்த அவைக்குத் தருபவனாக இருந்தால், தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். 47 கோடி ரூபாய் பாழ். இன்னும் அந்தத் திட்டத்தின் கதி என்ன என்றே தெரியவில்லை. தமிழகத்திற்கு அந்தத் தண்ணீர் கிடைக்கும் என்பதற்கான ஆதாரம் இல்லை. அந்தக் காரணத்தினாலேதான் இந்த அரசை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நீங்கள் திட்டங்களைச் சொல்கிறீர்களே தவிர, ஒப்பந்தங்களை எழுதுகிறீர்களே தவிர ஒப்பந்தங்களிலே கையெழுத்துக்களைப் போடுகிறீர்களே தவிர,

அவை எல்லாம் ஒழுங்காக செயல்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முதலமைச்சர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்.

அதற்கடுத்தாற்போல், ஊருக்கெல்லாம் தெரிவிக்கின்ற அளவுக்கு 30 இலட்சம் வீடுகள் மூன்றாண்டுக் காலத்திற்குள்ளாகக் கட்டித் தரப்படும் என்று நமது முதலமைச்சர் செல்கிற இடமெல்லாம் சொல்கிறார். அலாவுதீனின் அற்புத விளக்கு அவர் கையில் இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது நினைத்த நேரத்தில் முப்பது இலட்சம் வீடுகள் எழும்பட்டும் என்றால் எழும்பவும், நினைத்த நேரத்தில் மின்சாரம் பெருகிப் பாயட்டும் என்றால் பெருகிப் பாயும் அளவு அலாவுதீனின் அற்புத தீபத்தை அவர் எங்கிருந்து பெற்றாரோ, எனக்குத் தெரியாது. நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நமக்குள்ளே புரிந்து கொள்வதற்காக; நாங்கள் தவறாக எண்ணியிருந்தால், அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்வதற்காக; நான் தெரிவிக்க விரும்புகிறேன். மூன்றாண்டுக் காலத்தில் முப்பது இலட்சம் வீடுகள் இந்த அரசு கட்ட முடியும் என்று நம்புகிறீர்களா? ஒரு ஆண்டு ஆயிற்று, சொல்லி. எனது அருமைத் தம்பி மாண்புமிகு அமைச்சர் திரு. திருநாவுக்கரசு பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசும்போது சொன்னார். ஓராண்டுக் காலத்தில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று, ஒரு ஆண்டுக் காலத்தில் இரண்டு இலட்சம் வீடுகளானால், மூன்றாண்டுக் காலத்தில் ஆறு லட்சம் வீடுகள்தான் ஆகும். இன்னும் சொல்கிறேன். சற்று விரைவாகப் போனால், எட்டு இலட்சம் வீடுகளாகும். எப்படி முப்பது இலட்சம் வீடுகளாக அவை குட்டி போடும்? தயவு செய்து நீங்கள் இதற்குப் பதில் தெரிவிக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அவை முன்னவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, நமது ஆளுநர் உரையில் இன்னொன்றைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஒன்றேகால் கோடி காலணி, இந்தத் திட்டத்தை கேலி செய்வதற்கோ இந்தத் திட்டத்தைப் பற்றிக் கொச்சைப்படுத்திப் பேசுவதற்கோ, எதிர்க்கட்சியினர்க்கு அதுவே தொழில் என்று நமது முதலமைச்சர் . அவர்கள் சொல்வார்கள். சொல்லக் கடமைப்பட்டவர் சொல்கிறார். கேட்கக் கடமைப்பட்டவர்கள் நாங்கள் கேட்கிறோம். என்றாலும், நமது நிதியமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. 'Opposition has its say and the ruling party has its way;' என்று அடிக்கடி அவர் சொல்வதுண்டு, ஆக, நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆட்சியிலே இருப்பவர்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒன்றேகால் கோடி காலணி —யார் யாருக்கு? கருத்தரித்திருக்கின்ற பெண்



களுக்கு, கல்லிலும் முள்ளிலும் நடக்கின்ற பள்ளி இளம் சிறார்களுக்கு. இந்தக் காலணிகள், ஒன்றேகால் கோடி காலணிகள் தருவிக்கப்படும் என்று சொல்லிவிட்டு, 10 ஆண்டுகளுக்குப் பிறகு.. * * (குறுக்கீடு, கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது போன்ற வார்த்தைகள் வேண்டாம். அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன் நேரடியாகப் பேசுங்கள் * * இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். (குறுக்கீடு) * * என்பதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்,. (கூச்சல், குழப்பம், குறுக்கீடு) நீங்கள் சொல்வது தவறு அல்ல; சொல்வதை முறையாகச் சொல்லுங்கள். அவர்கள் அதை எதிர்க்கிறார்கள். அதற்காக நான் சொல்கிறேன். உறுப்பினர்கள் எதிர்க்கிறார்கள், ஆகவே சொல்கிறேன். அவர்கள் சொல்லும்போது நீங்கள் எதிர்த்தால் நான் கேட்கவில்லையா? ** இந்தப் பிரச்சினைகளெல்லாம் நாட்டுக்குத் தேவைதானா ? வறட்சியைப் பற்றிப் பேசினீர்கள், அதைப் பற்றி பேசுங்கள். (குறுக்கீடு) கவலைப்பட்டதால்தான் பிரச்சினையே. (குறுக்கீடு கூச்சல், குழப்பம்) நானும் உங்களைப் போல் சும்மா போய் விட்டிருந்தால் ஒன்றுமே இல்லை. வேண்டாம், அப்படிப் பேசாதீர்கள். (கூச்சல், குழப்பம்) அது அவை குறிப்பில் வேண்டாம். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) எல்லோரும் அமருங்கள். நீங்கள் பேச்சைத் தொடருங்கள்.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தாற்போல் நான் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டுமென்று விரும்புவது, இந்த மாநிலத்தை (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * பார்த்தீர்களா எவ்வளவு விவகாரம் வருகிறது (கூச்சல், குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 மார்ச் 10

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து நான் பேசுகின்ற நேரத்தில் தேவையில்லாமல் குறுக்கிட வேண்டாம் என்று நீங்கள் ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று பணிவன்புடன்.... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தேவையில்லாமல் யாரும் குறுக்கிடாதீர்கள். நீங்களும் தேவையில்லாத விவகாரங்களைக் கொண்டு வர வேண்டாம். பிரச்சினை வராது.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் உங்களுக்குந் தெரியும் தேவையற்ற பிரச்சினைகளைப் பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல நான். பிரச்சினைகளைப் பற்றிப் பேசுபவன் நான் என்பது அங்கே உட்கார்ந்திருக்கிற பெரும்பாலான, கழகத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே பணியாற்றிய நண்பர்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன்.

இப்போது நான் உங்களது கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று விரும்புவது நமது மாநிலத்தை பெருமளவுக்கு பாதிக்கின்ற பிரச்சினை இந்திப் பிரச்சினையாகும். இந்த இந்திப் பிரச்சினையைப்பொறுத்தவரையில் நாம்நமது கருத்துக்களைத் தெளிவாக மத்திய சர்க்காருக்கு எடுத்து வைத்திருக்கிறோம். இங்கு இருக்கின்ற அவை முன்னவருக்கு உங்கள் சார்பாக நான் தெரிவிக்க விரும்புவது ஒன்றே ஒன்று. இந்த பேரவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்போது அந்தத் தீர்மானத்தின்மீது நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மிக ஆவேசமாகப் பேசி தமிழகத்து மக்களின் உள்ளத்திலே இருக்கிற கொந்தளிப்பின் பிரதிபலிப்பாக அவர் விளங்கியதை நானும் நேரிலே பார்த்தேன். நீங்களும் நேரிலே பார்த்தீர்கள். ஆனால் அந்த அரசினர் தீர்மானம் என்னவாயிற்று? இந்தக் கேள்விக்கு எனக்குப் பதில் தேவை. மூன்று காரணங்கள் என் உள்ளத்திலே தோன்றுகின்றன. எது காரணமோ எனக்குத் தெரியாது.



1987 மார்ச் 10] [திரு. கி. மனோகரன்]

தயவு செய்து அந்தக் காரணங்களில் ஏதாவது ஒன்றையாவது நியாயப்படுத்தவா அல்லது நம்பவா என்று பின்னாலே சொல்லுகிறேன். ஒன்று—இந்த அரசு நிறைவேற்றிய அந்தத் தீர்மானம்—234 உறுப்பினர்களை உள்ளடக்கிய தீர்மானம்—அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் தொகை கோடி கோடி—அந்தக் கோடிக்கணக்கான மக்கள் சார்பில் நிறைவேற்றிய தீர்மானம்—அது வெறும் காகிதக் குப்பை அல்ல—அது அரசினர் தீர்மானம்—அந்தத் தீர்மானத்தின் பின்னாலேதான் தமிழக மக்களின் கொந்தளிப்பு, நீறு பூத்த நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் கூட அந்த அரசினர் தீர்மானத்திற்கு, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பாரதத்தின் இளம் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடமிருந்து பதில் வந்ததா என்ற கேள்வியை இந்த மன்றத்தில் கேட்ட நேரத்தில் மாண்புமிகு நாவலர் அவர்கள் சொன்னார்கள் ''பதில் வரவில்லை'' என்று. நான் கேட்கிறேன்—3 வகையான காரணங்கள் இருக்கலாமோ என்று நான் ஆரம்பத்திலேயே சொன்னேன், ஒன்று இந்த அவைக்கு மைய அரசு மரியாதை தரவில்லையோ என்ற சந்தேகம் எனக்கு. நான் உணர்வுகளைச் சொல்கிறேன்.**

(முற்பகல் 10·50)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. நாஞ்சிலார் அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் ஒரு தவறான மோட்டிவ் கற்பிக்கிற வகையில் ஒரு தவறான கருத்தை யூகித்துச் சொல்வது சரியல்ல. மோட்டிவ் சொல்வது சரியில்லை. அதுவும் தவறான மோட்டிவ் சொல்வது சரியில்லை. எனவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைத்தான் நான் சொன்னேன். இது தேவையில்லாத பிரச்சினை. (குறுக்கீடு) இருக்கட்டும் என்றால் இருக்கட்டும். வேண்டாம் என்றால் எடுத்துவிடலாம். (குறுக்கீடு) அது முறையல்ல. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அதை எடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு) உறுப்பினர்கள் சொல்லுகிறார்களே. எனவே நீக்குகிறேன்.

**திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் கேட்கிறார்கள், ஆகவே எல்லாவற்றையும் எடுத்துவிடுகிறேன் என்பது எப்படிச் சரியாகும்? நீங்கள்தான் அதிகாரம் படைத்தவர் (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் இங்கேயிருந்து கொண்டு பதில் சொல்ல முடியாது. நான் பதில் சொல்வது என்றால் அது வேறு விவகாரமாகிவிடும்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வருகிற ஒரு தீர்மானம் உள்நோக்கம் கொண்டது என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமையில்லையா? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசாங்கம் நல்ல நோக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் உள்நோக்கம் கற்பிப்பது தவறு. (குறுக்கீடு) நீங்களும் சேர்ந்து தானே தீர்மானத்தில் ஓட்டு போட்டீர்கள். நீங்கள் போட்டது உள்நோக்கத்தோடு தானா? அதிலே எல்லோரும் ஓட்டு போட்டிருக்கிறோம். (குறுக்கீடு) எதிலும் நாம் சரியாக நிற்கமாட்டோம். அதுதான் பிரச்சினையே. நீங்களும் போட்டீர்கள். நானும் போட்டேன். என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அது என்ன ஆயிற்று என்று கேளுங்கள். ஆனால் அதை விட்டுவிட்டு உள்நோக்கம் சொன்னால் அது தவறு. உள்நோக்கம் கற்பிப்பது தவறு. யுனானிமிட்டியாக இருப்பதில் ஒரு டிவிஷன் உருவாக்குவது சரியா?

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்படி உள் உணர்வுகளை எடுத்துச் சொன்னேனே தவிர அந்த உணர்வுகள் எல்லாம் உண்மையானவை என்று அவையில் உரைக்கவுமில்லை. — உரைக்கவும் மாட்டேன். தேவைப்பட்டால் அவையின் முன்னவர் அவர்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம். மற்றவர்கள் அமைதியாக இருந்து ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். மூன்றாவது உணர்வைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு வேளை மாநில அரசு இந்தத் தீர்மானத்தை மைய அரசுக்கே அனுப்பத் தவறிற்றோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. (குறுக்கீடு) நான் இதைத் தெரிவிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, இப்படிப் பேசுவதன் மூலமாக மறைமுகமாக இந்திக்கு இங்கே வால் பிடிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நாடாளுமன்றத்தில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் மாநில சர்க்கார் நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சி பேதமில்லாமல் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட



சூழ்நிலையில் உள்நோக்கம் கற்பிப்பதும், களங்கம் கற்பிப்பதும் திட்டமிட்டு இந்தித் திணிப்புக்கு நீங்கள் வழிகாட்டுகிறீர்களே இது நியாயமா? தர்மமா? தீர்மானத்தின் மீது தி. மு. க. உறுப்பினர் பேசியிருக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். மற்றக் கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். அது உஙகளுக்குத் தெரியாததல்ல (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. தங்கபாலுவும் பேசியிருக்கிறார்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, எனது உணர்வுகளை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொன்னேன். இதைச் சொல்லுவதற்கு மிக முக்கியமான காரணம் பின்னணியாக இருக்கிறது. அதை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். அரசினர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 15 நாளில் இந்த தீர்மானத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு ** ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** **அப்படியானால் அவைக் குறிப்பிலே அது இருக்காது. நீங்கள் அந்தக் கடிதத்தைப் பற்றி பேசுகின்ற அந்த வாசகங்கள் அவைக் குறிப்பிலே இருக்காது.

** ** **

(கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

** ** **

(திரு. கி. மனோகரன் வெளிநடப்பு செய்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்கிற வரையில் பத்திரிகைகளில் வெளிவரவேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்கிற வரையில் வர வேண்டாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சியின் சார்பில் நடைபெற்ற விவாதத்தினை முடித்து வைத்து நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 10

என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னாலே தெய்வ பக்தியும், தேச பக்தியும் நிரம்பப் பெற்றவரும், முது பெரும் தேசியத் தலைவர்களில் ஒருவரும், தமிழக அரசில் வரலாறு படைத்தவரும், நிர்வாகத் துறையிலே மிகச் சிறப்பாக ஆட்சி செய்து காட்டியவரும் ஆகிய மாண்புமிகு பெரியவர் திரு. பக்தவத்சலனார் அவர்களுடைய மறைவை ஒட்டி அவர்களுடைய உடலை எரியூட்டுவதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் ஒரு பொருத்தமான நினைவுச் சின்னத்தையும் எழுப்புவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியவர் பக்தவத்சலனார் அவர்களுடைய வாழ்க்கை பல்வேறு படிப்பினைகளை பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கின்ற நமக்கெல்லாம் காட்டுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அண்மையிலே 90 வயது நிரப்பப் பெற்று பிறந்த நாள் கொண்டாடிய நேரத்தில் நம்முடைய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 90,000 ரூபாய் பரிசாகக் கொடுத்த நேரத்தில் அந்த ரூபாயினை அவர்கள் பெற்றுக் கொண்டு கல்விப்பணிக்காக அதாவது அந்த முழுத் தொகையையும் மூன்று பல்கலைக் கழகங்களுக்குப் பிரித்துக் கொடுத்த அந்தப் பெருந்தகையினுடைய உணர்வுகளை நாம் நினைவில் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக சட்டசபைக் கூட்டத் தொடர் கொஞ்சம் காலம் தாழ்ந்து கூட்டப்படுகிறது என்று நான் கருதுகிறேன். வருட ஆரம்பத்திலேயே அதாவது ஜனவரி மாதத்தில் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையைத் தொடங்குவது வழக்கமாக இருந்தது. பிப்ரவரி மாத இறுதியில் அந்த ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டங்களைப் போடுவது என்பது ஒரு நெடிய மரபாக தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் என்ன காரணத்தினாலோ இந்த ஆண்டு இந்த இரண்டுமே தள்ளிப்போய் பிப்ரவரி மாத இறுதியிலே தான் ஆளுநர் உரைக்கூட்டம் என்றும், மார்ச் மாதத்திலே 20-ஆம் தேதிதான் 1987—88-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் என்றும் நிர்ணயித்திருக்கிற காரணத்தால் பொதுமக்கள் மத்தியிலே பல்வேறு பிரச்சினைகளும், பல்வேறு பேச்சுக்களும் எழுப்பப்பட்டு இருக்கின்றன. பத்திரிகைகளில் எல்லாம்கூட எழுதப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டசபை நடைபெறுமா, முழுமையாக நடைபெறுமா அல்லது நாட்டிலே தேர்தல் வருமா, சட்டசபையைக் கலைத்து விடுவார்களா என்றெல்லாம் பல்வேறு செய்திகள் உலா வருவதற்கு நம்முடைய காலதாமதம் காரணமாக இருக்கக்கூடாது என்பதற்



1987 மார்ச் 10] [திரு. என். எஸ். வி. சித்தன்]

காகத்தான் நான் உங்கள் மூலமாக ஒன்றை மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில் நாம் நாடாளுமன்றத்தைப் பின்பற்றலாம்—நாடாளுமன்றத்திலே வருட ஆரம்பத்திலே மேதகு குடியரசுத் தலைவருடைய உரை நிகழ்த்தப்படுகிற தேதியும், வரவு-செலவுத் திட்டம் என்றைக்கு அறிமுகப்படுத்தப்படும் என்ற அந்தத் தேதியும், அதன் பின்னர் மாரிக்காலக் கூட்டம் எப்போது என்றும் இப்படி ஒரு ஆண்டுக்கான அட்டவணை முழுவதையும் முன்கூட்டியே தெரிவித்துவிடுகிறார்கள்.

(முற்பகல் 11–30)

அப்படி தெரியப்படுத்துகின்ற காரணத்தாலே அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏன் அதிகாரிகள், அலுவலர்கள் எல்லாம் தங்களுடைய சுற்றுப்பயண நிகழ்ச்சியை முன் கூட்டியே வைத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கிறது. ஆகையினால் நான் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்வது நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனியாவது நாம் ஒரு டைம்டேபிளை ஒரு நிகழ்ச்சி நிரலை, அல்லது அட்டவணையை தயவு செய்து தயாரித்து அதன் மூலமாக நம்முடைய நிகழ்ச்சிகளைத் தொடர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நாம் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி சொல்லும் தீர்மானத்தில் நின்று கொண்டிருக்கிற நேரத்திலே இந்தியாவின் இளைய பிரதமர் மேதகு ராஜீவ் காந்தி அவர்கள் 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நாட்டுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த ஆண்டினுடைய மொத்த வருமானம் 56,932 கோடி. மொத்தச் செலவு 62,942 கோடி. பற்றாக்குறை 6010 கோடி. வரி விதிப்பின் மூலமாக 322 கோடி ரூபாய் ஈடு செய்வதை கழிப்போமானால் நிகரப் பற்றாக்குறை 5678 கோடி ரூபாய் என்று வரவு–செலவுத் திட்டத்தை நாட்டுக்கு நம்முடைய பிரதமர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

அதிலே இருக்கிற சிறப்பான அம்சம் கல்விக்கு இந்த ஆண்டு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான். கடந்த ஆண்டு அதாவது 1986–87 ஆம் ஆண்டு கல்விக்காக 352 கோடி ரூபாய் ஒதுக்கியவர்கள் இந்த ஆண்டு 800 கோடி அளவிற்கு அதை உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. சமுதாயத்திலே இருக்கும் எல்லாத் தரப்பினரும் பாராட்டப்படக்கூடிய ஒன்று என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டும் அல்லாது கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்காக 2 ஆயிரம் கோடி ரூபாய் என்று அறிவித்திருப்பது இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான கிராமவாசிகளுக்குத் துணையாக இருக்கும்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 10

அது மட்டும் அல்ல, படிக்கிற மாணவர்களுக்கு பாட புத்தகங்கள், நோட்டுகள் (குறுக்கீடு) பிறகு சொல்கிறேன். உற்பத்தி வரிகளை ரத்து செய்திருக்கிறார்கள். ஏழை மக்களுடைய சௌகரியத்திற்காக பல திட்டங்களை அறிவித்து மிக நல்ல பட்ஜெட்டினை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பொருளாதார வல்லுநர்கள், கல்வியாளர்கள் பாராட்டுகிறார்கள். தமிழகத்தின் சார்பில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனம் நிறைந்து பாராட்டியிருக்கிறார்கள். ராஜீவ் காந்தி நாட்டுக்கு வழங்கியுள்ள முதல் வரவு–செலவுத் திட்டம் மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்புகளையும் உறுதி செய்வதாக அமைந்திருப்பது மன நிறைவை அளிக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் சொல்லுகிறார்கள், வறுமை ஒழிப்பையும் வளர்ச்சிப் பணி அதிகரிப்பையும் நோக்கமாகக் கொண்டு புதிய திட்டங்கள் வரவு செலவுத் திட்டத்தில் அளித்திருப்பது வரவேற்கத் தக்க ஒன்று என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் சொல்லுகிறார்கள். அரசின் நிதிக் கொள்கையும், நடுத்தர ஏழை மக்களுக்கு நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும் என்பதில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் பெரிதும் கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லி விட்டு மேலும் சொல்லுகிறார்கள், மக்களை பாதிக்கின்ற புதியவரிகள் எதுவுமே இல்லை, உற்பத்திப் பெருக்கத்திற்கும் தொழில்வளர்ச்சிக்கும் ஊக்கம் தரப்பட்டுள்ளது; குறிப்பாக கல்வி வளர்ச்சிக்கும் கிராமப்புற வளர்ச்சிக்கும் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது என்று மிகப் பெருந்தன்மையோடு சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தது போல மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிறார்கள், பண்டித நேரு அவர்கள் சொன்னதையே தம்முடைய குறிக்கோள் என்று அறிவித்து பிரதமர் அவர்கள் அளித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை பாராட்டி வரவேற்பதுடன் பிரதமர் எடுக்கும் எல்லா முயற்சிக்கும் தமிழக மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மேதகு ராஜீவ் காந்தி அவர்கள் இந்த நாட்டுக்கு அறிவித்த வரவு செலவுத் திட்டம் ஒரு நல்ல இலக்கணமாக, இலக்கியமாக அமைந்து விட்டது. நம்முடைய முதல்வர் அவர்கள் மனம் திறந்து பாராட்டி விட்டதற்குப் பின்னாலே இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி, தமிழக காங்கிரஸ் பற்றி, தமிழக காங்கிரஸ் தலைவர்கள் பற்றி யாராவது குழந்தைத்தனமாக பேசுவார்களேயானால் நான் அதை கணக்கில் எடுத்துக்கொள்ள



1987 மார்ச் 10] [திரு. என். எஸ். வி. சித்தன்]

வில்லை. தலை என்ன சொல்கிறது என்றுதான் பார்க்கிறோமே தவிர வால்களைப்பற்றி நாங்கள் அக்கறைப்படவில்லை என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்தபடியாக நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையில் பல்வேறு திட்டங்களுக்கான அறிவிப்புகள் வரும் என்று எதிர்பார்த்தோம். ஒரு சில திட்டங்களுக்கான அறிவிப்பு வந்திருந்தாலும் கூட இன்னும் புதிய திட்டங்களை தொலை தூர நோக்கோடு போட்டிருக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கருதுகிறது. தமிழக அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் அண்மைக்காலமாக ஒரு இணக்கமான சூழ்நிலை தொடர்ந்து வருகிறது. அதன் காரணமாக தமிழகத்தில் மத்திய அரசாங்கம் முதலீடு செய்வது ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வந்திருக்கிறது என்பது நமக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் அளிக்கிறது. சான்றாக நான் சொல்வேன் 31—3—1973 ஆம் ஆண்டு தமிழகத்திலே மத்திய அரசாங்கம் போட்டிருந்த முதலீடு 93 கோடி ரூபாய்தான். ஆனால் 31—3—1985 முடிய 2548 கோடி ரூபாய்க்கான அளவில் மத்திய அரசாங்கம் தமிழகத்திலே முதலீடு செய்திருக்கிறது என்பது வரவேற்கத்தக்க ஒன்று.

நம்முடைய எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. இன்னும் பல கோடிக் கணக்கான ரூபாய் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காகத் தேவைப்படுகிறது. தமிழகத்தின் எதிர்பார்ப்புகளை கணக்கிலே கொண்டு மத்திய அரசு வழங்க வேண்டுமென்று நீங்கள் கேட்பதோடு, நாங்களும் உங்களோடு உறு துணையாக இருந்து கேட்போம். தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு என்றைக்கும் துணையாக காங்கிரஸ் கட்சி இருக்க விரும்புகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தமிழகத்திலே இருக்கிற வறட்சியைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் பெருமகனார் உரையில் 9-ம் பக்கம், 10-ம் பக்கம் மற்றும் 23, 24-ம் பக்கங்களில் இந்த வறட்சியைப் பற்றி சுட்டியும் தொட்டும் காட்டியிருக்கிறார்கள். நான் இந்த அவைக்கு வருவதற்கு முன்னாலே என்னுடைய திருமங்கலம் தொகுதியை முழுமையாகச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். மதுரை மாவட்டத்தில் பல்வேறு இடங்களைப் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். அதே நேரத்தில் பல்வேறு உறுப்பினர்களைக் கலந்து அவர்களுடைய உள்ள உணர்வுகளைப் புரிந்து கொண்டு இப்போது பேசுகிறேன். தமிழ் நாட்டிலே இந்த நூற்றாண்டிலே இல்லாத அளவிற்கு, வரலாறு காணாத அளவிற்கு இந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலவுகிறது. வரலாற்றில் எந்த ஆண்டும் மழை பொய்த்தது இல்லையென்று சொல்கிற கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 10

இந்த ஆண்டு வடகிழக்கு, தென்மேற்குப் பருவமழை பொய்த்து விட்ட காரணத்தால் கடுமையான வறட்சி நிலவுகிறது. தொடர்ந்து நான்காவது ஆண்டாக இந்த ஆண்டும் பருவ மழை இல்லாத காரணத்தால் விவசாயிகளின் பணப் பயிர்களான பருத்தி, கடலை, மிளகாய் போன்றவை கருகிப் போய்—எப்படியும் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குத் தமிழக விவசாயிகளுடைய வருமானம் பாதித்து இருக்குமோ என்று கூட நான் எண்ணிப் பார்க்கிறேன். அந்த அளவிற்கு இன்றைய தினம் தமிழகத்திலே விவசாயப் பெருமக்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். பட்டுப் போன தென்னை மரங்கள், புளிய மரங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு ரப்பர் மரங்கள் காய்ந்திருக்கிற நிலை உருவாகி இருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டம், காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் இன்றையதினம் மக்கள் குடி பெயர்கிற அவல நிலை உருவாகியிருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுடைய துயரங்களைப் பார்க்கிற போது, கல்லும் கறைகிற அளவிற்கு அவர்கள் இன்றைக்கு அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். காமராசர் மாவட்டத்தில் வலையப்பட்டி என்ற சின்னஞ்சிறு கிராமத்தில் 72 ஜோடி உழவு மாடுகள் இருந்தன. இன்றைக்கு வறட்சியால் அந்த உழவு மாடுகளை விவசாயிகள் வந்த விலைக்கு விற்று 10 ஜோடி மாடுகள்தான் இருக்கின்றன. வருகிற காலம் எப்படி இருக்குமோ சொல்ல முடியாது. நான் இன்னமும் சொல்வேன். அதே வலையப்பட்டி கிராமத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக யாரும் எருமை மாடுகள் வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஊர் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். இதைச் சொன்னால் நம்மால் ஓரளவிற்கு வறட்சியின் பாதிப்பைப் புரிந்துகொள்ள இயலுமென்று கருதுகிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு தமிழகத்தில் வறட்சி அதிகமாகி பஞ்சம் தலை தூக்கக் கூடிய அபாய நிலை உருவாகி இருக்கிறது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28 கோடி ரூபாயை முன் பணமாக ஒதுக்கி இருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இது போதாது. இன்னும் அதிக அளவிற்குப் பணத்தை ஒதுக்கி அந்தப் பகுதி மக்களுக்கு அரசாங்கம் நிவாரணப் பணிகளைத் துவங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 10] [திரு. என். எஸ். வி. சித்தன்]

வறட்சி சம்பந்தமாக நம்முடைய தலைமைச் செயலாள அவர்கள் சில நாட்களுக்கு முன்னாலே ஒரு செய்தியைக் கொடுத்தார்கள். வருவாய்த் துறை கமிஷனர் அவர்கள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்கள். சுற்றுப் பயணம் முடிந்ததற்குப் பின்னால் பத்து நாட்களில் அறிக்கை வருமென்று பிப்ரவரி 20 ஆம் தேதி தமிழகத்தின் தலைமைச் செயலாளர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் எதிர் வரிசையில் வறட்சி பற்றி குறிப்பிட்ட நேரத்தில், மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதைப் பற்றி சுட்டிக் காட்டிய நேரத்தில்— ஒன்றைச் சொன்னார்கள். மாதந்தோறும் நாம் அறிக்கை அனுப்பிக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். நான் உங்கள் மூலமாக தெரிவிக்க விரும்புவது மாதாந்திர ஸ்டேட்மெண்ட் பற்றி நாங்கள் அதிகமாகக் கவலைப்படவில்லை. ஆனால் வறட்சி இதற்கு முன்னாலே இல்லாத அளவிற்குக் கடுமையாக இருக்கிறது. நான் திரும்பத் திரும்பச் சொல்லவிரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

தமிழகத்தைப் பொறுத்த வரையில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பருவமழை பெய்யாவிட்டால் பின்னாலே எந்த மழை வந்து யாரைக் காப்பாற்றப் போகிறது? நின்று கொண்டிருக்கிற விளைந்த பயிர்கள் பருவ மழை பெய்தால் தான் உயிர் தப்ப முடியும். பின்னாலே மழை பெய்வதாலே எந்தப் பயனும் விவசாயிகளுக்கு ஏற்படப் போவதில்லை. ஆகவே எப்போது நவம்பர், டிசம்பர் மாதங்களில் மழை பொய்த்து விட்டதோ, அப்போதே பணிகளைத் துரிதப்படுத்தி அரசாங்கம் ஏன் செய்திருக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அவை முன்னவர் அவர்கள் தன்னுடைய உரையின் போது ஒரு அறிக்கை கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். எனக்கு இருக்கிற ஆதங்கமெல்லாம் இப்போது சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் கம்ப்யூட்டரைக் கூட துவக்கி வைத்தார்கள்; அதிலே வறட்சி பற்றிய விவரம் வேண்டுமானால் ஒரு வாரத்திற்குள் நாம் தெரிந்து கொள்ளலாமே, அதற்கு ஏன் முயலவில்லை. இந்த விஷயத்தில் தமிழக அரசாங்கம் இன்னும் கொஞ்சம் முனைப்போடு இருந்தால்தான் மத்திய அரசாங்கத்திற்கு நாம் உரிய காலத்தில் அறிக்கை அனுப்ப இயலும். அப்படி செய்தால்தான் மத்திய அரசாங்கத்திலிருந்து குழு வரும். நிலையைப் பார்ப்பார்கள். இல்லை என்றால், சென்ற ஆண்டு நாம் செய்ததைப் போல, 310 கோடி ரூபாய்த் திட்டத்தை அனுப்பி, 31.77 கோடி ரூபாய் வருகிற நிலைதான் வரும். தமிழகத்திற்கு அதிகமான நிதி வர வேண்டும் என்ற ஆதங்கத்திலே நான் சொல்கிறேன். நமது அரசாங்கம்** இல்லாது அருள் கூர்ந்து அறிக்கையை உடனடியாக அனுப்ப

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்). அடுத்தபடியாக வரி வஜா சம்பந்தமாக ...... (குறுக்கீடுகள்). ** ** என்று சொல்வது, அதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நம் எல்லோருக்கும் ஒத்த கருத்தாக இருக்கிறது. ** ** என்ற சொல்லை எடுத்துவிட வேண்டும் என்றால் எடுத்துவிடலாம். விரைந்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ** ** என்ற சொல்லை எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அரசு 28 கோடி ரூபாயை ஏற்கனவே ஒதுக்கி இருக்கிறது, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக. நமது முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களை ஏற்கனவே நேரிலேயே சந்தித்து, தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிற வறட்சியைப் பற்றி தெரிவித்து இருக்கிறார்கள். ஆயிரம் கோடி ரூபாய் என்றாலும், ஒவ்வொன்றாகத் தானே செலவு செய்யப் போகிறோம். ஆகவே 28 கோடி அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. பாரதப் பிரதமர் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகையினாலே, * * என்ற வார்த்தையை நீங்கள் எடுத்து விட்டீர்கள். அதனால் சொல்கிறேன், உரிய வேகத்திலே செயல்படுகிறது என்று.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * என்று சொல்கிற சொல், பாராளுமன்ற சம்பிராதாயத்திற்கு எதிரான சொல்லாக நான் கருதவில்லை. என்றாலும் கூட, நம்முடைய முதல்வர் அவர்கள் .......... (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, ** சட்டசபைக்குள் புகவேண்டாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சட்டசபையில் அல்ல' எங்குமே நுழைய வேண்டாம், ** அந்தச் சொல்லை எடுக்கும்படியாக நான் கேட்டுக் கொள்கிறேன். முயல் வேகத்திலே போக வேண்டும் என்று சொல்ல நான் தயாராக இருக்றேன்.

அடுத்து வரி வஜா பற்றி சொல்ல வேண்டும் என்றால் நம்முடைய அவை முன்னவர் அவர்கள். 2, 3 நாட்களுக்கு முன்னாலே இந்தப் பிரச்சனையை எழுப்பிய நேரத்திலே, சென்ற ஆண்டு ஜுலை மாதத்திலே வரி வஜா கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். இது நியாயமா ? தர்மமா ? பிப்ரவரி மாதத்திலே வரி வசூல் தொடங்கியதற்குப் பின்னாலே, பிப்ரவரியிலே

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



ஆரம்பித்து, மார்ச், ஏப்ரல், மே, ஜுன் என்று 6 மாதத்திற்குப் பிறகுதான் வரி வஜா என்று அறிவித்தால், வரி வசூல் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு, நாம் வரி வஜா என்று சொல்வது, யாரைத் திருப்திபடுத்தும் என்று தெரியவில்லை. எனவே அருள்கூர்ந்து வரி வஜா பற்றி நீங்கள் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால் தான், வரி வசூலை ஒத்தி வைப்பதோடு, கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வசூலை ஒத்திவைப்பது போன்ற இன்னும் பல்வேறு தொடர்பான காரியங்கள் அதிலே இருப்பதால், ஒரேயடியாக இன்றைக்கு அவர்கள் அந்த அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பல இடங்களிலே சொல்கிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே, திண்டிவனம், செஞ்சி தாலுக்காக்களிலேயும், செங்கற்பட்டு மாவட்டத்திலே, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலேயும் மற்றும் தமிழகத்திலே இருக்கிற, அத்தனை மாவட்டங்களிலேயும் கடுமையான வறட்சி இருக்கின்ற காரணத்தாலே அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதே போல் கூட்டுறவுக் கடனுக்கான தவணையை நமது மாணபுமிகு முதல்வர் அவர்கள் அருள்கூர்ந்து தள்ளிக் கொடுத்து இருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதிக்குள் அவர்கள் அந்தத் தவணையைச் செலுத்துவார்களானால், 125 கோடி ரூபாய் வரிச் சலுகை என்று அறிவித்தார்கள். நான் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். விவ்சாயிகள் இன்றைக்கு பட்ட கடனை எந்த வருமானத்திலிருந்து தீர்க்க முடியும். அவர்கள் ஜீவனத்திற்குப் போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பட்டினியாக இருக்கிற காரணத்தாலே கால்நடைகளை வந்த விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குக் காலையிலே கூட ஒரு செய்தியைக் கேள்விப் பட்டேன். 500 ரூபாய் பெறுமானமுள்ள ஒரு ஆட்டை, 100 ரூபாய்க்கு விற்று விட்டதாகச் சொல்கிறார்கள். ஆகவே, நான் உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதிக்குள்ளாக கூட்டுறவுக் கடனை திருப்பிச் செலுத்தினால் சலுகை என்பதை அருள்கூர்ந்து, கால நீட்டிப்பைக் கொடுத்து, அடுத்த அறுவடைக் காலம் வரை—இதற்குந் தவணை தேவையில்லை—என்று இந்தத் தவணையைத் திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைகளை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல பாசனக் கிணறுகள் எல்லாம் இன்றைக்கு பாறையாக இருக்கின்றன. அங்கே தண்ணீரே இல்லாத நிலைமையிருக்கிற போது, 75 ரூபாய் மின்சாரக் கட்டணம் என்று வாங்குவது என்பது விவசாயிகள் மத்தியிலே கலக்கத்தை ஏற்

படுத்தியிருக்கிறது. மின்சாரக் கட்டண பாக்கிக்காக 24 சத வீதம் வட்டி வாங்குவதாகச் சொல்கிறார்கள். எனவே அதை எல்லாம் அருள் கூர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் எண்ணிப் பார்த்து, விவசாயப் பெருமக்கள் வாழ்வதற்குத் துணையாக பல் வேறு சலுகைகளை அளிக்க வேண்டும் என்று உங்கள் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்த அறிவிப்பு வரை எந்த வசூலும் கூடாது என்ற அறிவிப்பினை வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகள் உடனடியாக தொடங்கப்பட வேண்டும். ''ஜாப் ஓரியன்டட் ஸ்கீம்'' என்று சொல்வதைப் போல, வேலையை அடிப்படையாக வைத்து, வேலைக்கு முக்கியத்துவம் என்று வைத்து, சாலைகள் அமைத்தல், ஏரிகளில் தூர் வாருதல், தண்ணீர் வருவதற்காக உள்ள கால்வாய்களை அதாவது சப்ளை சானல் எல்லாம் சரி செய்ய வேண்டிய பணிகள் இவற்றை எல்லாம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கொஞ்சம் மழை பெய்தாலும் கூட, ஏரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் வருகின்ற வகையில், அந்த வாய்க்கால்களை சரி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் புதராக மண்டிக் கிடக்கிற செடிகளை அப்புறப்படுத்தி, கால்வாய்களை சரி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சமுதாயப் பாசனக் கிணறுகளைத் தோண்டுவது மெத்தப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அத்துடன் விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு உடனடியாக 10 ஆயிரம் ரூபாய் அரசு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்குத் தீவனம் பெறுவது இன்றையதினம் மெத்த கஷ்டமானதாக இருக்கிறது. அரசு நியாய விலையில் கால் நடைகளுக்குத் தீவனத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து—இப்போதே உத்தரவில் கையெழுத்து போடுகிறார்கள். அதை நான் பார்க்கிறேன். அவர்களை இந்த மன்றத்தில் உள்ள அத்தனை உறுப்பினர்களின் சார்பிலும், மக்கள் சார்பிலும் பாராட்டவும் நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலிருந்தாவது எவ்வளவு வேகமாக இந்த அரசு செயல்படுகிறது என்பதைத் தாங்கள் தெரிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் வேகமாக செயல்பட வேண்டும் என்று சொன்னதற்கு இவ்வளவு உடனடியாக பலன் கிடைக்கும் என்பதில் என்னைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சி, இது தொடர வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் இயற்கை உபாதைகள் வந்து கொண்டே இருக்கின்றன. ஒன்று வறட்சி வருகிறது, இல்லை என்றால் வெள்ளம் வருகிறது. ஆகவே இதை எல்லாம் எண்ணிப் பார்த்து வறட்சி, வெள்ளம் வந்ததற்குப் பின்னால் நடவடிக்கை எடுப்பதை விட தொலை தூர நோக்கோடு பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எப்படி இந்த அரசு மனிதாபிமான உணர்வோடு படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு, பணத்தை மாதா மாதம் உதவித் தொகையாக—வேலை இல்லாதவர்களுக்கு உதவி என்று சொல்லுகிறோமோ-கொடுப்பதைப்போல விவசாயக் குடும்பங்களுக்கு, விவசாயக் கூலிகளுக்கு அவர்களுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டு 50 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரை கொடுத்தால் இந்த வறட்சிக் காலத்தில் வாழ்க்கை நடத்துவதற்கு உதவியாக இருக்கும். இதில் ஒரு பங்கை அரசு செலுத்தலாம். ஒரு பங்கை விவசாயத் தொழிலாளர்கள் அல்லது வங்கிகளிடமிருந்து இன்சூரன்ஸ் வாயிலாகவும் அரசு பெறலாம் என்ற ஒரு யோசனையை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தண்ணீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக இருக்கிறது. சென்னையில்—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நேற்று பத்திரிகையாளர்களுடன் சுற்றிப் பார்த்து வந்திருக்கிறார்கள்.—பல்வேறு இடங்களிலே மாணவர்கள் பள்ளிக்குப் போகாமல் தண்ணீர் எடுக்கச் செல்கிறார்கள் என்று பத்திரிகையிலே எழுதிக் கொண்டு இருக்கிறார்கள். இப்போதே இப்படி இருக்குமானால் வருகின்ற கோடை மாதங்களில் மிகக் கடுமையாக இருக்கும் என்ற முறையிலே நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்ததற்கு ஒப்ப தேவையான இடங்களில் கை இறைப்பான்கள் போட்டுக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வருகின்ற மாதங்களில் இன்னும் கொஞ்சம் அதிகமாக இருக்கும். ஆகவே அதிகமாக போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீண்ட கால தீர்வாக இருப்பதற்கு—இன்றைக்குக் காலையில் கூட பத்திரிகையில் ஒரு செய்தியைக் பார்த்தேன், மகிழ்ந்தேன்—மேற்குநோக்கி ஓடுகின்ற ஆறுகளை எல்லாம் கிழக்கே தமிழகத்திற்குத் திருப்பிவிட வேண்டும் என்று நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்திய அரசினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு சங்கரானந்த் அவர்களோடு பேசி

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 10

ஒரு அறிவிப்பை விடுத்து இருக்கிறார். அதை நான் பத்திரிகையிலே பார்த்தேன். மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளை எல்லாம் கிழக்கே திருப்பி விடுகின்ற முயற்சியை அரசு வரவேற்கிறது என்று சொல்லி அது சம்பந்தமாக 2 மாநிலங்களுடைய அமைச்சர்கள் கலந்து பேசுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற செய்தியையும் சொல்லியிருக்கிறார்கள். கேரளாவினுடைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. கருணாகரன் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே மெத்த அக்கறையோடு இருக்கிறார்கள். ஆகவே அதை பயன்படுத்திக் கொண்டு அரசு இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியின் காரணமாக தமிழகத்தில் இருக்கின்ற கரும்பு சாகுபடியின் நிலப்பரப்பும், கண்டு முதலும் கணிசமான அளவுக்கு குறைந்து இருக்கிறது. இதனால் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். எவ்வளவோ மன்றாடியும் கூட அரசு இந்த கரும்பு விவசாயிகள் விஷயத்தில் மிகுந்த அக்கறை கொள்ளவில்லை என்று நான் கூற விரும்புகிறேன். எந்த மாநிலத்திலும் வசூலிக்காத அளவுக்கு கரும்புக்கு கொள்முதல் வரி தமிழகத்தில்தான் வசூலிக்கப்படுகிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அதனால் பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகாவில் கொடுப்பதைப் போல குறைந்தபட்சம் டன் ஒன்றுக்கு 230 ரூபாய் கொடுப்பதற்கு அரசு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு வேதனையான சம்பவம், வறட்சியால் விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்தவேண்டும் என்றால் கடன் கொடுப்பதற்கு இடை வெளியை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். 400 அடி, 500 அடி, 600 அடி இடைவெளி இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு கூட்டுறவுத் துறைகளில் அல்லது வங்கிகளில் கடன் வாங்குகிறவர்களுக்குதான் இந்தச் சட்டம் என்று சொல்லுகிறார்கள். தனியாக சொந்தப் பணத்தை வைத்துக் கொண்டு கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு இந்தத் தடை கிடையாது என்று சொல்லுகிறார்கள். அதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்த்து வறட்சியை கருத்தில் கொண்டு இந்தத் தடையை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எப்போது பேசினாலும் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லுவார்கள், தமிழகத்தைக் குற்றம் சாட்டுகின்ற முறையில், இங்கே இருக்கின்ற உபரியான நிலங்களைத் தமிழக அரசு சரியாகப் பகிர்ந்து கொடுக்கவில்லை என்று சொல்லுவார்கள்,



1987 மார்ச் 10] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அதிலே அவ்வாறு 'கருத்தைச் சொல்லுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் மேற்கு வங்க மாநிலத்தில் எங்களுடைய கட்சி ஆட்சிக்கு வந்த உடனே 1977-ஆம் ஆண்டு என்ன செய்தார்கள் தெரியுமா என்று சொல்லுவார்கள். 12 லட்சம் ஏக்கராக இருந்த உபரி நிலங்களை எடுத்து உடனடியாக எங்கள் சர்க்கார் 7 லட்சம் ஏக்கர்கலை நிலம் அற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தது என்று கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் அன்றைக்குப் பேசினார்கள். பேசி முடித்த உடனே நான் இதை எந்த புள்ளி விவரத்தின் அடிப்படையில் சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன், உடனே அவர்களும் மார்க்சிஸ்டு கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களும் உங்களுடைய அரசு வெளியிட்ட அறிக்கையை வைத்து சொல்லுகிறோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கின்ற விவரங்களை மன்றத்திற்கு தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மன்றத்திற்கு தவறான தகவல் கொடுத்து விடக்கூடாது என்ற ஆதங்கத்தில் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். ராஜ்ய சபையில் 5–3–1984 அன்று கொடுக்கப்பட்ட எழுத்து பூர்வமான ஒரு பதிலை நான் கூற விரும்புகிறேன். தமிழகத்தில் இருக்கிற உபரி நிலங்கள் 89 ஆயிரத்து 83 ஏக்கர்கள் என்றும் தமிழகம் அதை எடுத்துக் கொண்டு அதை விநியோகித்தது 71 ஆயிரத்து 414 ஏக்கர்கள் என்றும்—நாம் கொடுத்து இருக்கிறோம்—அதில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 11–50)

அதே நேரத்திலே மேற்கு வங்கத்திலே 1,71,447 ஏக்கர் தான் மொத்தமான உபரி. 1984-ஆம் ஆண்டுவரைக் கணக்கு சொல்கிறது. அதிலே 71,840 ஏக்கர்கள்தான் அந்த அரசாங்கம் நிலமற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்திருக்கிறது என்கிற போது—அவர் சொல்வார். இங்கேயில்லை. இருந்தால் சொல்லியிருப்பார்கள்—எங்களுடைய அரசாங்கத்தினுடைய கணக்கைக் கேட்டு ஏற்றுக் கொள்ள முடியுமோ, இல்லையோ, மேற்கு வங்க ரெவின்யூ இலாக்காவிலிருந்து வந்த பதில் என்னிடம் இருக்கிறது. இதை நான் படிப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1978-ஆம் ஆண்டு வரை அதிகமாக இருந்த 1,17,428 ஏக்கர்களில் திரும்பப் பகிர்ந்து கொடுத்தது 36,095 ஏக்கர்கள் என்று 1978-லே ஆரம்பித்து, 1983-ஆம் ஆண்டு வரை 1,74,092 ஏக்கர்கள்தான் உபரியாக இருந்தன. அதிலே 73,000 ஏக்கர்கள் தான் பிரித்துக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த அளவிலே, இந்த அரசாங்கத்தினுடைய போக்கு விநோதமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். மேதகு ஆளுநர் உரையில், 'இப்புத்தாண்டின் தொடக்கத்தில் மாநில அரசின் நெடுநாளைய உறுதிமொழிகளில் ஒன்று நிறைவேறியது. ஏழை மக்களின் துயர் துடைக்கவும். அரசியலமைப்பில் மாநிலத்திற்குள்ள நெறிமுறைக் கோட்பாடுகளைக் கருத்திற் கொண்டும் 1—1—1987 முதல், கள், சாராயம் ஆகியவற்றைத் தயாரிப்பதையும், விற்பனை செய்வதையும், அருந்துவதையும் அரசு தடை செய்துள்ளது' என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிக்கை எப்படி இருந்திருக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன் தெரியுமா? 1-1-1987ஆம் தேதியிலிருந்து தமிழகத்திலே பரிபூரண மதுவிலக்கை நாங்கள் அமல் செய்கிறோம் என்று அறிவித்திருப்பார்களேயானால், தாய்க் குலத்தோரும், நலிவுற்றோரும் மெத்த வரவேற்றிருப்பார்கள். ஆனால் என்னவாயிற்று ஒரு பகுதியிலே கள், சாராயக் கடைகளை மூடிவிட்டு? மாறாக ஐ எம்.எஃப் எஸ். என்று சொல்கின்ற, பிராந்தி, ஒயின் கடைகளுக்கு அனுமதித்து, அது 2 மடங்கு, 3 மடங்கைப், பெருகியிருக்கிறது. சென்னை நகரத்திலே மட்டும் 92 சாராயக் கடைகள், 56 கள்ளுக் கடைகள் இருந்தன. ஆனால் அதற்குப் பின்னாலே 148 ஆக இருந்த கடைகளை மூடிவிட்டு, ஏழைகளின் துயரைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் புதியதாக 210 ஒயின், பிராந்திக் கடைகளுக்கு அனுமதி கொடுத்து, அதனுடைய எண்ணிக்கை இன்று 410 ஆக உயர்ந்திருக்கிறது. இது சென்னை நகரத்தினுடைய புள்ளி விவரம். தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இந்த மாதிரி கடைகளுக்கு, கட்சியினுடைய கிளை அலுவலகம் திறப்பதைப் போன்று பல இடங்களில் அதிகமான எண்ணிக்கையில் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய விளைவாக இன்றைக்கு கள், சாராயம் அருந்துவதில் கவனம் கொண்டவர்கள்....... (குறுக்கீடுகள்) பாதிக்கு மேல் இருக்கிறது. நேரத்தை அதிகமாக வீணடிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசிக்கொண்டே வருகிறார்கள். குறைகளையெல்லாம் சுட்டிக் காட்டுகிறார்கள். குறைகளை சுட்டிக் காட்டட்டும். அதற்கு அவை முன்னவர் அவர்கள் பதில் தருவார்கள். ஆனால் உவமை சொல்லும்போது ஓரளவிற்கு நல்ல கண்ணியத்தோடு சொல்வது நல்லது. கட்சிக் கிளைகளைத் திறப்பதைப் போன்று, கடைகளை திறக்கிறார்கள் என்று சொல்வது அவர் பேசுகின்ற தரத்திற்குப் பொருத்தமாக இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, நான் கிளைகள் என்ற அர்த்தத்திலேதான் சொன்னேனே தவிர, எந்த ஒரு அரசியல் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால் அவருக்குக் கொஞ்சம் வேதனை தருகிறது என்று சொன்னால் பல கிளைகள் இன்றைக்குத் திறக்கப்பட்டிருக்கின்றன என்று திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆகவே இன்றைக்கு பல்வேறு மடங்காக உயர்ந்திருக்கின்ற இந்தக் கடைகளை எடுத்துக் கொள்வோமேயானால், வரி நோக்கோடு அதிகப்படுத்துவதாக இருந்தாலும் கூட, காங்கிரஸ் கட்சியின் சார்பாக, விரைவிலே பரிபூரண மதுவிலக்கை அமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப் போலவே சாராயக் கடைகளை மூடிவிட்டாலும் கூட, சில இடங்களில் போர்டு போடாமலே கள், சாராயம் காய்ச்சுகின்ற, விற்கின்ற சூழ்நிலையிருக்கிறது. நான் இப்படிச் சொல்கின்றபோது, நாவலர் அவர்கள் எழுந்து கேட்கலாம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இல்லையா? ஓடுகிறது என்று சொல்கிறாரே, எப்படி ஓடுகிறது என்று அவர் கேட்க மாட்டார் என்று கருதுகிறேன். எந்த ஆட்சியிலே இருந்தாலும், அது தடுக்கப்பட வேண்டிய ஒன்று. கள், சாராயம் காய்ச்சுவதைத் தடைப் பண்ணுவதால், அரசாங்கத்திற்கு இன்றைக்கு ரூ. 300 கோடி வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய வரியும் போய்—சமுதாயப் பணிகளுக்காக கொடுக்கிறார்கள். இதை அருந்துகின்ற தமிழக மக்கள் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே இதுகுறித்து கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி நான் சொல்லுகின்ற நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆதாரம் சொல்லுங்கள் என்று கேட்கமாட்டார் என்று நான் கருதுகிறேன். இந்த வாரம் தினமணி கதிர் பத்திரிகையில் வந்த ஒரு பெட்டிஷனை மட்டும் நான் வாசிக்க விரும்புகிறேன். இந்த வாரம் தினமணி கதிரில் 'சென்னையில் மாணவர்கள் மத்தியில் சாராய நெடி வீசாமல் இல்லை. ஏனென்றால் இரகசியமாக பீடி, சிகரெட் விற்கும்பெட்டி கடைகளில் மோர் விற்பதுபோல் விற்க தொடங்கினர். இரகசியமாக தொழிலை நடத்துகின்றனர். ஆகவே வழகத்திற்கு மாறாக இப்பெட்டிக் கடைகளில் கூட்டம் காணப்படுகிறது. மதுவிலக்கை அமல்படுத்த வேண்டிய போலீசார் எதிர் நோக்கிய சவாலை வெற்றிசரமாக சமாளித்தே தீருவார்கள் அவர்கள்,' என்றும், மிகுந்த எச்சரிக்கையுடனும் உறுதியுடனும் போலீசார் செயல்படுவார்கள் என்றும் முன்பு கூறப்பட்டது. ஆனால் இப்படிப்பட்ட பெட்டிக் கடைகளில் கூட

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 10

சாராய விற்பனை நடக்கிறதே எப்படி என்று அவர்கள் முடித்திருக்கிறார்கள். அதையே நானும் என்னுடைய கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன் என்று சொல்லி அருள் கூர்ந்து தக்க நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மேதகு ஆளுநர் உரையிலே தமிழகத்திலே இருக்கிற மின்சாரப் பற்றாக்குறை சம்பந்தமாக புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். 1967-க்குப் பின்னாலே மின்சார உற்பத்தியிலே அரசு கவனம் செலுத்தியிருக்குமேயானால் தமிழகத்திலே இப்படிப்பட்ட இடர்ப்பாடு, பற்றாக்குறை வந்திருக்காது. ஆனாலும் கூட இப்போது எடுத்திருக்கிற முயற்சியை இன்னும் கொஞ்சம் அதிக முனைப்போடு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நான்கூட கேள்விப் படுகிறேன். குஜராத் மாநிலத்திலே விண்ட் பார்ம்ஸ் என்று சொல்லி காற்றாடி மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்கின்ற பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், தனியார் பலர் அந்தப் பணிகளை நடத்தி அவர்கள் பயன்படுத்திக் கொண்டது போக மீதியை ஜெனரல் பர்ப்பசுக்கும், அரசுக்கும் கொடுப்பதாக ஒரு முறை அங்கே இருக்கிறது. அதனாலே லாபம் ஈட்டுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே மின்சாரத்தைப் பொறுத்த வரையில் சின்னச் சின்ன யூனிட்டுகளாக தருவதற்கு, அது மாதிரி விண்ட் பார்ம்ஸுகளை அரசாங்கம் கைக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினையிலே நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் 8 ஆம் பக்கத்திலே 12-வது பாராவிலே ''கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கைத்தறித் தொழிலைப் பாதுகாப்பதும், கைத்தறி நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் அரசின் கொள்கையாகும். இம் மாநிலத்தில் இயங்கி வருகின்ற 5.56 இலட்சம் கைத்தறிகளில் 3.84 இலட்சம் கைத்தறிகள் 1986 நவம்பர் திங்களுக்குள் கூட்டுறவு ஏற்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 60 சதவீத தறிகளைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று மத்திய அரசு வரையறுத்துள்ள தேசிய இலக்கினை தமிழகம் ஏற்கனவே தாண்டிவிட்டது'' என்று சொல்லி இந்த அரசாங்கம் தனக்குத்தானே ஒரு சபாஷ் போட்டுக் கொள்கிறது.



1987 மார்ச் 10] [திரு. என். எஸ். வி. சித்தன்]

உண்மையான நிலைமை என்ன? இந்தக் கைத்தறி நெசவுத் தொழிலைப் பண்ணுகிற மக்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது? வறட்சியால் விவசாயிகள் படுகிற தொல்லையைப்போல இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே அவல நிலையில் இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய்க்கான ஜவுளிகள் தேங்கிக் கிடக்கின்றன. கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு பணம் பட்டுவாடா செய்யாமல் இருக்கின்ற காரணத்தாலே இன்றைக்குக் கைத்தறி நெசவாளர்களுடைய சங்கங்கள் செயல் இழந்த நிலையில் உள்ளன. பட்ட காலிலே படும்: கெட்ட குடியே கெடும் என்பதைப் போல அரசிடமிருந்து வரவேண்டிய ரிபேட் தொகையும் 3, 4 ஆண்டுகளாக வரவில்லை என்று கணக்குச் சொல்லுகிறார்கள்.

உதாரணமாக ஸ்ரீவில்லிப்புத்தூரிலே மட்டும் 12 சங்கங்களிலே 61 லட்சம் ரூபாய் பெறுமான ஜவுளிப் பொருள்கள் விற்பனை ஆகாமல் முடங்கிக் கிடக்கின்றன. மாநிலச் சங்கங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் இருக்கிற சங்கங்களுக்குமட்டும் கொடுக்க வேண்டிய பாக்கி 37½ லட்சம் ரூபாய் 1984-லேயிருந்து அரசிடம் இருந்து ரிபேட்டாக வரவேண்டிய தொகை 14.14 இலட்சம் ரூபாய் என்று ஸ்ரீவில்லிப்புத்தூர் சங்கங்கள் மட்டும் கணக்குச் சொல்வார்களேயானால் இராஜபாளையம், முகவூர், அச்சரப்பட்டி, மதுரை, கும்பகோணம் போன்ற பகுதிகளில் இருக்கும் நெசவாளர்களுடைய நிலைமை என்ன என்பதை அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நெசவாளர்களுக்கு நூல் கொடுக்க முடியாத காரணத்தாலே, நெய்த ஜவுளிகளுக்கு விலை கிடைக்காத நிலையில் சங்கங்கள் ஸ்தம்பித்துப்போய் இருக்கின்றன. நெசவாளர்கள் வேலையும் கூலியும் இல்லாமல் பட்டினி நிலையில் சென்னையை நோக்கி கால்நடையாக வந்து கொண்டிருக்கிற செய்திகள் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம் கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு என்பது கடந்த பல ஆண்டுகளாகவே இல்லை. இன்னும் நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் என்றுதான் நிலைமை இருக்கிற காரணத்தாலே கூலியை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரத்தில் மட்டும் 30 ஆயிரம் நெசவாளர்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 10

அதிலே இன்னொரு வேதனையான விஷயம். மாநிலச் சங்கங்கள் கைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்கிற நேரத்திலே 6 அல்லது 7 சதவீதம் லாபத்திற்குத்தான் கொள்முதல் செய்கிறார்களாம். ஆனால் அதே நேரத்தில் வெளியிடங்களில் விற்கும்போது 40 அல்லது 50 சதவிகிதத்திற்கு அதிகமாக விற்பனை செய்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே நெசவாளர்களுக்கு இன்னும் அதிக லாபம் வருகிற அளவுக்கு மாநிலச் சங்கங்கள் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1951 ஆம் ஆண்டில் இது போன்ற ஒரு நிலைமை உருவாகிய நேரத்தில் மாண்புமிகு அண்ணா அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உடனேயே இராமநாதபுரம் மாவட்டத்தில் நெசவாளர்களின் பசியைப்போக்க கஞ்சித்தொட்டிகளை ஏற்படுத்தினார்கள். அது போல ரிபேட் வழங்குவது போன்ற செயல்களினால் நிலைமையை ஓரளவு சீர் செய்தார்கள். முன்பும் இது போன்று சவால் எழும்பிய நேரத்தில் நாவலர் அவர்கள் கைத்தறித் துணிகளைத் தலையிலே தூக்கிச் சென்று நான் விற்பேன் என்று அறிவித்தார்கள். நான் உங்கள் மூலமாக நிதியமைச்சர் அவர்களைக் கைத்தறி நெசவாளர் துயரைத் துடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12–00)

மாநிலத்தில் சிறு தொழில்கள் சற்றேறக்குறைய 60,000 இருக்கின்றன. அதிலே 18,000 சிறு தொழில்கள் இன்றைக்கு இயங்க முடியாத நிலையில் இருக்கின்றன, அழிவு நிலையில் இருக்கின்றன. அதை ஒரு சமுதாயக் கடமையாக ஏற்றுக் கொண்டு அந்த நலிவுற்று இருக்கின்ற சிறு தொழில்களைப் புதுப்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு தொழில்களுடைய நிலை இப்படி என்றால் பெரியதொழில்களுடைய நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. உதாரணமாக கோயம்புத்தூரை எடுத்துக் கொண்டால், கோயம்புத்தூரில் இருக்கின்ற ஜனார்த்தனா ஆலை $3\frac{3}{4}$ ஆண்டுகள் மூடப்பட்டு 600 தொழிலாளர்கள் வாடிக்கிடக்கிறார்கள். ராமகிருஷ்ணா ஆலை $3\frac{1}{2}$ ஆண்டுகள் மூடப்பட்டு 400 தொழிலாளர்கள் வாடிக் கிடக்கிறார்கள். வசந்தா மில்ஸ் 3 ஆண்டுகள் கதவடைப்புச் செய்யப்பட்டு 1,500 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இழந்திருக்கிறார்கள. அலெக்ஸாண்டர், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ், அட்சயா டெக்ஸ்டைல்ஸ், ராதாகிருஷ்ணா மில்ஸ் போன்றவை



1987 மார்ச் 10] [திரு. என்.எஸ்.வி. சித்தன்]

எல்லாம் பல மாதங்களாக மூடப்பட்டு, படிப்படியாக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் கூட எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் தலைவர்கள் கோவையிலும், சென்னையிலும் மறியல் செய்தார்கள். பாத யாத்திரையாக அவர்கள் இங்கே வந்தார்கள். நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சட்டமன்றத்தில் இந்த ஆலைகளைத் திறப்பதற்கான அவசர நடவடிக்கையை எடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் 18–4–1986 ஆம் தேதி அன்று நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆறு மத்திய தொழிற்சங்கத் தலைவர்கள் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்த நேரத்திலே பல்வேறு வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் 17–10–1986 ஆம் ஆண்டு, அது பற்றிய முடிவு எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இரண்டு ஆலைகள் மட்டுமே திறக்கப்பட்டன. அட்சயா டெக்ஸ்டைல்ஸ் மற்றும் இன்னொரு மில்லும் திறக்கப்பட்டன. 27–2–1987 அன்று நாடாளுமன்றத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு குப்புசாமி அவர்கள் ஒரு கேள்வி எழுப்பிய நேரத்திலே, ஜவுளித் துறை துணை அமைச்சர், கிருஷ்ணகுமார் அவர்கள் கோவை, ஜனார்த்தனா, வசந்தா, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் போன்ற ஆலைகளைத் தமிழக அரசு நாட்டுடைமையாக்க வேண்டுமென்று விரும்பினால் குஜராத்திலே செய்துள்ளதைப்போல திட்ட முன்னோடியாக பணம் தர மத்திய அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று பதில் அளித்தார்கள். நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மூடிய ஆலைகளை அரசுடைமையாக்க வேண்டும் அல்லது நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும், திறப்பதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த ஆலைகள் தொடர்பாக பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. அவற்றைத் திரும்பப் பெறவேண்டும். இந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். அரசாங்கத்தின் சார்பிலே முன்னாலே உறுதிமொழி கொடுத்தார்கள், பரிசீலனை செய்கிறோம் என்று. அதற்குப் பின்னாலே சொன்னார்கள், தீவிரமாகப் பரிசீலனை செய்கிறோம் என்று. நம்முடைய மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள், தொடர்ந்து தீவிரமாகப்பரிசீலனை செய்கிறோம் என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, தீவிரமாகப் பரிசீலிக்கிறோம், தீவிரமாகப் பரிசீலிக்கிறோம் என்று சொன்னால், இதற்குக் காலவரையறை வேண்டாமா? எனவே, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பருவ மழை பொய்த்த காரணத்தினால் பல மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதைத் தீர்ப்பதற்காக குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த வாரியம் அறிவிக்கின்ற செயல்

முறை எந்த அளவில் இருக்கின்றது என்ற சந்தேகம் நமக்கு எழுந்திருக்கிறது. உலக வங்கி உதவியுடன் நடைமுறைப்படுத்துவதாக அறிவிக்கப்பட்ட, கோவை மாவட்டக் குடிநீர்த் திட்டப் பணியில் 1 சதவீதம் கூட முன்னேற்றம் இல்லை, சில அதிகாரிகளை நியமித்தார்கள். வேறு எந்தவிதமான வேலையும் நடைபெறவில்லை. என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய கடந்த காலப் பணிகள் குறித்து ஒரு ஆய்வு தேவை என்று சொல்ல விரும்புகிறேன். இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குழாய்கள் எவ்வளவு வாங்கப்பட்டன, துளைக் கருவிக்கு எவ்வளவு வாடகை போடப்பட்டது, எந்தனை இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது, கொடுத்த பணம் முறையாகச் செலவழிக்கப்பட்டதா போன்ற அனைத்து விவரங்களைப் பற்றி ஆராய்வதற்காக உயர்நீதி மன்ற நீதிபதி, தலைமைப் பொறியாளர் அந்தஸ்தில் இருக்கின்ற அதிகாரி போன்ற அதிகாரிகளைக் கொண்டு ஒரு விசாரணையை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படி நடத்துவது எதிர்காலத்திலே நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய நடவடிக்கைகளுக்கும் துணையாக அமையும், பாதுகாப்பாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே நலிவுற்றோருக்கு வீடு கட்டுகின்ற திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி எதிர் வரிசையிலிருந்து பல்வேறு சமயங்களில் பேசுகின்றபோது சொல்லி இருக்கின்றோம். இந்தத் திட்டம் பற்றி சென்ற ஆண்டு, ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் வீடுகள் என்ற கணக்கில் 3 ஆண்டுகளிலே 30 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு இருக்கின்ற விவரங்களைப் பார்ப்போமானால் 2-1/4 இலட்சம் வீடுகள் தான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக, நாம் குறிப்பிட்ட இலக்குகளை எப்படி அடைய முடியும் என்ற சந்தேகம் எழுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் 17 ஆம் பக்கத்திலே 21 ஆம் பாரவைப் படிப்போமானால், மாநில அரசு இன்று தங்களுடைய சொந்த நிதியிலிருந்து இதை அமுல்படுத்துவதுபோலத் தெரிகிறது. ஆனால் பின்னாலே அதே உரையிலே 19, 20 ஆம் பக்கங்களில் பார்க்கின்ற நேரத்திலே, மத்திய அரசினுடைய கிராமப்புற தேசீய வேலை வாய்ப்புத் திட்டம், நிலம் அற்ற கிராமிய தொழிலாளர்களுக்கு பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைத் திருப்பிவிட்டு, வணிக, தேசீய வங்கிகளிடமிருந்து கடன் உதவி பெற்று இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதுதான் உண்மை நிலையாக இருக்கிறது. வங்கிகளிடமிருந்து கடன் உதவி பெற தமிழக அரசு உத்திரவாதம் அளிக்க வேண்டும்.





இந்த நேரத்தில் மாநில அரசு என்று சொல்வது எந்த அளவிற்குப் பொருத்தமாக இருக்குமென்று எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் மத்திய அரசு கொடுக்கிற நிதியை திரை போட்டு மறைப்பதைப் போலத் தெரிகிறது. ஆகவே வெளிப்படையாகவே மத்திய அரசு கொடுக்கிற நிதியிலிருந்து திட்டப் பணிகளைக் கொண்டு வருகிறோம் என்று பல திட்டங்களில் சொல்லியிருப்பதைப்போல இதையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டத்திலே ஒரு புதிய அணுகுமுறை இருப்பதாக நான் பார்க்கிறேன். இந்தப் புதிய அணுகுமுறை இழை பிசகாமல் நிறைவேற்றப்படுமானால், கிராமப்புறங்களில் கூட்டுறவு மூலமாக தொழில் கூடங்கள் அமைத்து, கிராமப்புறத் தொழில் வளர்ச்சியையும், கிராம மக்கள் பொருளாதார மேம்பாட்டையும் உயர்த்துகிற அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் இவற்றைக் கண்காணிப்பது யார்? சத்துணவுத் திட்டம் செம்மையாக அமைய வேண்டுமென்று கருதுகிறபோது குழந்தைகள் உணவைத் தட்டிப் பறிக்கிற இடைத் தரகர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதனைச் சரிபார்க்க ஒரு வாரியம் அமைய வேண்டுமென்று அரசின் சார்பில் சொல்லப்பட்டிருக்கிற நேரத்தில் இப்போது கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு வீடு கட்டுவதற்கு செங்கல், சுண்ணாம்பு, மரம் போன்ற பல்வேறு கட்டுமானப் பொருள்களைக் கொடுக்கிற நேரத்தில் எப்படி சிராக, புகார்களுக்கு இடமின்றி அரசாங்கம் நிர்வகிக்கப் போகிறது என்ற சந்தேகத்தை என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. அரசாங்க மருத்துவமனைகளில் கொடுக்கிற மருந்துகளே களவாடப்பட்டு வெளியே விற்கப்படுகிற நிலையில் இந்தப் பொருள்கள் விற்கப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் என்ன முன்னேற்பாடுகளை எடுக்கவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு ஊராட்சி மன்றங்களில் தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் வீடு கட்ட வீடு ஒன்றுக்கு ஆறாயிரம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். மற்ற வசதிகளைச் செய்வதற்கு அதாவது ரோடு போடுதல், பாலம் அமைத்தல் போன்றவற்றிற்கு மூவாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த ஆறாயிரம் ரூபாயில் வீடு கட்டுவதென்றால் இயலாத காரியமாக இருக்கிறது. $1\frac{1}{2}$ அடி ஆழம்தான் அஸ்திவாரம் தோண்ட வேண்டியிருக்கிறது. சுடாத செங்கல்லை வைத்து, மண் சாந்தை வைத்து, தளம் இல்லாமல் வீடு கட்டுகிற நிலை இருப்பதால் ஆறாயிரம் ரூபாய் என்றிருப்பதை ஒன்பதாயிரம் ரூபாய் என்று உயர்த்துவதற்கு அல்லது போதுமான அளவிற்கு நிதியைப் பெறுவதற்கு தமிழக அரசு முயற்சி செய்ய வேண்டும். அது மத்திய அரசுத் திட்டமாக இருந்தாலும் கூட

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 0

மத்திய அரசுக்கு இந்த நிலையை எடுத்துச் சொல்லி அதிக நிதி
யைப் பெற வேண்டும். ஏனென்றால் கோடிக்கணக்கான
ரூபாயை நாம் செலவழிக்கிறோம். மத்திய அரசாங்கத்தின்
பணம், மாநில அரசாங்கத்தின் பணம் இதில் இருக்கிறது. அதற்
கான பயன் இருக்க வேண்டும் அல்லவா? வீடு கட்டி இரண்டு
ஆண்டுகளில் விழுந்துவிட்டால் என்ன பயன்? எத்தனையோ
காரியங்களை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதைப்
போல இதையும் நாம் வலியுறுத்தி அதிகமான தொகையை பெற
முயல வேண்டும். இருக்கிற யதார்த்த நிலையை நான் சொல்
கிறேன். ஆகவே, இதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த அறிக்கையில் 21-ஆம் பக்கத்தில் இந்த
அரசு மக்களாட்சி மரபுகளைக் கட்டிக் காப்பதுடன், நிருவாக
அமைப்பைச் சீர் செய்யவும் பொறுப்பேற்றுள்ளது என்று சொல்லி
ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடந்திருப்பதைச் சுட்டிக்
காட்டி இருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். ஊராட்சி
மன்றங்கள் தேர்தலுக்குப் பின்னாலே மாநகராட்சித்
தேர்தல்கள் நடத்தப்படாததற்குக் காரணம் என்ன? இந்த அர
சிற்குத் தயக்கம் இருக்கிறது என்று சொல்லமாட்டேன். இந்த
அரசு பயப்படுகிறது என்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்
றால் அண்மையில் நடந்த இடைத் தேர்தல் முடிவுகள் இதை
வெட்ட வெளிச்சமாக்கி இருக்கின்றன. எனவே, மாநகராட்சி
களுக்கும் தேர்தல் நடைபெற வேண்டும். அதற்கான தேதியை
நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அதிகாரி
களின் பதவிக் காலத்தை நீட்டிக்கிற இரண்டு மசோதாக்கள்
இன்றைக்கு வந்திருக்கின்றன. நாங்கள் ஆரம்ப நிலையிலேயே
எதிர்ப்பைத் தெரிவித்து இருக்கிறோம். ஆகவே, சமுதாயத்தின்
அடித்தளமாக இருக்கிற, நாற்றங்கால்களாக இருக்கிற கூட்டுற
வுச் சங்கங்களுக்கு அரசாங்கம் விரைந்து தேர்தல் நடத்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆளுநர் உரையின் 10 ஆம் பக்கத்தில் தமி
ழகத்தில் மகளிர் மேம்பாட்டிற்காக ஒரு திட்டத்தை அரசாங்கம்
நிறைவேற்றி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் உங்
கள் மூலமாகக் கேட்டுக் கொள்வேன்—இந்தத் திட்டம் எந்தப்
பகுதியில் செயல்படுகிறது? எந்த அளவிற்குச் செயல்படுகிறது
என்கிற விவரங்களை. மாண்புமிகு நாவலர் அவர்கள் சொல்ல
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் இரண்டு, மூன்று நாட்களாகப் பேசிய
பேச்சுக்களில் இந்திப் பிரச்சினை பற்றிப் பேசிய பேச்சுக்கள்
இரண்டு பக்கங்களிலிருந்தும் வந்தன. இதுகுறித்து சில விவ
ரங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். ''தாழ்வுற்று வறுமை



1987 மார்ச் 10] [திரு. என். எஸ். வி சித்தன்]

மிஞ்சி விடுதலை தறிக் கெட்டு தாழ்வுற்று நின்ற பாரத தேசந்
தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா'' அவர்கள் தலைமை
யில் போராடிக் கொண்டிருந்தபோது இரண்டு பிரிவினைக் குரல்
கள் நாட்டிலே ஒலித்தன. ஒன்று 1940 ஆம் ஆண்டில் லாகூரில்
முஸ்லீம் லீக் கட்சியினர் பாகிஸ்தான் பிரிவினை கோரிக்கையைத்
தீர்மானமாக நிறைவேற்றினர். மற்றொன்று அதே 1940 ஆம்
ஆண்டு திருவாரூரில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி திராவிடர்களின் அக
மாகிய சென்னை ராஜதானி பிரிட்டிஷ் சர்க்காரில் இந்தியாவிலி
ருந்து தனி நாடாகப் பிரிக்கப்படவேண்டுமென்று தீர்மானத்தைப்
போட்டார்கள். ஆகவே, காங்கிரஸ் கட்சிக்கு அந்த வரலாறு
உண்டு. அவர்களுக்கும் வரலாறு உண்டு. இந்தி தமிழர்களின்
மீது திணிக்கப்படுகிறது என்ற வாதம் இன்று நேற்று உருவானது
அல்ல. சிலருடைய முகத்திரையைக் கிழிப்பதற்காக வரலாற்றுப்
பாதையில் சில நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். 1920 ஆம் ஆண்டிலிருந்து 1926 ஆம் ஆண்டு
வரையில் சென்னை ராஜதானியை ஆட்சி செய்த ஜஸ்டிஸ் கட்சி
யினர்தான் முதன்முதலில் தமிழகத்தில் 104 உயர்நிலைப் பள்ளி
களில் தமிழர்கள் மீது இந்தியைப் புகுத்தினார்கள். ஏதோ
ஆதாரமில்லாமல் சொல்கிறேன் என்று அருள்கூர்ந்து எண்ணி
விடக்கூடாது.

(பிற்பகல் 12-10)

''இந்து'' பத்திரிகையிலே 18-2--1986 ஆம் தேதியன்றும்,
அதே ''இந்து'' பத்திரிகையில் 30-4-1938 ஆம் தேதியன்றும்
அதற்கான விவரங்கள் இருக்கின்றன. 1937 ஆம் ஆண்டு
இராஜாஜி சென்னை இராஜதானியின் முதலமைச்சராக இருந்த
போது இந்தி படிப்பதையும், அதை விஸ்தரிப்பதையும் எதிர்த்தத்
ஜஸ்டிஸ் கட்சிதான். எனவே, வகுப்புவாத பிரதிநிதித்
துவம் என்று சொல்லி, திராவிட நாடு என்று ஆரம்பித்து, நர்
மதை ஆறு நமக்கும் ஆரியத்திற்கும் இடையே மிக்க ரம்மியமாக
ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை சரிதம் படிப்பவர்கள் அனை
வரும் நன்கு அறிவர் என்று ஆரிய மாயையிலும், கைபர் கணவாயி
னுடைய அந்தப் புயல் வீசியது; அந்தப் புயல் மாட மாளிகை
களை வீழ்த்தியது; தமிழ் வீரர்களுடைய பாசறைகளைத் தவிடு
பொடியாக்கியது; சிலப்பதிகாரக் கோட்டையை இடித்து விட்
டது; திருக்குறளைப் புழுதி மண்ணாக்கியது; அந்தப் புய
லுக்கு 25,000 ரூபாய் தேவையில்லை; 25,000 உயிர் விடும்
வீரர்கள் தேவை; தேவையானால் தூக்குமேடைக்குச் செல்லத்
தயங்காத அவர்கள் தேவை என்று ஆரியப் புயலின் வீர வசன
மாகக் கட்டுரை எழுதிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்
என்பதை நான் இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். சட்டி
சுட்டதடா, கை விட்டதடா என்று, கொள்கையைக் கைவிட்டு
விட்டு, மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்றும்,
உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம்
என்றும் சொல்லி முதல்வர்களாகத் தங்களை மாற்றிக்கொண்ட
கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

முதல்வர் பதவியை விட்டு இறங்கியதும், மத்திய அரசால் இந்தி திணிக்கப்படுகிறது, தமிழ் அழிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்தி எதிர்ப்புப போராட்டம் நடத்திய அவரே—திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்—பத்திரிகையிலேயும், பாரதப் பிரதமராக நேரு இருந்தவரை திணிக்கப்படவில்லை; அன்னை இந்திராகாந்தி பதவியில் இருந்த வரை திணிக்கப்படவில்லை; ஆனால் இப்பொழுதுதான் இந்தி திணிக்கப்படுகிறது என்று பேசி 'முரசொலி' பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு வாதத்தை வைத்து கொண்டிருக்கிறார்கள். இந்தியத் திருநாட்டிலே, மதத்தின் பெயராலே யாரும் அரசியல் நடத்த முடியாது; ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதற்குப் பஞ்சாப் மாநிலம் ஒரு நிதர்சனமான உதாரணமாக இருந்து கொண்டிருக்கிறது; அதைப் போல மொழியின் பெயராலே ஆட்சியைப் பிடித்துவிட முடியாது என்பதை தமிழ்நாட்டு மக்கள் மிக அழகாக நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆட்சியிலே இருந்த காலத்திலே தமிழ் மொழியை வளர்க்க எந்த உருப்படியான காரியத்தையும் மேற்கொள்ளாத திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்க் காவலர்கள் என்று தம்மைக் காட்டிக் கொள்ள முயல்வதை உண்மையான உணர்ச்சியுள்ள எந்தத் தமிழ் மகனும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வசனமாக இருக்கிறதே தவிர, தமிழுக்கு நிலையான தொண்டு எதையும் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி செய்ததாக வரலாற்றுக் குறிப்பிலே இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாரத நாடு சுதந்திரம் பெற்ற பிறகுதான் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக—நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—1956 இல் அரியாசனத்திலே ஏற்றியது, காங்கிரஸ் கட்சிதான் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வந்தது என்ற பெருமைக்குரிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவன் நான் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் 'ரௌலட்' சட்டத்தை வரவேற்ற' பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு சென்னை ஐலன்ட் மைதானத்திலே வரவேற்புக் கொடுத்த, சைமன் கமிஷனை ஆதரித்த ஜஸ்டிஸ் கட்சியினுடைய வாரிசுகளாக இருப்பவர்களிடமிருந்து இதை எதிர்பார்ப்பதில் நியாயம் இல்லை என்பதைக் கூறிக் கொள்ள [illegible]றேன்.



ஒரேயொரு கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தியா முழுவதும் தமிழ்நாடு தவிர நவோதயா மாதிரிப் பள்ளிகளைத் தொடங்கி அவை நடந்து வருகின்றன. மதுவிலக்கிலே மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டுகின்ற நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் நவோதயா மாதிரிப் பள்ளியை தமிழ்நாட்டிலே திறப்பதிலேயும் மற்ற மாநிலங்களைப் பின்பற்றவேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

நவோதயா மாதிரிப் பள்ளிகளைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்திலே இரண்டு வாதங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. ஒன்று, நவோதயா மாதிரிப் பள்ளி மூலமாக இந்தி திணிக்கப்படும் என்பது. இரண்டாவது வாதம், ஏழைகள் புறக்கணிக்கப்படுவார்கள் என்பது. இந்த இரண்டு குற்றச்சாட்டுகளிலும் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் தமிழகத்திலேயோ அல்லது எங்கேயுமோ நவோதயா பள்ளிகளைத் திறப்பதற்காக இரண்டு கோடி ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாய் வரை இனாமாகக் கொடுக்கிறது. மாநில அரசாங்கம் நிலம் கொடுத்தால் போதும். அப்படி அந்த நவோதயா பள்ளிகளிலே மாணவர்களைச் சேர்க்கின்ற நேரத்திலே, கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு அங்கே அனுமதி கொடுக்கிறார்கள். அதிலேயும்கூட இன்னமும் நான் சொல்லுவேன். கால் பங்குதான் நகரத்திலே இருப்பவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். இதிலே மூன்றிலே ஒரு பங்கு பெண் மக்கள் படிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. நுழைவுத் தேர்விலிருந்து ஆறாவது வகுப்பு வரையிலேயும் தமிழ் மொழியிலே படிக்க எந்தவிதமான தடையும் இல்லை நவோதயா பள்ளியிலே. எட்டாம் வகுப்பு வரை நவோதயா பள்ளியிலே சேர்ந்து படிக்கின்ற மாணவர்களுக்குத் தொடர்ந்து தங்கள் தாய்மொழியிலே பாடங்களைப் படிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நம்மைப் பொறுத்த வரையில், தமிழ் மொழி மூலமாகத்தான் நவோதயா பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள் படிப்பார்கள். எட்டாவது வகுப்பு வரை இந்தி மொழியும், ஆங்கில மொழியும் மொழிப்பாடமாக மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படும். ஆகவே, ஆங்கில மொழியும், இந்தி மொழியும் கற்றுக்கொண்டு, இரண்டாண்டுகளிலே அந்த மொழியிலே அவர்கள் விசேஷத் தன்மையைப் பெறுவார்கள். எட்டாவது வகுப்பிற்குப் பிறகு 12-வது வகுப்பு வரை மாணவர்கள் ஆங்கிலம் அல்லது இந்தி மூலமாகப் பாடங்களைப் படிக்க நவோதயா பள்ளி வாய்ப்பளிக்கிறது. இந்தியை வைத்துத்தான் பாடங்களைப் படிக்க வேண்டும் என்பதில்லை. கட்டாயம் கிடையாது. மாணவர்கள் விரும்பினால் ஆங்கிலத்தில் பாடத்தைப் படிக்கலாம்.

நான் இப்பொழுதும் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற தமிழையும் பாடமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் வலியுறுத்துகிறது. தமிழ்நாடு அரசும் வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழக அரசினுடைய ஒப்புதல் பெற்று, 'சென்ட்ரல் போர்டு ஆப் செகண்டரி எஜுகேஷன்' உடன் இணைக்கப்பட்டு தமிழகத்திலே இருக்கின்ற 150 பள்ளிகளிலே ஆங்கில மொழி மூலமாகத்தான் மாணவர்கள் பாடங்களைப் படிக்கிறார்கள். நீங்கள் மும்மொழித் திட்டத்தில்தான்...... (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நவோதயா பள்ளியையும் சென்ட்ரல் போர்ட் ஆப் செகண்டரி எஜுகேசன் பள்ளியையும் இணைத்துச் சொல்கிறார்கள். அது தவறு. சி.பி.எஸ். இ. பள்ளியிலே இருக்கிற நிலைமையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நவோதயாவைப் பொறுத்த வரைக்கும், அங்கு இந்தியும், ஆங்கிலமும் தான் என்று திட்டவட்டமாக மத்திய அரசு மாநில அரசுகளுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறது. அதை நாம் ஏற்க மறுத்து இருக்கிறோம். தாய் மொழியில்தான் கல்வியைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறோம். இன்னும் இதிலே இருக்கிற ஒரு மிக முக்கியமான பிரச்சினை, பட்டிக்காட்டுக் குழந்தைக்கு, கிராமப் புறக்குழந்தைகளுக்கு 75 சதவீதம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அங்கே நுழைவுத் தேர்வை வைக்கிறார்கள். எம்.பி.பி.எஸ்., என்ஜினியரிங் போன்ற படிப்புகளுக்கு நாம் நுழைவுத் தேர்வை வைப்பதுபோல், அங்கேயும் நுழைவுத் தேர்வை வைக்கிறார்கள். வசதி படைத்த குழந்தைகள் அல்லது ஏற்கனவே பெற்றோர்கள் படித்தவர்கள், படிப்புச் சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் அதிக மதிப்பெண்களைப் பெற்று, தேர்வு பெற்றுவிடுகிறார்கள். அப்படித் தேர்வு பெற்ற குழந்தைகளில் 20 சதவீதம் குழந்தைகளை அடுத்த மாநிலத்திற்கு அனுப்பவேண்டும் என்ற ஒரு கட்டாயத்தையும் கொண்டு வருகிறார்கள். இப்படி இருக்கிறபோது ஆளுவதற்கு என்று ஒரு அறிவு வர்க்கமும், கூலி வேலை செய்வதற்கு என்று தேர்வு பெறாத ஒரு வர்க்கமும் இருக்குமானால், ஒரு கிளாஸ் வாரையே ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு, அறிவுள்ளவர்கள் ஆளப் பிறந்தவர்கள், மற்றவர்கள் எல்லாம் உழைக்கப் பிறந்தவர்கள் என்ற ஒரு சாபக்கேடான நிலைமை இந்திய சமுதாயத்திலே வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அதை எதிர்க்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட விரும்பினேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நன்றி. நவோதயா பள்ளிகள் நகர்ப்புறங்களில் ஆரம்பிக்கப்படுவதே





யில்லை. இப்போது இருக்கிற கல்வி முறையிலே—ஆங்கிலேயர்கள் வழிவழியாக விட்டுப்போன கல்வி முறையிலே நகரங்களில் வாழ்கின்றவர்கள், வாய்ப்பு வசதி பெற்றவர்கள், ஆயிரக்கணக்கான ரூபாய் நன்கொடை என்று கொடுத்து தங்களுடைய குழந்தைகள் கான்வென்ட் பள்ளிகளில் ஆங்கிலத்திலே படிக்கவும், இந்தியிலே படிக்கவும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். நான் கேட்கவிரும்புவது, இந்தியாவிலே, கிராமப் புறங்களிலே இருக்கிற இளைஞர்களுக்குக் கொடுக்கப்பட இருக்கிற கல்வி, நகர்ப்புறங்களிலே இருப்பவர்களுக்கு தனிச் சொத்தா என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் நானும் பட்டிக்காட்டிலேயிருந்து வந்தவர்கள்தான். என்னுடைய வீட்டுப் பிள்ளைகள் வேண்டும் என்றால் அல்லது மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் வேண்டுமென்றால், இந்த நுழைவுத் தேர்விலே சூழ்நிலை காரணமாக வாய்ப்பு கிட்டுகிற காரணத்தால், வெற்றி பெற்றுவிட முடியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுடைய உறவினர்களோ அல்லது பங்காளிகளோ அல்லது என்னுடைய உறவினர்களோ, பங்காளிகளோ, இன்னும் பட்டிக்காட்டில் கோவணம் கட்டிக்கொண்டு உழைக்கிற உழவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகள் என்றுமே உழைக்கின்ற உழவர்களாகவும், கூலிகளாகவும், அடிமைகளாகவும் இருக்கவேண்டுமா? அத்தகைய நவோதயா கல்வி முறை வேண்டுமா ? வேண்டாம் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, இதே வாதத்தைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். என் சார்பிலே அவர்கள் வாதாடியதற்கு நன்றி. நகரத்திலே இருக்கிறவர்கள்தான் இந்த வாய்ப்பைப் பெறுகிறார்கள், கிராமத்திலே இருக்கிற அறிவாற்றல் மிகுந்திருக்கிற குழந்தைகளுக்கு இந்த வாய்ப்பை அளிக்க வேண்டாமா ? அதனை இந்த நவோதயா பள்ளிகள் வழங்குகின்றன. கிராமப்புறங்களில் இருக்கிற இளைஞர்களுக்கு வாய்ப்புகளை நவோதயா பள்ளிகள் வழங்குகின்றன. நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னுடைய குழந்தையோ, என்னுடைய பேரக் குழந்தையோ, என்னுடைய பராமரிப்பில் இருக்கிற குழந்தையோ—அல்லது இன்னும் சொல்லப் போனால், மாணவர்கள்—எந்த மொழியிலே படிக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கிற உரிமை அந்த மாணவர்களுக்கு இருக்க வேண்டும். மாணவர்களைப் பெற்றவர்களுக்கு இருக்க வேண்டும். மாணவர்களைப் பராமரிக்கின்றவர்களுக்கு

இருக்க வேண்டுமே தவிர, அந்த உரிமையைத் தடுப்பதற்கு, அந்த உரிமையிலே நுழைவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. நான் இன்னமும் சொல்வேன் தமிழ், தமிழ் என்று சொல்கிறோமே, அந்தத் தமிழை பாடமொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கு நாம் என்ன ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்? தமிழைப் பாட மொழியாக எடுத்துக் கொண்டவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன முன் அறிவிப்பைக்கொடுத்து இருக்கிறது? நான் இன்னமும் கேட்க விரும்புவேன், இங்கேயிருக்கிற வசதியானவர்கள், அமைச்சர் பெருமக்கள், முன்னாள் அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் வீட்டுக் குழந்தைகள் என்ன கார்ப்பரேசன் பள்ளியிலா படித்துக் கொண்டிருக்கிறார்கள்? பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலா படித்துக் கொண்டிருக்கிறார்கள்? ஆகவே, அவர்களுக்கு எல்லாம் மறுக்கப்படுகிற கல்வியை, இன்றைக்கு நவோதயா இலவசமாக, ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கிற நேரத்திலே, நீங்கள் குறுக்காக நிற்கக் கூடாது. அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். தி.மு.க. எதிர்க்கிறது என்பதற்காக, நாமும்........

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவோதயா பள்ளிகளினுடைய நோக்கமே, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பிறந்திருக்கிற பிள்ளைகள் எல்லோருமே ஒரு காலத்தில், இந்தி மொழியை, அடிப்படை மொழியாக, தாய் மொழியாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிற திட்டம். தாய் மொழி பயிற்று மொழி அல்ல என்கிற நிலையில், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் கொண்டு வந்து, இந்தி மொழி மட்டுமே பயிற்று மொழி என்ற நிலையில், ஆங்கிலத்தை, ஓரளவிற்கு விஞ்ஞான ரீதியாக மட்டும் பயன்படுத்த வேண்டும் என்ற நிலையை, நவோதயா கல்வி முறை கொண்டிருக்கிறது. அதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தி மொழி என்று சொன்னாலே ஏன் இவ்வளவு வெறுப்பு வருகிறது? யார் எந்த மொழியில் படிக்க விரும்பினாலும் படிப்பதற்கு அனுமதி கொடுப்போமே. எத்தனை மொழிகள் இருக்கின்றன? பிரஞ்சு இருக்கிறது, லத்தீன் இருக்கிறது. அத்தனை மொழிகளிலும் படிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வாய்ப்பு வேண்டும் என்றுதான் அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். தமிழிலே இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவர் அவர்களே, தாய்மொழி வேண்டாம் என்று சொல்லி, மாற்று மொழியில் படிக்கின்ற கல்வி முறை உலக நாடுகளிலே கூட



இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று அல்ல. தாய்மொழி தமிழ் வேண்டாம், மாற்று மொழி, இந்தி மொழியில் மட்டும் தான் படிக்க வேண்டும் என்ற—அந்த இந்தி மொழி ஒன்றே பள்ளிமொழி என்ற—நிலையைக் கொண்டு வருவதுதான் நவோதயா பள்ளியினுடைய கொள்கை. அது இந்திய சமுதாயத்திற்கே தீங்காக விளைந்துவிடும் என்பதற்காகவும், தமிழ்ச் சமுதாயம் என்றும் அதை ஏற்றுக் கொள்ளாது என்பதற்காகவும், தான் இதை நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

(பிற்பகல் 12-20)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் நவோதயா பள்ளிகளில் ஆங்கிலமும் இந்தியும்தான் பாட மொழி என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டதற்காகச் சொல்கிறேன். இது எனக்குக் கிடைத்த தகவல். இந்தியா முழுவதும் ஒரே ஒரு மொழி என்று கொண்டு வருவதற்காக இது என்று சொன்னார்கள். நம்முடைய தேசிய அளவில் ஒரு மொழி இருக்கட்டுமே, இருந்தால் என்ன? நம்முடைய குழந்தைகள் படித்து வேறு மாநிலங்களுக்குச் சென்று அதிகமான வேலை வாய்ப்புகளைப் பெறட்டுமே! (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ் பயிற்சி மொழியாவதற்கு நாங்களும் சேர்ந்து வாதாடுவோம் என்று முதலிலே சொன்னீர்கள். இப்போது இந்தி விரிந்து இருந்தால் என்ன, ஒரே மொழியாக இருந்தால் என்ன என்று கேட்கிறீர்கள். (குறுக்கீடு) அப்படிப் பேசியிருக்கிறீர்கள். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** நான் சொல்வது முரணாக இல்லை. தமிழும் பயிற்சி மொழியாக இருக்கலாம் என்று நாம் கேட்கலாம். அதிலிருந்து நாங்கள் விலகவில்லை. அதே நேரத்தில் இந்தியை ஏன் பாடமொழியாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றுதான் கேட்கிறேன். இதிலே முன்னுக்குப் பின் முரணாக ஒன்றும் இல்லை.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தமிழ்நாட்டில் நவோதயா பள்ளியைத் திறக்கட்டும். அதில் மாணவர்கள் படிக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்ப்போம். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். திரு. சித்தன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்சியில் ஒருவர் பேசும்போது அதே கட்சியைச் சேர்ந்த எல்லோரும் எழுந்து நிற்கக்கூடாது. (குறுக்கீடுகள்) அவரே பதில் சொல்வார். திரு. வேங்கடரமணன் அவர்களும்

திரு. வெங்கடரெட்டி அவர்களும் துணைக்கு வரவேண்டாம். (குறுக்கீடு) இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப இடமில்லை ; நான் அனுமதிக்கவில்லை. நீங்கள் நினைத்தபோது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்க முடியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை பற்றிப் பேசினால் நல்லது. மொழிப் பிரச்சினை பற்றிப் பேசினால் அதற்கு இப் போது நேரம் இல்லை. அதைத் தனியாக வைத்துக்கொண்டால் நானும் இரண்டு மணி நேரம் பேசத் தயாராக இருக்கிறேன். ஆக, மொழிப் பிரச்சினையைத் தனியாக வைத்துக் கொண்டால் அதுபற்றி முழுக்கப் பேசலாம். இப்போது ஆளுநர் உரைமீது முக்கியமான கருத்துக்களை எடுத்துச் சொன்னால் அதற்கு விளக்கமாகப் பதில் சொல்லலாம். அதற்கே நமக்கு நேரம் இல்லை. ஆகவே, ஆளுநர் உரையில் ஆழ்ந்து பேசுங்கள் ; மற்றப் பிரச்சினைகளில் ஆழ்ந்து பேசுவதற்கு நேரம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மொழிப் பிரச்சினையிலே உங்களுக்கு ஒரு கருத்து இருப்பதைப் போல எங்களுக்கும் ஒரு கருத்து இருக்கிறது. 4, 5 தினங்களாக இந்தச் சபையிலே என்ன நடக்கிறது என்று நாம் பார்க்கிறோம். எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம். (குறுக்கீடு கள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படியே விவாதித்துக் கொண்டு போனால் பிரச்சினை தீராது. தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே, இந்த ஆளுநர் உரையிலே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துவருகிற பல்வேறு முயற்சிகளை நம்முடைய அரசு பாராட்டிக் கூறி இருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச் சினையில் மத்திய அரசு எந்த ஒரு முடிவு எடுத்தாலும் கூட— இது வெளிநாட்டுப் பிரச்சினை என்றாலும் தமிழ் மக்களுடைய பிரச்சினையா இருப்பதால் நமக்கு அக்கறை இருக்கின்ற கார ணத்தால்—தமிழக முதலமைச்சரை அழைத்து, ஒவ்வொரு முறை யும் தொடர்பு கொண்டு, அதன்படி நடவடிக்கை எடுத்து வரு கிறார்கள். இந்தப் பிரச்சினையில் மத்திய அரசிலே இருக்கிற அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களும் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கிற திரு. ஜி. கே. மூப்பனார் அவர்களும் அக்கறையோடு செயல்பட்டு வருகிறார்கள். பத் திரிகைகளில் வருகின்ற செய்திகளைப் பார்க்கிறோம். பாரதப் பிரதமர் நாடாளுமன்றத்தில் பேசும்போது இலங்கை அரசு தமிழ் மக்கள்மீது பொருளாதாரத் தடையை விதித்திருப்பதினால்



இராணுவம் மூலம் பிரச்சனையைத் தீர்க்க எண்ணிக் கொண் டிருக்கிறது ; ஆகவே, பேச்சு வார்த்தைகளை நிறுத்தியிருக் கிறோம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, இந்தியப் பேரரசு இது சம்பந்தமாக சில நட வடிக்கைகளை எடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன நடவடிக்கை என்பதை வெளிப்படையாகச் சொல்ல முடியாது. நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று நம்பலாம். இன்று காலையில் இந்து பத்திரிகையைப் பார்த்தேன். அடுத்த 24 மணி நேரத்தில் இந்திய அரசு ஒரு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவில் இந்திய அரசாங்கம் எடுக்கிற பல்வேறு நடவடிக்கைகளுக்கும், முயற்சிகளுக்கும் தமிழக அரசு துணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஒரேயொரு வார்த்தையை மட்டும் கடைசி யாகத் தெரிவித்துக் கொண்டு முடிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இலங்கைப் பிரச்சினையிலே இராணுவத்தை அனுப்ப வேண்டு மென்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது. தமிழ் ஈழம்தான் தீர்வு என்பது கோஷம் போட வேண்டுமென்றால் அழகாக இருக்குமே தவிர அது காரிய சாத்தியமா என்பதை அருள்கூர்ந்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். காலிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவாக தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சி கொடுக்கிறது என்று குற்றம் சாட்டும் நாம் தமிழ் ஈழத்தை எப்படி ஆதரிக்க முடியும்? தமிழர்களுக்காக இராணு வத்தை அனுப்ப வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது. புனித பொற்கோயிலில் நுழைந்திருந்த தேச விரோத சக்திகளை வெளியேற்றவும், அவர்களுக்காகக் குவிக்கப் பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றவும் இராணுவத்தை அனுப்பிய போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த திராவிட முன்னேற்றக் கழகம் அயல் நாடான இலங்கையின் மீது படை எடுக்க இராணு வத்தை அனுப்ப வேண்டுமென்று சொல்வது எந்த வகையில் நியாயமாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினையில் இந்தியப் பேரரசும், தமிழக அரசும் எடுத்துக்கொள்கிற முயற்சிகளுக்கு நம்முடைய பாராட்டைச் சொல்லி இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்பு கிறேன்.

வருகிற ஆகஸ்ட் மாதம் 19 ஆம் தேதி அமரர் சத்தியமூர்த்தி அவர்களுடைய நூற்றாண்டு தினம் வருகிறது. அமரர் சத்திய மூர்த்தி அவர்கள் சுதந்திரம் பெறுவதற்கான பல்வேறு போராட் டங்களில் முன்னணியில் இருந்தவர். இன்னும் பெருந்தன்மை யோடு சொல்ல வேண்டுமென்றால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்குக் குருவாக இருந்தவர். அப்படிப்பட்ட மேதை

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 10

யி டைய பிறந்த தினம், பிறந்த நூற்றாண்டு தினம் ஆகஸ்ட் மாதம் 19 ஆம் தேதி வருகிறது. நான் ஒன்றை உங்கள் மூலமாக தமிழக அரசினிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். தீரர் சத்திய மூர்த்தி அவர்கள் சென்னையில் மேயராக இருந்தபோது பூண்டியிலே இருக்கிற ஏரி செயல்படத் தொடங்கியது. அந்த ஏரிக்கு சத்தியமூர்த்தி சாகர் என்று பெயரிடப்பட்டிருந்தாலும் கூட அது வழக்கிலே இல்லை. ஆகவே, அதனை சத்தியமூர்த்தி சாகர் என்று அறிவிக்க வேண்டும். அதற்கென ஒரு வாரத்தை சத்திய மூர்த்தி அவர்களின் நூற்றாண்டு வாரம் என்று அறிவித்து பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடுமியான்மலையில் இருக்கின்ற விவசாயப் பண்ணைக்கு அமரர் சத்தியமூர்த்தி அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு இன்னும் பல்வேறு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (குறுக்கீடுகள்). அவர் பிறந்த திருமயத்திலே அவருக்குத் தகுந்த நினைவுச் சின்னத்தை எழுப்ப வேண்டுமென்றும் நான் கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு **முதலமைச்சர் அவர்களுடைய** பெருந்தன்மையான வேண்டுகோளைக் கருத்திலே ஏற்று மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும், எனக்கும்** சம்பவம் பற்றி நடந்த விவாதத்தையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரனுக்கும், எனக்கும் நடைபெற்ற விவாதத்தையும் முழுமையாக இந்த அவைக்குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். முதலமைச்சருடைய பெருந்தன்மைக்காக இதை நான் செய்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் 69 உறுப்பினர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தி இருக்கிறார்கள். ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ள கொள்கைகளையும், குறிக்கோள்களையும், கருத்துக்களையும், திட்டங்களையும், சாதனைகளையும் வரவேற்று, ஆதரித்து, பாராட்டி ஆட்சியின் நடைமுறைக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க **அகற்றப்பெற்றது.**



1987 மார்ச் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த அரசு கடந்த ஆண்டு எந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையில் என்னென்ன முக்கியமான பணிகளை நிறைவேற்றியது என்பதை மேலெழுந்தவாரியாக விளக்கிக் காட்டவும் நிகழ் காலத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளை ஒட்டி நிறைவேற்றிக் கொண்டு வருகிற பணிகளைச் சுட்டிக்காட்டவும் எதிர் காலத்தில் மாநிலத்தின் மேம்பாடு கருதியும் மக்கள் நல்வாழ்வு கருதியும் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப்பணிகள் என்னென்ன என்பதைப்பற்றிக் கோடிட்டுக் காட்டவும் ஆளுநர் உரை அவையினருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. 'விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும்' என்ற புறநானூற்று அடிகளுக்கேற்ப எல்லாவற்றையும் இந்த ஆளுநர் உரையிலே குறித்துக் காட்டவும் முடியாது : தொகுத்து எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்லிவிடவும் முடியாது.

(பிற்பகல் 12-30)

ஆளுநர் உரையில் சொல்ல வேண்டியவற்றை, சிலவற்றை மட்டும்தான் கோடிட்டுக் காட்டமுடியும். கொள்கை பற்றி, மேலெழுந்த வாரியாக, வருகின்ற 1987–88-வது ஆண்டில், இந்த அரசு எந்த நோக்கத்தினுடைய அடிப்படையில், குறிக்கோளுடைய அடிப்படையில் பணியாற்ற இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டவும், இறந்த காலத்தில் எந்தெந்தப் பணிகளிலே கவனம் செலுத்தி வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவும் ஆளுநர் உரையை அரசு பயன்படுத்துகின்றது.

பிறகு, பொதுவாக வரவு–செலவுத் திட்டங்களை விளக்குவதற்காக நிதிநிலை அறிக்கை வைக்கப்பட இருக்கிறது. அந்த நிதி நிலை அறிக்கையில், பொதுவாக எல்லாத் துறைகளைப் பற்றிய வரவு-செலவுத் திட்டங்கள் எந்த எந்த வகைகளில் இருக்கும் என்று கோடிட்டுக் காட்டுகின்ற சூழ்நிலை ஏற்படும். அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரளவுக்கு அந்தந்தத் துறைகளைப் பற்றிய வரவு-செலவுத் திட்டங்களும், முழு விவரங்களும் எந்த அளவுக்கு இருக்கும் என்பதை அறிந்துகொள்ளலாம்.

அதோடு முடிந்து விடுவதில்லை. அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகள் ஒவ்வொரு துறையிலும் வருகின்றபோது, ஒவ்வொரு துறையைப் பற்றிய முழு செயல்முறைகளும், அப்போதுதான் வரும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பிய பல்வேறு கருத்துக்களும், விஷயங்களும் இதிலே சொல்லப்படவில்லையே, சொல்லப்படவில்லையே என்று எடுத்துச் சொன்னாலும், அவை எல்லாம்

இதிலே கோடிட்டுக் காட்டப்படும் ; ஆகவே, கொள்கை அளவிலே ஆளுநர் உரையும், வரவு-செலவுத் திட்டத்தை விளக்கிக் காட்டுகின்ற அளவிலே நிதிநிலை அறிக்கையும். செயல்முறைகளை விளக்கிக் காட்டுகின்ற வகையிலே தனித் தனியாக மானியக் கோரிக்கைகளும், இந்த அவையின் முன் வைக்கப்படுகின்றன. அவற்றின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள், தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவிக்க நிரம்ப வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

இந்த ஆண்டு ஆளுநர் உரையில் சுமார் 200 கோடி அளவுக்கு மேல் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும், பலரின் கோரிக்கையை நிறைவேற்றக் கருதியும், கொள்கையை நிலைநாட்டவேண்டும் என்ற எண்ணம் கருதியும், ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்தவேண்டும் என்ற எண்ணத்தை மனதிலே வைத்துக்கொண்டும், மதுவிலக்குத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு இருப்பது ; ஐந்தாண்டுத் திட்டம் இலக்குக்கு மேல் நிறைவேற்றப்பட்டு வருவது ; மின் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது ; தொழில் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கான நடைமுறை முயற்சிகள் ; சிறு தொழில் பெருக்கத் திட்டம் ; கைத்தறித் தொழில் மேம்பாடு, வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள்; வறட்சி நிவாரணப் பணிகள் ; குடிநீர் வசதி வாய்ப்புப் பெருக்கத் திட்டம் ; முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் ; சிறார்களுக்குச் சீருடை வழங்கும் திட்டம் ; புத்தகம், குறிப்பேடுகள் வழங்கும் திட்டம், சிறார் நலன் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை நல சத்துணவுத் திட்டம், ஏழை-எளிய இளம் சிறார்களுக்கும். ஏழைத் தாய்மார்களுக்கும் காலணி வழங்கும் திட்டம், வீடு கட்டும் பொருட்களைக் கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்யும் திட்டம், வீட்டு வசதி பெருக்கத் திட்டம், வடாற்காடு மாவட்டத்தை நிர்வாக நலன் கருதியும், மக்களுடைய வசதி வாய்ப்புக்கள் கருதியும், இரண்டாகப் பிரிக்கும் திட்டம், பல்வேறு துறைகளில் பரவலாக மேம்பாடு காணும் முறையில் இரண்டாயிரம் கோடி ரூபாய் திட்ட முயற்சி, இலங்கை வாழ் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு, நல்ல அமைதியான வாழ் நிலையை அவர்களுக்கு உருவாக்குத ஆகிய இக் கருத்துக்கள் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன

இந்த ஆளுநர் உரையில் எதுவுமே இல்லை என்றும் வறட்சிதான் இருக்கிறது என்றும், சிந்தனையே அடியோடு இல்லை என்றும், செயல்முறை இல்லை என்றும் உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இந்த உரை விளைச்சல் இல்லாத வயல் என்றும், மணமே இல்லாத மலர் என்றும் வெளிச்சம் இல்லாத விளக்கு என்றும், பாலைவனம் போன்றது என்றும் கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் வருத்தப்படவும் இல்லை. அவரவர்கள் மனப் பாங்கு எப்படி இருக்கிறதோ



மனப் போக்கு எப்படி இருக்கிறதோ, உள்ளத்தில் இருப்பது தான் உரையிலே வருமே தவிர, வேறு எந்த வகையிலேயும் வராது. ஆகவே அவர்களிடத்திலே இருக்கிற இயல்புக்கேற்ப வந்தது என்றுதான் நாம் எண்ணிக் கொள்ளவேண்டும்.

"காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு'

என்பது வள்ளுவருடைய மொழி. அந்த மொழிக்கு, குறளுக்கு ஏற்ப நாம் பொருள் கொண்டு ஆறுதல் அடையவும், அமைதிப் பெறவும் வேண்டுமே தவிர, இப்படிச் சொல்லிவிட்டார்களே, இப்படிச் சொல்லலாமா என்று திருப்பிக் கேட்கிற நிலையிலே இல்லை. ஆனாலும்கூட, மற்றவர்கள், விமர்சிக்கிறவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள். மக்களை மயங்க வைக்கிற உரை ; இந்த உரை மாயாஜால வித்தை காட்டுகிற உரை ; மக்களின் ஓட்டுகளைப் பறிக்கிற ஒரு உரை என்று சொல்லுகிற போது அவர்கள் தங்களின் மன எரிச்சலின் அடிப்படையில் சொன்னாலும்கூட உள்ளபடியே அது மக்களுடைய அன்பைப் பெறுகிற உரை, ஆதரவைப் பெறுகிற உரை என்பதையே அவர்கள் மறைமுகமாக ஒப்புக் கொள்கிறார்கள் என்று எண்ணுகிறபோது, எந்த நோக்கத்தின் அடிப்படையில் இந்த உரை உருவாக்கப்பட்டதோ அதை அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள் என்றுதான் அர்த்தம். அவர்கள் உள்ளம் அழுக்காறு படிந்திருக்கிறது என்பதையும் நம்மாலே உணர முடிகிறது. இந்த உரையைக் கண்டு அவர்கள் எரிச்சல் படுகிறார்கள் என்று நம்மாலே உணர முடிகிறது.

மக்களுடைய வாக்குகளை இந்த உரை அதிகமாகக் கொண்டு வந்து சேர்க்கும் என்று சொல்லுகிறார்கள் என்றால் அதைவிட அரசியலில் வேறு என்ன வெற்றி இருக்க முடியும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மக்களை மயங்க வைக்கிற—அவர்களை எங்கள் பக்கத்திலே ஈர்க்க வைக்கிற உரை என்றாலும் அந்த மயக்கத்தைப் போக்கி, தெளிவை உண்டாக்குகிற ஆற்றல், அறிவு எதிர்க்கட்சிகள் பக்கத்தில் இல்லை என்றால் அதையும் மீறி மக்களை மயங்க வைத்து நாங்கள் வெற்றி பெறுகிறோம் என்றால் இந்த உரையின் நோக்கமே வெற்றி பெற்றுவிட்டது என்றுதான் பொருள். அந்த வகையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டிலே இதே அவையில் பேசியதை இங்கே குறிப்பிடுவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே அவையில் குறிப்பிட்டார். ''எனது ஆட்சிபற்றி அரசியல் வித்தகர்களின் வாழ்த்து மடல்களை நான் எதிர்பார்க்கவில்லை. ஏழை ஒருவன் இன்முகத்தோடு இந்த ஆட்சியில் எனக்குப் பலன் கிடைத்திருக்கிறது என்று சொல்லி மகிழ்ச்சியடைவானேயானால் அதனையே நான் மிகப் பெரிய பாராட்டு மடலாகக் கருதுவேன்''.

எனவே இந்த உரையினைப் பற்றி, இந்த அரசு செய்கிற—செயலாற்றுகிற திறன்களைப்பற்றி வல்லுநர்கள், அரசியல்வாதிகள், கருத்தாலே மாறுபட்டவர்கள் பாராட்டுவார்களா அல்லது வாழ்த்து மடல்களை அளிக்கின்றார்களா என்பதல்ல முக்கியம். இதனாலே இன்னின்ன பலன்கள் எங்களுக்கு இருக்கின்றன, நலன்கள் இருக்கின்றன, இது எங்களை வாழ வைக்கிறது என்று ஏழைகள் மகிழ்ச்சியடைகிறார்கள் என்றால் அவைதான் எங்களுக்குச் சிறந்த வாழ்த்து மடல்கள், பாராட்டு மடல்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்களே அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு திட்டங்களை இங்கே நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த அளவுக்கு ஏழை எளிய சாதாரண மக்களுடைய அன்பையும் அரவணைப்பையும் மகிழ்ச்சியையும் பெறுகிற சூழ்நிலை இந்த அரசுக்கு இருந்து வருகிறது.

88 லட்சத்து 88 ஆயிரம் ஏழை எளிய சிறார்கள் இங்கே சத்துணவு பெறுகிறார்கள் என்றால் அவர்கள் உள்ளங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகின்றன என்று பொருள். அந்த மகிழ்ச்சியை இந்த அரசு பெறுகிறது.

59 லட்சம் சிறார்கள் சீருடைகளையும் இலவசப் புத்தகங்களையும் பெறுகிறார்கள் என்றால் அவர்களுடைய மகிழ்ச்சியையும், விருப்பத்தையும் இந்த அரசு பெறுகிறது என்று பொருள்.

இரண்டு லட்சத்து 90 ஆயிரம் முதியவர்களும், விதவைத் தாய்மார்களும், ஊனமுற்றவர்களும் ஓய்வூதியத்தையும் ஆண்டுக்கு இரண்டு முறை இலவசமாக உடைகளையும் பெறுகிறார்கள் என்றால் அவர்கள் மகிழ்ச்சி பெறுகிறார்கள் என்றால் அதுதான் இந்த ஆட்சிக்குப் பாராட்டுதலாக அமைகிற ஒன்றாகும்.

5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக வைத்திருக்கிற பல லட்சம் விவசாயிகள் இங்கே இலவசமாக மின்சாரம் பெறுகிறார்கள். பல மாநிலங்களில் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 38 காசு, 41 காசு 34 காசு, 32 காசு, 28 காசு என்று விவசாயிகளிடம் வாங்குகிற



சூழ்நிலை இருக்கிறபோது—அதுபற்றி கோரிக்கை வருகிறபோது அதையெல்லாம் விளக்கமாகச் சொல்லலாம் என்றாலும் கூட—இங்கே 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தருகிறோம் என்ற காரணத்தால் அந்த விவசாயிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறதே அதுதான் உள்ளபடியே இந்த அரசுக்குப் பாராட்டுதலாக அமைகிறது என்று பொருள்.

8 லட்சம் குடிசை வாழ் மக்கள் இன்றைக்கு இலவசமாக மின் விளக்கு பெறுகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் மகிழ்ச்சியைத்தான் இந்த அரசு பாராட்டுதலாகப் பெறுகிறது என்று பொருள்.

ஒரு கோடியே 18 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கடந்த 8 அல்லது 9 ஆண்டுக் காலமாக ஒரே விலையில் அரிசி கிடைக்கிறது என்றால் அவர்கள் பெறுகிற மகிழ்ச்சிதான் இந்த அரசுக்கு கிடைக்கிற பாராட்டுதல்கள் என்று பொருள். மத்திய அரசு நமக்குக் கொடுக்கிற அரிசியின் விலையைக்கூட இதுவரை 7 தடவை மாற்றி உயர்த்திக் கொண்டே வந்திருக்கிறது. அவ்வாறு மாற்றி மாற்றி உயர்த்திக் கொண்டே வருகிற சூழ்நிலை இருந்தாலும்கூட கடந்த 8 ஆண்டு காலத்திற்கு முன்பு ஒரு கிலோ ரூ. 1.75 காசு என்று நாம் நிர்ணயித்த நிலையிலிருந்து மாறாயல் இன்றைக்கும் ஒரு கோடியே 18 லட்சம் கார்டுதாரர்களுக்கும் அரிசி விநியோகிக்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக ஏழை எளிய மக்கள், சாதாரண நடுத்தர மக்கள் நன்மை பெற வேண்டும் என்று இந்த அரசு நாட்டம் செலுத்தி வருகிறது என்பதில்தான் இந்த அரசுக்கே பாராட்டு இருக்கிறது. இதன் காரணமாக மொத்தமாக ஆண்டொன்றுக்கு 95 கோடி, 100 கோடி, 105 கோடி அளவுக்கு இழப்பு இந்த அரசுக்கு ஏற்பட்டாலும் அதைச் சமாளித்துக் கொண்டு மக்களுடைய நலன்களைக் கருதி செய்து வருகிறது.

(பிற்பகல் 12-40)

இந்த அரசு செயலற்ற அரசு, எதையும் சாதிக்க இயலவில்லை என்று கூறி சிலபேர் அகமகிழ்ந்தாலும், மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் காரண, காரிய விளக்கங்களைக் கூறி, எப்படிப்பட்ட இக்கட்டான நேரத்திலும் அந்தப் பணிகளை எல்லாம் எப்படிச் செய்து முடித்திருக்கிறதென்கிற தன்மையிலும், போடுகின்ற திட்டங்களை நிறைவேற்றும் முனைப்பு உள்ளத்தோடு இருந்து மற்றவர்களுடைய பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும் பெறுவதில் வெற்றி பெற்றிருக்கிறதென்றும் சிறப்பாக எடுத்துக் காட்டினார்கள்.

அடுத்து, 3, 4 ஆண்டுகளாக 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அகில இந்தியாவிலும் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. 20 அம்சங்களிலே 15, 16 அம்சங்களில் தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது. அதற்கான பாராட்டுதல்களை நாம் தான் தொடர்ந்து பெறுகிறோம். ஓர் உறுப்பினர் பேசும்போது, 20 அம்சங்களை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு முழுத் தொகையையும் தருகிறதென்று குறிப்பிட்டார்கள். அது ஒவ்வொரு அம்சத்திற்கும் வேறுபடுகிறது. சில அம்சங்களுக்குக் கூடுதலாகக்கிடைக்கிறது, சில அம்சங்களுக்குக் குறைவாகக் கிடைக்கிறது. சில அம்சங்களைப் பொறுத்த வரையில் இந்த மாநில அரசு பொறுப்பேற்று நடத்த வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு அம்சத்தையும் கணக்கிடும்போது, கடன். மானியம், முழுப் பொறுப்பு என்கின்ற தன்மையில் அமையலாம். இருந்தாலும் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களைப் பொறுத்தவரையிலும் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற அக்கறை கொண்டு, இந்திரா காந்தி அமையார் அவர்கள் கொண்டு வந்துள்ள அந்தத் திட்டங்களை, அவர்கள் இருந்த காலத்திலேயே முழு நம்பிக்கையோடு, அந்தப் பொறுப்புக்கேற்ப நடைமுறைப்படுத்திட ஆர்வம் காட்டி, இந்த அரசு அதை நடைமுறைப்படுத்துவதிலும் மாவட்டத்திற்கு மாவட்டம் போட்டி உணர்வோடு செயலாற்றி, வெற்றி பெறும் பாங்கைக் காணலாம்.

குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது, அகில இந்தியாவிலும் தமிழகம் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற, மத்திய அரசிலிருந்து பெறுகின்ற உதவியைக் கடைசிவரையிலும் முறையோடு பயன்படுத்தி, அதன் மூலம் பெற வேண்டிய நன்மைகளைப் பெற்று, அதிலும் முதலிடம் வகித்து, சென்ற இரண்டு ஆண்டுகளாக அகில இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களிலே தமிழகம் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே முனைப்போடு பாடுபட்டு, முதலிடத்தைப் பெற்றதோடு, அதற்குரிய 2-1/2 கோடி ரூபாய் பரிசையும் பெற்றிருக்கிறது. தொடர்ந்து 2 ஆண்டுகளாக தமிழகம் அந்தப் பரிசைப் பெற்றது. சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டிலும் பெற்றது. இந்த நடைமுறை ஆண்டிலும் அந்தப் பரிசைப் பெற முடியும் என்ற அளவுக்கு இலக்கினை மக்கள் நல்வாழ்வுத் துறையினர் பெற்றிட அதற்கான •சாதனைகளைச் செய்துகொண்டு வருகின்றனர்.

முன்னாள் படைவீரர்கள் பொறுத்து செய்ய வேண்டிய நலன்கள் குறித்து நிதி திரட்டி, அவர்களுக்கு வசதிகள், வாய்ப்புகள் செய்துள்ளதைப் பொறுத்தவரையில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தைவிட, அரியானா மாநிலத்தைவிட அங்கே அதிகமான அளவுக்கு முன்னாள் படை வீரர்கள் இருந்தாலும், தமிழகம் முதலிடத்தைப் பெற்று, அதற்குரிய பெரிய கோப்பையைப் பெற்றிருக்கிறது. இந்தியப் பிரதமர்



மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களிடமிருந்து அதற்குரிய அமைச்சர் என்ற முறையில் நானே டெல்லிக்குச் சென்று, அந்தப் பெரிய கோப்பையைப் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறேன்.

எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், இப்படி முடிந்த அளவுக்கு செய்ய வேண்டிய காரியங்களை எல்லோருடைய உதவி, ஆதரவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்கிறோம். இந்த நிலையில், ஒன்றுமே நடக்கவில்லை, தமிழ் நாடு பலவீனமாகிவிட்டது, எல்லாம் கெட்டுவிட்டது, எல்லாம் போய்விட்டது என்று சிலர் சொல்கிறார்கள். 'நொய்ய உரையேல்', 'மிகப்படக் கூறேல்' என்பது ஆத்திச்சூடி. இருப்பது உண்மை. உண்மையைச் சொல்ல வேண்டும். காண்பது ஒன்று, கூறுவது மற்றொன்றாக இருக்கக்கூடாது என்பது ஆத்திச்சூடி. பெரிய பெரிய இலக்கியங்கள் படிக்காவிட்டாலும், ஆத்திச்சூடி படிக்கலாம். அக நானூறு, புற நானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றைப் படிப்பது கடினம். புரிந்துகொள்வதும் கடினம். ஆனால் ஆத்திச்சூடி படிப்பது கடினமில்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், குற்றங்கள், குறைகள் இருக்கின்றன என்றால் அவற்றைச் சுட்டிக்காட்டுவது மாண்புமிகு உறுப்பினர்களின் கடமை. நானும் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்களும் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். இப்படி சுட்டிக் காட்டுவதன் மூலமாக, அதைத் திருத்துவதற்கு அமைச்சர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அந்தத் துறைகளில் இப்படிப்பட்ட குற்றங் குறைகள் நிகழ்கின்றன என்று சுட்டிக் காட்டி, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லத் தான் வேண்டும். அதை சுட்டிக்காட்டுங்கள் என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். ஆனால் உண்மை இருக்க வேண்டும். உண்மைக்கு மாறாக எடுத்துச் சொல்லும்போது உண்மையாக நடக்கிறவர்கள் பாழ்படுகிற அளவுக்கு சில பல நேரங்களில் சில தன்மைகள் ஏற்படுகின்றன. ஆகவே பல்வேறு நன்மைகளை நாம் செய்து கொண்டு வருகிறோம்.

நம்முடைய நாடு ஏழ்மை மிகுந்த நாடு, வறுமை மிகுந்த நாடு, இல்லாமை நிறைந்த நாடு, அடிப்படை வசதிகள், தேவைகள் கூட பெற முடியாத அளவுக்கு ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் ஏராளமாக இருக்கிற நாடு. ஆகவே 100-க்கு 49 பேர் சராசரியாக மக்கள் ஏழ்மை கோட்டுக்கு—line of poverty-ன் கீழே இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட அந்த அளவுக்கு தமிழகத்தில் இருக்கிறார்கள் என்ற கணக்கும் இருக்கிறது. நம்மைவிட ஏழ்மையான மக்கள் இருக்கிற மாநிலங்கள் இன்னும் 7, 8 இருக்கின்றன. ஏராளவுக்குக் குறைந்த, ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற

மக்கள் இருக்கிற மாநிலங்கள் பஞ்சாப், அரியானாவாகத்தான் இருக்கின்றன. 13, 14 சதவீதம்தான் அங்கே இருக்கிறது. ஆனாலும் கூட நாம் அந்த நிலைகளை மாற்றி வளர்ச்சியடைவதற்கான முயற்சிகளை செய்து கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருகின்றபோது நாம் இலவசக் கல்வி தந்தோம். ஏற்கனவே காங்கிரஸ் இருந்த காலத்தில் 8-வது வகுப்பு வரை தந்தார்கள். பிறகு 10-வது வகுப்பு வரையிலும் இலவசக் கல்வி தருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. பிறகு கல்லூரி வரை தரப்பட்டது. ஆதி திராவிட பெருமக்களுக்கும், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் கல்வி வசதிகள் எல்லாம் செய்யப்பட்டன. ஆகவே 5-வது வகுப்பு வரையிலும் பள்ளிக்குப் போகிற மாணவர்களில் 3-ல் ஒரு பகுதியினருக்குத்தான் சத்துணவு என்று எல்லாம் இருந்தது. அவைகளை எல்லாம் மாற்றி 365 நாட்களும் சத்துணவு. அது மட்டும் அல்லாமல், 2 வயதிலிருந்து 14 வயது வரையில் உள்ள அத்தனை பேருக்கும் சத்துணவு. சத்துணவு போட்டதற்குப் பிறகு அவர்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படுகிற—ஏழை எளிய மக்களுக்கு 59 இலட்சம் பேருக்கு-- சீருடை தருகிறோம். சீருடை தருவதோடு மட்டும் அல்லாமல் அவர்களுக்கு குறிப்பேடுகளும். நோட்டுப் புத்தகங்களும் தருகிறோம். அந்த குறிப்பேடுகளும், நோட்டுப் புத்தகங்களும் வழங்குவதற்குக் கிட்டத்தட்ட 14 கோடி ரூபாய் செலவாகிறது. சீருடை என்ற வகையில் கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு செலவாகிறது. சத்துணவு போடுகின்ற வகையில் 200 கோடி ரூபாய் செலவாகிறது. ஆனாலும் செம்மையாக இந்தப் பணி நடைபெற வேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன தன்மைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது உள்ளபடியே அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும். இந்தக் கண்காணிப்பு சரியாக இருக்க வேண்டும். பொதுமக்களின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

இப்போது அவர்களுக்கு காலணி வழங்கவேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஏழை எளிய சிறார்களுக்கும், ஏழை எளிய தாய்மார்களுக்கும் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது சாதாரணமாகக் கொடுக்கப்படவேண்டிய ஒன்று தான். இதை பல மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் இதையே ஒரு குற்றமாக எடுத்துக்கொண்டு கிண்டல் செய்வதற்கும், கேலி செய்வதற்கும் இதில் எதுவும் இல்லை. காலணி வழங்குவது என்பது அரிய செயல்களில், அரிய தன்மைகளில் ஒன்றாகத்தான் தரப்படுகிறது. இந்த காலணி வழங்க வேண்டும்



என்பதை நபிகள் நாயகமே வற்புறுத்தி இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒருவருடைய பாதுகாப்புக்குத் தேவைப்படுகிற இன்றியமையாப் பொருட்களிலே காலணி வழங்குவது ஒன்று. ஆகவே இருக்கிற நிதி நிலைமைக்கு ஏற்ப அவ்வப்போது செய்து தரப்படுகிற சூழ்நிலைக்கு ஏற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இதற்கு ஓரளவு செலவு ஆகும். அதுவும் பட்ஜெட் வருகிறபோது அதை எல்லாம் கணக்கிட்டு சொல்ல வேண்டி வரும். ஆனாலும் கூட (குறுக்கீடு) அது எல்லாம் எவ்வளவு ஆகிறது என்று அப்போதுதான் கணக்குப் போட முடியும். ஆகவே (குறுக்கீடு) இப்போதும் தாவணி கொடுத்துக் கொண்டு தான் வருகிறோம். இனிமேல் தான் தாவணி கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இப்போதே சீருடை கொடுக்கும்போது மாணவர்களுக்கு கால் சட்டையும், மேல் சட்டையும் கொடுக்கிறோம். பெண்களுக்கு பாவாடை மேல் சட்டை கொடுக்கிறோம். வயதான பெண்களுக்கு பாவாடை, மேல் சட்டை, தாவணி ஆகிய மூன்றும் சேர்த்துத்தான் கொடுக்கிறோம். புதிதாக தாவணி தரவேண்டிய அவசியம் இல்லை. இப்போதே தாவணி தந்து கொண்டுதான் இருக்கிறோம். புடவை தருகிறோம், புடவையை விட சிறியது சிற்றாடை, அதை விட சிறியது தாவணி. புடவையே தருகிறபோது, வேட்டியே தருகிறபோது தாவணி தருவதிலே என்ன தப்பு? இதிலே என்ன கிண்டல் இருக்கிறது? காலுக்கு செருப்பு இல்லை, கால் வயிற்றுக் கஞ்சியும் இல்லை, கையிலே காசும் இல்லை என்று மறைந்த கம்யூனிஸ்டு தலைவர் ஜீவானந்தம் அவர்கள் பாடினார் அந்த காலத்திலே. எதற்கு நான் சொல்லுகிறேன் என்றால், இருக்கிற நிதி வசதிக்கு ஏற்ப பல்வேறு கஷ்டங்களை நாம் சந்தித்துக்கொண்டு மக்களுக்கான சில பல நன்மைகளைச் செய்கிற திட்டத்தை அவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள். பல்வேறு நோய்பாடுகள் மற்றவை எல்லாம் ஒருவருக்கு வந்து சேருவதற்கு கால் காரணமாக இருக்கிறது. கண்ட கண்ட இடத்திலே காலை வைக்கிறபோது கிருமிகள் ஏறக் காரணமாக இருக்கிறது. ஆகவேதான் காலணிகள் இருக்கவேண்டும் என்பதை மருத்துவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொல்லிய அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

(பிற்பகல் 12—50)

இதிலே கேலி செய்யவும், கிண்டல் செய்யவும் ஒன்றும் இல்லை. இதற்கு ஒத்துழைப்பு தரவேண்டும். எல்லோருடைய கால்களுக்கும் எப்படி சரியாகச் செய்வீர்கள் என்றால், சட்டை எல்லோருக்கும் ஒரேமாதிரியாகச் செய்ய

முடியுமா ? செருப்பிற்கு என்று ஒரு அளவு வைத்திருக்கிறோம் நம்பர் 3, 4, 5 என்று அவரவர்கள் காலுக்குத் தகுந்தாற்போல் கணக்கிருக்கிறது. எனவே அவரவர்கள் காலுக்கென்று நாம் கணக்கு வைத்திருக்கிறோம்.

அதுபோன்று பனியன் என்றால், ஒவ்வொருவருக்கும் எத்தனாவது நம்பர் என்று கணக்கிருக்கிறது. அதுமாதிரி செருப்புக்கும் கணக்கிருக்கிறது. சட்டைக்கும் கணக்கிருக்கிறது, எல்லோருடையதையும் அளந்து பார்த்துக்கொண்டுசெய்யவேண்டுமென்பதுஅல்ல. சட்டைகள், கால்சட்டைகள் தைத்துக் கொடுக்கும்போது, செருப்பு தைத்துக் கொடுப்பதில் என்ன கஷ்டங்கள் இருக்கப் போகின்றன ? இதற்கெல்லாம் ஒத்துழைப்பு தரவேண்டும். கஷ்டங்கள், வேறுபாடுகள் இருந்தால் அதற்கு நல்ல உதவிகள் செய்ய முன்வரவேண்டுமே தவிர, வேறு வகையில் அதைக் கிண்டல் செய்வது, மற்றவைகள் செய்வது நல்லதல்ல.

அதுமட்டுமல்ல, இந்த அரசு செய்யும் பணிகள், மற்றவைகள் எல்லாம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இதிலே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு கூடுமானவரையில் யாரிடத்தில் நிதியை வாங்கினாலும் அந்த நிதியை கூடுமானவரையில் நல்லமுறையில் பயன்படுத்தி வருவதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகையில் வந்ததைத்தான் திரும்ப எடுத்து விளக்குகிறேன். ஆக உலக வங்கியினுடைய சார்பாக நடத்தப்படும் 'அர்பன் எட்ஜ்' என்கின்ற ஒரு பத்திரிகை, 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் இதழில் ஒரு செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறது.

உலக வங்கியிடம் சுமார் 60 நாடுகள் நிதியுதவி பெறுகின்றன. இதில் இந்தியாவிலே உள்ள தமிழ்நாடு மாநிலம் தான் உலக வங்கியின் கடனுதவிப் பணத்தைப் பயன் உள்ள முறையில் செலவிடுவதில் முதலிடம் பெறுகிறது. மற்ற நாடுகள் தமிழகத்தின் நடைமுறைகளைப் பார்வையிட்டு, பின்பற்ற வேண்டும். 60 நாடுகளுக்கு உலக வங்கி கடனுதவி தந்திருக்கிறது. அந்த 60 நாடுகளில் பயனுள்ள வகையில்—மாநிலங்கள் கூட அல்ல—60 நாடுகளில் பயனுள்ள வகையில் இந்தக் கடனுதவியைப் பயன்படுத்தியது தமிழ்நாடு தான். தமிழ்நாட்டைப் பிற மாநிலங்கள் பின்பற்ற வேண்டுமென்று உலக வங்கி, அதனுடைய 'அர்பன் எட்ஜ்' என்ற பத்திரிகையில் செப்டம்பர் இதழில் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறது.



அதுமட்டுமல்ல, உலக வங்கியினுடைய அந்த நிதி உதவியால் நிறைவேற்றப்படும் பயிற்சி மற்றும் பார்வையிடும் திட்டத்தை தமிழ்நாடு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது என்று உலக வங்கியின் மூன்று நபர் குழுவினுடைய தலைவர் திரு. லெஸ்லி அபி என்பவர் சிறப்பாகக் குறிப்பிட்டு, அது இந்து 20–10–1986 இதழில் மிகத் தெளிவுபட வந்திருக்கிறது.

"The World Bank has complimented Tamil Nadu for a successful implementation of the Training and Visit Programme which has been funded by the Bank. Mr. Leslie Abe, Leader of the Three Member Team from the Bank, who reviewed the working of the Programme was much impressed. Mr. Abe remarked that the object of the programme had been achieved and the involvement of the officials in the programme was very deep and their visits to farms were regular. He was also impressed about the adoption of the various technologies by the farming community." என்று இந்த மூன்று நபர் குழுவினுடைய தலைவர், அந்த டி. என். பி. ஸ்கீம் என்று சொல்லப்படுகின்ற உலக வங்கி நிதியுதவியைப் பெறுகின்ற வகையிலே சிறப்பாக இருக்கிறது. என்று சொல்லியிருக்கிறார் ஹட்கோ நிறுவனம் தருகின்ற பணத்தை வாங்கி நாம் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் கட்டித்தரப்படும் வீடுகளுக்கும், மற்றவைகளுக்கும் சிறப்பாகப் பயன்படுத்துகிறோம் என்பது மட்டுமல்ல, அதில் முதலீடு வைக்கிறோம் என்பதை ஹட்கோ நிறுவனத்தின் தலைவர் சிறப்பாகத் தெரிவித்து, 20–10–1986-ல் சொல்லியிருக்கிறார்கள். ஹட்கோ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி வாரியம் அளிக்கும் நிதியுதவியைப் பயன்படுத்துவதிலும் தமிழ்நாடு இந்தியாவின் மாநிலங்களிலே முதலிடம் வகிக்கிறது என்று அதனுடைய தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். The Chairman, HUDCO said, "Tamil Nadu stood first among the States in India in utilising the financial assistance offered by the HUDCO".

அதே மாதிரி நேற்றைக்கு முன்பு மின்சாரத் துறை அமைச்சர், மற்ற அமைச்சர்கள் கூட மேட்டூர், சேலத்திலே, பேசும்போது சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "தமிழகத்திலே உள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரத்தை

அளித்து பெரிய சாதனையை தமிழக அரசு புரிந்திருக்கிறது. அது மட்டுமல்ல, பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தமிழக அரசு. கொடுக்கப்பட்ட இலக்கை மிஞ்சி விட்டது. இது மிகவும் பாராட்டுக்குரியது'' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முடிந்த அளவிற்குச் செய்வதில், இந்த அரசு எந்தெந்தக் கட்டத்தில் எப்படியெப்படி செய்து வந்திருக்கிறது என்பதற்கான காரண விளக்கங்களை மிகச் சிறப்பாகச் சொல்லுகிறோம்.

ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் மிக முக்கியமாக எடுத்துச் சொன்னது வறட்சி நிலை பற்றியதாகும். மாநிலத்தில் ஆங்காங்கு தென் மேற்குப் பருவக் காற்றின் வாயிலாகவும், வட கிழக்குப் பருவக் காற்றின் வாயிலாகவும் பெய்ய வேண்டிய அளவிற்கு மழை பெய்யாததன் விளைவாக ஏற்பட்ட இடர்பாடுகளையும், அதனால் ஏற்பட்டிருக்கிற அவதிகளையும் இங்கே சுட்டிக் காட்டி ஆங்காங்கு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைகளை விரிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும்கூட ஒன்றை மட்டும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சி நிலை ஏற்பட்ட போதும் சரி, வெள்ளச் சேதம் ஏற்பட்ட போதும் சரி, புயலால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிற போதும் சரி, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்து என்னென்ன நிவாரணப் பணிகளை, எப்படியெப்படி எடுக்கவேண்டுமோ அவற்றைச் செய்வதில் தமிழக அரசு முனைப்புள்ளம் காட்டி பாராட்டத்தக்க அளவிற்கு நிறைவேற்றி வருகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவ்வப்போது எடுக்கிற நடவடிக்கைகளை முன் கூட்டியே எச்சரிக்கையாக இருந்து பணியாற்றி வருகிறோம். 1981–82, 1982–83-லே கடுமையான வறட்சி ஏற்பட்டது. 72 ஆண்டுகளாக தமிழக வரலாற்றிலேயே ஏற்படாத வறட்சி நிலை 1981–82, 1982–83-லே ஏற்பட்டது. அப்படி கடுமையான வறட்சி நிலை ஏற்பட்ட போதும்கூட இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவருடைய சீரிய தலைமையின்கீழ் அவ்வப்போது அதிகாரிகளைக் கூட்டியும், மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கூட்டியும், அதிக நிதி ஒதுக்கீடு செய்தும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைளை எடுத்தது.

அது மட்டுமல்லாமல், உணவுத் தட்டுப்பாடு ஏற்படக் கூடாது, ஆங்காங்கு அதனால் கஷ்டம் ஏற்படக் கூடாது, பட்டினி ஏற்படக் கூடாது, அதன் காரணமாக மக்கள் அவதிப்படுகிற சூழ்நிலை ஏற்படக் கூடாது என்று கருதி நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இரண்டாண்டுகளில் எந்த விதமான இடர்பாடு



களும் ஏற்படாத நிலைமைகள் இருந்தன. உணவுத் தட்டுப்பாடு என்றோ, உணவுக் கட்டுப்பாடு என்றோ இல்லாமல் இருந்தது. கிட்டத்தட்ட 56 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தி ஆக வேண்டிய தமிழகத்தில் 1986–87-ல் 26 இலட்சம் டன்கள் உற்பத்தி ஆயிற்று என்றாலும், எவ்வளவு அதிகம் செலவானாலும் சரி என்று கருதி, அரியானா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், பிற அமைப்புகளின் மூலமாகவும், அரசாங்கத்தின் மூலமாகவும் அரிசியை அதிக விலை கொடுத்து வாங்கித் தர வேண்டுமென்ற முயற்சியின் விளைவாக இங்கே உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல், கட்டுப்பாடு ஏற்படாத அளவிற்கு ஓரளவிற்குச் சமாளித்தோம் என்பதை நினைவிலே கொள்ள வேண்டும்.

1985-ல் எதிர்பாரா வகையில் பெரு வெள்ளம் ஏற்பட்டு குறிப்பாக சென்னை, செங்கற்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளும், தென்னாற்காடு மாவட்டத்தின் பெரும் பகுதியும், தஞ்சை மாவட்டத்தினுடைய பகுதியும், வட ஆற்காடு மாவட்டத்திலேயுள்ள வந்தவாசியில் பெரும் பகுதியும் பாதிக்கப்பட்டு அதனாலே பெரும் சேதம் ஏற்பட்ட போதும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஹெலிகாப்டர் மூலமாக அதிகாரிகளையும், மற்றவர்களையும் வைத்துக்கொண்டு அந்த இடத்தை அணுக முடியாத சூழ்நிலையிலும் கூட அந்த இடத்தைப் பார்வையிட்டுவிட்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் கூடச் சொன்னார்கள். இந்தியப் பிரதமர் உடனே வந்திருக்க வேண்டும், அவரை அழைத்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். வெள்ளம் ஏற்பட்டு வடிந்து விட்ட பிறகு போய்ப் பார்த்தால் எப்படிப்பட்ட பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காண முடியாது. ஆகவே வெள்ளச் சேதம் இருக்கும்போதே பார்த்தால்தான் முடியும் என்று கருதி மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு தனக்குள்ள மற்ற நிகழ்ச்சிகளை ரத்து செய்து விட்டு மூன்றாவது நாளே ஹெலிகாப்டர் மூலமாக தஞ்சாவூர் வரையில் வந்து பாண்டிச்சேரி பகுதியையும் சேர்த்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பார்த்து விட்டு, வெள்ளச் சேதத்தையும், மதுராந்தகம் ஏரி உடைபட்ட பகுதியையும், அதற்குப் பிறகு வயல்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்கியுள்ள தன்மையையும் பார்த்து விட்டு, ''சேதம் மிக அதிகம்'' என்று சொல்லி மிகவும் வேதனையோடு நான்கு நாட்களுக்குள்ளாக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்களை அனுப்பி வைக்கிறேன், அவர் வந்து மறுபடியும் பேசட்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் சொன்னவாறு நான்கு நாட்கள் கழித்து இங்கு வந்து அவர்களே ஹெலிகாப்டரில் சுற்றிப் பார்த்தார்கள். இதை எதற்குச்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 10

சொல்கிறேன் என்றால் இந்த அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதற்காக. அவர்கள் சென்றதற்குப் பிறகு அதற்கென்று ஒரு குழுவை அனுப்பினார்கள். அந்தக் குழுவினர் உடனுக்குடன் வந்து இந்த வெள்ளச் சேத நடவடிக்கைகளைப் பார்த்து விட்டுச் சென்றார்கள். இரண்டு நாட்களாக வந்து சுற்றிப் பார்த்து விட்டுச் செல்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது.

[பிற்பகல் 1—00]

நான் எதற்காகச் சொல்ல விரும்புகிறேன் என்றால் வெள்ளச் சேதம் ஆனாலும் சரி, புயலினால் துயர் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டாலும் சரி அல்லது வறட்சியால் ஏற்பட்டாலும் சரி, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை, மக்களுடைய நலன் கருதி இந்த அரசு எடுத்துக் கொண்டுதான் வருகிறது. அலட்சியப் போக்குடன் இருப்பதால் இந்த அரசுக்கு என்ன நன்மை ? இல்லை. அலட்சியமாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஆகையால், எல்லோருக்கும் இருக்கிற அக்கறையைவிட மக்களிடையே நம்பிக்கை பெற்று இந்த ஆட்சியை அமைக்கிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசு முழு அக்கறையையும், ஆர்வத்தையும், அதற்கான பல பணிகளையும் தொடர்ந்து செய்து கொண்டுதான் வருகிறது. அந்தத் தன்மையினுடைய அடிப்படையிலே அப்போது வந்த நிபுணர் குழுவினுடைய தலைவர் சித்தர் என்பவர், 26—11—1985-ல் இரண்டு குழுக்களாகப்பிரிந்து அவர்கள் இந்த இடத்தையெல்லாம் பார்த்துவிட்டு அறிக்கை அளிக்கும்போது அவர்கள் சொல்கிறார்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களாக சென்னை நகரம், செங்கற்பட்டு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசிப் பகுதி, தஞ்சை மாவட்டம் ஆகியவற்றை நாங்கள் 8 பேர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து போய் சுற்றிப் பார்த்தோம். வெள்ளச் சேதம் மிகக் கடுமையாக.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆவதால் பத்திரிகைக்காரர்கள் போய் விடுவார்கள். மாண்புமிகு கட்சித் தலைவர்கள், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எல்லோரும் இந்த விவாதம் நடைபெறும்போது பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் நீக்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மையான வேண்டுகோள் காரணமாக என்பது மட்டும் அவைக் குறிப்பில் இருந்தால் போதும். காலையில் நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு கட்சித் தலைவர்கள், அவை முன்னவர் அவர்கள் எல்லாம் விவாதத்தில் ஈடுபட்டு பேசிய அந்த விவாதங்கள் எல்லாம் நீக்கப்படுகின்றன. பத்திரிகை நிருபர்கள் முழுமையாக அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எதையும் பிரசுரிக்க வேண்டாம் ; சொன்னதைத் தவிர.



1987 மார்ச் 10]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மொத்தத்தில் வெள்ளச் சேதம் மிகக் கடுமையாக இருக்கிறது ; கொஞ்சம் வழக்கத்திற்கு மாறாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட 4 மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகராட்சி ஆணையரும், தனி அதிகாரிகளும் இந்த நிவாரணப் பணிகளுக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டார்கள். மாநிலத்திலே இந்த நிவாரணப் பணிகளைச் சிறந்த விஞ்ஞான முறையில் மற்ற மாநிலங்கள் இதை பின்பற்றக் கூடிய அளவுக்கு செய்திருக்கிறார்கள். தலைமைச் செயலாளரும் மணிக்கு மணி சேத விவரங்களையும், நிவாரணப் பணிகளையும் கணக்கிட்டு எடுத்து, பல இரவுகள் தூக்கம் இல்லாமல் சிறப்பாகச் செயல்பட்டு இருக்கிறார்கள். வருவாய்த் துறை ஆணையரும் சிறப்பாகச் செயல்பட்டு இருக்கிறார்கள். எங்களுக்குத் தேவையான விவரங்களையெல்லாம் தந்திருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்ல வருகிறேன் என்றால், அதிகாரிகள் மெத்தனமாக இருக்கிறார்கள்; எதையும் செய்யவில்லை, அரசு மெத்தனமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைப் பலரும் எடுத்துச் சொன்னார்கள். எவ்வெப்போது என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்பதில் இதற்கு முன்னால் வறட்சி ஏற்பட்ட போதும்சரி, வெள்ளம் ஏற்பட்ட போதும்சரி மற்ற மாநிலங்கள் இதைப் பின்பற்ற வேண்டுமென்று இந்தக் குழுவினுடைய தலைவரே சிபாரிசு செய்கின்ற அளவுக்குப் பணிகள் நடைபெற்று இருக்கின்றன. இதைத்தான் இதற்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின் போதும் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அந்த அடிப்படையிலேதான் இப்போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே நான் அன்றே எடுத்துச் சொல்லிய மாதிரி மழை என்பது ஒரு வாரம் பெய்யும். தொடர்ந்து பெய்கிற அளவிற்கு ஏற்படுகிற சேதம் ஒரு குறிப்பிட்ட நாட்களில் ஏற்பட்டு முடிந்து விடும். புயல், ஒரு நாள் இரண்டு நாள் அடித்து அதனால் சேதம் ஏற்பட்டு முடிந்து விடும். வறட்சி என்பது நாளுக்கு நாள் வளர்ந்து வளர்ந்து, வளர்ந்து வளர்ந்து, நான்கு ஐந்து மாதங்களிலே கடுமைக்கு மேல் கடுமையாக ஆகிக் கொண்டே இருக்கும்.

ஆக, ஆரம்பக் கட்டத்திலிருந்து யூகித்து யூகித்து நாம் காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். எடுத்த எடுப்பிலேயே முழுப் பணிகளையும் செய்துவிட முடியாது. ஏற்படுகிற நிலைமைகளுக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்தும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் இயற்கைச் சீற்றங்களான புயல் வெள்ளம் மற்றும் வறட்சி ஆகியவற்றால் ஏற்படுகிற விளைவுகளைச் சிந்தித்து, அவற்றையெல்லாம் மிகுந்த எச்சரிக்கையோடு எதிர்பார்த்து, சூழ்நிலையை ஓரளவுக்கு

முறையாக எதிர்பார்த்து, அவற்றையெல்லாம் சமாளிக்கும் வகையில்தான் தமிழக அரசு இதுவரையிலும் தன்னாலான எல்லாப் பணிகளையும் செய்து வந்திருக்கிறது.

3–7–1986 அன்று ஒரு கூட்டத்தை நாம் நடத்தினோம். தென் மேற்குப் பருவக்காற்றும் தமிழகத்தில் ஓரளவுக்குப் பொய்த்து விட்டது. வடகிழக்குப் பருவக் காற்றும் ஓரளவுக்குப் பொய்த்துவிட்டது. மொத்தத்தில் கணக்கெடுத்துப் பார்த்தால் நாம் இதில் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்தோம். இந்திய அரசினுடைய வானியல் அறிக்கைப்படி நாம் பார்ப்போமானால் மொத்தத்தில் 16 சதவீதம்தான் தமிழகத்தில் மழை பொய்த்திருக்கிறது. அந்தக் கணக்கைத்தான் அவர்கள் எடுத்துக் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசு அதைத்தான் நம்புகிறது. ஆனால் அது சரியில்லை என்று நாங்கள் சொல்லுகிறோம். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கணக்குப்படி பார்த்தால்—அதாவது தமிழகத்தில் 31 அல்லது 32 சதவீதம் மழை பொய்த்து விட்டது. சில மாவட்டகளில்—குறிப்பாக கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில், 60 சதவீதத்திற்குப் பொய்த்திருக்கிறது. சில மாவட்டங்களில்தான் 15 அல்லது 16 சதவீதம் பொய்த்திருக்கிறது. நான் சராசரியைச் சொல்லுகிறேன். சிலபல மாவட்டங்களில், சிலபல வட்டங்களில் மட்டும் மழை பொய்த்திருக்கிறது. அதனால் சில வட்டங்கள் மட்டுமே அங்கே பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, 160 வட்டங்களில் கிட்டத்தட்ட 130-க்கும் மேற்பட்ட வட்டங்களில் குடி தண்ணீர் இல்லாத அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

எனவேதான் இந்தப் பாதிப்பு ஏற்படும் என்கிற சூழ்நிலை ஏற்பட்டபோதே 3–7–1986 அன்றே தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு ஒன்று கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக ஏற்படுகிற பற்றாக்குறை தொடர்பான சூழ்நிலையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி கலந்துரையாடல்களும் கருத்துப் பரிமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டன. ஆக சென்ற ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் தேதியே மிகுந்த எச்சரிக்கையோடு கூட்டம் நடத்தியிருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்களும், துறைத் தலைவர்களும், உயர் அதிகாரிகளும் இன்னும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்—சில நிலைமைகள் ஏற்பட்டால் சமாளிப்பதற்காக வேண்டுமென்று இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்—அவர்களோடு காவல் துறை அதிகாரிகளும், இந்திய வானொலித் துறையின் பிரதிநிதியும் அகில இந்திய வானொலியின் பிரதிநிதியும், தொலைக் காட்சி நிலையத்தின் பிரதிநிதியும் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பிறகு 24–10–1986-ல் மீண்டும் தலைமைச் செயலாளர் அவர்கள் உயர்மட்ட அதிகாரிகளைக் கூட்டி வைத்து நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்திருக்கிறார்கள்.



அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க தென் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் நிலைமையைச் சமாளிக்க ஆயத்த நிலையில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டார்கள். 24–10–1986 வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது. 25–10–1986-ல் முதன் முதலாக மழை காணப்பட்டது. முதல் 3 அல்லது 4 நாட்களுக்கு மழை இருந்தது. தொடர்ந்து சில மாவட்டங்களில் விட்டுவிட்டு இங்கும் அங்குமாகப் பெய்தது. சில பல இடங்களில் மட்டும் மழை பெய்தது. ஆனால் நாம் எதிர்பார்த்த அளவுக்கு வடகிழக்குப் பருவ மழை பெய்யவில்லை. வழக்கமாகப் பெய்ய வேண்டிய அளவுக்குப் பெய்யவில்லை. இயல்பாகப் பெய்ய வேண்டிய அளவுக்குப் பெய்யவில்லை. எதிர்பார்த்த பல இடங்களின் வடகிழக்குப் பருவ மழை பெய்யவில்லை. பல இடங்களில் பற்றாக்குறைத் தன்மை தொடங்கியது. எனவே வடகிழக்குப் பருவ மழையின் தன்மைகுறித்து விரிவான மதிப்பீட்டு அறிக்கையை அரசுக்கு 25-12-1986-ம் தேதிக்குள் அனுப்பவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். 2–12–1986 அன்றே தலைமைச் செயலாளர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவருக்கும் 25–12–1986-க்குள் மதிப்பீட்டு அறிக்கையை அனுப்ப வேண்டுமென்று எழுதினார். மழை பெய்த அளவு, பாசனத்தின் அளவு, வேளாண்மை குறித்த நிலைமை, குடிநீர் நிலைமை மற்றும் சேதம் ஆகியவை குறித்து எல்லா விவரங்களையும் அனுப்புமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அந்த மதிப்பீட்டு அறிக்கையின்படி தகவல்கள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய்த் துறை நிர்வாக ஆணையருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. சிறப்பு ஆணையர் அவர்களும், மாவட்ட வருவாய் நிர்வாக ஆணையரும் நிலைமையை அறிய மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார்கள். ஆங்காங்கே நேரடியாக அதிகாரிகளோடு உட்கார்ந்து கலந்துரையாடல்களை நடத்துமாறு சிறப்பு ஆணையரும், வருவாய்த் துறை நிர்வாக ஆணையரும் பணிக்கப்பட்டார்கள். தலைமைச் செயலாளர் அவர்களும் கீழ்க்கண்டவாறு நிவாரணப் பணிகள் பற்றி ஆய்வு செய்தார்கள்.

9–2–1987 அன்று வடாற்காடு மாவட்டத்தில் கூட்டமும், 1–3–1987 அன்று 11 தென் மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டமும் இரண்டு நாட்கள் நடைபெற்றன. 1–3–1987 அன்று திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் நானும், மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டோம். தலைமைச் செயலாளரும் கலந்து கொண்டார்கள். 11 மாவட்டங்களில்—தென் மாவட்டங்களைப் பொறுத்த வரையில்—ஆங்காங்கே எடுத்துக்

கொண்டிருக்கிற நடவடிக்கைகள் நிவாரணப் பணிகள், மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய காரியங்கள், வேலைகள் என்னென்ன, எதிர் காலத்தில் நெருக்கடிகள் ஏற்பட்டால் என்னென்ன செய்யவேண்டும், குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் பக்கத்தில் எந்தெந்தக் கிராமங்களில் இருந்து தண்ணீரைக் கொண்டு வரலாம் என்று ஆலோசிக்கப்பட்டது.

(பிற்பகல் 1-10)

அங்கே ஆழ்துளை கிணறுகள் போட்டால் தண்ணீர் வருமா? போட்டாலும் தண்ணீர் வராது என்றால், எங்கே இருந்து தண்ணீர் கொண்டு வருவது? லாரிகள் மூலமாகக் கொண்டு வருவதற்கு எந்த கிராமத்திலே தண்ணீர் இருக்கின்றது என்பதை பார்த்துக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்களைப்பற்றி எல்லாம் முழு விவரமாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கின்றார்கள்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு அவர்களுடைய கூட்டம் நடைபெற்றது. 6—3—1987-லே அரசு செயலாளர்கள், சிறப்பு அலுவலர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. 9—2—1987-லே வட ஆற்காடு மாவட்டத்திற்கு செயலாளர்கள் எல்லாம் அனுப்பப்பட்டார்கள். 29—1—1987-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் வறட்சி நிலையை குறித்து அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி அந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே தலைமைச் செயலாளர் அவர்கள், நிதிச் செயலாளர் அவர்கள், உரிய செயலாளர்கள் அத்தனை பேர்களையும் வைத்துக் கொண்டு நீண்ட நேரம் விவாதம் நடத்தி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்தார்கள். ஆங்காங்கே குடிநீர் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்கின்ற சூழ்நிலை ஏற்பட்டபோது, 8,625 ஆழ்துளை கிணறுகள் ஆங்காங்கே அமைப்பதற்கு உடனடியாக பண ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், அதற்கு 28 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் கணக்கு சொன்னவுடனேயே அமைச்சரவைக் கூட்டத்திலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலளித்து 28 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யலாம் என்றும் அதை படிப்படியாக அந்தெந்த மாவட்டத்திற்கு என்று ஒதுக்கீடு தந்து பயன்படுத்தச் செய்யலாம் என்றும் அமைச்சரவை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஆணையினைப் பிறப்பித்தது.

கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கவும், லாரிகள் மூலம் குடி தண்ணீர் விநியோகம் செய்யவும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிவாரணப் பணிகளை எச்சரிக்கையோடு செயல்



படுத்தவும், நிர்வாக இயந்திரங்களை முடுக்கிவிடவும், அதன் பணிகளைக் கண்காணிக்கவும் 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ரீஜின்களாகப் பிரிக்கப்பட்டு, அந்த இடங்களுடைய பொறுப்புகளை சிறப்பு ஆணையாளர்களும், துணை ஆணையாளர்களும் கவனிக்க வேண்டும் என்றும், அதையே எட்குவார்ட்டர்ஸ் ஆக வைத்துக் கொண்டு நான்கு, நான்கு மாவட்டங்களாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டு இருக்கின்றார்கள். ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணிகளை விரைவு படுத்தும் அளவிலே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தனியார் ஆய்வகங்களிலிருந்து ரிட்ஜி-களை, துளையிடும் கருவிகளை வாடகைக்கும் பெறலாம் என்றும், ஏனைய அரசுத் துறைகளிலும், வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு குழாய் கிணறு வாரியம், தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் தேவைகள் மற்றும் கூட்டுறவு இணையம் ஆகியவற்றிடமுள்ள வசதிகள் என்னென்னவோ அவற்றையெல்லாம் இந்தப் பணிகளுக்காக உடனடியாகப் பெறலாம் என்றும் நம் அரசால் ஆணையிடப்பட்டிருக்கிறது. தற்போது குடிநீர் ஆதாரங்கள் அனைத்தையும் பழுதுபார்க்கவும், ஏற்கனவே குடிநீருக்காக இருக்கின்ற தன்மைகளைப் பழுது பார்க்கவும் செம்மையான முறையில் பராமரிக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் இதுபோன்ற திட்டங்களின் கீழ் குறிப்பிட்டுள்ள தொகைகள் முழுவதையும் இந்த வறட்சிப் பணிகளுக்காக எந்தெந்த இடங்களில் மிகமிக முக்கியமாக வேலை வாய்ப்புகளுக்காகப் பயன்படுத்தமுடியுமோ அங்கெல்லாம் அதைப் பயன்படுத்தலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மற்றவர்கள் எல்லோருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அது போதாது என்று கருதப்படுமேயானால் மேற்கொண்டும் ஒதுக்கீடு செய்யலாம். அரசை அணுகினால் அதை ஒதுக்கீடு செய்ய அரசு ஆயத்தமாக இருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வேலை வாய்ப்புத் திட்டங்களைப் பற்றிய மதிப்பீடுகளை, அறிக்கைகளை அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த வகையிலே அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். எந்தெந்த நிலங்களில் விளைச்சல் 37 பைசா அல்லது 50 பர்செண்ட்க்கு குறைவாக இருக்கிறதோ அந்த நிலங்களுக்கெல்லாம் நில வரியைத் தள்ளுபடி செய்யலாம் என்று வருவாய்த் துறையில் ஆணையிடப்பட்டு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இப்போதே இந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கலாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

ஆக எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கலாமோ அந்த அளவுக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து அறிக்கைகளை அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறோம். அந்தக் கணக்கு எடுத்தவர்கள் பார்த்துச் சொல்வார்களானால் அதன்மீது உரிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடும்.

தமிழ்நாட்டின் வறட்சி நிலை குறித்து முதல் நிலை அறிக்கையாக அனுப்பியது பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னேன். இங்கே மற்றொன்றையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆழ் துளை கிணறுகளைப் போடுவதுகூடப் பெரிதல்ல. பணம் ஒதுக்கீடு செய்வதுகூடப் பெரிதல்ல. துளைபோட்டு தண்ணீர் வரவேண்டும். தண்ணீர் வர எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறது என்று ஜியாலாஜிகல், புவி இயல் வல்லுநர்கள் சொல்லி அந்தந்த இடத்திலே ஆழ்துளை கிணறுகள் எவ்வளவு செலவானாலும் போட்டு கொண்டுவந்து விடலாம். ஆனால் ஆழ்துளை கிணறுகள் போட்டதற்குப் பிறகும் தண்ணீர் வரவில்லை என்று சொன்னால் பணம் பாழாகும். அந்த சர்வேயைத்தான் தீவிரமாக எடுக்கச் சொல்லியிருக்கிறோம்.

அண்மைக் காலங்களில் ஆழ்துளை கிணறுகள் மூலமாக குடிநீர் தருவதற்குப் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 1981-ஆம் ஆண்டிலே மட்டும், 7,429 ஆழ்துளை கிணறுகள் போடப்பட்டன. 1983—ஆம் ஆண்டு 21,726 ஆழ்துளை கிணறுகள் போடப்பட்டன. இப்போது நாம் எண்ணாயிரத்துச் சில்லரை ஆழ்துளைக் கிணறுகளுக்குத்தான் அனுமதி அளித்திருக்கிறோம் என்றாலும் தேவைப்பட்டால் 20,000 அளவிற்குக் கூட போவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். தேவைப்படுகின்ற அளவுக்குச் செல்லலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள், நிலைமைகளைச் சமாளிக்க. ஆனால் 1983—ம் ஆண்டு 21,826 அளவுக்குப் போய் இருக்கிறோம். 1986-ம் ஆண்டு 5,494 அளவுக்குப் போய் இருக்கிறோம். இந்த ஆண்டு நாம் ஒதுக்கி இருப்பது 8,625. எல்லாவற்றையும் சேர்த்து கணக்கிட்டால் 1981-லிருந்து 1987 வரையிலும், ஒதுக்கீடு செய்திருக்கின்ற வரையிலும் கணக்கிட்டுப் பார்ப்போமானால் 43,274 ஆழ்துளை கிணறுகள் தமிழகத்தில் வேலை செய்வதற்கும், அதன் மூலம் குடிநீர் பெறுவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் ஆழ்துளை கிணறுகள் போட்டாலும் தண்ணீர் இல்லையென்றால்—சென்ற ஆண்டு திண்டுக்கல் பகுதியிலே வைகை ஆற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து ஒரு நாளைக்கு 1 இலட்சம் செலவழித்து, ரூபாய் 54 இலட்சம், 55 இலட்சம் செலவழித்து குடிநீர்கொண்டு வந்து சேர்ப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டன. அப்படி சில பல இடங்களிலே, நகரங்களிலே, பிற இடங்களிலே செய்ய வேண்டுமென்றாலும் அதையும் செய்யலாம் என்று நாம் அவர்களுக்கு அறிவுரைகள் நல்கி இருக்கிறோம்.





அது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்த முதல் நிலை அறிக்கை 1987 ஜனவரியில் நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அந்த அறிக்கையில் விரிவான அறிக்கை பின்னால் அனுப்பி வைக்கப்படும் என்று எடுத்துச் சொன்னோம். அந்த விரிவான அறிக்கையில் வறட்சி நிலையைப் பற்றி, அதை சமாளிப்பதற்கு ஏற்றச் செலவு எவ்வளவு தொகை என்பதும் அனுப்பிவைக்கப்படும் என்றும் நாம் சொல்லியிருக்கிறோம். மத்திய வேளாண்மைத்துறை இணை அமைச்சர் அவர்கள் அங்கே பேசியதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில்தான் இப்போது நான் சொன்னேன். எடுத்த எடுப்பிலே அப்போதே கணக்கிட முடியாது. என்றாலும் ஏற்பட்டு இருக்கின்ற சூழ்நிலையைப் பற்றியும் எடுத்துச் சொன்னேன். ஆக, எப்போதுமே எடுத்த எடுப்பிலேயே நாம் அறிக்கை அனுப்பிவிட முடியாது. இருக்கின்ற சூழ்நிலையைத்தான் எடுத்துத் தெரிவிக்கலாம். ஒவ்வொரு ஆண்டும் வந்திருக்கின்ற தன்மையை எடுத்துப் பார்ப்போமானால் கூட, 1981ஆம் ஆண்டு வறட்சி நிலை. அப்போது முதன் முதலாக மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது மார்ச் மாதம் முதல் வாரத்திலே தான். ஏப்ரல் முதல் வாரத்திலே தான் மத்திய நிபுணர் குழு வந்தது. மத்திய அரசு நிதி உதவி அளித்தது மே மாதம் 21-ந்தேதி. இது 1981-ம் ஆண்டு நடைபெற்ற வறட்சி நிலை. 1983-ம் ஆண்டு வறட்சியின்போது நாம் பிப்ரவரி திங்களிலேதான் மத்திய அரசுக்கு அனுப்பினோம். பிறகு ஏப்ரல் முதல் வாரத்திலேதான் நிபுணர் குழு தமிழகத்திற்கு வந்தது. அதற்கு பிறகு ஏப்ரல் கடைசி வாரத்திலேதான் மத்திய அரசு நிதி உதவி தருவதாகச் சொல்லிற்று.

1986-ம் ஆண்டு தென் மேற்குப் பருவக் காற்று பொய்த்ததற்குப் பிறகு, அந்த நிலையை வைத்து 1986-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27-ந் தேதி அறிக்கை அனுப்பினோம். ஆகஸ்ட் மாதம் 24-ந்தேதி மத்திய நிபுணர் குழு வந்தது. அக்டோபர் மாதம் 24-ந்தேதி மத்திய அரசினுடைய நிதியுதவி தரப்பட்டது. இதிலே நாம் ஒன்றை நன்றாகக் கருத வேண்டும். நிதி உதவிக்காகத்தான் நாம் மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆக இருக்கிற சூழ்நிலையை நாம் அவர்களுக்கு அனுப்புவதும், அவர்கள், அவர்களுடைய நிபுணர் குழுவை அனுப்புவதும், அவர்கள் இருக்கின்ற நிலைமைகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இவ்வளவிற்கு மத்திய அரசு அனுமதிக்கிறது என்று சொல்லுவதும், அனுமதிப்பதிலே கடன் இவ்வளவு, மானியம் இவ்வளவு என்று சொல்லுவதும்,நடைமுறை. அதை நாம் பெற்று நடத்துவதற்கு, நிதி உதவிக்காகத்தான் நாம் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அந்த நிதி உதவி நமக்கு மேக்ஸிமம் வர வேண்டும் என்று காலத்தினுடைய அடிப்படையில், இதற்கு முன்னால் இருக்கின்ற காலத்தை பார்ப்போமானால் வறட்சி நிலையைப் பொறுத்ததுதான். இந்த நிலைமைகளை ஓரளவிற்கு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 10

மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். அவர்கள் அறியாமல் பேசிவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. அறிவதற்கு வழி இல்லை. நியாயம் இல்லை. ஏனென்றால் புள்ளி விவரங்கள், நிலைமைகள் எல்லாம் எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிய வழி இல்லை. தெரிய வேண்டும் என்பதற்காகத்தான், தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் எடுத்துச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1–20)

1981-வது ஆண்டு வறட்சியின்போது நாம் கேட்டது, 148 கோடியே 68 இலட்சம். அவர்கள் அனுமதித்தது—அனுமதிப்பது வேறு; அவர்கள் தருவது என்பது வேறு. அதற்குப் பின்னால் வருகிறேன்—அவர்கள் செலவு செய்யலாம் என்று அனுமதித்தது 49 கோடியே 77 இலட்சம்; 1983-வது ஆண்டு நாம் கேட்டது 217 கோடியே 73 இலட்சம்: அவர்கள் அனுமதித்தது 77 கோடியே 54 இலட்சம்: 1986-இலே நாம் கேட்டது 310 கோடியே இரண்டு இலட்சம். அவர்கள் அனுமதித்தது 31 கோடியே 77 இலட்சம்; இது வறட்சி நிலையைப் பொறுத்த வரைக்கும் ஆகும்.

வெள்ள நிலையைப் பொறுத்தவரையிலும், 1985-இலே மத்திய அரசு அறிவித்த உச்சத் தொகை—வந்து பார்த்து விட்டு, நமக்கு அறிவித்தது 66 கோடியே 81 இலட்சம். அதிலே மார்ஜின் தொகை என்று, 8-வது நிதிக் குழுவினுடைய அடிப்படையிலே ஆண்டுக்காண்டு 8 கோடியே 75 இலட்சம் ரூபாயை பட்ஜெட்டிலே நாம் ஒதுக்கி வைத்துவிடவேண்டும். அந்த வருஷம் செலவழிக்காவிட்டால் அது தனியாக இருக்கும்; இரண்டு மூன்று வருடம் வறட்சியோ, வெள்ளமோ, புயலோ வராவிட்டால் அது அக்குமுலேட் ஆகிக் கொண்டே வரும். இப்போது $8\frac{3}{4}$ கோடி, மறுபடியும் ஒரு $8\frac{3}{4}$ கோடி என்றால் அது அக்குமுலேட் ஆகிக்கொண்டே வரும். எப்போதாவது வறட்சியோ, புயலோ, வெள்ளச் சேதமோ வந்தால், முதலிலே இந்த நிதி முழுக்க எடுத்துச் செலவழித்ததற்குப் பிறகு தேவைப்படுமேயானால், மத்திய அரசிற்கு எழுத வேண்டும். அதற்குப் பெயர் மார்ஜின் தொகை என்பதாகும். அந்த மார்ஜின் தொகை என்ற வகையில்—மத்திய அரசு அறிவித்த தொகை 66 கோடியே 81 இலட்சம், செலவழிக்கலாம் என்று, அதிலே மார்ஜின் தொகை 8 கோடியே 75 இலட்சம். அதைக் கழித்தால்—மத்திய அரசு ஒத்துக் கொண்டது—அதைக் கழித்தது போக, 53 கோடியே 6 இலட்சம். அதிலே மத்திய அரசினுடைய பங்கு 75 சதவிகிதம். 75 சதவிகிதம் என்பது 43 கோடியே 55 இலட்சம். மாநில அரசினுடைய பங்கு 14 கோடியே 51 இலட்சம். ஆக, மத்திய அரசு தந்தது



1987 மார்ச் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்பது வெள்ளத்திற்கு மட்டும்தான் 75 சதவிகிதம். வெள்ளம் வந்தால் 75 சதவிகிதம் தரும். அந்த வகையில் 43 கோடியே 55 இலட்சம் தான்; நாம் கேட்பது—66 கோடியே 81 இலட்சமாக இருந்தாலும் மீதித் தொகை முழுவதும் மாநிலத்தினுடைய நிதியிலிருந்துதான் நாம் செலவழிக்கிறோம்.

ஆனால் வறட்சியைப் பொறுத்தவரை, 1986-லே நாம் கேட்டது 310 கோடி சில்லறை. ஆனால் மத்திய அரசு நமக்குத் தந்தது உச்சவரம்பு 31 கோடியே 77 இலட்சம். ஆனால் மார்ஜின் தொகை, 4 கோடியே 37 இலட்சம் இருந்தது. அதைக் கழித்தால் 27 கோடியே 39 இலட்சம்; 27 கோடியே 39 இலட்சத்திலே 70 சதவிகிதம் கடன், அதை நாம் திருப்பிச் செலுத்த வேண்டும். அந்த வகையில், 19 கோடியே 18 இலட்சம். மத்திய அரசு 30 சதவிகிதம்தான் மானியமாகத் தரும். ஆகவே, 31 கோடியை அனுமதித்ததே தவிர, அதிலே மத்திய அரசினுடைய பங்கு என்று நமக்கு வருகிற பணம் 8 கோடியே 21 இலட்சம்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும். ஆனால் சென்ற ஆண்டு மொத்தம் செலவழித்தது—நாம் அதை எதிர் பார்க்காமல் செலவழித்துக் கொண்டே இருக்கிறோம். அவர்கள் அனுமதித்தது 31 கோடியாக இருந்தாலும், மொத்தத்திலே நாம் செலவழித்தது—இதையெல்லாம் எதிர் பார்க்காமல் அவ்வப்போது செலவழித்துக் கொண்டு வந்தது, 105 கோடி .105 கோடி நாம் செலவழித்தோம். ஆனால் அதிலே மத்திய அரசு கொடுத்தது 8 கோடிதான் என்றாலும் கூட, நாம் மக்களுக்கு வேறு பல வகைகளிலே, வேறு பல நிலைமைகளிலே இதற்கு செலவழிக்காமல் இருந்தால், வேறு பல—ஆஸ்பத்திரிக்கோ, கல்விக்கோ, கட்டிடங்கள் கட்டவோ, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற வேறு வகைகளுக்கோ திருப்பி இருக்கலாம். ஆனால், வேறு பல வகைகளிலே செலவழிப்பதை எல்லாம், இதற்காக நிறுத்தி விட வேண்டிய அவசியத்திற்கு நாம் ஆளாகிறோம். மத்திய அரசினுடைய பங்கு 8 கோடியே 21 இலட்சம் தான். 105 கோடியிலே மீதியை நாம் தான் செலவழிக்க வேண்டிவரும். இப்போதும் கூட, அவர்கள் பின்னால் குழு அமைத்து, அவர்கள் அனுமதித்து, அவர்கள் அனுமதித்த தொகையில், அந்த மார்ஜின் தொகை போக, மீதி 70 சதவிகிதம்தான் அவர்கள் தருவார்கள். 30 சதவிகிதம்தான் மானியமாக வரும். 70 சதவிகிதம் கடனாக வரும். சில ஆண்டுகள் கழித்துக் கட்டலாம். உடனடியாக நாம் செலுத்தவேண்டிய அவசியம் வராது. கடனாக வரும் என்று ஒரு திருப்தி. ஆனால், என்றைக்காவது ஒரு நாள் தமிழக அரசு அதைக் கட்டத்தான் வேண்டும். இந்த நிலைமைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று தான் சொல்கிறேனே தவிர, உடனேயே அனுப்பினால், உடனே எடுத்துத் தந்து விடுவது மாதிரியும், மாண்புமிகு இந்தியாவினுடைய இணை அமைச்சர் மக்வானா உடனே எடுத்து

தந்து விடுவது மாதிரியும், மற்றவர்கள் தந்து விடுவது மாதிரியும், ஏன் அனுப்பவில்லை? டிசம்பரிலேயே அனுப்பினால் என்ன, ஜனவரியிலேயே அனுப்பினால் என்ன என்கிறார்கள். 5 ஆம் தேதி அனுப்பினால் 7 ஆம் தேதி ராத்திரியே வந்திருக்குமே என்பதுபோல் சொன்னார்களே, அதெல்லாம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். இரண்டாவது, மற்றொன்றையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இவ்வளவு கணக்கையும் சுற்றி அங்கே வரவேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல அண்மையிலே ஒரு வார, இரண்டு வார காலத்திற்கு முன்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கிருந்த போதும்கூட மாண்புமிகு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களிடத்திலே வற்புறுத்திவிட்டு வந்திருக்கிறார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் செல்லுகின்ற போதும், வேளாண்மைத் துறைச் செயலாளர் அவர்களிடத்திலேயும், இந்த வறட்சி பற்றி கவனிக்கிற செயலாளர் இடத்திலேயும் வற்புறுத்திவிட்டு வந்திருக்கிறார்கள். நான் சென்றபோதுகூட வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு தில்லான் அவர்களிடத்திலே வற்புறுத்திவிட்டு வந்தேன். அதற்கு முன்னால் நான் சென்றபோது மாண்புமிகு இணை அமைச்சர் திரு. மக்வானா அவர்களைப் பார்த்துவிட்டு நிலைமையைப் பற்றிச் சொன்னேன். எந்தச் செயலாளர்களை நாம் டெல்லிக்கு அனுப்பினாலும், வருவாய்த் துறையிலோ அல்லது வேளாண்மைத் துறையிலோ, இந்த பேப்பர்களெல்லாம் இருக்கின்றன; பார்த்துவிட்டு வாருங்கள் என்றுதான் சொல்லுகிறோம்; அவர்கள் நிதி தருவதற்காகத்தான்.

மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அன்றைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் எழுப்பினார்கள். இந்தியாவினுடைய மாண்புமிகு வேளாண்மைத்துறை இணை அமைச்சர் திரு. மக்வானா அங்கு சொன்னார்கள். தமிழக அரசினுடைய, மாநில அரசினுடைய விரிவான அறிக்கை மத்திய அரசுக்கு வரவில்லை, நாங்கள் திரும்பத் திரும்பக் கேட்டும் வரவில்லை என்று அங்கு சொன்னார்கள். அது பத்திரிகையிலேகூட வந்தது என்று இந்த அரசைக் குற்றம் சாட்டவேண்டுமென்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு எடுத்துச் சொல்லுகிறார்கள். அவர்கள் என்ன காரணத்தில் சொன்னார்கள் என்று எனக்குப்புரியவில்லை. நான் அவர்களைக் குற்றம் சாட்ட விரும்பவில்லை. இருக்கிற நிலைமையை, உண்மை நிலையை எடுத்துச் சொல்லுகிறோம். ஆனால் நான் அன்றைக்கே எடுத்துச் சொன்னேன். இருக்கிற நிலைமையை மட்டும்தான் நாம் முதல் அறிக்கையிலே அனுப்புகிறோம். விரிவான அறிக்கையிலே எவ்வளவு சேதம் என்பதைச் சொல்லி சேதத்தால் ஏற்பட்ட நஷ்டம் இவ்வளவு, எங்களுக்கு செலவு இவ்வளவு இருக்கிறது, நிவாரணம் செய்வது என்பது ஒன்று நிவாரணத்திலிருந்து மீட்பது என்பது ஒன்று, எதிர்



காலத்திலே இப்படிப்பட்ட கஷ்டங்கள் வராமல் சமாளிக்க செலவு செய்வதற்கு இவ்வளவு என்று இதையெல்லாம் சேர்த்துத்தான் நாம் கேட்கிறோம். இதையெல்லாம் கூட நாம் அனுப்புவதற்கு புள்ளிவிவரங்கள் வேண்டும். ஏனென்றால் எதையும் நாம் கணக்கிடாமல் அனுப்ப முடியாது. கணக்கிடாமல் நாம் அனுப்பினோமேயானால், பின்னால் குழு வரும்போது அவர்களுக்குப் பதில் சொல்லித்திரவேண்டும். அவர்கள் அக்கு வேறு, ஆணி வேறாகக் கேட்பார்கள். இதையெல்லாம் வைத்துத்தான் விளக்கமாக, தெளிவாக, விரிவான அறிக்கை பின்னால் அனுப்பப்படும். இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்வதற்கு விரிவாக அனுப்பப்படும் (குறுக்கீடு) 'சித்தன்' என்றால் அறிவு படைத்தவர் என்று அர்த்தம். 'சித்தன்' என்றால் ''அறிவு'' ''சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே'' என்றார் தாயுமானவர். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள் (குறுக்கீடு) இப்பொழுதே சொல்லிவிட்டால் எழுந்து போய்விட்டீர்கள் என்றால் என்ன செய்வது? அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், திரும்பத் திரும்பக் கேட்டோம் என்று.

ஒன்றைப் பணிவன்போடு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். என்ன காரணத்தினாலோ மாண்புமிகு அமைச்சர் மக்வானா அவர்கள் எந்தத் துறையிலே இருந்தாலும் ஒரு தகராறு தமிழக அரசுக்கும், அவருக்கும் வந்து கொண்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை, அது தேவையில்லாத ஒன்று. ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் மக்வானா இடத்திலேயிருந்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கோ, எனக்கோ, வேளாண்மைத் துறை அமைச்சருக்கோ, தலைமைச் செயலாளருக்கோ, வருவாய்த் துறை அல்லது அவர்களுடைய இலாக்காவிலிருந்து நிதித் துறைக்கோ எந்த ஒரு கடிதமும், உங்களுடைய கேட்பை அனுப்புங்கள், அறிக்கையை அனுப்புங்கள் என்று கேட்டு வரவில்லை, வரவில்லை, வரவில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். அவரை ஒன்றும் குற்றம் சொல்லவில்லை. எந்தச் சூழ்நிலையில் சொன்னார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. அது வராது, நாம் எதிர்பார்ப்பது தவறு. கேட்பவர்கள்தான் கேட்டுக்கொண்டே இருப்பார்களே தவிர அவர்களா வந்து கேட்பார்கள் அனுப்பிவிட்டாயா என்று? என்னவோ அவர்கள் கட்டிக்கொண்டு ரெடியாக இருக்கிற மாதிரியும், நாங்கள் என்னவோ அனுப்பாமல் இருக்கிற மாதிரியும், கேட்ட உடனே கொடுப்பதற்கு, எந்தக் காலத்திலும் அவர்கள் கேட்டது இல்லை, அறிக்கையை அனுப்பிவிட்டாயா என்று. அவர்களுடைய எண்ணம் இன்னும் கொஞ்சம் டிலே ஆனால் நல்லது என்று நினைப்பார்களே தவிர அவர்கள், ஏன் எந்தச் சூழ்நிலையில் இதைச் சொன்னார்கள் என்பதில் நான் ஆழமாகச் செல்வதற்கு விரும்பவில்லை. அவர்கூட அங்கே சொல்லியிருக்கிறார். மாண்புமிகு மக்வானா கூட [illegible] அவையிலே சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள், மாநிலங்களிலே வறட்சி அல்லது வெள்ளச் சேதம் ஏற்பட்டால் அதற்கு

மத்திய அரசு குறிப்பிட்ட அளவுதான் உதவிப் பணம் வழங்கி வருகிறது. மற்றபடி இந்த நிவாரணப் பணிகளை மாநில அரசுதான் மேற்கொள்ள வேண்டும். இதற்கு அவர்கள் நிதி ஒதுக்கி செலவு செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-30)

வறட்சி நிவாரண வேலைகளுக்கான முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்க முடியாது என்று இதையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். ஆனால் அன்றைக்கு இதைப்பற்றிச் சொன்னவர்கள், பகுதி ஒன்றை மட்டும் சொன்னார்கள். இரண்டாம் பகுதி என் கண்ணில் பட்டது. முதல் பகுதி மட்டும்தான் அவர்கள் கண்ணில் பட்டது. இரண்டாவது பகுதியையும் சேர்த்து அன்றைக்கு அவர்கள் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போதுதான் நான் அதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, இந்த வறட்சியைப் பொறுத்தவரையில் இருக்கின்ற 20 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 17 அல்லது 18 மாவட்டங்கள் பரவலாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தமுள்ள 160 வட்டங்களில் 130 வட்டங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கின்றன அந்தந்த மாவட்டங்களில் குடிநீர், வேலைவாய்ப்பு போன்ற நிலைமைகளை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கணக்கெடுத்து இருக்கிறார்கள். சென்ற ஒரு வார காலமாக நிதித் துறையும், வருவாய்த் துறையும் அவற்றை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து மத்திய அரசிடம் எவ்வளவு கேட்கலாம் என்று முடிவெடுத்த அறிக்கையில் இப்போதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலிருந்து ஒப்புதல் பெற்றிருக்கிறேன். அது இன்னும் இரண்டு நாட்களில் அனுப்பப்பட இருக்கிறது. ஆக, நான் அதை ரெடியாக வைத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த உடன் அதில்தான் நான் கையெழுத்து வாங்கினேன். அதன்படி 347.25 கோடி கேட்க இருக்கிறோம். இந்த மாநிலத்தில் எதிர்காலத்தில், ஜூன் வரையாவது ஏற்படுகிற நிலைமைகளை நாம் சமாளித்தாக வேண்டும். மார்ச் வரை பொதுவாக வறட்சி இருக்கும். ஏப்ரலில் வறட்சி கடுமையாகும். மே மாதம் அதை விட வறட்சி கடுமையாகும். அதைவிட ஜூனில் இன்னும் வறட்சி கடுமையாகும். ஜூனில் மழை பெய்தாலும் பெய்யலாம். அப்படியே பெய்தாலும் மேற்குத் தொடர்ச்சி மழையாதலால் அது கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்யலாம். இங்கே அந்த மழை பெய்யாது. மேற்குத் தொடர்ச்சி மழையின் காரணமாக காவிரியில் தண்ணீர் வரலாம். வடகிழக்கு பருவ மழையின் போதுதான் நாம் பரவலாக நம்முடைய மாநிலத்தில் மழையை எதிர்பார்க்கலாம். எப்படி இருந்தாலும் ஜூன் மாதம் வரை நாம் மழையை எதிர்பார்க்க முடியாது. அதற்காகத்தான் நிவாரணப் பணிகளுக்காக 347.25 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். அதற்காக அவர்கள் குழு அனுப்பி, அந்தக் குழு பரிந்துரை செய்கிறவரை நாம் காத்திருக்கப் போவதில்லை. நாங்கள் ஏற்கெனவே சொல்லியபடி நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். அதற்காக ஏற்கெனவே 28 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். மேலும் குடிநீருக்காக அவ்வப்போது தேவைப்படும்போதெல்லாம் செலவழித்துக்கொண்டிருக்கிறோம். தேவைப்படும்போதெல்லாம் ஒதுக்கிக்கொண்டும் இருக்கிறோம். விவசாயத் தொழிலாளர்களுக்காக வேலைவாய்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 5 கோடி ரூபாயும், திறந்தவெளிக் கிணறுகள், லாரி மூலம் குடிநீர் போன்றவற்றுக்காக 1.15 கோடி ரூபாயும், மற்றும் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டு வருவதுடன் மேற்கண்ட இனங்களுக்காக மட்டும் மொத்தத்தில் 6.15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தேவைக்கு ஏற்ப, சூழ்நிலைக்கேற்ப செலவழிப்பதுபற்றி அரசு கவனிக்கும் என்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளை அரசு மேற்கொண்டிருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய முழு ஒத்துழைப்பும், பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்பும் அரசுக்கு மிக மிகத் தேவை.





அடுத்து, நெருக்கடியான நிலைமை ஏற்படும்போது சென்னை போன்ற நகரங்களில் வாழ்பவர்கள், மேல்நாடுகள் மாதிரி குறைந்த அளவு தண்ணீர் செலவழிக்க முன் வர வேண்டும். தண்ணீர் இருக்கிற காலத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் ஏராளமாகச் செலவழிக்கலாம். ஆனால் தண்ணீர் கிடைக்காத காலங்களில், கிடைக்கிற தண்ணீரை குடிக்க மட்டும் பயன்படுத்தி எவ்வளவுக்கெவ்வளவு குறைத்து பயன்படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு குறைத்து பயன்படுத்தி, அதிக அளவு சேமிக்கிற நிலைமையை மேற்கொண்டு மற்றவர்கள் பயன்படுத்துவதற்காக அனைத்துத் தரப்பு பொதுமக்களின் ஒத்துழைப்பும், ஆதரவும், அரசுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஓரளவுக்குப் பயப்படும் அளவுக்கு நாம் இல்லை. சென்ற ஆண்டு நெல் உற்பத்தி செய்யப்படும் பரப்பளவு குறைந்தாலும் விளைச்சல் அதிகமாகத்தான் இருந்திருக்கிறது. அந்த வகையில் ஒரு நல்ல வாய்ப்பாக அது அமைந்திருக்கிறது. இயல்பாக தமிழகத்தில் 26.63 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி ஆகிறது என்றால் சென்ற ஆண்டு நெல் உற்பத்தி செய்யப்பட்ட பரப்பளவு 18 லட்சம் ஹெக்டேர்தான். மற்றபடி சாகுபடி ஆகாமல் விட்டுப் போன நிலங்கள், பயன்படுத்தாமல் போன நிலங்கள் போன்றவற்றின் பரப்பளவு 8.63 லட்சம் ஹெக்டேர் ஆகும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 10

ஆனால் பயன்படுத்தப்பட்டது 18 இலட்சம் எக்டேர். ஆனால் அதிலே உற்பத்தி செய்யப்பட்ட நெல்லின் அளவு 56 லட்சம் டன்கள். இவ்வளவு ஏரியா குறைந்தாலும் கூட, சென்ற வருஷம் உற்பத்தி அளவைவிட இந்த வருடம் நெல்லின் உற்பத்தி அதிகம். உற்பத்தியான நெல்லின் அளவு 57 இலட்சம் டன்கள். இது ஓரளவிற்கு இந்த வருஷம் சமாளிக்கலாம் என்ற ளவிற்குத் தெம்பு தந்திருக்கிறது. சோளம், கம்பு, ராகி ஆகிய வைகளின் உற்பத்தி 1985–86-ல் 16 இலட்சம் டன்கள், 1986–87-ல் 20 இலட்சம் டன்கள். பயறு வகைகள் 1985–86-ல் 4.22 இலட்சம் டன்கள், 1986–87-ல் 4.5 இலட்சம் டன்கள். பஞ்சின் உற்பத்தி ஓரளவிற்குக் குறைந்திருக்கிறது. 1985–86 ஆம் ஆண்டு 5.5 இலட்சம் டன்னாக இருந்தது 1986–87-ல் 5 இலட்சம் டன்கள் மட்டும் உற்பத்தியாகி இருக்கிறது. கரும்பு உற்பத்தி 1985–86-ல் 20.46 இலட்சம் டன். 1986–87-ல் 24 இலட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது. ஓரளவிற்கு இது திருப்தி தருவதாக இருக்கிறது.

காலம் கடந்து போய்விட்டதன் காரணமாக ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி மற்றவைகளையெல்லாம் நிதிநிலை அறிக்கை வரும்போது, மானியக் கோரிக்கைகள் வரும்போது, விரிவாகப் பேசலாம் என்று கருதுகிறேன். ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் தெளிவாகச் சொல்லலாம் என்று கருது கிறேன். மொழிப் பிரச்சினையைப் பற்றி எடுத்தால் நீண்ட நேரம் ஆகும். கள், சாராயம் என்றாலும் நீண்ட நேரம் ஆகும், மயக்கம் வரும்.

தெலுங்கு-கங்கை திட்டத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். தெலுங்கு-கங்கை திட்டத்திற்கு மதிப்பீடு முதலிலே 637 கோடி ரூபாயாக இருந்தது. 1985–86 மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபாய் 875 கோடியாக உயர்ந்துள்ளது. இதில் தமிழ்நாட்டின் பங்கு 244.25 கோடி ரூபாயாகும். மொத்த மதிப்பீட்டில் இரு அரசுகளின் பங்கு விகிதாச்சாரம், சராசரி கணக்கிட்டுப் பார்த்தால் தமிழகத்தின் பங்கு இரண்டு, தெலுங்கு தேசத்தின் பங்கு 7.5. நம் பங்கு இரண்டு என்றால் அவர்கள் செலவழிக்க வேண்டியது ஏழரை பங்கு. திட்டத்தில் அடங்கியுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட இனத்திற்கும், ஒரு மாநிலம் அவற்றில் அடைய இருக்கின்ற நன்மைகளும், விகிதாச்சாரம் மாறுகின்றன. ஆனால் சராசரி நமக்கு இரண்டு பங்கு என்றால் அவர்களுக்கு 7.5 பங்கு. நமக்குச் சில இடங்களில் நூற்றுக்கு நூறு, சில இடங்களில் நூற்றுக்கு 90 என்று இருக்கிறது. சில இடங்களில் அறுபதுக்கு நாற்பது என்றும் சில இடங்களில் முப்பதுக்கு எழுபது என்றும் இருக்கிறது. உதாரணமாக தமிழ்நாட்டில் பயன்படுத்தக்கூடியவற்றுக்கு 100 விழுக்காடு செலவு நம்மையே சேரும். மற்ற இடங்களில் அவர்களைச் சேரும். மற்ற இடங்களில் நமது பங்கு 9.5 என்றால் 90.5 பங்கு அவர்களைச் சாரும். ஆந்திரப் பிரதேசம் அளித்த



1987 மார்ச் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விவரத்தின் அடிப்படையில் இப்படியெல்லாம் வருகிறது. 30–9–1986 வரையில் பல்வேறு இனங்களின் கீழ் செலவிடப்பட்ட தொகை 112 கோடி ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் சொல்லும்போது 47 கோடி ரூபாய் செலவழித்தது பாழ், பாழ் என்றார். அவருடைய உரைதான் பாழ். செலவழித்தது பாழ் இல்லை.

ஆனால் 30—9—1986 வரையில் பல்வேறு இனங்களில் செலவிடப்பட்ட தொகை 112 கோடி ரூபாயாகும். இந்த செலவுகளில் அடங்கியுள்ள இனங்களின் அடிப்படையில் நம்முடைய பங்கு ரூபாய் 31 கோடியே 50 இலட்சம். பங்கு கணக்கு போட்டால், நம் பங்கு 31 கோடியே 50 இலட்சம் என்றால் ஆந்திரப் பிரதேச அரசின் பங்கு 80 கோடியே 5 இலட்சம் ரூபாயாக இருக்க வேண்டும். ஆனால் இதற்கு எதிராக 14 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். இதற்குக் காரணம் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு எங்களிடம் போதுமான பணம் இல்லாததால் நீங்கள் கூடுதலாகத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள் என்பதுதான். குடிதண்ணீர் சென்னைக்கு வேண்டும் என்ற அவதியும், அவசரமும் நமக்கு உண்டே தவிர அவர்களுக்கு அல்ல. ராயலசீமா பகுதிக்கு பாசன வசதி கொண்டு வர வேண்டுமென்ற அவர்களுக்கு, ஆந்திர அரசுக்கு, திரு. என். டி. ஆருக்கு நாம் சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டு வர வேண்டுமென்ற அவசரமும் அவசியமும் இல்லை என்பதை உணர வேண்டும். ஆகவே நமக்கு அவசரம் என்பதாலே உடனடியாக தண்ணீரைக் கொண்டு வரவேண்டும் என்ற அக்கறையிலே ''கூடுதலாகத் தருகிறோம், திட்டத்தை எப்படியும் நிறைவேற்றுங்கள்'' என்று சொன்னோம். நம்முடைய பங்கு ரூபாய் 31 கோடி என்றாலும் ரூபாய் 47 கோடியைத் தந்தோம். இந்தத் தொகையை முன்பணமாக வழங்கியிருக்கிறோம். இது கணக்கிலே இருக்கிறது. ஆந்திர அரசினர் மொத்த பங்குத் தொகையையும் வேலையை ஆரம்பிக்கும் முன்பே தர வேண்டுமென்று கேட்கிறார்கள்.

(பிற்பகல் 1–40)

இப்போது நாம் சொல்வது என்னவென்றால், மொத்தத்தையும் தருவதற்கில்லை; தெளிவாகச் சொல்லுங்கள், இது வரையில் கொடுத்திருக்கிறோம்; ஆகவே ஒரு சுருக்கமான செலவுகளின் பட்டியலைத் தாருங்கள், முழுக்க செலவழிக்காமல், அத்தியாவசியச் செலவுகளை மட்டும் பட்டியல் போடுங்கள்; அப்படித் தயார் செய்து, அந்த வேலைக்குக் குறிப்பிட்ட காலஅளவையும் நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளோம். அந்த அடிப்படையில் முக்கியமல்லாத சில இனங்களைத் தள்ளிப்போட்டு 800 சில்லரை கோடி ரூபாய் அளவில் 600 கோடி ரூபாய் அளவுக்கு முக்கியமான திட்டங்களை நிறைவேற்றி, உடனடியாக சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்பது நமக்கு மிக முக்கியம். 600 கோடி ரூபாய்க்குள் அவசியமான செலவுகளை மட்டும் ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டங்களைச் செயல்படுத்தலாமென்று இரண்டு அரசின் தொ

ழில் நுட்ப வல்லுநர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறுகிய அளவில் செலவைச் செய்து, வரும் 3 ஆண்டுகளில் திட்டத்தை முடிப்பதாக இருந்தாலும்கூட, ஏறக்குறைய 200 கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டு ஒன்றுக்கு செலவை மேற்கொள்ள வேண்டும். நாம் கொடுத்தது போக பாக்கியுள்ள தொகை முழுவதையுமே இந்த 3 ஆண்டுகளில் அளிப்பதாக இருந்தாலும் ஆந்திர அரசு 400 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும். நம்முடைய பங்கை செலவழிக்க நாம் தயார். ஆந்திர அரசும் இதற்குத் தயாராக இருந்தால், 3 ஆண்டுகளில் நம்முடைய பங்கை நாம் தரத் தயார். இந்த ஒப்பந்தத்திற்கு வர வேண்டுமென்று ஆந்திர அரசை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லாவற்றையும் இப்போதே தந்துவிடுங்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். அது நியாயமில்லை என்று நாம் சொல்கிறோம். அதிலேதான் இப்போது பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சரவர்களும், அந்த மாநில முதலமைச்சரும் பேச வேண்டும்.

இந்தத் திட்டம், மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் பெரு முயற்சியால்தான் வந்தது. அந்த அம்மையாரின் பெரு முயற்சி இல்லாவிட்டால், திட்டம் வந்திருக்குமா என்பதே சந்தேகம்தான். அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். மகாராஷ்டிரா 5 டி.எம்.சி. தர வேண்டும்; கர்நாடகம் 5 டி.எம்.சி. தர வேண்டும்; ஆந்திரா 5 டி.எம்.சி. தர வேண்டும். இந்தியாவினுடைய பிரதமராக இருந்து அவர்கள் சொன்னதால், மகாராஷ்டிரா குடிநீருக்கு 5 டி.எம்.சி. தருகிறேன் என்று ஒத்துக்கொண்டது. தமிழகத்திற்கு குடிநீருக்குத் தருகிறார்கள். அதாவது மகாராஷ்டிரா 5 டி.எம்.சி., கர்நாடகா 5 டி.எம்.சி., ஆந்திரா 5 டி.எம்.சி. தர வேண்டும். அது ஆந்திராவுக்கு வந்து, அங்கேயிருந்து இங்கே கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இங்கே கொண்டுவந்து நாமே சேர்த்தால், நமக்கு 500 அல்லது 600 கோடி ரூபாயாகும். ஆகவேதான் 2 பேரும் சேர்ந்து கால்வாய் வெட்டலாம், நீங்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பயன்படுத்துங்கள், இருநூற்றுச் சில்லரை கோடியோடு நமக்குப் போகட்டும், அவர்களோடு சேர்ந்து செய்யலாம்; அவர்களுக்கும் பங்கு இருக்கட்டும், நமக்கும் பங்கு இருக்கட்டும், இதனால் செலவைக் குறைத்துக் கொள்ளலாம் என்று இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, இதை இந்திரா காந்தி அம்மையாரும் ஒத்துக்கொண்டு, 4 மாநில முதலமைச்சர்களையும் வைத்து, திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். நமக்கு 15 டி.எம்.சி. தண்ணீர் வருவதில் தகராறு இல்லை. வேறு வகையிலே இந்தத் தண்ணீர் எடுப்பதிலே ஆந்திர அரசுக்கும் மகாராஷ்டிர அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் தகராறு இருக்கிறது. அதைத் தீர்த்து வைக்க வேண்டும். நேற்றுகூட, மத்திய அமைச்சர் திரு. சங்கரானந் அவர்கள் சென்னையில் நிருபர்களிடத்தில் பேசியிருக்கிறார்கள். இதைத் தீர்க்கத்தான் வந்திருக்கிறேன், இதைத் தீர்த்து விட்டால் சரியாகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் செய்ய முடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதில் நியாயம் இருக்கிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் துவக்கி வைத்தது இது. அவர்கள் முயற்சி செய்யாமல் இருந்தால், இந்திய அரசு தலையிடாமல் இருந்தால், மகாராஷ்டிரா அரசு நாம் கேட்டோ அல்லது மற்றவர்கள் கேட்டோ 5 டி.எம்.சி. தண்ணீர் தந்துவிடுவார்களா அல்லது மற்றவர்கள்தான் தந்துவிடுவார்களா? சுலபமாகத் தர மாட்டார்கள். தண்ணீர் வந்து சேராது. எப்படியோ அந்த அம்மையார் சொன்ன வாக்குறுதியால், நமக்கு வரக்கூடிய தண்ணீரைப் பொறுத்தவரையில் தகராறு இல்லை. வேறு வகையில் தகராறு இருக்கிறது. அவற்றைத் தீர்க்க வேண்டி இருக்கிறது. தகராறு தீர்க்கப்படாமல் இருப்பதால், மத்திய அரசு ஒப்புதல் தரவில்லை. அதைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் வந்திருக்கிறேன் என்று அவர்கள் சொல்கிறார்கள்.



அடுத்து காவிரி நீர் பிரச்சினையைப் பற்றி விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். 15, 16 வருடங்கள் பார்த்து, டிரிப்யூனலுக்கு விடலாமென்று சொல்லியிருக்கிறோம். அதில் பேச காலதாமதம் ஏற்படாது. அதற்குரிய புள்ளிவிவரங்கள் எல்லாம் தயார் நிலையில், ஆயத்த நிலையில் இருக்கின்றன. டிரிப்யூனலில் 6 மாதத்தில் இதை எடுக்க எல்லாம் தயாராக இருக்கின்றன. நேற்றுகூட மத்திய அமைச்சர் திரு சங்கரானந்த் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குழுவின் தலைவரும் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு இது பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்று. விரைவிலே இது பற்றி நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். All aspects are being examined for the setting up of a Tribunal to solve the Cauvery Water dispute between Tamil Nadu and Karnataka என்று Chitale, Chairman of the Central Water Commission திருவாரூரில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்று சென்னை வந்த திரு. சங்கரானந்த் அவர்களும், இதை மத்திய அரசு டிரிப்யூனலுக்கு விடுவது பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறது, எல்லாக் கூறுகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒரே ஒரு கருத்தைமட்டும் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். ஒன்றே ஒன்று.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர் மன்னன் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார். அது ஒரு முக்கியமான பிரச்சினை. கடிதப் பிரச்சினை. டாக்டர் ஹண்டே அவர்கள் ஒரு சிபாரிசு கடிதம் எழுதினார் என்றும், அந்தக் கடிதத்தின் ஜெராக்ஸ் காபி கையிலே இருக்கிறது என்றும் கடிதத்தைக் காண்பித்தார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 10

அதைப்பற்றி டாக்டர் ஹண்டே அவர்களிடம் விளக்கத்தைக் கேட்டேன். அந்தக் துறையினுடைய விளக்கத்தைக் கேட்டேன். அதுபற்றி டாக்டர் ஹண்டே அவர்கள் விளக்கம் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அதிலே சொல்லி இருக்கின்றார்கள். அந்தக் கடிதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

" 5–3-1987 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர் மன்னன் நான் எழுதியதாக ஒரு கடிதத்தை வாசித்ததாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன் அதே மாதிரியான கடிதம் 22–1–1987 அன்று ஒரு தி.மு.க. பத்திரிகையில் முரசொலியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்தக் கடிதம் என்னுடைய லெட்டர் பேடை பயன்படுத்தி எழுதியதாகவும் அந்தப் பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டிருந்தது. அடுத்த நாளே நான் இதற்கு ஒரு மறுப்பு அறிக்கையையும் அதிகார பூர்வமான கழகப் பத்திரிகை, அண்ணா பத்திரிகை மூலமாக கொடுத்திருந்தேன். அதிலே உரிய நடவடிக்கைக்காக அரசு தலைமைச் செயலரின் கவனத்திற்கும் கொண்டு வந்தேன். நான் இது வரையில் எந்த என்ஜினியருக்காவது, வேறு யாருக்காவது தவறான முறையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்றோ அல்லது சாதாரணமாக பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்றோ சிபாரிசு செய்யவும் இல்லை, அந்தப் பழக்கமே என்னிடத்தில் இல்லை. என் அலுவலகத்தில் அன்று பணியாற்றி வந்த உதவியாளர்களுக்குத் தெரியாமல் யாராவது திருடி என்னுடைய லெட்டர்பேட்-ஐ பயன்படுத்தி இருக்கக்கூடும் அல்லது அந்த லெட்டர்பேடே போலியாகத் தயாரிக்கவும் கூடும். 22–1–87 அன்று பத்திரிகையில் ஜெராக்ஸ் காபி எடுத்து பிரசுரிக்கப்பட்ட கடிதத்தில் என்னுடைய கையொப்பமோ, நான் இந்த கடிதத்தை அனுப்புமாறு சொல்கின்ற வகையில் என்னுடைய அன்றைய உதவியாளருடைய கையெழுத்தோ இல்லாமல், என்னுடைய லெட்டர்பேட் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது அல்லது போலியான லெட்டர்பேட் தயாரிக்கப்பட்டு எனக்கு எதிரான வகையில் பிரசுரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தேர்வாணைக் குழு சம்பந்தப்பட்ட விஷயத்தை இன்னொரு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லக்கூடிய அளவுக்கு விவரம் தெரியாமல் தயாரிக்கப்பட்ட இந்தப்போலி கடிதத்திலிருந்து இது என்னைக் களங்கப்படுத்த வேண்டுமென்று தயாரிக்கப்பட்டது என்று தெரிகிறது. எனக்கும் இந்தக் கடிதத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாத காரணத்தினால் இந்த போலி கடிதத்தையும் லெட்டர் பேட்-ஐ தயாரித்தது யார்? இதிலே கூறப்பட்டிருக்கின்ற அதிகாரிகள் யார் என்பதை விசாரித்து குற்றவாளிகளை பிடித்து, தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்தக் கடிதத்தின் மூலமாக தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.



1987 மார்ச் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அந்தக் கடிதத்தில் டாக்டர் ஹண்டே அவர்களுடைய கையெழுத்தோ அல்லது மற்றவர்களுடைய கையெழுத்தோ இல்லை. யாரோ ஒருவருடைய கையெழுத்து இருக்கிறது. அமைச்சருடைய கையெழுத்து இல்லை. அதிலேகூட பொதுப் பணித்துறை அனுப்பியதாக இல்லை. ஆனால் டிப்பார்ட்மெண்ட்டிலே பொதுப்பணித் துறை அமைச்சருடைய சீல்தான் இருக்கிறதே தவிர டாக்டர் ஹண்டே டிப்பார்ட்மெண்ட் சீல் அதிலேயில்லை. ஆனால் இந்த லெட்டர் பேட் டாக்டர் ஹண்டே அவர்களினுடைய பெயரிலே இருக்கிறது. அதிலே கூறப்பட்டிருக்கிறபடி பார்ப்பீர்களேயானால்—நான் டிப்பார்ட்மெண்ட்-ஐக் கேட்டேன். பொதுப் பணித் துறையைக் கேட்கும் போது, அவர்கள் சொல்லியிருப்பது, அதிலே சொல்லியிருக்கிறபடி, அதிலே அச்சடித்து இருக்கிறபடி சொல்கிறேன்.

600 008

Name : A. Narasimhan.
Date of Birth : 27th March 1957.
Native District : Madurai.
Qualification : B.Sc.
Date of entry into department : 24th June 1985.
Designation/Circle/Division/Department:

From
To
போட்டுவிட்டு

Tamil Nadu Public Service Commission
1983–85-லே செலக்ஷன் ஆகியிருக்கிறார். அசிஸ்டெண்ட் என்ஜினியர்

Appointed as Temporary Assistant Engineer and posted to Special Building Circle, Virudhunagar in E1112/63849/85-1, dated 29th March 1985 Special Building Circle, Virudhunagar at Sivaganga 24-6-1985". அப்படி என்று இருக்கிறது. அதிலே டிப்பார்ட்மெண்ட் நோட்.

No such request from Thiru A. Narasimhan, Assistant Engineer to change his seniority in the Tamil Nadu Public Service Commission list. The seniority fixed by the Tamil Nadu Public Service Commission cannot be altered by the Chief Engineer.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 10

அவருடைய பொசிஷன் 214-லே தான் இருக்கிறது. அவரை டெம்பரவரி அசிஸ்டெண்ட் இன்ஜினியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதே 1985-லே. அவர் எப்படி 1986-லே எக்சிகியூட்டிவ் என்ஜினியராக ஆகிவிடுவார் ?

(பிற்பகல் 1-50)

213 பேரை தாண்டித்தான் 214-வது நபரின் பெயர் வர வேண்டும். மேலும் 213 பேரை விட்டு விட்டு இவர் பெயரை எப்படி கொண்டு வர முடியும் என்று டாக்டர் ஹண்டே கேட்கிறார். அது மட்டுமல்ல, தேர்வாணைக் குழுவின் லிஸ்ட் படிதான் கொடுக்கவும் முடியும். இந்தக் கடிதம் எப்படி வந்தது? அவர்கள் காரணமா, மற்றவர்கள் காரணமா என்று டிபார்ட்மென்ட் மூலம் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, டாக்டர் ஹண்டே மீதோ, மற்றவர்கள் மீதோ எந்தக் குற்றமும் இல்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றி நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தின்போதும், அந்தந்தத் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளின்போதும் நாம் மேலும் விவாதிக்க, பதிலளிக்க வாய்ப்பிருக்கிறது என்று சொல்லி, இத்துடன் என்னுடைய உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். விவசாயப் பெருமக்கள் வாங்கிய கடன் தவணையை செலுத்துவதற்கு 1987 பிப்ரவரி 28 வரை காலக்கெடு அரசு நிர்ணயித்திருந்தது. தற்போது தமிழகத்தில் வரலாறு காணாத வறட்சி நிலை நிலவுவதால் கூட்டுறவுக் கடன் தவணைகளைக் கட்டுவதற்கு மேலும் காலத்தை நீட்டித்து கேட்டிருந்தோம். அது குறித்து ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அது குறித்து அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உத்தரவில் எந்தவித மாற்றமும் இல்லை.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த நேரத்தில் வறட்சியின் காரணமாக விவசாயிகள் கட்ட வேண்டிய கடன் தவணைகளை மேலும் 6 மாத காலத்திற்கு அரசு தள்ளி வைக்க இந்த மன்றம் தீர்மானிக்கிறது என்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருந்தேன். மேலும் மாநகராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். இவை



1987 மார்ச் 10] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

களைப் பற்றியெல்லாம் ஆளுநர் உரையில் ஒன்றுமே இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன். அவைகளுக்கான விளக்கமும் அமைச்சரிடமிருந்து இல்லை. அது மட்டுமல்ல. ஏழை தகப்பன்களுக்கும் காலணி வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தேன். அது குறித்தும் அமைச்சர் ஒன்றும் சொல்லவில்லை. எல்லாவற்றுக்கும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கெல்லாம் நேரம் இல்லை.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சி நிலை ஏற்படுவதும், அடுத்த ஆண்டில் திரும்பவும் மழை பெய்து வளம் ஏற்படுவதும் காலம் காலமாக நடந்து வரும் காரியங்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அது போல் இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமைகளைப் பற்றியும், அரசு மேற்கொண்டிருக்கிற நிவாரண நடவடிக்கைகள் பற்றியும் இங்கே விவரங்களை தெளிவாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேலை வாய்ப்புக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். தமிழகத்தில் இன்றைய தினம் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட குளம், குட்டைகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் தூர் எடுத்து, அகலப்படுத்தி, ஆழப்படுத்தி நெடுங்காலமாகிவிட்டது. கடுமையான வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்திலாவது குளம், குட்டைகள், ஊருணிகள் போன்றவைகளை எல்லாம், அரசு முதலிடம் கொடுத்து, தூர் எடுத்து அகலப்படுத்தி, ஆழப்படுத்த முன் வருமா ? இன்னொன்று. தெலுங்கு கங்கை திட்டத்தை அமுல்படுத்தி, சென்னை நகர மக்களுக்கு விரைவிலே தண்ணீர் வழங்குவதாக சொல்லப்பட்டதே, அதற்கான கால்வாய் பணி இன்னும் தொடர்புடைய பணி என்ன நிலைமையில் தற்போது இருக்கிறது என்றும் அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புப் பணிகளை நாம் செய்கின்றபோது சிலபல இடங்களில் சிறு ஏரிகள், சிறு குட்டைகள் போன்றவற்றை வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்குகின்ற பணத்தைப் பயன்படுத்தி செய்தாலும் இப்போதுள்ள நிலைமையில் அங்கே தண்ணீர் வர வாய்ப்பே இல்லை. பின்னாலே மழை வரும். அப்போது தண்ணீர் வந்து நிரம்பும் என்ற அடிப்படையில்தான் அவற்றை தூர் எடுத்து, ஆழப்படுத்தும் பணிகளை நாம் செய்வது வழக்கம். பொதுவாக பல ஏரிகள் நீண்டகாலமாகவே தூர்ந்துவிட்ட நிலையில் அவைகளை ஆழப்படுத்த தனி திட்டம் தீட்டப்பட்டு அதற்காக தனியாக உதவி பெற வேளாண்மைத் துறை மற்றும் நீர்ப் பாசனத் துறை மூலம் கருத்துரு ஆராயப்பட்டு வருகிறது. ஆக, அந்தவகையில் அதுகுறித்து நாம் தனியாக செய்யலாம். வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிவாரணமாக செலவு செய்கின்ற பணியும் இத்துடன் சேர்த்து இணைக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், யு. டி. ஆர்—ன் கீழ் நிலத்தை அளக்கும்போது நஞ்சை என்றால் ஏக்கருக்கு 50 ரூபாய் வீதமும், புஞ்சை என்றால் ஏக்கருக்கு ரூபாய் 25 வீதமும் நிர்ப்பந்தப்படுத்தி வசூலிக்கிறார்களே, அப்படி வசூலிக்காமல் அரசு தடுத்து உத்தரவு போடுமா என்று அறிய விரும்புகிறேன். சர்வே சார்ஜ் என்ற பெயரில் நஞ்சைக்கு ஒரு ஏக்கருக்கு ஐம்பது ரூபாய் என்றும், புஞ்சைக்கு ஒரு ஏக்கருக்கு 25 ரூபாய் என்றும் இப்பொழுது வசூல் சற்று கெடுபிடியாக இருக்கின்ற காரணத்தினாலே அதை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அவரவர்களுடைய நிலைமைகளைப் பார்த்து அவர்கள், அப்படிப்பட்டவர்கள் வசதி படைத்தவர்களா, இல்லையா, தாங்குமா தாங்காதா, எல்லோருமே மாண்புமிகு உறுப்பினர் போன்று ஏழைகளா அல்லது எல்லோரும் வசதி படைத்தவர்களா என்று பார்த்து, உள்ளபடியே கட்ட முடியாதவர்களாக இருந்தால் தனியாகச் செய்வார்கள் ; ஒட்டு மொத்தமாக ஒரே உத்தரவிலே எல்லோருக்கும் போட முடியாது. நிலைமைகளைப் பார்த்துச் செய்யலாம்.

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சேலம் மாவட்டத்திற்கு முதன்முதலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐம்பது ஆழ் துளைக் கிணறுகள் முழுக்க முழுக்க ஆத்தூர் தாலுக்காவிலே போடப் பட்டுள்ளது. ஓமலூர் போன்ற தாலுக்காக்களிலே கடுமையான வறட்சி நிலவுகிறது. ஆகவே, சேலம் மாவட்டத்திலே உள்ள பிற தாலுக்காக்களிலேயும் ஆழ் துளைக் கிணறுகள் அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. கு. ரமணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய, திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று **தோல்வியுற்றது.**



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி ;

" ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

1987-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (11–3–1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

27. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1978–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

28. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ்)

29. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

30. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரக் கணக்குகள். [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

11. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 1977–78, 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை.

12. 1976–77 முதல் 1979–80 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை.

13. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1969–70 முதல் 1975–76 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை.

14. 1973–74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை.